


SHANKAR IAS ACADEMY™

SINCE 2004

Best Academy for Civil Services Exam Coaching

# மைக்ரோ நடப்பு நிகழ்வுகள் வருடாந்திர தொகுப்பு

**2025**

# TNPSC தேர்வுப் பெட்டகம்

shankariasacademy.com

tnpscthervupettagam.com

# உள்ளடக்கம்

தமிழ்நாடு செய்திகள் ..... 2
தேசியச் செய்திகள் ..... 14
சர்வதேசச் செய்திகள் ..... 39
பொருளாதாரச் செய்திகள் ..... 57
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ..... 64
சுற்றுச்சூழல் செய்திகள் ..... 86
அறிக்கைகள் மற்றும் குறியீடுகள் ..... 98
மாநிலச் செய்திகள் ..... 111
புவிசார் குறியீடுகள் ..... 129
முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள் ..... 130
பிரபலமானவர்கள் மற்றும் விருதுகள் ..... 140
நிகழ்வுகள் மற்றும் மாநாடுகள் ..... 165
பாதுகாப்பு பயிற்சிகள் மற்றும் நடவடிக்கைகள் ..... 172
விளையாட்டுச் செய்திகள் ..... 180
முக்கிய தினங்கள் ..... 187

# தமிழ்நாடு செய்திகள்

- ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் 'குறள் வாரம்' (திருக்குறள் வாரம்) ஆகக் கொண்டாடப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- தமிழகத்தின் முதல் மிதக்கும் உணவகம் ஆனது சென்னை அருகே உள்ள முட்டுக்காடு உப்பங்கழியில் திறக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு பள்ளிக் கல்வியானது, தொடக்க நிலையிலிருந்து மேல்நிலைக் கல்வி வரை அதற்கான 100% மாறுதல் விகிதத்தினை எட்டியுள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை தாலுக்காவில் உள்ள கொடும்பாளூரில் உள்ள குடியிருப்புகள் அமைந்துள்ள மேட்டுப் பகுதிகளில் இந்தியத் தொல்லியல் துறையின் திருச்சி வட்டப் பிரிவானது அகழாய்வு மேற்கொண்டுள்ளது.
- சிந்து சமவெளி நாகரிகத்தின் எழுத்து வடிவங்களைப் பொருள் கண்டுணர்வதில் வெற்றி பெறும் நிபுணர்கள் அல்லது அமைப்புகளுக்கு 1 மில்லியன் டாலர் பரிசு வழங்கப் படும் என தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- மொத்தம் 8.42 லட்சம் உழைப்பு நாட்களுடன், தமிழக மாநிலமானது மிகத் துடிப்பு மிக்க தொழில்துறைகளின் மையமாக, குறிப்பாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தன்னை உறுதியாக நிலை நிறுத்தியுள்ளது.
- தமிழ்நாட்டின் முதன்மையான தகவல் தொழில்நுட்ப மாநாடு ஆனது, 'செயற்கை நுண்ணறிவு மற்றும் மாறுதல் மிக்கத் தொழில்நுட்பம் மூலம் சமமான வளர்ச்சியை தூண்டுதல்' என்ற கருத்துருவின் கீழ் நடைபெற்றது.
- தோடர் பழங்குடியினர் புத்தாண்டைக் குறிக்கும் வகையிலான தங்கள் பாரம்பரிய 'மோத்வேத்' திருவிழாவினைக் கொண்டாடினர்.
- உயிரிழந்த உறுப்பு தானம் செய்பவர்கள் மிக அதிக எண்ணிக்கையில் பதிவாகியுள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும் என்பதோடு தானம் செய்தவர்களில் 50சதவீதத்திற்கும் அதிகமானோர் அரசு மருத்துவமனைகளில் பதிவு செய்துள்ளனர்.
- தமிழ்நாடு சட்டமன்றம் ஆனது 2025 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் (தமிழ்நாடு திருத்தம்) மசோதா மற்றும் 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தடை (திருத்தம்) மசோதா ஆகியவற்றினை நிறைவேற்றியுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12 ஆம் தேதியானது உலக அயலகத் தமிழர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- மூன்றாவது காசி தமிழ்ச் சங்கமம் (KTS) ஆனது தமிழ்நாட்டிற்கும் காசி நகர்த்திற்கும் இடையிலான காலத்தால் அழியாத பிணைப்புகளைக் கொண்டாடுகிறது.
- முந்தைய ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் உயிரிழப்பு எண்ணிக்கையானது 273 என்ற அளவு குறைந்துள்ளதால், சாலை விபத்து மூலமான உயிரிழப்புகள் மிக கணிசமாகக் குறைந்துள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் குழந்தை பிறப்புகளின் எண்ணிக்கையானது சுமார் 8,42,412 என்ற அளவிற்கு மோசமாக குறைந்துள்ளது.
- கடலூர் மாவட்டம் மருங்கூரில் நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சி தளத்தில் 13 செ.மீ நீளமுள்ள இரும்புக் கத்தியைத் தமிழக மாநிலத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர்.

- கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே உள்ள மருங்கூரில் வளையல்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட ஒரு சங்கு ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- 'தமிழ் தாத்தா' என்று பிரபலமாக அழைக்கப் படும் உ. வே. சுவாமிநாதரின் பிறந்த நாள் (பிப்ரவரி 19) ஆனது தமிழ்நாட்டில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி தினமாக வெகுவாகக் கொண்டாடப் பட்டது.
- சென்னை PBCCR (Chennai Population-Based Childhood Cancer Registry) ஆனது நாட்டின் முதல் பிரத்யேக குழந்தைப் பருவ புற்றுநோய் பதிவேடு ஆகும்.
- புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பொற்பனைக் கோட்டை என்ற தளத்தில் நெசவு செய்வதற்கான கருவியாகப் பயன்படுத்தப்படும் ஒரு எலும்பு முனை மற்றும் ஒரு சிறிய உடைந்த தங்கத் துண்டு ஆகியவை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- தமிழ்நாடு அரசானது, அதன் பருவநிலை மாற்றம் குறித்த மாநில செயல் திட்டத்தினை (SAPCC) இறுதி செய்து மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் ஒப்புதலுக்காக வேண்டி சமர்ப்பித்துள்ளது.
- சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வு ஆனது, "இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவர் வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்ய விரும்பினால், அவர் அத்தகைய திருமணத்தினை 1954 ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும்" என்று கூறியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமலுக்கு வந்த தமிழ்நாடு சிறை விதிகளின் 348வது விதியானது, தாங்கள் முன்கூட்டியே விடுதலை கோரும் ஆயுள் தண்டனை கைதிகளுக்கான விடுதலை கோரல் தகுதி அளவுருக்களை வரையறுக்கிறது.
- மாநிலங்களில் பஞ்சாயத்து அமைப்புகளுக்கான அதிகாரப் பகிர்வின் நிலை (2024)- ஆதார அடிப்படையிலான ஒரு தெரிவுநிலைத் தரவரிசை என்ற ஒரு அறிக்கையானது மத்திய பஞ்சாயத்து ராஜ் துறை இணை அமைச்சரால் வெளியிடப்பட்டது.
- நகர்ப்புற நிலப் பதிவுகளை நவீனமயமாக்குவதற்காக வேண்டி தேசியப் புவியிடத் தகவல் அடிப்படையிலான நகர்ப்புற வாழ்விடங்களின் நில ஆய்வு (NAKSHA) என்ற ஒரு சோதனைத் திட்டமானது தஞ்சாவூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- மிகப் பிரபல எழுத்தாளரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான இமயம் என்ற V.அண்ணாமலை, தமிழ்நாடு மாநிலப் பட்டியலிடப்பட்ட சாதியினர் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆணையத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தமிழ்நாட்டின் மிகப்பெரிய அரசு மருத்துவமனையான இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை (RGGGH) ஆனது, இது வரை 15 இறந்த நபர்களின் உடலில் இருந்து 100% வெற்றி விகிதத்துடன் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளது.
- நாட்டுப்புறக் கலை, நாடகம், தாவரவியல் சார் நீல அச்சுப்படிவக் கலை மற்றும் இசை போன்ற கலைகளை சென்னை மத்திய சிறைச்சாலைக்குள் (புழல்-1) அறிமுகப் படுத்த வேண்டியது பற்றிய 'Art in Prison' முன்னெடுப்பானது, தற்போது ஓராண்டு காலத்திற்குத் தொடரப்பட உள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள 25 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ள 'களங்கரை' எனப்படும் ஒரு விரிவான போதைப்பொருள் அடிமையாதல் ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு மையத்தினை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் உள்ள அரசுப் பள்ளியில் இந்தியாவின் முதல் வரைகதை புத்தக நூலகம் ஆனது திறக்கப்பட்டுள்ளது.

- 404.991 லட்சம் ரூபாய் செலவில் 17 புதிய மரகதப் பூஞ்சோலை அல்லது கிராம வனப் பகுதிகளை உருவாக்குவதற்குத் தமிழக அரசு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.
- காஞ்சிபுரம், ஈரோடு, தர்மபுரி, சிவகங்கை, தேனி, கடலூர், நாகப்பட்டினம், இராணிப் பேட்டை மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கான விடுதிகள் தொடங்கப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- மனநலம் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற நபர்களின் பராமரிப்பு மற்றும் அமலாக்கக் கட்டமைப்புக்கான 2024 ஆம் ஆண்டிற்கான மாநிலக் கொள்கையை முதலமைச்சர் வெளியிட்டு ள்ளார்.
- தமிழ்நாடு அரசு ஆனது, "தமிழ்நாடு மாநிலத்தின் அருகி வரும் உயிரினங்களின் வளங்காப்பு நிதி" என்ற பிரத்யேக நிதியை உருவாக்கியுள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்ட அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் கடன் பெறுதலில் பெண்களின் பங்கு 44% அதிகமாக உள்ளது.
- மக்காச்சோளத்தின் மீது விதிக்கப்படும் 1% சந்தை வீத வரியினை தமிழக அரசு ரத்து செய்துள்ளது.
- தமிழ்நாடு அரசானது, மாநிலத்தின் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் முத்திரையில் "₹" என்ற ரூபாய் சின்னத்திற்குப் பதிலாக "ரூ" எனும் தமிழ் வடிவ எழுத்துருவினை பயன்படுத்தியுள்ளது.
- மாநிலச் சட்டமன்றமானது, 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு கனிமங்களைக் கொண்டுள்ள நிலங்களுக்கு வரி விதிக்கும் சட்டத்தினை நிறைவேற்றியது என்பதோடு இது 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதியன்று அரசிதழில் வெளியிடப்பட்டது.
- தமிழ்நாட்டில் சதுப்புநிலக் காடுகளின் பரப்பளவு ஆனது கடந்த சில ஆண்டுகளில் சுமார் இரு மடங்காக அதிகரித்துள்ளது என்பதோடு இது 2021 ஆம் ஆண்டில் 4,500 ஹெக்டேராக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 9,039 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டின் பள்ளி இடைநிற்றல் விகிதம் ஆனது தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி மட்டங்களில் 0% ஆகக் குறைந்துள்ள நிலையில், இடைநிலைப் பள்ளி மட்டத்தில் இடை நிற்றல் விகிதம் 7% ஆக உள்ளது.
- நீலகிரியின் மிகப் பலவீனமான சூழலியலைக் கருத்தில் கொண்டு சில்ஹல்லா என்ற நீரேற்று நீர்மின் நிலைய மின்னாற்றல் சேமிப்புத் திட்டத்தினை உடனே கைவிடுமாறு சில்லஹல்லா சுற்றுச்சூழல் சமூகப் பாதுகாப்பு சங்கம் (SESPA) வலியுறுத்தியுள்ளது.
- ஒன்றிய கலாச்சாரத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தென் மண்டலக் கலாச்சார மையம் (SZCC) ஆனது, 'கம்ப இராமாயண' பாராயணங்களின் வாய்மொழி மரபையும் அதன் பரந்த கலாச்சாரத் தாக்கத்தையும் புதுப்பிக்கும் நோக்கில் ஒரு விரிவான முன்னெடுப்பினைத் தொடங்குகிறது.
- 2024-25 ஆம் ஆண்டிற்கான சுமார் 19,287.44 கோடி ரூபாய்க்கான இறுதி துணை மதிப்பீடுகளை தமிழ்நாடு நிதியமைச்சர் சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.
- 2023-24 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 3,380 காட்டுத் தீ விபத்துகள் பதிவானது: இது கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகமாகும்.
- 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்-II' திட்டத்தினை அமல்படுத்தச் செய்வதற்காக 1,087 கோடி ரூபாய் நிதி ஒதுக்க தமிழக அரசு நிர்வாக அனுமதி வழங்கி உள்ளது.

- தமிழ்நாடு மாநில அரசானது, திண்டுக்கல்லில் உள்ள காசம்பட்டி (வீரக் கோவில்) புனிதத் தோப்புகளை 2002 ஆம் ஆண்டு உயிரியல் பன்முகத்தன்மைச் சட்டத்தின் கீழ் ஒரு பல்லுயிர்ப் பெருக்கப் பாரம்பரியத் தளமாக (BHS) அறிவித்துள்ளது.
- கார்பன் நடுநிலைமையை நோக்கிய மாற்றத்தினை மிகவும் விரைவுபடுத்துவதற்காக ஐக்கியப் பேரரசு-தமிழ்நாடு என்ற கூட்டாண்மையினைத் தொடங்குவதற்கு ஐக்கியப் பேரரசின் அரசாங்கமும் தமிழ்நாடு மாநில அரசாங்கமும் கூட்டு சேர்ந்துள்ளன.
- இந்தத் திட்டத்தின் கீழ், 2025-26 ஆம் ஆண்டில் கிராமப் பஞ்சாயத்துகள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்களில் சாலைகளை மேம்படுத்துவதற்காக தமிழக அரசானது 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது.
- தமிழ்நாடு மாநில அரசானது, ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் ஒரு சிறப்பு மையத்தினை நிறுவச் செய்வதன் மூலம் இருவாச்சி பறவைகளின் வாழ்விடங்களைப் பாதுகாப்பதற்கான வளங்காப்பு முயற்சிகளைத் தொடங்க உள்ளது.
- தமிழ்நாடு அரசானது 2025-2026 ஆம் ஆண்டு முதல் 6 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் நிரலாக்கம் குறித்த ஒரு அடிப்படைக் கல்வியினை அறிமுகப் படுத்த உள்ள நிலையில் தமிழ்நாட்டினை இந்தியாவில் முதல் மாநிலமாக இது மாற்ற உள்ளது.
- தமிழக அரசானது புவிசார் குறியீடுகள் (GI) பெறுவதற்கென்று விண்ணப்பிப்பதற்கான மானியத்தினை 25,000 ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாயாக உயர்த்தியுள்ளது.
- தமிழக மாநிலச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு தனியார் பல்கலைக் கழகங்கள் (திருத்தம்) சட்டம், 2024 மற்றும் தமிழ்நாடு பொதுக் கட்டிடங்கள் (உரிமம்) திருத்தச் சட்டம், 2024 ஆகிய இரண்டு மசோதாக்களும் தமிழக ஆளுநரின் ஒப்புதலைப் பெற்றதையடுத்து தமிழ்நாடு மாநில அரசானது இந்த இரண்டு சட்டங்களையும் மாநில அரசிதழில் வெளியிட்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது, 2024-25 ஆம் நிதியாண்டில் மின்னணுப் பொருட்கள் மீதான ஏற்றுமதியில் 14.65 பில்லியன் டாலர் என்ற வரலாறு காணாத ஒரு உச்சத்தினை எட்டி உள்ளது.
- மலை இருவாட்சி, மலபார் கருப்பு வெள்ளை இருவாட்சி, இந்திய சாம்பல் இருவாட்சி மற்றும் மலபார் சாம்பல் இருவாட்சி ஆகியவற்றைப் பாதுகாப்பதற்காக ஒரு சிறப்பு மையத்தினை நிறுவ மாநில அரசு திட்டமிட்டுள்ளது.
- 2024-25 ஆம் ஆண்டில் பதிவான 9.69% என்ற அளவிலான தமிழ்நாட்டின் உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆனது இந்தியாவிலேயே மிக அதிகபட்ச விகிதமாக உள்ளது.
- கழுவேலி பறவைகள் சரணாலயத்திற்கு அருகிலுள்ள அகரம் காப்புக் காடுகள் வனப் பகுதியில் ஓர் அதிநவீனமான சர்வதேசப் பறவைகள் மையத்தினை நிறுவுவதற்கான திட்டத்தில் விழுப்புரம் வனப் பிரிவு செயல்பட்டு வருகிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளில், தமிழ்நாட்டில் உயர்கல்வியில் சேரும் அரசுப் பள்ளி மாணாக்கர்களின் எண்ணிக்கை சுமார் 30% அதிகரித்துள்ளது.
- தமிழ்நாடு மாநில அமைச்சரவையானது, 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு விண்வெளி தொழில்துறைக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டவிரோதமாக பொருள் விற்பனை செய்வோர், இணைய வெளிக் குற்றம் சார் சட்டக் குற்றவாளிகள், போதைப்பொருள் கடத்தும் குற்றவாளிகள், வனப் பொருட்கள் கடத்தல் குற்றவாளிகள், குண்டர்கள், மோசமான கடத்தல் குற்றவாளிகள், மணல் கடத்தல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப் பகுதிகளை ஆக்கிரமிப்பவர்கள் மற்றும் திரைப்படத்தின் மீது திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியோரின் சட்ட விரோதச் செயல்களைத் தடுக்கும் சட்டத்தினைத் திருத்தியமைப்பதற்கான மசோதாவினை தமிழ்நாடு அரசு மாநிலச் சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் முதல் முறையாக, முதுமலை புலிகள் வளங்காப்பகமான தெப்பக்காடு யானை முகாமில் யானைப் பாகன்களுக்காக என 44 வீடுகள் கட்டப்பட்டு, யானைப் பாகன்கள் கிராமம் அமைக்கப் பட்டுள்ளது.
- PKM1 எனப்படும் மொரிங்கா ஒலிஃபெராவின் ஒரு வகையானது, உலகளவில் குறிப்பாக ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள செனேகல், ருவாண்டா மற்றும் மடகாஸ்கர் போன்ற நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- சென்னைப் பெருநகர மாநகராட்சியானது தமிழ்நாட்டில் முதன்முதலில் தேசியப் பங்குச் சந்தையில் (NSE) தனது நகராட்சிப் பத்திரங்களை அறிமுகப்படுத்தி உள்ளது / வெளியிட்டுயுள்ளது.
- தமிழ்நாட்டின் சராசரி வேளாண் வளர்ச்சியானது, 2021 முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் சராசரியாக 5.66% சாதனை அளவை எட்டியுள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சொந்த வரி வருவாய் 7.6% அதிகரித்துள்ளது.
- எட்டு ஆண்டுகளில் முதல் முறையாக, 2024–25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலமானது வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் எதிர்மறையான வளர்ச்சி விகிதம் –0.09% உடன் எதிர் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு மாநிலமானது பல்லடுக்குச் சேர்மத்திலான திரவமாக்கப்பட்ட பெட்ரோலிய எரிவாயு (LPG) வாயுக் கொள்கலன்/சிலிண்டர்களின் இணைப்புகள் (Composite cylinder) வழங்களில் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- தமிழக முதலமைச்சர் தமிழ்நாடு மின்னணுக் கூறுகள் உற்பத்தித் திட்டத்தினை (ECMS) அறிமுகப் படுத்தியுள்ளார்.
- தமிழக நிதியமைச்சர் மாநிலத்தின் முதல் '2025 ஆம் ஆண்டு கடல் போக்குவரத்து உற்பத்தி கொள்கையினை' வெளியிட்டுள்ளார்.
- மறைந்த 'கவிக்கோ' S. அப்துல் ரஹ்மான், மறைந்த மெர்வின், மறைந்த A. பழனி, மற்றும் கவிஞர்கள் கொ. மா. கோதண்டம் மற்றும் இளமா தமிழ்நாவன் ஆகிய ஐந்து முக்கியத் தமிழ் அறிஞர்களின் இலக்கியப் படைப்புகள் தமிழக அரசால் சமீபத்தில் தேசியமயமாக்கப் பட்டு, அதற்கு உண்டான காப்பு உரிமத் தொகைகள் அவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப் பட்டன.
- 2024–25 ஆம் ஆண்டில் நாட்டின் ஜவுளிப் பொருட்கள் ஏற்றுமதி அதிகப் பங்கு வகிக்கும் மாநிலமாக தமிழ்நாடு சுமார் 7.99 பில்லியன் டாலர் பங்களிப்புடன் விளங்கியது.
- ஆவின் – தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு லிமிடெட் (TNCMPFL) நிறுவனத்துடன் இணைந்து பாரத் சஞ்சீவனி என்ற கைபேசிச் செயலியானது வெளியிடப் பட்டுள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர், சென்னை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் S. சாதிக்கிற்கு கல்விக்கோ விருதை வழங்கினார்.

- 2022–2023 ஆம் ஆண்டில் 10.9 (1,000 பிறப்புகளுக்கு) ஆக இருந்த ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் உயிரிழப்பு விகிதம் ஆனது, 2024–2025 ஆம் ஆண்டில் சுமார் 8.2 ஆகக் குறைந்துள்ளது.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, 'சுவடுகள்' என்ற பெயரில் ஆன ஒரு எண்ணிமக் களஞ்சியத்தினை உருவாக்கும் ஒரு இலட்சிய நோக்கம் மிக்கத் திட்டத்திற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.
- தமிழ்நாடு மாநில அரசானது, அதன் ஊழியர்களின் பதவி உயர்வில் 4% என்ற இட ஒதுக்கீட்டை வழங்க உள்ளது.
- ஏழு கண்டங்களிலும் உள்ள மிக உயர்ந்த சிகரங்களில் ஏறிய முதல் தமிழக நபர் என்ற பெருமையினை N. முத்தமிழ் செல்வி பெற்றுள்ளார்.
- சென்னையின் லயோலா கல்லூரியில் முனைவர் பட்டம் பெற்று உதவிப் பேராசிரியர் பதவியைப் பெற்ற தமிழ்நாட்டின் முதல் திருநங்கை பெண் N. ஜென்சி ஆவார்.
- நிதியமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் நாணயவியல் ஆய்வாளர் ஆறுமுக சீதா ராமன் ஆகியோர் இணைந்து எழுதிய வரலாறு கூறும் தமிழ்நாட்டுக் காசுகள் (தமிழக வரலாற்றைப் பற்றிப் பேசும் நாணயங்கள்) என்ற புத்தகத்தின் இரண்டு தொகுதிகளைத் தமிழக முதல்வர் வெளியிட்டுள்ளார்.
- 1862 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட சென்னை உயர் நீதிமன்றம் ஆனது 163 ஆண்டுகளை நிறைவு செய்ய உள்ளது.
- மாநில அரசானது, தமிழ்நாடு 2025 ஆம் ஆண்டு கடன் வழங்கீட்டு நிறுவனங்கள் (கடும் கட்டாய நடவடிக்கைகளைத் தடுக்கும்) சட்டத்தினை அறிவித்துள்ளது.
- கடந்த நான்கு ஆண்டுகளில், சுமார் 81 லட்சத்திற்கும் அதிகமான திட்டப் பயனாளிகள் முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 5,878 கோடி ரூபாய் மதிப்புள்ள இலவச சிகிச்சையைப் பெற்றனர்.
- 2023–24 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் SDG குறியீட்டில், தமிழ்நாடு 78 புள்ளிகளைப் பெற்றது, இது 2018 ஆம் ஆண்டில் 66 ஆக இருந்தது.
- சென்னை தரமணியில் உலக வங்கிக் குழுவின் (WBG) மிகவும் நவீனமயமாக்கப்பட்ட உலகளாவிய வணிக மையத்தை (GBC) தமிழக முதல்வர் மற்றும் பிற உலக வங்கி அதிகாரிகளுடன் இணைந்து திறந்து வைத்தனர்.
- இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள தனுஷ்கோடியில் ஒரு பெரிய ஃபிளமிங்கோ சரணாலயத்தினை தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- ‘தெருக்கூத்து’ கலையின் ஒரு வடிவமான ‘மலைக் கூத்து’, தர்மபுரி மாவட்டம் மற்றும் திருப்பத்தூரில் உள்ள ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைகளில் உள்ள மலையாளிப் பழங்குடியினரின் வாழ்வில் கலாச்சார ரீதியாக அங்கம் வகிக்கிறது.
- தமிழ்நாடு மாநிலம், 2030 ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுவதற்கான இலக்கினை நிர்ணயித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, சுமார் 341 பில்லியன் டாலராக மதிப்பிடப் பட்டுள்ளதோடு பாகிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட அதிகமாக இது இருப்பதாக கூறப்படுகிறது.
- கடலூர் மாவட்டத்தில் உள்ள மருங்கூர் அகழ்வாராய்ச்சியைத் தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறை (TNSDA) நிறைவு செய்துள்ளது.

- தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை, ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களிடையே உள்ள கற்றல் இடைவெளிகளைக் குறைக்க, திறன் முன்னெடுப்பை (சீரமைப்பு மற்றும் கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இலக்கு சார் உதவி) தொடங்கியுள்ளது.
- கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆனைமலை புலிகள் காப்பகத்தில் (ATR) இந்தியாவின் முதல் இருவாச்சி வளங்காப்புக்கான சிறப்பு மையம் நிறுவப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- 4 நாட்கள் நடைபெறும் “2025 ஆம் ஆண்டிற்கான சாரல் விழா” தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் தொடங்கப்பட்டது.
- சென்னை உயர் நீதிமன்றத்தின் 54வது தலைமை நீதிபதியாக நீதிபதி மணிந்திர மோகன் ஸ்ரீவஸ்தவா பதவியேற்றார்.
- தமிழ்நாடு வனத்துறையானது உலக பாம்பு தினத்தன்று (ஜூலை 16) கிண்டியில் உள்ள குழந்தைகள் பூங்காவில் NAAGAM என்ற அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது.
- 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், அப்போதைய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான தமிழக அரசு, மாநிலத்தின் மறு பெயரிடுதலைக் குறிக்கும் வகையில், 2022 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை 18 ஆம் தேதியானது தமிழ்நாடு தினமாகக் கொண்டாடப்படும் என்று அறிவித்தது.
- தமிழ்நாட்டில், 2025 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 25 ஆம் தேதியன்று, தியாகிகள் தினம் ஆனது "தமிழ் மொழித் தியாகிகள் நாள்" ஆகக் கொண்டாடப்பட உள்ளது.
- புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் உள்ள அரசு மருத்துவமனைக்கு 2025–26 ஆம் ஆண்டிற்கான தேசியத் தர உறுதி தரநிலைகள் (NQAS) மற்றும் காயகல்ப் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.
- தமிழக அரசானது, K. காமராஜர் அவர்களின் பிறந்த நாளை (ஜூலை 15) 'கல்வி தினம்' அல்லது 'கல்வி மேம்பாட்டுத் தினம்' ஆக கொண்டாடுகிறது.
- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தைத் தொடங்கினார். இது நகர்புறத்தில் இல்லாதவர்கள், அல்லது இந்த வசதிகள் கிடைக்கப் பெறாதவர்கள் அல்லது பிற முன்னெடுப்பு முகாம்களைப் பற்றி அறியாதவர்களும் இதனால் பயனடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாடலாசிரியர் வைரமுத்து எழுதிய வள்ளுவர் மறை வைரமுத்து உரை எனும் திருக்குறள் விளக்கவுரையை தமிழக முதல்வர் வெளியிட்டார்.
- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டை மற்றும் 11 கோட்டைகள் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- "நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வெப்ப அழுத்தம்: தமிழ்நாட்டில் கட்டமைக்கப்பட்டப் பகுதி மற்றும் பருவநிலை தொடர்புகளின் தசாப்த கால மதிப்பீடு" என்ற ஒரு தலைப்பிலான அறிக்கை தமிழ்நாடு மாநில திட்டமிடல் ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு வெளியிடப் பட்டுள்ளது.
- உயர்வுக்குப் படி திட்டம் ஆனது சுமார் 77,752 மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற உதவியது.
- ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் (TRRI) ஆனது, ADT 59 என்ற புதிய குறுகிய கால சாகுபடி கொண்ட நெல் வகையை அறிமுகப்படுத்தியுள்ளது.

- தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நடத்தும் விடுதிகளும் இனி 'சமூக நீதி விடுதிகள்' என்று அழைக்கப்படவுள்ளது.
- காசநோய் (TB) உயிரிழப்புகளுக்கான ஒரு முன்கணிப்பு மாதிரியை அதன் காசநோய் ஒழிப்புத் திட்டத்தில் ஒருங்கிணைத்த இந்தியாவின் முதல் மாநிலமாக தமிழ்நாடு மாறி உள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கான விரிவான செயல் திட்டம் 2041 என்ற திட்டத்தினை அறிவித்தார்.
- 2024–25 நிதியாண்டில் திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து மேற் கொள்ளப் பட்ட ஆடை ஏற்றுமதி ₹45,000 கோடியை எட்டியுள்ளது.
- 2022 முதல் 2025 ஆம் ஆண்டு வரையில் முத்துப்பேட்டை சதுப்புநிலக் காடு பரப்பளவு 2,057 ஹெக்டேர் அதிகரித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் காலாவதியான 1994 ஆம் ஆண்டு செம்மரங்கள் பாதுகாப்புச் சட்டத்தினைப் புதுப்பிக்க வேண்டாம் என்று தமிழ்நாடு அரசானது முடிவு செய்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு திருநர்களுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை என்பதை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்.
- 14 ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாடு உண்மையான பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தில் பதிவாகியுள்ளது (2024–25 ஆம் ஆண்டில் தமிழகம் 11.19%).
- வின்ஃபாஸ்ட் எனும் வியட்நாமிய மின்சார வாகன (EV) தயாரிப்பு நிறுவனத்தினால் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் அதன் முதல் உற்பத்தி ஆலையை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- இந்திய இராணுவம் மற்றும் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆகியவை பாதுகாப்புத் தொழில்நுட்பத்தில் தன்னிறைவை அதிகரிப்பதற்காக AGNISHODH எனும் இந்திய இராணுவ ஆராய்ச்சி மையத்தினை (IARC) தொடங்கியுள்ளன.
- தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மஹால் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த நூலகமாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 ஆம் தேதியன்று தமிழ்நாடு மாநில பள்ளிக் கல்விக் கொள்கையை வெளியிட்டார்.
- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் பதிவு செய்யப்பட்ட 23 அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை அதன் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- தமிழ்நாடு மாநில வனத்துறையானது HAWK (விரோத நடவடிக்கைகளுக்கான முக்கிய கண்காணிப்பு அமைப்பு) என்ற டிஜிட்டல் வனவிலங்குக் குற்றக் கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2.17 கோடி பேர் என்ற இலக்கில் 93.13 லட்சம் பதிவுகளுடன் தமிழ்நாடு e–Shram இலக்கில் 43% இலக்கினை மட்டுமே அடைந்துள்ளது.
- கொடிவேரி அணைக்கட்டு அருகே பவானி நதியில் நிசும்பா சூதானி தெய்வத்தின் 14 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த கல் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசானது, சென்னை வனவிலங்குப் பிரிவின் கீழ் தனது இரண்டாவது கடல் சார் மேல்நிலைப் படைப் பிரிவை அமைக்க உள்ளது.
- சென்னை காவல்துறையானது 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்காக 1252 என்ற உதவி எண்ணுடன் ஒரு முதியோர் உதவி மையத்தை நிறுவியுள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25 ஆம் தேதியன்று சென்னை நகர உயிரியல் பல்வகைக் குறியீட்டை அறிமுகப்படுத்தினார்.
- இரண்டாவது பிரத்தியேக 'யானைப் பாகன் கிராமம்' ஆனது ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் (ATR) உள்ள கோழிக்கமுத்தி யானை முகாமில் திறக்கப்படத் தயாராக உள்ளது.
- ஜெர்மன் மாகாணமான வடக்கு ரைன்-வெஸ்ட்பாலியா (NRW) மற்றும் தமிழ்நாடு ஆகியவை நீடித்த நிலையான மேம்பாடு, தொழில்துறை வளர்ச்சி மற்றும் புதுமை ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வலுவான கூட்டாண்மையைப் பகிர்ந்து கொண்டன.
- 2025 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், 1925 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு நிறைவு கடைபிடிக்கப் பட்டது.
- கடல்சார் பல்லுயிரியலைப் பாதுகாக்கவும், மீட்டெடுக்கவும் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு கடல் சார் வள அறக்கட்டளையைத் (TNMRF) தொடங்கியது.
- 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 100,000 பிறப்புகளுக்கு 38 ஆக இருந்த தமிழ்நாட்டின் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு விகிதம் (MMR) ஆனது 35 ஆகக் குறைந்துள்ளது.
- கடலூரில் தலைமையகத்தைக் கொண்ட முந்திரி வாரியத்தை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 67,213 சாலை விபத்துகள் பதிவானது, இது தேசிய அளவிலான மொத்த விபத்துகளில் 14% ஆகும்.
- தமிழ்நாடு வனத்துறையானது, இந்தியாவின் முதல் இருவாட்சி வளங்காப்பிற்கான சிறப்பு மையத்தை நிறுவுவதற்காக வால்பாறை பீடபூமியில் உள்ள அட்டகட்டி பகுதியைத் தேர்வு செய்தது.
- NLC இந்தியா லிமிடெட் (NLCIL) நிறுவனம், சர்வதேசத் திட்ட மேலாண்மைச் சங்கத்திடமிருந்து மூன்றாம் நிலை IPMA டெல்டா சான்றிதழைப் பெற்றுள்ளது.
- Chennai One என்பது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் தேதியன்று தமிழக முதலமைச்சரால் தொடங்கப்பட்ட ஒரு கைபேசி செயலியாகும்.
- தமிழ்நாடு அரசானது, கேரள மாநிலத்தின் ஆலப்புழாவில் உள்ள ஆறுக்குட்டியில் பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் நினைவிடத்தைக் கட்டமைக்க உள்ளது.
- சிங்க வால் குரங்கு, மதராஸ் முள்ளம்பன்றி, வரிகள் கொண்ட கழுதைப் புலி மற்றும் கூம்புத் தலை பெளி மீன் ஆகிய நான்கு குறைவாக அறியப்படுகின்ற அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதற்காக தமிழக அரசானது 1 கோடி ரூபாய் நிதியை வழங்கியுள்ளது.
- பிங்க் பாட்ரோல் எனும் பெண்கள் தலைமையிலான காவல் துறை ரோந்து முன்னெடுப்பானது, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பொது இடங்களில் உதவுவதற்காக நீலகிரி மாவட்டத்தில் முதல் முறையாக தொடங்கப்பட்டுள்ளது.
- ஈரோடு மாவட்டத்தில் உள்ள நாகமலை குன்று ஆனது தமிழ்நாட்டின் நான்காவது பல்லுயிர் பாரம்பரிய தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசானது, பசலி ஆண்டின் முதல் நாளான ஜூலை 01 ஆம் தேதியை 'வருவாய்த் துறை தினம்' ஆக நியமித்துள்ளது.
- சென்னை கொளத்தூரில் அமைக்கப்பட்டுள்ள ஆசியாவின் மிகப்பெரிய அலங்கார மீன் சந்தை வளாகத்தைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு அரசானது, 2025–26 ஆம் ஆண்டு முதல் மலைப் பகுதிகளில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கும் 'விடியல் பயணம்' இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தினை விரிவுபடுத்தியுள்ளது.
- தென்காசி மாவட்டத்தில் உள்ள திருமலாபுரத்தில் தமிழ்நாடு மாநிலத் தொல்பொருள் துறையானது (TNSDA) முதல் அகழ்வாராய்ச்சியை நடத்தியது.
- திருநங்கைகளுக்கான 'அரண் இல்லம்' என்ற தங்கும் இல்லங்களை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.
- தமிழ்நாடு சட்டமன்றமானது 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக் கழகங்கள் (திருத்தம்) மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- சிறைச்சாலையில் தயாரிக்கப்படும் பொருட்களின் விற்பனையிலிருந்து வருவாய் ஈட்டுவதில் தமிழ்நாடு மாநிலம் இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.
- தமிழ்நாடு அரசானது, பொது-தனியார் கூட்டாண்மை மாதிரியின் கீழ் கோவையில் செயற்கை நுண்ணறிவுக்கான ஒரு சிறப்பு மையத்தை அமைக்க உள்ளது.
- சாதி அடிப்படையிலான வெறுப்பு ரீதியாக இழைக்கப்படும் குற்றங்கள் மற்றும் ஆணவ/கௌரவக் கொலைகளுக்கு எதிரான சட்டத்தை பரிந்துரைக்க ஓர் ஆணையத்தை அமைக்க உள்ளதாக தமிழக முதல்வர் அறிவித்தார்.
- நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு மற்றும் இடஞ்சார்ந்த முடிவெடுத்தல் ஆதரவு அமைப்பு (RTFF & SDSS) பெற்ற முதல் இந்திய நகரமாக சென்னை மாறியுள்ளது.
- இந்திய ஒன்றிய முஸ்லிம் லீக் (IUML) தலைவர் அப்துல் சமத் பற்றிய "உலக அரங்கில் சிராஜ் உல் மின்னத்" என்ற புத்தகம் அவரது பிறந்த நாளான 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 26 ஆம் தேதியன்று சென்னையில் வெளியிடப் பட்டது.
- தமிழ்நாட்டில் நான்கு மாவட்டங்கள் (இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர்) ஆகியவை பிரதான் மந்திரி தன் தானிய கிரிஷி யோஜனாவின் கீழ் சேர்க்கப் பட்டுள்ளன.
- இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் சிறிய TIDEL தொழில்நுட்பப் பூங்காக்களை நிறுவுவதற்கான மாநில அரசின் முன்னெடுப்பின் ஒரு பகுதியாக வேலூரில் உள்ள அப்துல்லாபுரம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள முதல் சிறிய TIDEL தொழில்நுட்பப் பூங்காவை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) மற்றும் மாநில அரசு இடையேயான கலந்துரையாடல்களின் கீழ் 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு செயற்கை மழை உருவாக்கம் (மேக விதைப்பு) குறித்து ஆராயத் தொடங்கியது.
- தமிழ்நாட்டில் மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தி அமைப்புகள் நிறுவப்படுவது குறைவாகவே உள்ளது. வருடாந்திர மின்சாரத் தேவையில் மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தியின் பரவல் தமிழ்நாட்டில் 1.55%, கேரளாவில் 8.07% மற்றும் குஜராத்தில் 6.43% ஆக உள்ளது.
- தமிழ்நாட்டில் முதல் முறையாக, சென்னை மெட்ரோ இரயில் (CMRL) நிர்வாகமானது தானமாக வழங்கப்பட்ட ஓரிணை நுரையீரல்களைக் கொண்டு செல்வதற்கான ஒரு பசுமை வழித்தடமாக செயல்பட்டது.

- ❖ சின்டிலோமீட்டர் என்பது நிலப் பரப்பிற்கும் காற்றுக்கும் இடையிலான வெப்பம் மற்றும் ஈரப்பத பரிமாற்றத்தை அளவிடும் ஓர் ஒளியியல் கருவியானது, ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (TRRI) நிறுவப் பட்டது.
- ❖ முதல்வர் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதியன்று, திருச்சியில் அன்புச் சோலை (அன்பின் தோட்டம்) எனப்படும் முதியோர்களுக்கான பகல்நேரப் பராமரிப்பு மையங்களைத் தொடங்கி வைத்தார்.
- ❖ தமிழ்நாடு அரசானது இந்தியாவின் முதல் 'மகளிர் நலனுக்கான நடமாடும் மருத்துவ சேவை' என்ற வாகனங்கள் சேவையைத் தொடங்க உள்ளது.
- ❖ தமிழ்நாட்டில் உள்ள கோவளம் கடற்கரை தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக சர்வதேச நீலக் கொடி சான்றிதழைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- ❖ தமிழ்நாடு அரசானது, பருவநிலை நடவடிக்கைப் பணிகளை ஒருங்கிணைக்க என்று தமிழ்நாடு பசுமைப் பருவநிலை நிறுவனத்தை உருவாக்கியுள்ளது.
- ❖ குலசேகரப்பட்டினத்தில் நிறுவப்பட உள்ள இஸ்ரோவின் ஏவுதளத்திற்கு அருகில் தமிழ்நாடு அரசு ஓர் உந்து எரிபொருள் உற்பத்தி மற்றும் விண்வெளி உற்பத்தி மண்டலத்தை நிறுவி வருகிறது.
- ❖ இந்தியாவில் திருநர்கள் நலக் கொள்கையை அறிமுகப்படுத்திய மற்றும் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதியன்று திருநர்கள் நல வாரியத்தை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- ❖ எகிப்தின் செங்கடல் கடற்கரையில் உள்ள ஒரு பழங்காலத் துறைமுக நகரமான பெரெனிகேயில் நடைபெறும் அகழ்வாராய்ச்சியில் தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறை (TNSDA) இணைந்துள்ளது.
- ❖ சென்னை துறைமுக ஆணையமானது, உமிழ்வுக் குறைப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக அதன் முதல் பசுமை இழுவைப் படகுகளை வாங்குவதற்கான செயல் முறையைத் தொடங்கியுள்ளது.
- ❖ சென்னை செம்மஞ்சேரியில் ஓர் உலகளாவிய விளையாட்டு நகரத்தை நிறுவ தமிழ்நாடு அரசு 261 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.
- ❖ ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியான நீதிபதி R. ஹேமலதாவை தமிழ்நாடு லோக் ஆயுக்தாவின் நீதித்துறை உறுப்பினராக தமிழக அரசு நியமித்து உள்ளது.
- ❖ சென்னைக்கான விரிவான போக்குவரத்துத் திட்டம் (CMP) ஆனது மெட்ரோ இரயில், LRT (இழுவை இரயில்–லைட் இரயில் போக்குவரத்து), RRTS (பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பு) மற்றும் ஒரு தடவண்டி/டிராம் பாதைக்கான எதிர்கால வழித் தடங்களை அடையாளம் கண்டுள்ளது.
- ❖ சாம்சங் மற்றும் ஐக்கிய நாடுகளின் உலகளாவிய காம்பாக்ட் வலையமைப்பு –இந்திய (UN GCNI) அமைப்பு ஆகியவை இணைந்து சென்னையில் DigiArivu எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- ❖ தமிழ்நாட்டில் உள்ள வெப்ப தாங்கு திறன் மையம் ஆனது, ஐக்கியப் பேரரசு அரசாங்கத்தின் ரெசிலியன்ட் ஆசியாவிற்கான பருவநிலை நடவடிக்கையின் கீழ் தொடங்கப் பட்டது.
- ❖ தமிழக மாநில அரசானது, காவிரி டெல்டா பகுதியில் உள்ள திருமுட்டம்/ஸ்ரீமுஷ்ணம் தாலுக்காவில் 38 வருவாய் கிராமங்களைச் சேர்த்துள்ளது.

- சுகாதாரச் சேவைத் துறையில் வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்காக செவிலியர் மற்றும் அதனுடன் தொடர்புடைய சுகாதார அறிவியல் துறைகளுக்கு நான் முதல்வன் திட்டத்தினை தமிழ்நாடு அரசு விரிவுபடுத்தியுள்ளது.
- தமிழக முதல்வர் கோவையில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி பூங்காவைத் திறந்து வைத்தார்.
- ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி தாலுக்காவில் உள்ள ஜெயராமபுரத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லனின் சிலையுடன் புதிதாக கட்டமைக்கப்பட்ட நினைவு மண்டபத்தை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- 2024 ஆம் ஆண்டில் இதுவரை தமிழ்நாட்டில் 240 உயிழந்த உறுப்பு கொடையாளர்கள் பதிவு செய்யப் பட்டுள்ளனர்.
- ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சியில் உள்ள ஜெயராமபுரத்தில் 18 ஆம் நூற்றாண்டின் சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லானின் முழு அளவிலான சிலையைக் கொண்ட நினைவுச்சின்னத்தை தமிழக முதல்வர் M.K. ஸ்டாலின் திறந்து வைத்தார்.
- தமிழ்நாடு தொழில்நுட்ப ஜவுளித் திட்டம் ஆனது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் 15 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது.
- மதுரையின் திருப்பரங்குன்றம் தாலுக்காவில் உள்ள வளையங்குளம் கிராமத்தில் கிராமியக் கலை வடிவங்களுக்கான பயிற்சிப் பள்ளியைத் தொடங்க தமிழக அரசு நிலம் வழங்க உள்ளது.
- தமிழ்நாடு ஆடு மற்றும் செம்மறி ஆடு வளர்ப்புக் கொள்கை, சமீபத்தில் மாநில அரசால் வெளியிடப்பட்டது.
- கோவையில் செம்மொழிப் பூங்காவிற்கு அருகில் காந்திபுரத்தில் ஒரு நீலகிரி வரையாடு தகவல் பரப்பு மையம் நிறுவப்படும்.
- மதுரையில் சுதந்திரப் போராட்ட வீரர் வேலு நாச்சியார் பெயரிடப்பட்ட மேலமடை சந்திப்பு மேம்பாலம் தமிழக முதல்வரால் திறந்து வைக்கப் பட்டது.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் ஒவ்வொரு வனப் பிரிவிலிருந்தும் சென்னா ஸ்பெக்டபிலிஸை அகற்றுவதற்காக தமிழ்நாடு அரசானது நாட்டின் மிகப்பெரிய ஒழிப்பு முயற்சிகளில் ஒன்றை மேற்கொண்டு வருகிறது.
- தமிழ்நாடு மாநிலம் 16% என்ற மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்து மற்ற மாநிலங்களை முந்தியது.
- நடப்பு விலையில், 2023–24 ஆம் ஆண்டில் 26.88 லட்சம் கோடி ரூபாயாக இருந்த தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) 2024–25 ஆம் ஆண்டில் 31.19 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.
- சிறப்புத் தீவிர திருத்தத்திற்குப் பிறகு (SIR) தமிழ்நாட்டின் வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்து 97 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டனர்.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டை அருகே அமைக்கப்பட்டுள்ள பொருநை தொல்பொருள் அருங்காட்சியகத்தைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- மனித–யானை மோதலை நிர்வகிப்பதற்காக கூடலூர் வனப் பிரிவில் உள்ள நடுகாணி மலைத்தொடரில் ஒரு கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் திறக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டின் முதல் பிரத்தியேகமான நாய்கள் பூங்கா உதகமண்டலத்தில் உள்ள ஆர்போரேட்டத்தில் (மரக் கருவூலத்தில்) திறக்கப்பட்டுள்ளது.

- 2024–25 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 15,440 காப்புரிமை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப் பட்டுள்ளதுடன், காப்புரிமைத் தாக்கல்களில் அனைத்து இந்திய மாநிலங்களிலும் தமிழகம் முதலிடத்தில் இருந்தது.
- பல இந்திய நகரங்களுடன் ஒப்பிடும்போது சென்னையில் PM2.5 (நுண் துகள்கள்) அளவு குறைவாக இருந்தது.
- சுமார் 1,155 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டின் வைகை வெள்ளப் பெருக்கில் கீழடி குடியிருப்புப் பகுதிகள் புதையுண்டதாக தொல்பொருள் சான்றுகள் காட்டுகின்றன.
- கோயம்புத்தூரில் உள்ள உக்கடம்–ஆத்துப்பாலம் மேம்பாலம் ஆனது பாரத ரத்னா விருது பெற்ற முன்னாள் மத்திய அமைச்சர் C. சுப்பிரமணியத்தின் பசுமைப் புரட்சி மரபைக் கௌரவிக்கும் வகையில் அவரது பெயரால் பெயரிடப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- உலகளாவிய தேவை அதிகரித்து வருவதால் தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் இருந்து மஞ்சள் ஏற்றுமதி இந்த ஆண்டு 5% அதிகரித்துள்ளது.

## தேசியச் செய்திகள்

- மத்தியப் பாதுகாப்பு அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டினை 'சீர்திருத்த ஆண்டாக' அறிவித்துள்ளது.
- இந்தியக் கடற்படைக்கான இரண்டாவது பல்நோக்குக் கப்பலான INS உத்கர்ஷ் என்ற கப்பல் சென்னைக்கு அருகிலுள்ள காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு பிளஸ் (UDISE+) என்ற ஒரு அறிக்கையினை சமீபத்தில் ஒன்றியக் கல்வித் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- 09.08.2024 அன்று மக்களவையிலும், 05.12.2024 அன்று மாநிலங்களவையிலும் பாரதிய வாயுயான் ஆதினியம் 2024 நிறைவேற்றப்பட்டது.
- ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகமானது ஆறாவது LEADS (வெவ்வேறு மாநிலங்களில் தளவாட சேவைகளின் எளிமைத்தன்மை - 2024) என்ற ஒரு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- சமீபத்திய UDISE பிளஸ் அளித்த தகவலின் படி இந்தியாவில் 57.2% பள்ளிகளில் மட்டுமே செயல்பாட்டு நிலையில் உள்ள கணினிகள் உள்ளன, மேலும் அதில் 53.9% மட்டுமே இணைய அணுகலைக் கொண்டுள்ளன.
- மத்திய அரசானது, 2023 ஆம் ஆண்டு பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா சட்டத்தின் 479வது பிரிவின் விதிகளை அமல்படுத்த செய்யுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுக்கு (UT) அறிக்கை அனுப்பியுள்ளது.
- இந்தியாவின் கடற்கரை 50 ஆண்டுகளுக்குள் சுமார் பாதியளவு விரிவடைந்துள்ளது, அதாவது 1970 ஆம் ஆண்டில் 7,516 கி.மீ. ஆக இருந்த இந்தியக் கடற்கரை 2023-24 ஆம் ஆண்டில் 11,098 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது.
- இந்திய நாட்டினை பல்வேறு வானிலை சூழல்களுக்கு ஏற்ற நிலையில் மிகவும் நன்கு தயாரானதாகவும் மற்றும் பருவநிலைக்கு ஏற்ற வகையிலான ஒரு தேசமாக அதனை மாற்றுவதற்காக 'மௌசம் திட்டம்' தொடங்கப்பட்டுள்ளது.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது இந்தியாவிலேயே தயாரிக்கப் பட்ட நாக் மார்க்-2 எனப்படும் பீரங்கி எதிர்ப்பு எறிகணையின் கள மதிப்பீட்டுச் சோதனைகளை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- தெலங்கானாவின் நிஜாமாபாத்தில் தலைமையகத்துடன் கங்கா ரெட்டி என்பவரை அதன் முதல் தலைவராகக் கொண்டு தேசிய மஞ்சள் வாரியம் (NTB) ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- சமீபத்தில், சில்லறை விற்பனை தொழில் துறையில் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதற்காக வேண்டி EmpowHER Biz - சப்னோ கி உதான் எனும் ஒரு முன்னெடுப்பானது தொடங்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசானது, சஞ்சார் சாத்தி கைபேசி செயலி மற்றும் தேசிய அகலப்பட்டை வரிசை திட்டம் (NBM) 2.0 ஆகியவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய விண்வெளிசார் புத்தொழில் நிறுவனமான திகந்தரா நிறுவனம், விண்வெளி அமைப்புகளைக் கண்காணிக்கும் ஒளிப்படக் கருவி (SCOT) செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் 24.5 ஜிகாவாட் (GW) அளவிலான சூரிய மின்னாற்றல் திறனும் 3.4 GW காற்றாற்றல் திறனும் உற்பத்தி செய்யப் பட்டதுடன் இந்தியா ஒரு சாதனை மைல் கல்லை எட்டியுள்ளது.
- மத்திய அரசானது, இந்திய இராணுவத்தில் சேர்க்கப்பட உள்ள 'SANJAY' எனப்படும் ஒரு போர்க்களக் கண்காணிப்பு அமைப்பினை (BSS) கொடியசைத்து தொடங்கி வைத்தது.
- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பிப்ரவரி 01 ஆம் தேதியன்று மத்திய அரசின் நிதி நிலை அறிக்கையினை தாக்கல் செய்ய உள்ளார் என்ற நிலையில் அவர் தொடர்ந்து தாக்கல் செய்யும் எட்டாவது நிதிநிலை அறிக்கையினை இது குறிக்கிறது.
- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது ஜனவரி 25 ஆம் தேதியன்று, தேசத்திற்கான தனது 75 ஆண்டு காலச் சேவையினைக் கொண்டாடியது.
- 1950 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் தேதியன்று நிறுவப்பட்ட இந்திய உச்ச நீதிமன்றம் ஆனது தனது 75 ஆம் ஆண்டு நிறைவினை கொண்டாடுகிறது.
- "2024 ஆம் ஆண்டு விமானம் சார்ந்த ஈடுபாடுகளைப் பாதுகாத்தல் மற்றும் அமலாக்க மசோதாவிற்கு (கேப் டவுன் உடன்படிக்கை மசோதா)" மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- குஜராத் மாநிலத்தில் உள்ள ஆனந்த் ஊரக மேலாண்மை கல்வி நிறுவனத்தில் (IRMA) இந்தியாவின் முதல் தேசியக் கூட்டுறவுப் பல்கலைக்கழகமான திரிபுவன் சஹ்காரி பல்கலைக் கழகம் ஆனது நிறுவப்பட உள்ளது.
- 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், ஜல் ஜீவன் திட்டமானது 2028 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்படுவதாகவும், அதற்கான மொத்த நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப் படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- மத்திய அரசின் மொத்த நிதி ஒதுக்கீட்டில், 2024-25 ஆம் நிதியாண்டில் 6.8 சதவீதமாக இருந்த பாலினம் சார் திட்ட நிதி ஒதுக்கீட்டின் பங்கு ஆனது 2025-26 ஆம் நிதியாண்டில் 8.86% ஆக அதிகரித்துள்ளது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் ஃபரிதாபாத்தில் உள்ள மருத்துவத் தகவல் பரிமாற்றம் சார்ந்த சுகாதார அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவை கர்பிணி-GA2 என்ற இந்தியாவிற்கான மிகவும் பிரத்தியேக செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்குவதற்காக ஒரு ஒத்துழைப்பினை மேற் கொண்டுள்ளன.

- 2025 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் தேசியக் கையெழுத்துப் பிரதி திட்டத்தின் (NMM) கீழ் 'ஞான் பாரதம் திட்டம்' சேர்க்கப்பட்டுள்ளது.
- மத்திய நிதிநிலை அறிக்கையில், நடுத்தர வர்க்கத்தினருக்கு மலிவான வீட்டு வசதி வழங்கும் சிறப்பு திட்ட நிதியின் (SWAMIH) கீழான இரண்டாவது தவணையாக 15,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- பருப்பு வகைகளில் சுய சார்பிற்கான ஒரு திட்டமானது, 2025-26 ஆம் நிதியாண்டில் 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டைப் பெற்ற ஆறு ஆண்டு காலத் திட்டமாகும்.
- மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் நீர்வடிகால் பகுதிகள் யாத்திரை எனப் படும் தேசிய அளவிலான ஒரு மாபெரும் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தினைத் தொடங்கி வைத்தார்.
- 2013-14 ஆம் ஆண்டில் சுமார் 2,53,346 கோடி ரூபாயாக இருந்த நாட்டின் பாதுகாப்பு துறைக்கான நிதி ஒதுக்கீடானது, 2024-25 ஆம் ஆண்டில் 6,21,940.85 கோடி ரூபாயை எட்டியுள்ளது.
- நிறுவப்பட்ட சூரிய மின்னாற்றல் திறனில் 100 GW (100.33 GW) என்ற ஒரு வரம்பினைத் தாண்டி இந்தியா ஒரு வரலாற்று மைல்கல்லை எட்டியுள்ளது.
- தேசிய சஃபாய் கரம்சாரிகள் (தூய்மைப் பணியாளர்கள்) ஆணையத்தின் (NCSK) பதவிக் காலத்தை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிப்பதற்கு வேண்டி மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- அடல் புஜல் யோஜனா திட்டத்தினை பீகார், பஞ்சாப் மற்றும் தமிழ்நாடு உட்பட மேலும் ஐந்து மாநிலங்களுக்கு விரிவுப்படுத்துவதற்கு மத்திய அரசுத் திட்டமிட்டுள்ளது.
- இந்திய எரிவாயுச் சந்தை அறிக்கை: 2030 ஆம் ஆண்டிற்கான கண்ணோட்ட அறிக்கை என்பது சர்வதேச எரிசக்தி முகமையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- மெட்டா என்ற நிறுவனமானது, வாட்டர்வொர்த் எனப்படுகின்ற அதன் இணையவழி இணைப்பிற்கான கடலடிக் கம்பிவடத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சுரங்கத் துறை அமைச்சகம் ஆனது, பாரைட்டுகள் (பாரிய கந்தகை), ஃபெல்ட்ஸ்பார் (களிக்கல்), மைக்கா மற்றும் குவார்ட்ஸ் ஆகியவற்றை "முக்கியக் கனிமங்கள்" ஆக வகைப்படுத்தியுள்ளது.
- இந்தியாவில் 1990 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் தற்கொலை காரணமான உயிர் இழப்புகளின் விகிதத்தில் 30 சதவீதத்திற்கும் சரிவு பதிவாகியுள்ளது.
- இந்தியாவின் பட்டதாரிகளின் திறன் குறியீடு 2025 என்ற புதிய அறிக்கையை மெர்சர் - மெட்ல் என்ற நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்தியத் தேசியக் கடல் சார் தகவல் சேவை மையம் (INCOIS) ஆனது 1999 ஆம் ஆண்டில் தெலுங்கானாவின் ஐதராபாத் நகரில் நிறுவப்பட்டது.
- புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது தேசிய மாதிரி ஆய்வு அமைப்பின் (NSS) 75வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனைகள் வாரியத்தின் (SEBI) 11வது தலைவராக துஹின் காந்தா பாண்டே பொறுப்பேற்றுள்ளார்.
- குஜராத் மாநிலதின் தோலேரா நகரில் நாட்டின் முதல் வணிக ரீதியான குறைக்கடத்தி உற்பத்தி மையத்தினை நிறுவுவதற்காக என்று, இந்தியக் குறைக்கடத்தி உற்பத்தித் திட்டமானது (ISM) ஒரு நிதி ஆதரவு ஒப்பந்தத்தில் (FSA) கையெழுத்திட்டுள்ளது.

- இரயில்வே அமைச்சகத்தின் ஒரு ஆதரவுடன் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது, சுமார் 422 மீட்டர் நீளமுள்ள, இந்தியாவின் முதல் ஹைப்பர்லூப் சோதனை பாதையை உருவாக்கியுள்ளது.
- ஸ்வச் சர்வேக்சன் (SS) எனப்படுகின்ற உலகின் மிகப்பெரிய 9வது நகர்ப்புற தூய்மை கணக்கெடுப்பிற்கான மிகவும் புதுப்பிக்கப்பட்டதொரு வடிவமைப்பை மத்திய அரசு அறிமுகப் படுத்த யுள்ளது.
- இந்தியக் கடற்படையானது படையிலிருந்து நீக்கப்பட்ட ஐஎன்எஸ் குல்தார் எனப்படும் கடற்கரையில் நிலை நிறுத்தும் வகையிலான ஒரு கப்பலினை மகாராஷ்டிரா சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) மற்றும் டவுன் டு எர்த் (DTE) இதழ் ஆனது 2025 ஆம் ஆண்டு இந்தியச் சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- இந்திய இரயில்வே உணவு வழங்கீடு மற்றும் சுற்றுலாக் கழகம் (IRCTC) மற்றும் இந்திய இரயில்வே நிதிக் கழகம் (IRFC) ஆகியவை முறையே நாட்டின் 25வது மற்றும் 26வது நவரத்னா நிறுவனங்களாக மாறியுள்ளன.
- சுங்கச் சட்டம் 1962 மற்றும் சரக்கு & சேவை வரிச் சட்டம் 2017 ஆகியவற்றின் கீழ் கைது செய்வதற்கு வேண்டி அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகளின் உரிமைகளை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- மக்களவையானது 2024 ஆம் ஆண்டு எண்ணெய் வயல்கள்/கிணறுகள் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- ஒடிசா கடற்கரையில் தேஜாஸ் AF MK 1 எனப்படும் இலகுரகப் போர் விமானத்திலிருந்து அஸ்த்ரா எனப்படும் புலனாகும் வரம்பிற்கு அப்பால் உள்ள இலக்குகளைத் தாக்கும் ஒரு திறன் கொண்ட வான்வழி எறிகணையினை (BVRAAM) இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்துள்ளது.
- தகவல் தொடர்பு மேம்பாட்டு மையம் (C-DoT) "சமர்த்" என்று பெயரிடப்பட்ட காப்பு மையத் திட்டத்தின் முதல் குழுவைத் தொடங்க உள்ளது.
- குஜராத் மாநிலமானது, நிதி ஆயோக் அமைப்பு நிர்ணயித்த 2024 ஆம் ஆண்டிற்கான காசநோய் பதிவு இலக்கில் சுமார் 95% இலக்கினையும், அதன் சிகிச்சை இலக்கில் 90% இலக்கினையும் அடைந்துள்ளது.
- மத்திய அமைச்சரவையானது, சிறப்பு விரைவு நீதிமன்றங்கள் (FTSCs) திட்டத்தினை 2026 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரையில் நீட்டித்துள்ளது.
- குஜராத்தில் உள்ள ஆனந்த் கிராமப்புற மேலாண்மைக் கல்வி நிறுவனத்தில் (IRMA) இந்தியாவின் முதல் தேசியக் கூட்டுறவுப் பல்கலைக்கழகத்தினை உருவாக்கச் செய்வதற்கான 2025 ஆம் ஆண்டு திரிபுவன் சஹ்காரி பல்கலைக்கழக மசோதாவினை மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மக்கள்தொகை மற்றும் குறைந்தது 20,000 பழங்குடியினர் வசிக்கும் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு பள்ளியை நிறுவச் செய்வதை உறுதி செய்யும் வகையில், 440 ஏகலவ்யா மாதிரி குடியிருப்புப் பள்ளிகளை (EMRS) நிறுவும் திட்டங்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் (SDSC) மூன்றாவது ஏவுதளத்தை (TLP) நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தியாவின் உள்நாட்டு நீர்வழிகளில் 2014-15 ஆம் ஆண்டில் 18 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்த சரக்குப் போக்குவரத்தானது, 2024-25 ஆம் ஆண்டில் 145 மில்லியன் டன்களுக்கு மேல் பதிவாகியுள்ளதுடன் இந்தியா புதியச் சாதனையினைப் படைத்து உள்ளது.
- பீகாரின் கோசி மெச்சி உள் மாநில நதிநீர் இணைப்புத் திட்டத்திற்குப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிடையேயான இருதரப்பு அரசுமுறை உறவுகள் நிறுவப்பட்ட 75வது ஆண்டு நிறைவு கொண்டாடப் பட்டது.
- அதன் முதல் வகையான முயற்சியில், இந்திய இராணுவம் ஆனது பீரங்கி டாங்க் எதிர்ப்பு ஆயுதம் பொருத்தப்பட்ட ஒளிப்படக் கருவியின் தகவல் மூலமான ஒரு முக்கிய கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் (FPV) காமிகேஸ் என்ற ஆளில்லா விமானத்தினை அறிமுகப் படுத்தத் தொடங்கியுள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டில் சுமார் 4,515 தத்தெடுப்புகளுடன் இந்தியாவில் மிகவும் அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தத்தெடுப்புகள் பதிவாகியுள்ளன என்பதோடு இது கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகும்.
- இந்தியா முழுவதும் ரேபிஸ் எதிர்ப்புத் தடுப்பூசிகள் (ARV) மற்றும் பாம்பு விஷ முறிவு (ASV) ஆகியவற்றின் நிகழ்நேர கிடைக்கும் தன்மையைக் கண்காணிக்க, மத்திய சுகாதார அமைச்சகம் ZooWIN (Zoonosis Winner) என்ற டிஜிட்டல் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வணிக ரீதியான விமானி (வானூர்தி ஓட்டுநர்) உரிமத்திற்காக (CPL), உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் HANSA-3 (NG) பயிற்சி விமானத்தின் தொழில்நுட்பப் பரிமாற்றத்தினை (ToT) மத்திய அரசு இறுதி செய்துள்ளது.
- இஸ்ரோவின் தலைமையிலான SAFE Agromet திட்டம் ஆனது, மாதாந்திர நெல் சாகுபடி கண்ணோட்டச் செயல்பாட்டிற்கு ஆதரவளிப்பதற்காக விண்வெளி அடிப்படையிலான வேளாண் வானிலைத் தகவல்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பீகாரில் அதிக எண்ணிக்கையிலான பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) பெண் தொழில்முனைவோர் (4.2 கோடி) உள்ளனர் என்ற ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (4.0 கோடி) மற்றும் மேற்கு வங்காளம் (3.7 கோடி) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- நகர்ப்புறங்களில், ஆண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (LFPR) என்பது நன்கு அதிகரித்துள்ளது (2023 ஆம் ஆண்டில் 74.3% ஆக இருந்த இது 2024 ஆம் ஆண்டில் 75.6% ஆக உயர்ந்தது) என்பதோடு பெண்கள் மத்தியில் இது சிறிது அதிகரித்துள்ளது (25.5% ஆக இருந்த இது 25.8% ஆக உயர்ந்தது).
- கடந்த ஐந்து ஆண்டுகளில் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் அறிவிக்கப்பட்ட குழந்தைப் பருவ காசநோய் (TB) பாதிப்புகளின் எண்ணிக்கை 38 சதவீதம் அதிகரித்து உள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பானது, 'வாகனங்களுக்கான தொழில்துறை: உலகளாவிய மதிப்புச் சங்கிலிகளில் இந்தியாவின் பங்கேற்பை மிகவும் மேம்படுத்துதல்' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலக வங்கியின் தரவுகளின்படி, 2011-12 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப் பட்ட பத்தாண்டுகளில் இந்தியா 171 மில்லியன் மக்களை மிகவும் தீவிரமான வறுமை நிலையிலிருந்து மீட்டுள்ளது.

- ஆசியாவின் மிகவும் பழமையான பங்குச் சந்தையான BSE நிறுவனம் தனது 150வது ஆண்டு நிறைவு விழாவை சமீபத்தில் கொண்டாடியது.
- புவி அறிவியல் துறை அமைச்சகத்தின் இந்திய வானிலை ஆய்வுத் துறையானது (IMD) பாரத் முன்னறிவிப்பு/ முன்னெச்சரிக்கை அமைப்பை (BFS) ஏற்றுள்ளது.
- இந்திய இரயில்வே நிர்வாகம் மற்றும் உத்தரப் பிரதேச மாநில அரசு ஆகியவை இணைந்து, கட்டார்னியாகாட் வனவிலங்கு சரணாலயத்திற்கும் துத்வா புலிகள் வளங் காப்பகத்திற்கும் இடையில் இந்தியாவின் முதல் சுற்றுலாப் பயணிகளுக்குப் பரந்த காட்சியினை வழங்கும் விஸ்டாடோம் ஜங்கிள் சஃபாரி இரயிலை அறிமுகப்படுத்தி உள்ளன.
- இந்தியாவின் கடற்கரையானது 7,516.6 கிலோ மீட்டரிலிருந்து சுமார் 11,098.8 கி. மீட்டர் ஆக அதிகரித்துள்ளதோடு அந்த நீளமானது தற்போது உள்துறை அமைச்சகத்தால் மறு மதிப்பாய்வு செய்யப் பட்டு வருகிறது.
- கொங்கன் இரயில்வே கழக லிமிடெட் (KRCL) நிர்வாகத்தினை இந்திய இரயில்வே நிர்வாகத்துடன் இணைக்க மகாராஷ்டிரா அரசு ஒப்புக் கொண்டுள்ளது.
- தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலத்தில் புதிய கோவிட்–19 வைரசின் NB.1.8.1 மற்றும் LF.7 எனப்படும் புதிய துணை வகைகள் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தியக் கடற்படையானது மிகப் பாரம்பரிய முறையில் கட்டமைக்கப்பட்ட கயிறுகள் மற்றும் வடங்கள் கொண்டு பலகைகள் கோர்க்கப் பட்டு உருவாக்கப்பட்ட கப்பலை INSV கௌண்டின்யா என்ற பெயரில் படையில் இணைத்தது.
- உலகின் மிகவும் உயரமான சிகரமான எவரெஸ்ட்டில் ஏறிய முதல் மத்தியத் தொழில் துறைப் பாதுகாப்புப் படை வீரர் (CISF) என்ற பெருமையைத் துணை ஆய்வாளர் கீதா சமோட்டா பெற்றுள்ளார்.
- மத்திய அரசானது, டிப்போட் தர்பன் வலை தளம், அன்ன மித்ரா மற்றும் அன்ன சஹாயதா போன்ற எண்ணிம தளங்கள் ஆகிய மூன்று முக்கியமான எண்ணிம முன்னெடுப்புகளைத் தொடங்கியுள்ளது.
- இந்திய இணையவெளிக் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (I4C) ஆனது, டெல்லியில் ஒரு சோதனை /முன்னோடித் திட்டமாக புதிய e–Zero FIR என்ற முன்னெடுப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- தற்போது முன்மொழியப்பட்ட ஷில்லாங் (மேகாலயா மாநிலம்) – சில்சார் (அஸ்ஸாம்) நெடுஞ்சாலையானது மியான்மரில் முக்கியப் பல்நோக்குப் போக்குவரத்து திட்டத்தின் தொடர்ச்சியாக செயல்படும் என்று கூறப்படுகிறது.
- இந்தியக் கடலோர காவல்படையானது (ICG), ஒடிசாவில் அதன் ஒலிவியா நடவடிக்கை என்பதின் கீழ், சுமார் 6.98 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆலிவ் ரெட்லி / சிற்றாமைகளை வெற்றிகரமாகப் பாதுகாத்துள்ளது.
- 'மத்ஸ்யா' எனும் நீர்மூழ்கி வாகனத்தினைப் பயன்படுத்தி 6,000 மீட்டர் ஆழத்தில் உள்ள கடல் சார் வளங்களை ஆராய்வதற்காக வேண்டி இந்திய நாடானது, 'சமுத்திரயான்' என்ற மனிதர்களால் மேற்கொள்ளப் படும் தனது முதல் ஆழ்கடல் ஆய்வுப் பயணத் திட்டத்தினை 2026 ஆம் ஆண்டிற்குள் தொடங்க உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 5.4 மில்லியன் புலம்பெயர்வுகள் பதிவாகின என்ற ஒரு நிலையில் பெரும் வெள்ளப் பாதிப்புகளானது அவற்றில் மூன்றில் இரண்டு பங்கு புலம் பெயர்வினை ஏற்படுத்தியதுடன், இது கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத ஒரு அளவிற்கு அதிகமாகும்.

- இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகள் ஆனது, இந்தியக் கடற்படைக்காக 22 ஒற்றை இருக்கைகள் மற்றும் நான்கு இரட்டை இருக்கைகளைக் கொண்ட 26 ரஃபேல்–M விமானங்களை வாங்குவதற்கான அரசுகளுக்கிடையேயான ஒரு ஒப்பந்தத்தில் (IGA) கையெழுத்திட்டுள்ளன.
- மிக சமீபத்தில், துகள் முடுக்கி மூலமான திரள் நிறமாலையியல் (AMS) நுட்பத்தினைப் பயன்படுத்தி கதிரியக்க கார்பன் கால கணிப்பு முறையானது மெஹர்கரில் உள்ள ஒரு வேளாண் சார் குடியேற்றத்தின் காலக் கட்டத்தினை முன்னர் நம்பப்பட்ட கி.மு. 8000 ஆண்டிலிருந்து குறைத்து சுமார் கி.மு. 5200 ஆண்டுக்கு முந்தையது என குறிப்பிட்டு உள்ளது.
- இஸ்ரோவின் ஒரு வணிகப் பிரிவான இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம் (IN–SPACe) ஆனது, Satellite Bus as a Service (SBaaS) எனும் முக்கிய முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய நாட்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) ஆனது, 'புத்தொழில் நிறுவனங்களால் முன் வைக்கப்பட்ட மின்சார வாகனத் தீர்வுகள் (EVolutionS)' என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- தேசியத் துளிமக் கணிம (குவாண்டம்) திட்டத்தின் (NQM) கீழ், QNu லேப்ஸ் நிறுவனமானது, மேகக்கணிமை, உள்ளகச் சேவையகம் அல்லது கலப்பு நுட்பம் என எந்தவிதச் சூழலிலும் தடையற்றக் குறியாக்கவியல் மேலாண்மையைச் செயல்படுத்துகின்ற QShield எனப்படும் உலகின் முதல் மற்றும் தனித்துவமான தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாபுஜி மகாராஜின் 125வது பிறந்தநாளை நினைவு கூரும் வகையில் ஐதராபாத் அருகே உள்ள கன்ஹா சாந்தி வனத்தில் பாபுஜி வனம் எனப்படும் உலகின் முதல் ஆற்றல் மாற்றம் அம்சங்கள் கொண்ட தோட்டமானது திறக்கப் பட்டுள்ளது.
- துணைத் தளபதி அனூப் குமார் நேகி உடன் துணைத் தலைவராக நிஹாஸ் சுரேஷ் தலைமையில், 12 பேர் கொண்ட குழுவின் ஒரு பகுதியாக, இந்தோ திபெத்திய எல்லைக் காவல் படை (ITBP) மகாலு மலையை (8,485 மீட்டர்) வெற்றிகரமாக ஏறியது.
- இந்திய அரசானது, இந்தியாAI திட்டத்தின் கீழ் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட நாட்டின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மிகவும் பெரிய மொழி மாதிரியை (LLM) உருவாக்குவதற்காக வேண்டி பெங்களூருவில் உள்ள சர்வம் எனும் புத்தொழில் நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்திய விமானப்படையானது, SCALP எறிகணைகள் மற்றும் AASM ஹேமர் குண்டுகள் போன்ற ஆயுதங்களை ஏந்திய ரஃபேல் ஜெட் விமானங்களை 2025 ஆம் ஆண்டு மே 07 அன்று அதிகாலை 23 நிமிடங்கள் நீடித்த சிந்தூர் நடவடிக்கையில் பயன்படுத்தியது.
- இந்தியா சமீபத்தில் ரஷ்ய இக்லா–S வான்வழிப் பாதுகாப்பு எறிகணைகளைப் பெற்று உள்ளது.
- மத்தியப் புலனாய்வுப் பிரிவின் (CBI) இயக்குனர் பிரவீன் சூட்டின் பதவிக் காலம் என்பதை மத்திய அரசானது து ஓராண்டிற்கு நீட்டித்துள்ளது.
- இந்தியாவின் பிறப்பின் போது எதிர்பார்க்கப் படும் ஆயுட்காலம் ஆனது ஓராண்டில் 0.2 ஆண்டுகள் சரிவு பதிவாகியதுடன், 50 ஆண்டுகளில் முதல்முறையாகக் குறைந்து உள்ளது.
- லக்னோவில் உள்ள உத்தரப் பிரதேச மாநிலத்தின் பாதுகாப்புத் தொழில்துறை உற்பத்தி மண்டலத்தில் பிரம்மோஸ் எறிகணை உற்பத்திப் பிரிவானது அதிகாரப் பூர்வமாகத் திறக்கப் பட்டுள்ளது.

- 'பார்கவாஸ்த்ரா' என்ற மிகப் புதிய குறைந்த விலையிலான இணை/கூட்டு ஆளில்லா வான்வழி வாகன எதிர்ப்பு அமைப்பை இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான் "The One: Cricket, My Life and More" என்ற தலைப்பில் தனது சுயசரிதையை வெளியிட்டுள்ளார்.
- குஜராத்தில் உள்ள அகமதாபாத், காந்திநகர் மற்றும் ஏக்தா நகர் ஆகிய இடங்களில் 2029 ஆம் ஆண்டு மதிப்புமிக்க உலக காவல் மற்றும் தீயணைப்பு வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை இந்தியா நடத்த உள்ளது.
- இந்தியா செயற்கை நுண்ணறிவில் இயங்கும் தனது முதல் மேம்பட்ட போக்குவரத்து மேலாண்மை அமைப்பை (ATMS) டெல்லியில் உள்ள துவாரகா விரைவுச் சாலையில் அறிமுகப்படுத்தியது.
- 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி இந்தியாவின் மொத்த மின் உற்பத்தி திறன் 476 ஜிகா வாட் அளவினை எட்டியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் 1.44 மில்லியன் "zero-dose – எந்த தடுப்பூசியும் பெறாத" குழந்தைகள் இருந்தனர் என்ற நிலையில் இது 2.5 மில்லியன் எண்ணிக்கை கொண்ட நைஜீரியாவிற்கு அடுத்தபடியாக உள்ளது.
- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகமானது இந்திய அரிய ரத்தத் தானம் செய்பவர்கள் பதிவேட்டை (RDRI), e-Rakt Kosh எனும் தேசிய இரத்த வங்கி மேலாண்மை தளத்துடன் ஒருங்கிணைக்கத் திட்டமிட்டுள்ளது.
- மத்திய அரசானது, உத்தரப் பிரதேசத்தின் சோன்பத்ராவில் NAVYA (இளைய வளரிளம் பருவப் பெண்களுக்கான தொழில் பயிற்சி மூலம் ஊக்கத்தைத் தூண்டுவது) என்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியது.
- பிரதிபா சேது என்பது ஒன்றியக் குடிமைப் பணியாளர் ஆணையத்தினால் (UPSC) தொடங்கப் பட்ட ஒரு மையப்படுத்தப்பட்ட எண்ணிம தளமாகும்.
- ஹாலி வால் நட்சத்திரத்தைப் பற்றிய முற்கால இந்தியக் கல்வெட்டு குறிப்பு ஆனது, ஆந்திரப் பிரதேசத்தில் கண்டறியப்பட்ட கி.பி. 1456 காலத்தினைச் சேர்ந்த ஸ்ரீசைலம் செப்புத் தகடு சாசனத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்தியத் தேசிய இணைய பரிமாற்ற (NIXI) நிறுவனமானது, சமீபத்தில் அதன் 20 ஆம் ஆண்டு ஸ்தாபன தினத்தைக் கொண்டாடியது.
- மத்திய அரசானது, 'பாலினம் சார் நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தகவல் மையம்' என்ற பெயரில் ஒரு வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் முதல் 3-நானோமீட்டர் அளவிலான சில்லு வடிவமைப்பு மையங்கள் நொய்டா மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் தொடங்கப் பட்டுள்ளன.
- ஓர் அதிகாரப்பூர்வ அறிவிப்பின்படி, சாதி வாரியான எண்ணிக்கை கணக்கெடுப்புடன் கூடிய இந்தியாவின் 16வது மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆனது 2027 ஆம் ஆண்டு மார்ச் 01ஆம் தேதியன்று மேற்கொள்ளப்படும்.
- இந்தியக் கடலோர காவல்படைக்காக வேண்டி (ICG) கோவா ஷிப்யார்ட் லிமிடெட் (GSL) நிறுவனம் கட்டமைக்கும் எட்டு விரைவு ரோந்துக் கப்பல்களின் ஒரு வரிசையில் (FPV) ஒன்றான 'ஆச்சல்' என்னும் ஐந்தாவது விரைவு ரோந்துக் கப்பலானது (FPV) சமீபத்தில் அறிமுகப் படுத்தபட்டது.
- தகவல் தொடர்பு மேம்பாட்டு மையம் (C-DOT) ஆனது 'சமர்த்' திட்டத்தை அறிமுகப் படுத்தியது.

- லக்னோ ஆனது யுனெஸ்கோ அமைப்பின் அறுசுவை உணவியலின் ஒரு படைப்பாக்க நகரம் பட்டத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரியதான ஆட்டோமொபைல் கதி சக்தி பல்நோக்குச் சரக்குப் போக்குவரத்து முனையம் ஆனது ஹரியானாவின் மானேசர் நகரில் உள்ள மாருதி சுசுகியின் உற்பத்தி மையத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) ஆனது சூரிய சக்தி சார் கழிவுகள் குறித்த முதல் விதிமுறை புத்தகம் மூலம் வரைவு வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- ஜப்பானுக்கு மேற்கொள்ளப்படும் அருமண் தனிம ஏற்றுமதி தொடர்பான 13 ஆண்டு கால ஒப்பந்தத்தினை நிறுத்தி வைக்குமாறு IREL (Indian Rare Earths Limited) எனும் அரசுக்குச் சொந்தமானச் சுரங்க நிறுவனத்தினை இந்திய அரசு கோரியுள்ளது.
- சென்னையில் கருடா ஏரோஸ்பேஸ் என்ற ஒரு நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட இந்தியாவின் முதல் வேளாண்சார் ஆளில்லா விமான உள்நாட்டுமயமாக்கல் மையம் ஆனது திறக்கப் பட்டுள்ளது.
- மேகக் கணிமச் சேவை வழங்கீட்டு நிறுவனமான ஓலா க்ருட்ரிம் ஆனது, க்ருதி எனப் படும் இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு சார் முகமைக் கட்டமைப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்திய அரசின் கீழ் ஆயுஷ் துறை அமைச்சகமானது, ஆயுஷ் துறைக்கான பிரத்தியேக முதலீட்டாளர்களுக்கான சில வசதிகளை வழங்கச் செய்யும் 'ஆயுஷ் நிவேஷ் சார்த்தி' எனும் இணைய தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- டெல்லி, திரிபுரா மற்றும் தமிழ்நாடு ஆகியவை 2025 ஆம் ஆண்டில் வயது வந்தோர் கல்வியறிவு மற்றும் கல்வி தொடர்பான சவால்களைக் கையாள்வதில் சிறந்த செயல்திறன் கொண்டவை ஆகத் திகழ்கின்றன.
- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஆனது CROPIC (பயிர்களின் நிகழ்நேரக் கண்காணிப்புகள் மற்றும் புகைப்படச் சேகரிப்பைக் குறிக்கிறது) முன்னெடுப்பைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.
- இந்திய நாடானது, 2026–28 ஆம் ஆண்டு வரையிலான காலக் கட்டத்திற்கு என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக சபைக்கு (ECOSOC) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பரவல் ஆனது, 2015 ஆம் ஆண்டில் இருந்த 19 சதவீதத்திலிருந்து 2025 ஆம் ஆண்டில் 64.3 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- சமீபத்தில் 8வது "EnviStats India 2025: சுற்றுச்சூழல் புள்ளிவிவரங்கள்" என்ற தலைப்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்தியா 1998 ஆம் ஆண்டிலிருந்து பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது, 2014–15 மற்றும் 2023–24 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், பால் உற்பத்தி 63.56% அதிகரித்து, 146.3 மில்லியன் டன்னிலிருந்து 239.2 மில்லியன் டன்னாக உயர்ந்தது.
- உலகின் மிகவும் சக்தி வாய்ந்த சரக்கு இரயில் என்ஜின்களில் ஒன்றான, இந்தியாவின் முதல் D9 – 9000 HP மின்சார இரயில் என்ஜினைப் பிரதமர் குஜராத்தின் டஹோட் என்ற இடத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- சத்தீஸ்கரின் நவா ராய்ப்பூரில் இந்தியா தனது முதல் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தினை (SEZ) நிறுவ உள்ளது.

- இந்திய இராணுவம் ஆனது, 'சத்பாவனா நடவடிக்கை'யின் ('Operation Sadbhavana) கீழ் உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பித்தோராகர் என்னுமிடத்தில் 'பஞ்ச்ஷூல் பல்ஸ்' எனப் படும் தனது முதல் FM வானொலி நிலையத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம் (HZL) என்பது இராஜஸ்தானில் இந்தியாவின் முதல் பொட்டாஷ் மற்றும் ஹாலைட் தொகுதியையும், உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஓர் அரிய வகைத் தனிம கூறுகள் (REE) தொகுதியையும் ஏலத்தில் கைப்பற்றியுள்ளது.
- இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகியவை தனது 60 ஆண்டுகால அரசுமுறை உறவுகளைக் கொண்டாடுகின்றன என்ற நிலையில் இது வரலாற்றைத் தாண்டிய ஒரு ஆழமான வேரூன்றிய உறவுகளைக் குறிக்கிறது.
- கோவா கப்பல் கட்டும் நிறுவனம் (GSL) ஆனது, கோவாவில் சமுத்திர பிராச்செட் எனப்படும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இரண்டாவது மாசுக் கட்டுப்பாட்டு கப்பலினை (PCV) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய அரசானது புதிதாகத் திருத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மைச் (திருத்தம்) சட்டத்தின் கீழ் தேசிய நெருக்கடி மேலாண்மைக் குழுவை (NCMC) அமைத்து உள்ளது.
- 2030 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட ஐந்து ஆண்டுகளுக்கு மிகவும் முன்னதாகவே, 2025 ஆம் ஆண்டில் இந்தியா பெட்ரோலில் 20% எத்தனால் கலப்பு என்ற இலக்கினை எட்டியுள்ளது.
- இந்திய இராணுவமானது அமெரிக்காவிலிருந்து முதல் தொகுதி அப்பாச்சி AH–64E ஹெலிகாப்டர்களைப் பெற உள்ளது.
- லட்சத்தீவு அரசாங்கமானது, பாதுகாப்புத் தேவைகளுக்காக பித்ரா தீவைக் கையகப் படுத்த திட்டமிட்டுள்ளது.
- 169 ஆண்டுகள் பழமையான காலனித்துவ கால 1856 ஆம் ஆண்டின் இந்தியக் கப்பல் சரக்கு ஏற்றல் பட்டியல் சட்டத்தை மாற்றியமைக்கின்ற 2025 ஆம் ஆண்டு கப்பல் சரக்கு ஏற்றல் பட்டியல் சட்டத்தை இந்தியப் பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- இந்தியத் தரநிர்ணய முகமை (BIS) 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் அமலுக்கு வரும் கட்டாயத் தங்கத்திற்கான ஹால்மார்க் தரக்குறியீடு வகைகளின் பட்டியலில் 9 காரட் தங்கத்தைச் சேர்ப்பதாக அறிவித்தது.
- அமைதி காக்கும் படையினருக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலை ஆதரிக்கும் வகையில் ஐ.நா. குழுவின் இணைத் தலைவராக இந்தியா உள்ளது.
- இயந்திரமயமாக்கப்பட்ட சுகாதார சுற்றுச்சூழல் அமைப்புக்கான தேசிய நடவடிக்கை (NAMASTE) தினத்தன்று' (ஜூலை 16) கழிவு சேகரிப்பாளர்களுக்கான உதவி எண்ணை (14473) மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.
- இராம் சரண் & பிறர் மற்றும் சுக்ராம் & பிறர் இடையிலான வழக்கில், பழங்குடியினப் பழக்கவழக்கங்களின் அடிப்படையில் பெண் வாரிசுரிமையை மறுக்கச் செய்யும் ஒரு மேல் முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.
- லடாக்கில் 15,000 அடி (4,500 மீட்டருக்கு மேல்) உயரத்தில் ஆகாஷ் பிரைம் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பை இந்திய இராணுவம் வெற்றிகரமாக சோதித்தது.
- 2025 முதல் 2031 ஆம் ஆண்டு வரை 100 வேளாண் மாவட்டங்களை இலக்காகக் கொண்ட பிரதான் மந்திரி தன்–தான்யா கிருஷி யோஜனா (PM–DDKY) என்ற திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

- இந்தியா அதன் நிறுவப்பட்ட மின்சாரத் திறனில் சுமார் 50 சதவீதத்தினைப் புதைபடிவ எரிபொருள் சாராத மூலங்களிலிருந்து உற்பத்தி செய்துள்ளது.
- ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது சுமார் 650 மில்லியனுக்கும் அதிகமான தினசரி பரிவர்த்தனைகளுடன் உலகின் மிகச் சிறந்த நிகழ்நேரக் கட்டண முறையாக மாறியுள்ளது.
- NESTS மற்றும் UNICEF ஆகியவை தொழில் முறை வாழ்க்கைக்கான வழிகாட்டுதல் மற்றும் வாழ்க்கைத் திறன்களுக்கான ஒரு தளமான TALASH (பழங்குடியினர் திறனறிவு, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் சுயமரியாதை மையம்) என்ற ஒரு மையத்தினைத் தொடங்கியுள்ளன.
- குஜராத் மாநிலத்தின் ஆனந்த் என்ற பகுதியில் அமைக்கப்பட உள்ள நாட்டின் முதல் கூட்டுறவுப் பல்கலைக் கழகமான திரிபுவன் சஹாகரி விஸ்வ வித்யாலயாவிற்கு மத்தியக் கூட்டுறவு அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.
- கேர்எட்ஜ் என்ற நிறுவனத்தின் 2025 ஆம் ஆண்டு அறிக்கையின் படி, உலகின் அருமண் தனிமச் சுரங்க (REE) இருப்புக்களில் 8 சதவீதத்தினை இந்தியா கொண்டுள்ளது.
- குஜராத் மாநிலதில் உள்ள கக்ராபர் அணுமின் நிலையத்தில் (KAPS) உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இரண்டு 700 MWe திறன் கொண்ட அழுத்தப்பட்ட கன நீர் அணு உலை வகைகளுக்கு அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் (AERB) சமீபத்தில் 5 ஆண்டு காலச் செயல்பாட்டு உரிமத்தை வழங்கியது.
- இந்தியக் கடற்படையானது அதன் முதலாவது உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட ஆழ்கடலுக்கான ஆய்வு உதவிகரக் கப்பலான (DSV), INS நிஸ்டாரை இந்துஸ்தான் ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெற்றுள்ளது.
- இந்தியா உத்தரப் பிரதேசத்தின் மீரட்டின் இராணுவ ரீமௌண்ட் கால்நடைப் படையில் குதிரையின நோய் இல்லாத தனது முதல் காப்புப் பகுதியினை (EDFC) அமைத்தது.
- மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) மூலம் இந்தியா ஒருங்குறியக் கூட்டமைப்பில் மீண்டும் இணைந்துள்ளது.
- C–FLOOD என்பது வெள்ளம் பாதித்தப் பகுதிகளின் வரைபடங்கள் மற்றும் நீர் மட்ட கணிப்புகளுடன் கிராம அளவில் வெள்ளப் பாதிப்புகள் குறித்த முன்னறிவிப்புகளை இரண்டு நாட்கள் முன்கூட்டியே வழங்கும் ஒரு வலையமைப்பு அடிப்படையிலான தளமாகும்.
- டெல்லியில் உள்ள தேசியப் பொதுக் கூட்டுறவு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் (NIPCCD) ஆனது, சாவித்ரிபாய் புலே தேசிய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு நிறுவனம் என மறுபெயரிடப் பட்டுள்ளது.
- 1135.6 திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட எட்டாவது ரேடாருக்குப் புலப்படாத போர்க் கப்பல் மற்றும் இரண்டாவது துஷில்–ரக கப்பலான INS தமால் ரசியாவின் கலினின் கிராட்டில் படையில் இணைக்கப்பட்டது.
- வில்மிங்டன் பிரகடனத்தின் கீழ் இந்திய–பசிபிக் பகுதியில் கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இந்தியா, ஜப்பான், அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முதன்முதலில் இணைந்து 'கடல் பாதுகாப்பு குறித்து குவாட் நாடுகள்' என்ற திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- லடாக் ஆனது சுற்றுலாத் துறை மற்றும் இந்திய வானியற்பியல் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அதன் முதல் வானியற்பியல் சுற்றுலா விழாவை லேவில் நடத்தி வருகிறது.

- ஸ்ரீ நானக் நிவாஸ் எனப்படும் மரத்திலான இந்தியாவின் முதல் குருத்வாராவானது (வழிபாட்டுத் தலம்) பஞ்சாபின் ஃபாசில்காவில் கட்டமைக்கப் பட்டுள்ளது.
- பழங்குடியின விவகாரத் துறை அமைச்சகமானது, ஆதி கர்மயோகி (பீட்டா வடிவம்) திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் (NSO) ஆனது 2025 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்கள் தினத்தன்று GoISTats கைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது.
- சில பதிவு செய்யப்படாத முதலாளிகள் மற்றும் தொழிலாளர்களை ESI சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்காக, ஊழியர்களின் மாநிலக் காப்பீட்டுக் கழகம் (ESIC) ஆனது SPREE திட்டத்தை மீண்டும் தொடங்கியுள்ளது.
- தீன்தயாள் துறைமுக ஆணையமானது, குஜராத் மாநிலத்தில் உள்ள கண்ட்லாவில் இந்தியாவின் முதல் 1 மெகாவாட் திறன் கொண்ட இந்தியாவில் தயாரித்தல் என்ற திட்டத்தின் கீழ் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையைத் துவக்கியது.
- சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய மீன் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 18,900 உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் பதிவாகியுள்ளன.
- இந்தியக் கடற்படையானது கொல்கத்தாவில் மேம்பட்ட வழிகாட்டப்பட்ட எறிகணை தாங்கிய போர்க்கப்பலான INS ஹிம்கிரி கப்பலைப் பெற்றது.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, மத்தியப் பிரதேசத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க (155 ஆண்டுகள் பழமையான) பதல்பானி-கலகுண்ட் என்ற பாரம்பரிய இரயிலின் இயக்கத்தினை மீண்டும் தொடங்கியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 03 ஆம் தேதியன்று ஸ்பெயின் நாட்டின் செவில்லே எனும் இடத்திலிருந்து 16 ஏர்பஸ் C295 ரக இராணுவ போக்குவரத்து விமானங்களில் கடைசி விமானத்தினை இந்தியா பெற்றது.
- 500 கிலோவாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய சக்தி அமைப்புடன் முழுமையாக சூரிய சக்தியில் இயங்கும் இந்தியாவின் முதல் சட்டமன்றமாக டெல்லி சட்டமன்றம் மாறியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று, மாநிலங்களவையானது 2025 ஆம் ஆண்டு கடலோரக் கப்பல் போக்குவரத்து மசோதாவினை நிறைவேற்றியது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது, இளம் மாணாக்கர்கள் சுகாதாரம் மற்றும் உயிரி மருத்துவ ஆராய்ச்சியில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்காக SHINE நிகழ்ச்சியினை (அடுத்தத் தலைமுறை ஆய்வாளர்களுக்கான அறிவியல் மற்றும் சுகாதாரப் புத்தாக்கம்) நடத்தியது.
- சான்றுறுதி அலுவலகம்/நோட்டரி சட்டம் 1952 மற்றும் நோட்டரி விதிகள் 1956 ஆகியவற்றின் கீழ் இயங்கலை வழிச் சேவைகளை வழங்குவதற்காக, அரசாங்கமானது நோட்டரி வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- மத்திய நிலத்தடி நீர் வாரியத்தின் (CGWB) 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர நிலத்தடி நீர்த் தர அறிக்கையானது, 440 மாவட்டங்களில் இருந்து பெறப்பட்ட 20 சதவீதத்திற்கும் அதிகமான மாதிரிகளில் நைட்ரேட் மாசுபாடு இருப்பதைக் குறிப்பிடுகிறது.
- இந்திய அரசாங்கமானது, PM E-Drive திட்டத்தினை (புத்தாக்கம் மிக்க வாகன மேம்பாட்டில் பிரதான் மந்திரி மின்சார வாகன இயக்கங்களுக்கான புரட்சி) 2028 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.

- நாட்டின் முதல் விலங்கு ஸ்டெம் செல் உயிரி வங்கியானது, ஐதராபாத்தில் உள்ள தேசிய விலங்கு உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தில் தொடங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்றுடன், ஆறு ஆண்டுகள் மற்றும் 65 நாட்கள் பதவியில் இருந்த அமித் ஷா மிக நீண்ட காலம் பணியாற்றிய மத்திய உள்துறை அமைச்சரானார்.
- பாதுகாப்புத் துறை ஏற்றுமதிகள் 2024–25 ஆம் நிதியாண்டில் சாதனை அளவான 23,622 கோடி ரூபாயை (~2.76 பில்லியன் டாலர்) எட்டியுள்ளன. இது 2023–24 ஆம் நிதியாண்டில் பதிவான 21,083 கோடி ரூபாயிலிருந்து 12.04% அதிகரிப்பினைக் குறிக்கிறது.
- இந்தியாவில் மக்காச் சோளம் சாகுபடி 2025–26 ஆம் ஆண்டின் காரீஃப் பயிர்ப் பருவத்தில் 91.89 லட்சம் ஹெக்டேராக உயர்ந்துள்ளது என்பதோடு இது கடந்த ஆண்டு 83.15 லட்சம் ஹெக்டேராக இருந்தது.
- முந்தைய ஆண்டில் 1.27 லட்சம் கோடி ரூபாயாக இருந்த இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தியானது 18% வளர்ச்சியடைந்து 2024–25 ஆம் நிதியாண்டில் சாதனை அளவாக 1.51 லட்சம் கோடி ரூபாயை எட்டியது.
- கிராம சபைக் கூட்டங்களின் கட்டமைக்கப்பட்ட செயல்பாடுகளை உருவாக்கச் செய்வதற்கான ஒரு செயற்கை நுண்ணறிவு கருவியான 'SabhaSaar' மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- 1908 ஆம் ஆண்டின் இந்தியத் துறைமுகச் சட்டத்திற்குப் பதிலாக, மாநிலங்களவையானது 2025 ஆம் ஆண்டு இந்தியத் துறைமுக மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- அரசாங்கம் 2025 ஆம் ஆண்டு ஜன் விஸ்வாஸ் (விதிகளின் திருத்தம்) மசோதாவினை மக்களவையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு இயங்கலை வழி விளையாட்டுகளை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் மசோதாவானது இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது.
- இந்திய அரசானது, "அன்ன–சக்ரா" விநியோகச் சங்கிலி மேம்பாட்டுச் செயற்கருவியை இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 31 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் (UT) 30 களில் செயல்படுத்தியுள்ளது.
- 2020–21 ஆம் ஆண்டில் 34.76 லட்சம் டன்னாக இருந்த இந்தியாவின் கடல்சார் மீன் உற்பத்தியானது, 8.9% வருடாந்திர வளர்ச்சியுடன் 2023–24 ஆம் ஆண்டில் 44.95 லட்சம் டன்னாக உயர்ந்தது.
- செறிவூட்டப்பட்ட அரிசித் திட்டம் ஆனது 17,082 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன் 2028 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது.
- அசாமின் கௌஹாத்தியில் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தினை (IIM) நிறுவுவதற்காக, 2025 ஆம் ஆண்டு இந்திய மேலாண்மை நிறுவனங்கள் (திருத்தம்) மசோதாவை பாராளுமன்றம் நிறைவேற்றியது.
- மத்திய அரசானது, முழுநேர நிதி ஆயோக் உறுப்பினரும் முன்னாள் அமைச்சரவை செயலாளருமான இராஜீவ் கௌபா தலைமையில் இரண்டு உயர் அதிகார குழுக்களை அமைத்துள்ளது.
- தாய்லாந்தின் ஃபூகெட்டில் நடைபெற்ற 23வது பொது மாநாட்டில், ஆசிய–பசிபிக் ஒளிபரப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் (AIBD) நிர்வாகக் குழுவின் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது.

- இந்திய அஞ்சல் துறையானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் அதன் புகழ்பெற்ற பதிவஞ்சல் சேவையை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.
- எரிசக்திப் பாதுகாப்பை அதிகரிக்கவும், எண்ணெய் இறக்குமதியைக் குறைக்கவும் 2030 ஆம் ஆண்டில் பெட்ரோலில் எத்தனால் கலப்பதை 27 சதவீதமாக அதிகரிக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- 2017–18 ஆம் ஆண்டில் 22% ஆக இருந்த பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் ஆனது 2023–24 ஆம் ஆண்டில் 40.3% ஆக சுமார் இரு மடங்காக உயர்ந்துள்ளதாக, வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS) தரவுகள் தெரிவிக்கின்றன.
- சுங்கச் சாவடி ஊழியர்களின் குழந்தைகளின் கல்வி ஆர்வங்களை ஆதரிப்பதற்காக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆரோஹன் திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- வரலாற்றில் முதல்முறையாக, UDISE+ அறிக்கையின்படி, 2024-25 ஆம் கல்வியாண்டில் இந்தியாவின் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1 கோடியைத் தாண்டியுள்ளது.
- பழங்குடியினர் விவகார அமைச்சகம் ஆனது, செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான மொழிபெயர்ப்புச் செயலியான ஆதி வாணியின் பீட்டா வடிவத்தினை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதியன்று அறிமுகப்படுத்தியது.
- மத்திய ஜவுளித் துறை அமைச்சகமானது, கபாஸ் கிசான் கைபேசி செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்தியாவின் முதல் துறைமுக அடிப்படையிலான பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி சோதனை நிலையமானது, தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் உள்ள V.O. சிதம்பரனார் துறைமுகத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டு மாதிரிப் பதிவு கணக்கெடுப்பு (SRS) புள்ளிவிவர அறிக்கையின் படி, இந்தியாவின் மொத்த கருவுறுதல் விகிதம் (TFR) 2023 ஆம் ஆண்டில் 1.9 ஆகக் குறைந்து உள்ளது.
- 2015 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதிக்கு முன்னதாக இந்தியாவிற்குள் நுழைந்த இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு, 2025 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் வெளி நாட்டினர் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தண்டனை நடவடிக்கையிலிருந்து உள்துறை அமைச்சகம் (MHA) விலக்கு அளித்தது.
- 2025 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தணிக்கை விதிகள், சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.
- INS திர், INS ஷார்துல் மற்றும் ICGS சாரதி ஆகியவற்றை உள்ளடக்கிய இந்தியக் கடற்படையின் முதல் பயிற்சிப் படையானது (1TS), அவற்றின் பயிற்சிப் பணிக்காக செஷெல்ஸின் போர்ட் விக்டோரியா துறைமுகத்தினை வந்தடைந்தது.
- செப்டம்பர் 09 ஆம் தேதியன்று இந்தியாவின் 15வது குடியரசுத் துணைத் தலைவராக C.P. இராதாகிருஷ்ணன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கல்வி அமைச்சகத்தின்படி, 2011 ஆம் ஆண்டில் 74 சதவீதமாக இருந்த இந்தியாவின் எழுத்தறிவு விகிதம் 2023–24 ஆம் ஆண்டில் 80.9 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- பழங்குடியின விவகார அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதியன்று ஆதி சமஸ்கிருத டிஜிட்டல் கற்றல் தளத்தின் பீட்டா வடிவினை அறிமுகப் படுத்தியது.

- கையெழுத்துப் பிரதிகளை எண்ணிமமயமாக்குதல், பாதுகாத்தல் மற்றும் பொது அணுகலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட டிஜிட்டல் தளமான ஞான பாரதம் வலை தளத்தினைப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- இந்தியக் கடற்படையானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் தேதியன்று, 'ஆண்ட்ரோத்' என்று பெயரிடப்பட்ட குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் இரண்டாவது நீர்மூழ்கி எதிர்ப்பு போர் கப்பலை (ASW-SWC) பெற்றது.
- இந்திய அரசானது, 2025 ஆம் ஆண்டில் புவி வெப்ப ஆற்றல் குறித்த தனது முதல் தேசிய கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் இதே காலக் கட்டத்துடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவின் மின்சாரத் துறை உமிழ்வு 1% குறைந்துள்ளது.
- பொது விமானப் போக்குவரத்து அமைச்சகமானது இந்திய விமான நிலையங்கள் முழுவதும் பயணிகள் சேவைகளை மேம்படுத்துவதற்காக யாத்ரி சேவா திவாஸ் 2025 முன்னெடுப்பினைத் தொடங்கியது.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதியன்று லடாக்கின் கார்கிலில், எல்லைச் சாலைகள் அமைப்பின் (BRO) விஜயக் திட்டத்தின் 15வது ஸ்தாபன/எழுச்சி தினம் கொண்டாடப் பட்டது.
- புது டெல்லியில் நடைபெற்ற முதல் முப்படைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் தொழில்நுட்பக் கருத்தரங்கை (T-SATS) முப்படை இராணுவ தலைமைத் தளபதி (CDS) தொடங்கி வைத்தார்.
- தேசிய ஆயுர்வேத தினமான செப்டம்பர் 23, 2025 அன்று தொடங்கப்பட்ட DRAVYA தளமானது பாரம்பரிய ஆயுர்வேத நூல்களை நவீன அறிவியல் தரவுகளுடன் ஒருங்கிணைக்கும் ஒரு தயார்நிலை டிஜிட்டல் களஞ்சியமாகும்.
- ஆயுஷ் அமைச்சகமானது, கோவாவில் உள்ள அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தில் “பிரயாஸ்” எனப்படும் அதன் முதல் வகையான ஒருங்கிணைந்த நரம்பியல் மறுவாழ்வு மையத்தினைத் தொடங்கியது.
- மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி, 2024- 25ஆம் ஆண்டில் இந்தியா353 . 96 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தியை பதிவு செய்து சாதனை படைத்துள்ளது.
- இந்தியா-ஐரோப்பிய தடையற்ற வர்த்தகச் சங்கத்தின் (EFTA) வர்த்தகம் மற்றும் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் (TEPA) ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதியன்று அமலுக்கு வருகிறது.
- உலகின் முன்னணிப் பால் உற்பத்தியாளராக உள்ள இந்தியா, உலகளாவியப் பால் விநியோகத்தில் சுமார் 25 சதவீதப் பங்களிப்பை வழங்குகிறது.
- 2025 ஆம் ஆண்டானது, இந்தியாவில் பிராந்தியக் கிராமப்புற வங்கிகள் (RRBs) நிறுவப் பட்டதன் 50 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கிறது.
- இந்தியா முழுவதும் தேசியப் பாடலான 'வந்தே மாதரம்' பாடலின் 150 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்கு மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் பாரடாங்கில் உள்ள இந்தியாவின் ஒரே புதைச்சேற்று எரிமலையானது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 02 ஆம் தேதியன்று வெடித்தது.
- இரண்டாவது அடம்யா வகை விரைவு ரோந்துக் கப்பலான ICGS அக்சர், புதுச்சேரியின் காரைக்காலில் படையில் இணைக்கப்பட்டது.

- இந்தியத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது தேசிய நெடுஞ்சாலைகளில் QR குறியீடு கொண்ட செங்குத்து அடையாளப் பலகைகளை நிறுவ உள்ளது.
- இந்திய அரசானது, ஜல் ஜீவன் திட்டத்தின் (JJM) கீழ் உள்ள அனைத்து குடிநீர் குழாய்களையும் PM கதி சக்தி தளத்தில் வரைபடமாக்க உள்ளது.
- மத்திய ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சி சபை (CCRAS) ஆனது, 2025–26 ஆம் ஆண்டிற்கான SPARK 4.0 (ஆயுர்வேத ஆராய்ச்சி கென் மாணவர் திட்டம்) திட்டத்தினை அறிமுகப் படுத்தியது.
- நிதி ஆயோக் அமைப்பானது, "செயற்கை நுண்ணறிவுப் பொருளாதாரத்தில் வேலை வாய்ப்பு உருவாக்கத்திற்கான செயல் திட்டம்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான அணுகலை மேம்படுத்துவதற்காக அரசாங்கமானது புதுப்பிக்கப்பட்ட சுகம்ய பாரத் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பசிபிக் தீவு நாடான பலாவ், உலகின் முதல் நேரடி கடலடி நேர்காணலை நடத்தியது.
- ஐதராபாத்தில் உள்ள கோண்டாபூரில் தொழில்நுட்ப சில்லு புத்தாக்கத் திட்டத்தின் (T-Chip) மூலம் இந்தியாவின் முதல் குறைகடத்தி நுட்பம் சார் புத்தாக்க அருங்காட்சியகமானது திறந்து வைக்கப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் 2.52 கோடி ரூபாய் பிறப்புகள் பதிவானது, இது 2022 ஆம் ஆன்டில் பதிவானதை விட சுமார் 2.32 லட்சம் குறைவாகும்.
- Mappls என்பது இந்தியாவினால் உருவாக்கப்பட்ட ஒரு மேட்-இன்-இந்தியா வழி செலுத்தல் செயலியாகும் என்பதோடு தற்போது இது இந்திய அரசாங்கத்தினால் அதிகாரப் பூர்வமாக ஆதரிக்கப் படுகிறது.
- சென்னையின் இந்தியத் தொழிநுட்பக் கல்விக் கழகம் மூலம் காப்பு செய்யப்பட மியூஸ் வியரபல்ஸ் நிறுவனமானது இந்தியாவின் முதல் அணியக்கூடிய வகையிலான பண வழங்கீட்டு சூழல் அமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு இந்திய தேசியக் கொடுப்பனவுக் கழகத்துடன் (NPCI) கூட்டு சேர்ந்துள்ளன.
- ஒருங்கிணைந்த முன் எச்சரிக்கை அமைப்பு (SACHET) என்பது தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தினால் (NDMA) உருவாக்கப்பட்ட இந்தியாவின் பேரிடர் முன்னெச்சரிக்கை தளமாகும்.
- 7வது தேசிய பாதுகாப்பு காவல்படையின் (NSG) மையம் ஆனது இராமர் கோயிலுக்கு அருகில் உள்ள அயோத்தியில் அமைக்கப்பட உள்ளது.
- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது தற்போது ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) தொகையில் 75% தொகையினை வேலை வாய்ப்பு இழப்புக்குப் பிறகு உடனடியாக திரும்பப் பெற அனுமதிக்கிறது.
- 6 ஆக இருந்த இடதுசாரி தீவிரவாதத்தால் (LWE) அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் எண்ணிக்கையானது தற்போது சத்தீஸ்கரில் உள்ள பிஜாப்பூர், சுக்மா மற்றும் நாராயண்பூரில் மட்டும் என 3 ஆகக் குறைந்துள்ளது.
- பெண்களுக்கான இந்தியாவின் முன்னணி நிதித் தளமான Lxme, பெண்களுக்காக பிரத்தியேகமாக LxmePay எனப்படும் நாட்டின் முதல் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்தியத் தேசியக் கொடுப்பனவுக் கழகமானது (NPCI), நுண்ணறிவு சார் உரையாடல் ஆதரவை வழங்குவதன் மூலம் பயனர் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்காக, தனியுரிம நிதித் தளம் சார்ந்த மொழி மாதிரியால் இயக்கப்படும் UPI HELP வசதியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- சட்ட விவகாரத் துறையானது, 1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்/நோட்டரிகள் சட்டத்தின் கீழ், 2025 ஆம் ஆண்டு சான்றுறுதி (திருத்தம்) விதிகளை அறிவித்துள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் (MeitY) ஆனது, 2021 ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப விதிகளின் 3(1)(d) விதியை, தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள் குறியீடு) திருத்த விதிகள், 2025 மூலம் திருத்தியுள்ளது.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது (NHAI), சீரொளிக் கற்றை வழியான முப்பரிமாண உணர்வுக் கருவிகள் பொருத்தப்பட்ட வலையமைப்பு ஆய்வு வாகனங்களை (NSVs) பயன்படுத்துகிறது.
- இந்தியக் கடலோரக் காவல்படையானது (ICG), கடலோர ரோந்து, மீன்வளப் பாதுகாப்பு, கடத்தல் எதிர்ப்பு, கடற்கொள்ளை எதிர்ப்பு மற்றும் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, ICG கப்பல் அஜித் மற்றும் ICG கப்பல் அபராஜித் ஆகிய இரண்டு விரைவு ரோந்து கப்பல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கங்கை நதியில் 57–70 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள பஜ்ரங் சேது எனும் இந்தியாவின் முதல் 132 மீட்டர் தூர கண்ணாடி தொங்கு பாலமானது விரைவில் திறக்கப் பட உள்ளது.
- மத்திய மருந்து தரநிலைக் கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) ஆனது, இயங்கலை வழி தேசிய மருந்து உரிம வழங்கீட்டு அமைப்புத் (ONDLS) தளத்தில் ஒரு டிஜிட்டல் கண்காணிப்பு அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- வடகிழக்குப் பிராந்திய இரயில்வே (NFR) நிர்வாகமானது, இரயில் தண்டவாளங்களுக்கு அருகில் வரும் யானைகளைப் பாதுகாக்க ஊடுருவல் கண்டறிதல் அமைப்பை (IDS) அறிமுகப்படுத்தியுள்ளது.
- அருணாங்க் திட்டம் என்பது அருணாச்சலப் பிரதேசத்தில் உத்தி சார் சாலை மேம்பாட்டிற்கான எல்லை சாலைகள் அமைப்பின் (BRO) முன்னெடுப்பாகும்.
- தேசிய ஓய்வூதிய முறை (NPS) மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் (UPS) ஆகியவற்றின் கீழ் மத்திய அரசு ஊழியர்களுக்கு LC75 மற்றும் BLC முதலீட்டு விருப்பத் தேர்வுகளை விரிவுபடுத்த அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- தற்போதுள்ள 14408 எண்ணிற்கு மாற்றாக புதிய கட்டணமில்லா உதவி எண் 1515 செயல்படும் என்று பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்தியாவின் விமானப் போக்குவரத்துத் துறையானது உலகின் மூன்றாவது பெரிய உள்நாட்டு விமானச் சந்தையாக மாறியுள்ளது.
- மத்திய வேளாண் அமைச்சர், புது டெல்லியில் தேசிய விதைகள் கழகத்தின் (NSC) விதை செயல்முறையாக்க மற்றும் சிப்பம் கட்டும் அலகினைத் திறந்து வைத்தார்.
- மத்திய அரசானது, கோய்லா சக்தி முகப்புப் பக்கம் மற்றும் நிலக்கரி நிலம் கையகப் படுத்துதல், மேலாண்மை மற்றும் பணம் செலுத்துதல் (CLAMP) வலை தளத்தினைப் புது டெல்லியில் தொடங்கியுள்ளது.

- உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி விமான விபத்தினைத் தவிர்க்கும் புலனாய்வாளர்கள் மற்றும் விமான வல்லுநர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 2025 ஆம் ஆண்டில் இந்தியா தனது முதல் தேசிய விமானப் பாதுகாப்பு மையத்தை நிறுவ உள்ளது.
- K.S. சிவப்பா மற்றும் K. நீலம்மா இடையிலான வழக்கில், 18 வயது நிரம்பிய பிறகு, வழக்கு இல்லாமல் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களால் செய்யப்படும் எந்தவொரு சொத்து விற்பனை அல்லது பரிமாற்றத்தையும் எதிர்த்து சிறார்கள் வழக்கு தொடுக்கலாம் என்றும், மேலும் தெளிவான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் அத்தகையப் பரிமாற்றங்களை ரத்து செய்யலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- பஹல்காமின் பைசரன் பள்ளத்தாக்கில் 120 கோடி ரூபாய் மதிப்பில் கம்பிவடத் தொங்கூர்தி திட்டத்திற்கு தேசியப் புலனாய்வு முகமை (NIA) ஒப்புதல் அளித்துள்ளது.
- முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது, 2025 ஆம் ஆண்டு தேசிய கடல் மீன்வளக் கணக்கெடுப்பின் (MFC) வீட்டு வாரியானக் கணக்கெடுப்பு கட்டம் சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- தஜிகிஸ்தானுடனான இருதரப்பு ஒப்பந்தம் ஆனது சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு காலாவதியானதையடுத்து, தஜிகிஸ்தானில் உள்ள அய்னி விமானப் படைத் தளத்தில் இந்தியா தனது இராணுவ இருப்பை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.
- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் நுகர்வோர் விவகாரத் துறையானது, 2025 ஆம் ஆண்டு சட்டப் பூர்வ அளவியல் (பொதி கட்டப்பட்ட பொருட்கள்) திருத்த விதிகளை 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதியன்று அறிவித்தது.
- கட்சி சுயாட்சிக் கோட்பாடு வரம்பற்றது அல்ல என்றும், மேலும் அது நடுவர் மன்றத்தின் அடிப்படை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.
- 2025 ஆம் ஆண்டு சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டணியில் (ISA) SUNRISE, OSOWOG, உலகளாவிய திறன் மையம், செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் தளமான ISA அகாடமி, SIDS (வளர்ந்து வரும் தீவு நாடுகள்) கொள்முதல் தளம் போன்ற பல முன்னெடுப்புகளை இந்தியா தொடங்கியது.
- இந்தியத் தணிக்கை மற்றும் கணக்குத் துறையில் (IA&AD), மத்திய வருவாய் தணிக்கை (CRA) பிரிவு மற்றும் மத்திய செலவின தணிக்கை (CEA) பிரிவு ஆகிய இரண்டு புதிய பணியாளர் பிரிவுகளை உருவாக்க இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (CAG) அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- மிஹிர் ராஜேஷ் ஷா மற்றும் மகாராஷ்டிரா மாநில அரசு இடையிலான வழக்கில் உச்ச நீதிமன்றம், கைதுக்கான எழுத்துப்பூர்வ காரணங்களை வழங்கத் தவறினால் அந்த கைது நடவடிக்கை சட்டவிரோதமானதாகும் என்று கூறி தீர்ப்பளித்தது.
- அனைத்து துறைமுகங்களையும் தரவு சார்ந்ததாகவும், செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்பட்டதாகவும், ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாகவும் மாற்றுவதற்காக "டிஜி பந்தர்" எனும் ஒரு தேசியக் கட்டமைப்பினை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது.
- பொதிகளுக்கான புதிய கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சியை வலுப்படுத்த இந்திய பொதி நுட்ப ஆய்வு நிறுவனம் (IIP) ஆனது சமீபத்தில் அதன் பெங்களூரு மையத்தைத் திறந்துள்ளது.
- UIDAI அமைப்பானது, நேரடி நகல்களுக்கான தேவையை நீக்கி, குடிமக்கள் தங்கள் டிஜிட்டல் ஆதார் அட்டையை பாதுகாப்பாக உடன் கொண்டு செல்ல அனுமதிக்கின்ற புதிய ஆதார் செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.

- இந்திய சர்க்கரை மற்றும் உயிரி எரிசக்தி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் (ISMA) படி, 2025–26 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி 18.6% அதிகரித்து 30.95 மில்லியன் டன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இந்தியா, 2026 ஆம் நிதியாண்டில் 200 டன்னாக இருக்கும் அதன் நியோடைமியம் உற்பத்தியை 2027 ஆம் நிதியாண்டில் 500 டன்களாக உயர்த்த உள்ளது.
- 10GW திறன் கொண்ட சூரிய மின் கலங்கள் மற்றும் கம்பிச் சில்லுகள் (இங்காட்) உற்பத்தி மையத்தினை அமைக்க டாடா பவர் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
- நவரத்னா நிறுவனமான தேசிய நீர்மின்னாற்றல் கழகம் (NHPC) லிமிடெட் நிறுவனமானது அதன் பொன்விழாவைக் கொண்டாடியது, மேலும் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் தேதியன்று அதன் 51வது ஸ்தாபன தினத்தையும் கொண்டாடியது.
- சீசியம், கிராஃபைட், ரூபிடியம் மற்றும் சிர்கோனியம் முக்கியமான கனிமங்களின் திருத்தப் பட்ட உரிமத் தொகை விகிதங்களை மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.
- 2015 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்திற்கு 237 ஆக இருந்த இந்தியாவின் காசநோய் பாதிப்பு 21% குறைந்து, 2024 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்திற்கு 187 ஆகக் குறைந்தது. இந்த சரிவு உலகளாவிய விகிதத்தை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- இந்தியாவின் மொழியியல் பன்முகத்தன்மையை ஆய்வு செய்வதற்காக என மதராஸ் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகமானது மொழி மற்றும் அறிவாற்றல் ஆய்வகத்தை அமைத்துள்ளது.
- பிரம்மபுத்திரா நதியில் நதிப் போக்குவரத்தை மேம்படுத்தவும், அதனைச் செயல் திறன் மிக்கதாகவும் மாற்ற இந்தியாவின் முதல் நவீன நதிப் படகு முனையம் என்பது கௌஹாத்தியில் திறக்கப்பட்டது.
- மத்திய அரசு ஊழியர்களின் குடும்பப் பதிவுகளில் மகளின் பெயர் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்று ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியதாரர் நலத்துறை தெளிவு படுத்தியது.
- இந்திய அரசானது, பெண் தொழிலாளர் வள பங்கேற்பு விகிதத்தை (FLFPR) 2024 ஆம் நிதியாண்டில் 41.7 சதவீதத்திலிருந்து 2030 ஆம் ஆண்டிற்குள் 55% ஆக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2B–மும்பை மெட்ரோ வழித்தடத்திற்கான மண்டலே பணிமனை ஆசியாவின் மிகப் பெரிய மெட்ரோ பணி மனையாக திறக்கப்பட்டுள்ளது.
- இந்திய இராணுவமானது, இந்தியா–வங்காளதேச எல்லைக்கு அருகில் அசாமின் துப்ரி மாவட்டத்தில் உள்ள லச்சித் போர்புகன் இராணுவ நிலையத்தில் மூன்று புதிய அரண் படையையும், பீகாரில் உள்ள கிஷன்கஞ்ச் மற்றும் மேற்கு வங்காளத்தில் சோப்ரா ஆகிய இடங்களில் ஆதரவுத் தளங்களையும் நிறுவியுள்ளது.
- கிழக்கு லடாக்கில் உள்ள முத் நியோமா விமானப்படை தளம் செயல்பாட்டுக்கு வந்து உள்ளது.
- Fawri+ சேவை மூலம் பஹ்ரைனின் மின்னணு நிதி பரிமாற்ற அமைப்புடன் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) இணைக்க இந்திய தேசிய கொடுப்பனவு கழகம் மற்றும் பஹ்ரைனின் BENEFIT ஆகியவை கூட்டு சேர்ந்துள்ளன.
- எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) ஆனது, குவாலியரில் உள்ள BSF அகாடமியில் உள்ள ஆளில்லா விமானப் போர்த் திறம் பயிற்சி (SDW) நிறுவனத்தில் துர்கா ஆளில்லா விமானப் பிரிவு எனப்படும் அதன் முதல் அனைத்து மகளிர் ஆளில்லா விமானப் பிரிவைத் தொடங்கியது.

- விதைகள் சட்டம் (1966) மற்றும் விதைகள் கட்டுப்பாட்டு ஆணை (1983) ஆகியவற்றிற்குப் பதிலாக விதைத் தரம், ஒழுங்குமுறை மற்றும் கண்டறியும் தன்மைக்கான நவீனக் கட்டமைப்பினை அறிமுகப்படுத்துவதை இந்த வரைவு விதை மசோதா, 2025 நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நுகர்வோர் குறைகளைத் தாக்கல் செய்வதை எளிதாக்குவதற்காக, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியன்று தொடங்கப் பட்ட அரசாங்கத்தின் டிஜிட்டல் தளமான e–Jagriti 2025 ஆம் ஆண்டில் 2.7 லட்சத்திற்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட பயனர்களைப் பெற்றுள்ளது.
- பொருளாதார நிபுணர் அரவிந்த் பனகாரியா தலைமையிலான 16வது நிதி ஆணையம் ஆனது, இந்தியக் குடியரசுத் தலைவரிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது.
- இந்தியக் கடற்படையானது, INS மாஹே எனும் முதல் மாஹே ரக நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலின் சின்னத்தினை வெளியிட்டது என்பதோடு இதில் அந்த மாநிலத்தின் தற்காப்புக் கலை பாரம்பரியத்தைக் குறிக்கும் ஒரு பாரம்பரிய கேரள வாளான உருமி இடம் பெற்றுள்ளது.
- இந்திய அரசானது, அடிப்படை செயற்கை நுண்ணறிவை (AI) கற்பிப்பதற்கான YUVA AI for ALL என்ற ஓர் இலவச தேசியப் பாடத்திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- நவம்பர் 20 ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றம், மாநிலச் சட்டமன்றங்களால் நிறைவேற்றப் பட்ட மசோதாக்கள் குறித்து முடிவெடுக்க வேண்டிய சூழலில், அரசியலமைப்பு நீதிமன்றங்கள் ஆனது குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர்களுக்கான காலக்கெடுவை பரிந்துரைக்க முடியாது என்றும், "ஒப்புதலாக கருதப் படும் உத்தரவை" உச்ச நீதிமன்றத்தால் வழங்க முடியாது என்றும் கருத்து தெரிவித்துள்ளது.
- புவி அறிவியல் அமைச்சகம் ஆனது, ஐந்து புவி அறிவியல் நிறுவனங்களை ஒன்றிணைப்பதற்காக புவி அமைப்பு அறிவியல் சபையை உருவாக்கியுள்ளது.
- புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) ஆனது உதய்ப்பூரில் 2025 ஆம் ஆண்டு தேசியத் தொழில்துறை வகைப்பாட்டினை (NIC) வெளியிட்டது.
- 2021 ஆம் ஆண்டு தீர்ப்பாயச் சட்டத்தின் முக்கிய விதிகளை இந்திய உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, நவம்பர் 20, 2025 அன்று, பிரிவு 143ன் கீழ் 16வது ஜனாதிபதியின் குறிப்புக்குப் பதிலளித்தது.
- 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய நிதி உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி (NaBFID) உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கி (IDB) என மறுபெயரிடப்படும்.
- சரக்கு இரயில் பெட்டிகளின் கதவுகளை நிகழ்நேரத்தில் கண்காணிக்க DRISHTI எனப்படும் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் அமைப்பை நிறுவ இந்திய இரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.
- தகவல் தொடர்பு அமைச்சகத்தின் நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்திய அஞ்சல் துறையானது தனது முதல் Gen Z தலைமுறை சார்ந்த கருத்துருவுடன் கூடிய தபால் அலுவலக வளாகத்தினை டெல்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் துவக்கியுள்ளது.
- கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குழுவின் (CAC48) 48வது அமர்வில் கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குழுவின் (CCEXEC) நிர்வாகக் குழுவிற்கு இந்தியா ஒருமனதாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

- இந்தியாவும் நேபாளமும் இரயில் அடிப்படையிலான சரக்குப் போக்குவரத்தினை, குறிப்பாக ஜோக்பானி–பிரட்நகர் வழித்தடம் மூலம் தாராளமயமாக்கவும் விரிவு படுத்தவும் இந்தியா–நேபாளப் போக்குவரத்து ஒப்பந்தத்திற்கான நெறிமுறையைத் திருத்தும் பரிமாற்ற அறிக்கையில் கையெழுத்திட்டன.
- தெற்கு இரயில்வே நிர்வாகமானது, தமிழ்நாடு மற்றும் கேரளா முழுவதும் நேர அட்டவணையிடப் பட்ட உள்–மண்டலத் தளவாடச் சேவையான 'Coast–to–Coast' பார்சல் சிப்பம் விநியோக விரைவு இரயிலை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் தலைமைத் தணிக்கையாளர் (CAG) அலுவலகமானது ஐதராபாத்தில் நிதி சார் தணிக்கைக்கான ஒரு சிறப்பு மையத்தை அமைக்க உள்ளது.
- இந்திய அரசானது, ரஷ்யாவின் யெகாடெரின்பர்க் மற்றும் கசானில் இரண்டு புதிய தூதரகங்களைத் துவக்கியுள்ளது.
- 2023–24 ஆம் ஆண்டில் 332.30 மில்லியன் டன்களாக இருந்த இந்தியாவின் மொத்த உணவு தானிய உற்பத்தி ஆனது, 2024–25 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 357.73 மில்லியன் டன்களை எட்டியது.
- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 21 ஆம் தேதி முதல், ஊதியங்கள் (2019), தொழில்துறை உறவுகள் குறியீடு (2020), சமூகப் பாதுகாப்புக் குறியீடு (2020), மற்றும் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிச் சூழல்கள் குறியீடு (2020) ஆகிய இந்தியாவின் நான்கு தொழிலாளர் குறியீடுகள் தற்போதுள்ள 29 தொழிலாளர் சட்டங்களுக்கு மாற்றாக அமல்படுத்தப்பட உள்ளன.
- 131வது அரசியலமைப்பு திருத்த மசோதா, 2025 ஆனது, சண்டிகரை அரசியலமைப்பின் 240வது சரத்தின் கீழ் கொண்டுவர முன்மொழிகிறது.
- இந்தியாவில் உள்ள 250க்கும் மேற்பட்ட துறைமுகங்களுக்கான பாதுகாப்பு ஒழுங்கு முறை ஆணையமாக மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையை (CISF) மத்திய அரசு நியமித்துள்ளது.
- துயரத்தில் உள்ள பெண்களுக்கு உடனடி உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்காக தேசிய மகளிர் ஆணையம் ஆனது 14490 என்ற புதிய கட்டணமில்லா உதவி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய இரயில்வே நிர்வாகமானது, 2025-26 ஆம் நிதியாண்டில் 1 பில்லியன் டன் சரக்கு ஏற்றுதலைக் கடந்து, நிலக்கரி, இரும்புத் தாது மற்றும் சிமெண்ட் ஆகியன அதிக பங்களிப்பைக் கொண்டு 1,020 மில்லியன் டன்களை எட்டியுள்ளது.
- மதராஸின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் துறைமுகங்களுக்கான இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கப்பல் போக்குவரத்து மேலாண்மை அமைப்பை (VTMS) உருவாக்கி நிறுவியுள்ளனர்.
- இந்தியப் பிரதமர் தெலுங்கானாவின் ஐதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ள சஃப்ரான் விமான இயந்திரச் சேவைகள் இந்தியா (SAESI) மையத்தினைத் திறந்து வைத்தார்.
- தெற்கு கோவா மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ சமஸ்தானம் கோகர்ண ஜீவோட்டம் மடத்தில் அமைக்கப்பட்டுள்ள 77 அடி உயரமுள்ள இராமரின் வெண்கலச் சிலையைப் பிரதமர் திறந்து வைத்தார்.
- உருக்கி இணைக்கப்பட்ட அருமண் நிரந்தர காந்தங்களை (REPM – Rare Earth Permanent Magnets) உருவாக்குவதற்கான 7,280 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI), அதன் 175வது ஸ்தாபன ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, ஜெய்ப்பூரில் உள்ள இராஜஸ்தான் சர்வதேச மையத்தில் "Unearthing the Past, Shaping the Future: 175 Years of GSI" என்ற கருத்துருவில் சர்வதேச கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.
- தெலுங்கானாவின் ஐதராபாத்தில் Leading Edge Aviation Propulsion (LEAP) எஞ்சின்களின் உற்பத்திக்காக அமைக்கப்பட்டுள்ள சஃப்ரான் விமான எஞ்சின் சேவை இந்தியா (SAESI) மையத்தினை பிரதமர் திறந்து வைத்தார்.
- தேசியப் பால் தினமான 2025 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் தேதியன்று மீன்வளம், கால் நடைப் பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் ஆனது 2025 ஆம் ஆண்டு அடிப்படை கால்நடைப் பராமரிப்பு குறித்த புள்ளி விவரங்கள் (BAHS) அறிக்கையை வெளியிட்டது.
- லிதுவேனிய–உக்ரேனிய எழுத்தாளர் ஜரோஸ்லாவாஸ் மெல்னிகாஸ் எழுதிய 'Antim Din' (இந்தியில்) என்ற புகழ்பெற்ற லிதுவேனிய புதினத்தின் இந்தி மொழிபெயர்ப்பை சாகித்ய அகாடமி வெளியிட்டுள்ளது.
- மூலதன ஆதாயக் கணக்குகள் (இரண்டாவது திருத்தம்) திட்டம், 2025 ஆனது, அதன் செயல்முறைகளை நவீனமயமாக்கவும் டிஜிட்டல் மயமாக்கவும் 1988 ஆம் ஆண்டின் மூலதன ஆதாயக் கணக்குத் திட்டத்தை (CGAS) புதுப்பிக்கிறது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவின் அரசு முறை வருகையின் போது, சிவிங்கிப் புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் கீழ் போட்ஸ்வானாவிலிருந்து 8 சிவிங்கிப் புலிகளை இடமாற்றம் செய்ய இந்தியாவும் போட்ஸ்வானாவும் அதிகாரப் பூர்வமாக ஒப்புக் கொண்டன.
- இந்தியாவின் பாதுகாப்பு துறை உற்பத்தி ஆனது 2024-25 ஆம் நிதியாண்டில் 1.54 லட்சம் கோடி ரூபாயை எட்டியது, மேலும் 2014 ஆம் ஆண்டில் சுமார் 1,000 கோடி ரூபாய்க்கும் குறைவாக இருந்த பாதுகாப்புத் துறையின் ஏற்றுமதி 2024-25 ஆம் நிதியாண்டில் 23,622 கோடி ரூபாயாக உயர்ந்தது.
- மாஸ்கோ சுற்றுலாவிற்கான இரண்டாவது பெரிய CIS (காமன்வெல்த் ஆஃப் இன்டிபென்டன்ட் ஸ்டேட்ஸ்) அல்லாத மூலச் சந்தையாக இந்தியா மாறியது.
- சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பெரிய தூய்மையான தொழில் துறை குழாய் பாதையை இந்தியா கொண்டுள்ளது.
- SoLAR திட்டத்தின் இரண்டாம் கட்டம் (வேளாண்மையில் மீள்தன்மைக்கான சூரிய சக்தி சார் நீர்ப்பாசனம்) சுவிட்சர்லாந்து மேம்பாட்டு மற்றும் ஒத்துழைப்பு நிறுவனத்தின் (SDC) ஆதரவுடன் சர்வதேச நீர் மேலாண்மை நிறுவனம் (IWMI) தலைமையில் செயல் படுகிறது.
- தெற்கு அந்தமானின் சிடியாதபு என்ற இடத்தில் இந்தியாவானது தேசியப் பவளப் பாறை ஆராய்ச்சி நிறுவனத்தை (NCRRI) நிறுவ உள்ளது.
- உள்துறை அமைச்சகம் (MHA) ஆனது, இராஜ் பவன்கள் மற்றும் இராஜ் நிவாஸை மறுபெயரிட பரிந்துரைத்து அனைத்து ஆளுநர்கள் மற்றும் துணை நிலை ஆளுநர்களுக்கும் ஒரு கடிதம் அனுப்பியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியாவில் முன் எப்போதும் இல்லாத அளவில் 357 மில்லியன் டன் உணவு தானிய உற்பத்தி பதிவாகியுள்ளது என்பதோடு, இது கடந்தப் பத்தாண்டுகளில் பதிவான 100 மில்லியன் டன் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- இந்தியக் கடற்படையானது, 17A திட்டத்தின் கீழ் கட்டமைக்கப்பட்ட தாராகிரி எனும் நான்காவது நீலகிரி ரக போர்க் கப்பல் மற்றும் மேசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் (MDL) நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்ட மூன்றாவது கப்பலைப் பெற்றது.

- ❖ விசாகப்பட்டினம் ஆனது கைலாசகிரி மலை உச்சியில் உள்ள பூங்காவில் நிலத்தில் இருந்து சுமார் 862 அடி (262 மீட்டர்) உயரத்தில் அமைந்த இந்தியாவின் மிக நீளமான கண்ணாடியால் ஆன தொங்கு நடை பாதை பாலத்தினை அறிமுகப் படுத்தியது.
- ❖ டெல்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச (IGI) விமான நிலையம் ஆனது 40 மில்லியனுக்கும் அதிகமான பயணிகளின் போக்குவரத்தினைக் கையாளுகின்ற இந்தியாவின் முதல் மீள் நீரேற்ற விமான நிலையமாகும்.
- ❖ யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு) அமைப்பின் 2025–2029 ஆம் காலக் கட்டத்திற்கான நிர்வாகக் குழுவிற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- ❖ உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தியாவின் மூன்றாவது அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலான INS அரிதாமன் விரைவில் படையில் இணைக்கப்பட உள்ளது.
- ❖ பெங்களூருவில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை சபையின் (CSIR) தேசிய விண்வெளி ஆய்வகங்கள் (NAL) ஆனது, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஹன்சா–3(NG) பயிற்சி விமானத்தின் "உற்பத்தி வடிவினை" அறிமுகப்படுத்தின.
- ❖ கோவா ஷிப்யார்ட் லிமிடெட் நிறுவனமானது, எட்டு விரைவு ரோந்து கப்பல்களில் (FPVs) மூன்றாவது கப்பலான ICGS அமுல்யாவினை இந்தியக் கடலோரக் காவல்படையிடம் ஒப்படைத்தது.
- ❖ இந்தியக் கடற்படையானது, பித்ரா தீவில் ஒரு புதிய கடற்படைப் பிரிவை நிறுவ உள்ளது என்ற நிலையில் இது 2026 ஆம் ஆண்டிற்குள் முழுமையாகச் செயல்பாட்டிற்கு வரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- ❖ இந்திய ஆயுதப் படைகள் ஆனது, சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு அவசரகால கொள் முதலின் கீழ் செயற்கைக்கோள்களுடன் இணைக்கப்பட்ட கூடுதல் ஹெரான் Mk II ஆளில்லா வான்வழி வாகனங்களுக்கு (UAV) வாங்குவதற்கு இஸ்ரேல் நாட்டிடம் கையெழுத்திட்டன.
- ❖ டெல்லி மற்றும் குஜராத்தில் ஓட்டுநர்களுக்குச் சொந்தமான கூட்டுறவு மாதிரியின் கீழ் பாரத் டாக்ஸி சேவையின் செயல்பாட்டுச் சோதனைகளைத் தொடங்கியுள்ளது.
- ❖ நோய்த் தொற்றுகள் குறித்த முன் எச்சரிக்கைகளை வழங்க தேசிய நோய்க் கட்டுப்பாட்டு மையம் (NCDC) குடிமக்கள் சார்ந்த அறிக்கையிடல் முறையை அறிமுகப் படுத்தியது.
- ❖ பசுமை இழுவைப் படகிற்கான மாற்றத் திட்டத்தின் (GTTP) கீழ், தீன்தயாள் துறைமுக ஆணையத்திற்காக (DPA) முழுமையாக மின்சாரத்தில் இயங்கும் தனது முதல் பசுமை இழுவைப் படகு ஒன்றை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியக் கடற்படை ஆனது கடற்படை தினத்தன்று (டிசம்பர் 04) 2025 ஆம் ஆண்டு இந்தியக் கடல்சார் கோட்பாட்டினை வெளியிட்டது.
- ❖ இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் வர்த்தகம் மற்றும் உத்தி சார் உறவுகளை அதிகரிப்பதற்காக 2030 ஆம் ஆண்டு வரையிலான பொருளாதாரக் கூட்டுறவுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- ❖ தொலைத்தொடர்புத் துறை (DoT) ஆனது அனைத்து உள்வரும் அழைப்புகளுக்கும் KYC (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள்) பதிவு செய்யப்பட்ட பெயரைக் காட்டுமாறு தொலைத்தொடர்பு சேவை வழங்கீட்டு நிறுவனங்களைக் கோர உள்ளது.

- ❖ உயரமான எல்லைப் பகுதியில் அனைத்து வானிலைகளிலுமான போக்குவரத்து இணைப்பையும் வழங்குவதற்காக எல்லைச் சாலைகள் அமைப்பால் (BRO) லடாக்கில் கட்டமைக்கப்பட்ட 920 மீட்டர் நீள ஷியோக் சுரங்கப்பாதையானது பாதுகாப்புத் துறை அமைச்சரால் சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- ❖ அனைத்து மாநில வழக்குரைஞர் கழகத் தேர்தல்களிலும் பெண்களுக்கு 30% இட ஒதுக்கீட்டை உறுதி செய்யுமாறு இந்திய வழக்குரைஞர் கழகத்திற்கு (BCI) உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.
- ❖ இந்திய அஞ்சல் துறையானது, கோட்டயத்தில் உள்ள CMS கல்லூரியில் கேரளாவின் முதல் Gen–Z அஞ்சல் அலுவலக விரிவாக்க முனையத்தினைத் திறந்துள்ளது.
- ❖ இந்தியா தனது முதல் மெகாவாட்–மணிநேர (MWh) அளவீட்டில் வெனடியம் ரெடாக்ஸ் ஃப்ளோ பேட்டரி (VRFB) எனும் மின் கல அமைப்பினை உத்தரப் பிரதேசத்தின் கிரேட்டர் நொய்டாவில் திறந்து வைத்தது.
- ❖ பம்பாயின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள புதுமை மற்றும் தொழில் முனைவோர் சங்கம் (SINE) ஆனது 250 கோடி ரூபாயுடன் இந்தியாவின் முதல் தொழிற்காப்புடன் இணைக்கப்பட்ட தொழில்நுட்பப் புதுமைக்கான துணிகர மூலதன நிதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ 2025–29 ஆம் ஆண்டிற்கான தேசிய நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புத் திறன் திட்டத்தின் (NAP–AMR 2.0) இரண்டாவது கட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியாவின் தீபங்களின் திருவிழாவான தீபாவளியானது 2025 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.
- ❖ இந்திய இரயில்வே நிர்வாகமானது, அகலப்பாதைகளில் இயங்குகின்ற, நீராவியை மட்டுமே வெளியிடுகின்ற, சுழிய அளவிலான கார்பன் உமிழ்வை உருவாக்குகின்ற இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் இரயிலை ஒரு சோதனைத் திட்டமாக தொடங்க உள்ளது.
- ❖ ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் கிராமப்புறக் குடிநீர் விநியோக அமைப்புகளை நிர்வகிப்பதற்காக ஜல் சக்தி அமைச்சகம் சுஜாலாம் பாரத் செயலியை அறிமுகப் படுத்தியது.
- ❖ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை (MGNREGS) பூஜ்ய பாபு கிராமின் ரோஸ்கர் யோஜனா என மறுபெயரிட அரசாங்கம் திட்டமிட்டு உள்ளது.
- ❖ தொழில்துறைப் பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கான நிலக்கரி இணைப்புகளை ஏலம் விடுவதற்கான CoalSETU கொள்கையை அரசாங்கம் அங்கீகரித்தது.
- ❖ உலகளாவிய காட்டுத்தீ மேலாண்மையை வலுப்படுத்துவது குறித்த இந்தியாவின் தீர்மானம் கென்யாவின் நைரோபியில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் சபையில் (UNEA–7) ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- ❖ மத்திய அரசானது, 2025 ஆம் ஆண்டு விக்சித் பாரத் சிக்சா அதிஷ்தான் மசோதாவை மக்களவையில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியாவானது செயலி உருவாக்கத் திட்டத்தின் (MDP) கீழ் மேம்படுத்தப் பட்ட கணினி மேம்பாட்டு மையத்தினால் (C–DAC) உருவாக்கப்பட்ட, அதன் முதல் முழுமையாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 1.0 GHz, 64–பிட் டூயல்–கோர் மைக்ரோ பிராசசரை (இரட்டை மையச் செயலி) அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்திய இரயில்வே நிர்வாகமானது, 25 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் அதன் அகலப்பாதை வலையமைப்பின் 99 சதவீதத்திற்கும் அதிகமான பாதைகளின் மின்மயமாக்கல் நடவடிக்கையை நிறைவு செய்து உள்ளது.
- பெங்களூரு பன்னேர்கட்டா உயிரியல் பூங்கா, விலங்குப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் தென்னாப்பிரிக்காவிலிருந்து எட்டு வெளிர் முகம் கொண்ட கபுச்சின் குரங்குகளை இறக்குமதி செய்தது.
- உலகின் தாமரை விதைகளில் (மக்கானா) கிட்டத்தட்ட 80 சதவீதத்தினை இந்தியா உற்பத்தி செய்கிறது என்பதோடு இது நரிக் கொட்டை அல்லது கோர்கன் கொட்டை என்றும் அழைக்கப் படுகிறது.
- இந்திய அரசானது, கிராமப்புறக் கூட்டுறவு வங்கிகளை (RCBs) தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுடன் நவீனமயமாக்குவதற்காக என்று சஹாகர் சாரதி எனும் ஒரு பகிரப் பட்ட (ஒருங்கிணைந்த) சேவை நிறுவனத்தினைத் தொடங்கியது.
- இந்தியா தனது முதல் செயற்கை நுண்ணறிவு (AI) சார்ந்த சமூகப் பரிசோதனை திட்டத்தை புது டெல்லியில் தொடங்கியது.
- RESPOND தொகுப்பு 2025 எனும் இஸ்ரோவின் தற்போதைய மற்றும் எதிர்கால விண்வெளிப் பயணங்களுடன் இணைக்கப் பட்ட பணி சார்ந்த ஆராய்ச்சிகளில் உள்ள சிக்கல்களின் பட்டியலானது விண்வெளித் துறையின் (DoS) கீழ் இஸ்ரோவால் வெளியிடப்பட்டது.
- இந்தியாவின் முதல் பிரத்தியேக வனப் பல்கலைக்கழகம் ஆனது உத்தரப் பிரதேச மாநிலத்தின் கோரக்பூரில் நிறுவப்பட உள்ளது.
- இந்தியக் கடற்படையானது, கோவாவில் உள்ள INS ஹன்சாவில் INAS 335 'Ospreys' படைப் பிரிவை அதன் இரண்டாவது செயல்பாட்டுப் படைப்பிரிவான MH-60R பல்பயன்பாட்டு ஹெலிகாப்டர்கள் பிரிவில் இணைத்தது.
- "ஒரு RRB, ஒரு முத்திரைச் சின்னம்" முன்னெடுப்பின் கீழ் இந்திய அரசும் தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி ஆகியவை 28 பிராந்தியக் கிராமப்புற வங்கிகளுக்கும் (RRB) ஒரே பொதுவான முத்திரைச் சின்னத்தினை அறிமுகப்படுத்தின.
- கப்பல்கள் மற்றும் துறைமுக வசதிகளின் பாதுகாப்பை மேற்பார்வையிடுவதற்காக துறைமுகப் பாதுகாப்பு வாரியம் (BoPS) உருவாக்கப்பட உள்ளது.
- இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் (MYAS) ஆனது விளையாட்டுத் துறைக்கான ஒரு விரிவான உள்ளகப் பயிற்சிக் கொள்கையை அறிமுகப்படுத்தியது.
- 250 மெகாவாட் திறன் கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய நீர்மின் நிலையமான சுபன்சிரி கீழ்மட்ட நீர்மின் நிலையத்தின் இரண்டாம் அலகு அருணாச்சலப் பிரதேசத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியக் குடியரசுத் தலைவர் புது டெல்லியில் உள்ள இராஷ்டிரபதி பவனில் சந்தாலி மொழியில் எழுதப்பட்ட இந்திய அரசியலமைப்பை வெளியிட்டார்.
- மத்திய அரசானது உள்துறை அமைச்சகத்தின் (MHA) கீழ், இந்தியாவின் முதல் தேசிய தீவிரவாத எதிர்ப்புக் கொள்கையை இறுதி செய்து வருகிறது.
- இந்தியா 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் கிம்பர்லி செயல்முறையின் துணைத் தலைமைப் பொறுப்பினை ஏற்றுள்ளது.
- பிரதான் மந்திரி கிராம் சதக் யோஜனா (PMGSY) திட்டமானது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 25 ஆம் ஆண்டினை நிறைவு செய்தது.

- இந்திய கம்யூனிஸ்ட் கட்சியானது (CPI) 2025 ஆம் ஆண்டில் அதன் 100 ஆம் ஆண்டுகளை நிறைவு செய்தது.
- சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் ஆனது ஷாங்க் ஏர், அல் ஹிந்த் ஏர் மற்றும் ஃப்ளைஎக்ஸ்பிரஸ் ஆகியவற்றுக்கு தடையில்லாச் சான்றிதழ்களை (NOC) வழங்கியது.
- குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் கர்நாடகாவின் கார்வார் துறைமுகத்திலிருந்து ஒரு நீர்மூழ்கிக் கப்பல் பயணத்தை மேற்கொண்டார். இதன் மூலம் A.P.J. அப்துல் கலாமுக்குப் பிறகு நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்த இரண்டாவது இந்தியக் குடியரசுத் தலைவர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- இந்திய தரநிலைகள் வாரியம் (BIS) ஆனது, அதன் உற்பத்தி மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்காக இந்தியாவின் முதல் அகர்பத்தி (தூபக் குச்சி) தரநிலையை அறிவித்துள்ளது.
- இந்திய அரசாங்கம் ஆனது தேசியப் புலனாய்வுக் கட்டமைப்பினை (NATGRID) தேசிய மக்கள்தொகை பதிவேடுடன் (NPR) ஒருங்கிணைத்துள்ளது.
- இந்தியத் தரநிலைகள் வாரியம் (BIS) ஆனது, வெடிகுண்டு அகற்றும் அமைப்புகளுக்கான IS 19445:2025 என்ற இந்தியாவின் முதல் தேசியத் தரநிலையை அறிவித்துள்ளது.
- ஒடிசா மற்றும் டெல்லி ஆயுஷ்மான் பாரத் – பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (AB–PMJAY) திட்டத்தில் இணைந்துள்ளதுடன் பெரும்பாலான இந்திய மாநிலங்கள் இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ளன.
- வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே நிர்வாகத்தின் (NFR) அலிப்பூர்துவார் பிரிவு, பிளாசரின் விரைவு தடா மாற்ற அமைப்பை (PQRS) பயன்படுத்தி 1,033 பாதை மீட்டர்கள் என்ற ஒற்றை நாளிலேயே இயந்திரமயமாக்கப்பட்ட அதிக தூரப் பாதைப் புதுப்பித்தல் நடவடிக்கையை அடைந்தது.
- மத்திய ஆயுதக் காவல் படைகளின் (CAPF) C தரப் பதவிகளில் முன்னாள் அக்னி வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டை மத்திய உள்துறை அமைச்சகம் 10 சதவீதத்திலிருந்து 50% ஆக உயர்த்தியுள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

- டென்மார்க் ஜலசந்தி காட்டராக்ட் என்பது 11,500 அடி செங்குத்து உயரத்துடன் பூமியின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- 143 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி, வயதான மக்கள் தொகையின் சவால்களைச் சமாளிப்பதற்கான அதன் தயார்நிலையில் இந்தியா 123வது இடத்தில் இருப்பதால் அதற்கான தயார் நிலையில் இருந்து வெகு தொலைவில் உள்ளது.
- இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் குழு ஆனது 'குவாட் (QUAD) ஒத்துழைப்பு அமைப்பின் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 31 ஆம் தேதியன்று ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டனர்.
- ஜஸ்டின் ட்ரூடோ தனது கனடிய நாட்டின் சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டதோடு, கனடாவின் பிரதமராக தனது ஒன்பது ஆண்டு பதவிக் காலத்தினையும் நிறைவு செய்துள்ளார்.

- சீனாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கூட்டுறவு ஒப்பந்தத்தினை மேலும் ஒரு ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க சீனாவும் அமெரிக்காவும் ஒப்புக் கொண்டுள்ளன.
- இந்த முன்னோடி திட்டத்தின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளில் மோசடி செய்யப் பட்ட சொத்துக்களைக் கண்டறிவதற்காக சர்வதேசக் காவல் துறையானது தனது முதல் வெள்ளி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.
- இந்தோனேசியாவின் அதி தீவிரமான செயல்பாட்டில் உள்ள எரிமலைகளில் ஒன்றான மவுண்ட் இபு சமீபத்தில் வெடித்தது.
- இந்திய நாடானது அதிகாரப்பூர்வப் புள்ளிவிவரங்களுக்கான பெருந்தரவு மற்றும் தரவு அறிவியல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவில் (UN-CEBD) இணைந்துள்ளது.
- கிரீன்லாந்து உலகின் மிகப்பெரிய தீவு என்பதோடு மற்றும் புவியியல் ரீதியாக வட அமெரிக்காவின் ஒரு பகுதியாகும்.
- "நெங்சு-1" எனப்படும் 300 மெகாவாட் திறன் கொண்ட உலகின் முதல் சிறு அழுத்தப் பட்ட காற்று ஆற்றல் சேமிப்பு (CAES) நிலையமானது சீனாவில் முழு திறன் கொண்ட மின் பகிர்மானக் கட்டமைப்பு இணைப்பை அடைந்துள்ளது.
- நெகிழிக் கழிவுகளை இறக்குமதி செய்வதைத் தடை செய்வதன் மூலம் உலகளாவிய நெகிழிக் கழிவு நெருக்கடியை எதிர்கொள்ளும் சமீபத்திய நாடாக தாய்லாந்து மாறி உள்ளது.
- வளர்ந்து வரும் நாடுகளின் பிரிக்ஸ் அமைப்பின் ஒரு பங்குதாரர் நாடாக நைஜீரியா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் 47வது அதிபராக டொனால்ட் டிரம்ப் பதவியேற்றுள்ளார்.
- பாரிசு பருவநிலை மாற்ற உடன்படிக்கையில் இருந்து அமெரிக்க நாட்டை விலக்கிக் கொள்வதற்கான செயலாக்க ஆணையில் அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டு உள்ளார்.
- சீனா, தியான்ஷான் மலைகள் வழியாக அமைக்கப்பட்டு வரும் உலகின் மிக நீளமான விரைவுப் போக்குவரத்து சுரங்கப்பாதையின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்து உள்ளது.
- OpenAI, ஆரக்கிள், சாப்ட்பேங்க் மற்றும் MGX ஆகிய நிறுவனங்கள் 'ஸ்டார்கேட்' எனப் படும் உலகின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவுத் திட்டத்தினை நிறுவுவதற்காக ஒன்றிணைந்துள்ளன.
- உலகளாவிய அந்நிய நேரடி முதலீடுகள் (FDI) ஆனது 2024 ஆம் ஆண்டில் எட்டு சதவீதம் குறைந்தன.
- ஐக்கிய நாடுகள் சபையானது 2025 ஆம் ஆண்டினைச் சர்வதேச குவாண்டம் (துளிம) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆண்டாக (IYQ) அறிவித்துள்ளது.
- டிரம்பின் நிர்வாகம் ஆனது, மூலதன வரவுகள் மீது பண மதிப்பு சார்ந்த குறுகிய கால வர்த்தகம் மீதான வரி / டோபின் வரி விதிப்பது குறித்து பரிசீலித்து வருகிறது என்ற ஒரு நிலையில் இது உலகளாவிய நிதிச் சந்தைகளை சீர்குலைக்கும் நடவடிக்கையாகும்.
- TRUST என்ற முன்னெடுப்பின் கீழ், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் ஆனது தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கான தடைகளை வெகுவாக நன்கு குறைத்து, ஏற்றுமதி கட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்து மற்றும் உயர் தொழில்நுட்ப வர்த்தகத்தினை நன்கு மேம்படுத்த உள்ளன.

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இனைந்து தன்னாட்சி அமைப்புகள் தொழில்துறைக் கூட்டணி (ASIA) என்ற புதிய முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளன.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது உப்புகளுக்கு மாற்றாக குறைந்த சோடியம் உள்ளடக்கம் கொண்ட மாற்றுகளைப் பயன்படுத்தப் பரிந்துரைக்கும் வழிகாட்டுதல் மீதான தொகுப்பை வெளியிட்டுள்ளது.
- பிரேசில் நாட்டின் அரசாங்கம் ஆனது முக்கிய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் ஒரு குழுவான OPEC+ குழுவில் இணைவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- COVID-19 பெருந்தொற்றினை ஏற்படுத்திய வைரஸைப் போன்ற HKU5-CoV-2 என்ற ஒரு புதிதாக அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட வௌவால் கொரோனா வைரஸ் சீனாவில் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் வளங்காப்பு மற்றும் நிலைத் தன்மைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த தனிநபர்களை இலக்காகக் கொண்ட 10 ஆண்டு கால ஒரு வசிப்பிட அனுமதி வழங்கீட்டிற்கான ஒரு நீல நிற நுழைவு இசைவுச் சீட்டினை ஐக்கிய அரபு அமீரகம் அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஐந்து நாட்களுக்குள் ரே, செரு மற்றும் ஆல்ஃபிரட் என பெயரிடப்பட்ட சில புயல்கள் உருவாகி தற்போது பசிபிக் பெருங்கடலில் சுழன்று கொண்டிருக்கின்றன.
- ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளானது உலகிலேயே மிகவும் அதிக மார்பகப் புற்றுநோய் பாதிப்பு விகிதங்களைக் கொண்டுள்ளன.
- தாமிரம் மற்றும் கோபால்ட் கனிம ஆய்விற்காக சாம்பியாவில் 9,000 சதுர கிலோமீட்டர் பரப்பிலான எவ்வித மேம்பாடுகளும் மேற்கொள்ளப்படாத வகை பசுமை நிலத்தினை இந்திய அரசாங்கம் பெற்றுள்ளது.
- அரபு லீக் / கூட்டமைப்பின் அவசர உச்சி மாநாடு ஆனது, காசாவை மீள்கட்டமைக்கச் செய்வதற்கான 53 பில்லியன் டாலர் மதிப்பிலான எகிப்தியத் திட்டத்தினை "விரிவான அரபு உத்தி"யாக ஏற்றுக் கொண்டுள்ளது.
- பிரான்சு நாடானது, மொசெல்லே என்ற பகுதியில் 92 டிரில்லியன் டாலர் மதிப்புள்ள 46 மில்லியன் டன் வெள்ளை ஹைட்ரஜன் இருப்பைக் கண்டறிந்துள்ளது.
- வணிக ரீதியான கோழி வளர்ப்பு பகுதிகளில், அதிக நோய்த்தொற்று மிக்க பறவைக் காய்ச்சல் (HPAI) வைரஸின் கொடிய H7N9 வகை தொற்று ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.
- லூசியானா மாநில அரசானது முதல் முறையாக நைட்ரஜன் வாயுவைப் பயன்படுத்தி ஒருவருக்கு மரணத் தண்டனையினை நிறைவேற்றியுள்ளது.
- போலந்து மற்றும் லிதுவேனியா, லாத்வியா மற்றும் எஸ்டோனியா போன்ற பால்டிக் நாடுகள் ஒட்டாவா ஒப்பந்தத்திலிருந்து வெளியேறத் தயாராகி வருகின்றன.
- தாய்லாந்து நாடானது, "BIMSTEC: Prosperous, Resilient and Open" என்ற கருத்துருவின் கீழ் ஆறாவது BIMSTEC உச்சி மாநாட்டை நடத்தியது.
- பாரிசு உடன்படிக்கையின் 6.2 என்ற பிரிவின் கீழ் உமிழ்வுக் குறைப்பு மதிப்புகளைப் பகிர்ந்து கொள்வதற்காக இந்தியாவும் ஜப்பானும் கூட்டு மதிப்பு நெறிமுறையை (JCM) இறுதி செய்துள்ளன.
- வங்காளதேச அரசானது, வங்காள விரிகுடா பல்துறைத் தொழில்நுட்ப மற்றும் அதன் பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்னெடுப்பு (BIMSTEC) என்ற பிராந்தியக் குழுவின் தலைமைப் பொறுப்பிற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

- சர்வதேச சூரிய சக்திக் கூட்டணியுடன் (ISA) உலக நாடுகள் கூட்டுக் கட்டமைப்பில் (CPF) கையெழுத்திட்ட முதல் ஆப்பிரிக்க நாடாக மொரிஷியஸ் மாறியுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆனது ஆளுகை தொடர்பான சர்வதேசக் காவல்துறைக் குழுவின் தலைமைப் பொறுப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள், இந்தியாவின் உள்நாட்டு உற்பத்தி முன்னெடுப்பின் கீழ் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான போர் வாகனங்களுக்கான தொழில்நுட்பங்களை இணைந்து உருவாக்குவதற்காக என தங்கள் முதல் பாதுகாப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- வங்காளதேசம் ஆனது சமீபத்தில் ஆர்ட்டெமிஸ் திட்டத்தில் கையொப்பமிட்ட 54வது நாடாக மாறியுள்ளது.
- சீனா உலகின் முதல் வணிக ரீதியான 10-ஜிகாபைட் (10G) அகலப்பட்டை சேவை வலை அமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) இருந்து ஹங்கேரி விலகுவதாக அறிவித்து உள்ளது.
- உலகின் முதல் ஒருங்கிணைந்த ஆளில்லா விமான எதிர்ப்பு ஆயுத அமைப்பை சீனா அறிமுகப்படுத்தியுள்ளது.
- தான்சானியாவில், இரவு நேர வெப்பநிலையானது தீவிரமாக உயர்ந்ததுடன், 2024 ஆம் ஆண்டானது இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமான ஆண்டாக பதிவாகியுள்ளது.
- இந்தியா-நார்வே கடல் மாசுபாடு முன்னெடுப்பு (INMPI) என்பது நீலக்கடல் குப்பைகள் மற்றும் நுண் நெகிழிகள் (MPs) போன்ற மாசுபாடுகளை அகற்றுவதற்காக இந்தியா மற்றும் நார்வே நாட்டு அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய இருதரப்பு முன்னெடுப்பாகும்.
- சவுதி அரேபியா மற்றும் குவைத் ஆகிய இரு நாடுகளும் கூட்டாக, இரு நாடுகளுக்கும் இடையிலான நடுநிலை மண்டலத்தின் ஒரு பகுதியான வடக்கு வஃப்ரா வாரா–புர்கன் தளத்தில் எண்ணெய் கண்டறிந்துள்ளதாக அறிவித்துள்ளன.
- டேட்டன் அமைதி ஒப்பந்தங்களின் 30வது ஆண்டு விழா மிகச் சமீபத்தில் கொண்டாடப் பட்டது.
- ஆறு புதிய தளங்கள் ஆனது சமீபத்தில் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் (FAO) உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண் பாரம்பரிய அமைப்புகள் (GIAHS) என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- கூகுள் நிறுவனமானது, சமீபத்தில் அதன் அனைத்து தளங்கள் மற்றும் சேவைகளிலும் அடிப்படை செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை ஒருங்கிணைக்கும் "மத்ரியோஷ்கா" AI உத்தியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அல்ஜீரியா நாடானது, BRICS நாடுகளின் புதிய மேம்பாட்டு வங்கியின் (NDB) புதியதொரு உறுப்பினர் நாடாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- கலிபோர்னியாவில் ஒரு காலத்தில் பரந்த நன்னீர் பரப்பாக இருந்த துலாரே ஏரி, கடும் பனி உருகலின் காரணமாக 130 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தோன்றியுள்ளது.
- IORA நாடுகளின் அமைச்சர்கள் குழுவின் 24வது கூட்டம் ஆனது, IORA அமைப்பின் தலைமைப் பொறுப்பில் உள்ள இலங்கையினால் காணொளி வாயிலாக நடத்தப் பட்டது.

- உலக சுகாதார அமைப்பானது ஜெனீவா நகரில் நடைபெற்ற 78வது உலக சுகாதார சபையில், பொது சுகாதாரப் பிரச்சனையாக விளங்கும் டிராக்கோமா பாதிப்பினை (கருவிழித் தொற்று) ஒழித்ததற்கான சான்றிதழ் இந்தியாவிற்கு வழங்கப் பட்டுள்ளது.
- சாகர்மாதா சம்பத் தொடக்க விழாவானது நேபாளத்தின் காத்மாண்டு நகரில் உயர்மட்ட உலகளாவிய பேச்சுவார்த்தையின் கருத்துருவான , “Climate Change, Mountains, and the Future of Humanity” என்பதுடன் நடத்தப் பட்டது.
- வணிக அளவிலான உலகின் முதல் மின்னணு மெத்தனால் உற்பத்தி ஆலையானது டென்மார்க்கில் செயல்படத் தொடங்கியது.
- அமெரிக்கா வழங்கிய புதிய ஏவு அமைப்பை தைவான் முதன்முறையாக சோதனை செய்துள்ளது மற்றும் லாக்ஹீட் மார்டின் நிறுவனத்தின் 29 துல்லியமான HIMARS எனப்படும் அதிக இயக்குத் திறன் பீரங்கித் துப்பாக்கி அமைப்புகளை வாங்கியுள்ளது.
- அமெரிக்காவும் சவுதி அரேபியாவும் வெள்ளை மாளிகையினால் வரலாற்றில் மிகப் பெரியது என்று அழைக்கப்படுகின்ற சுமார் 142 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு பெரிய ஆயுதக் கொள்முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- உள்நாட்டுப் பிரச்சினைகள் குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர மன்றத்தின் (UNPFII) 24வது அமர்வு ஆனது நியூயார்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.
- உலகின் ஒரே மைசெட்டோமா பாதிப்பு ஆராய்ச்சி மையம் ஆனது, சூடானின் இரண்டு ஆண்டு காலப் போரில் அழிக்கப்பட்டுள்ளது.
- தெற்கு காசாவின் மீது தனது கட்டுப்பாட்டை நன்கு விரிவுபடுத்துவதற்காக வேண்டி "மொராக் வழித்தடத்தின்" கட்டுப்பாட்டை இஸ்ரேல் கைப்பற்றியுள்ளது.
- கனடாவில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக லிபரல் கட்சி வெற்றி பெற்றதையடுத்து, மார்க் கார்னி அந்த நாட்டின் பிரதமராக பதவியில் தொடர உள்ளார்.
- உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) நிறுவனரான கிளாஸ் ஷ்வாப் சுமார் 55 ஆண்டுகளுக்குப் பிறகு அதன் தலைவர் மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர் ஆகிய பதவிகளில் இருந்து விலகியுள்ளார்.
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, மிகவும் சமீபத்தில் இயற்கை மறு சீரமைப்புக்காக என்று புதுமையான கண்காணிப்பு முறையினைத் துரிதப்படுத்துதல் (AIM4NatuRe) என்ற முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- வியட்நாம் போர் முடிவடைந்ததன் 50வது ஆண்டு பெரும் நிறைவைக் கொண்டாடிய வியட்நாம் நாட்டு அரசானது அதனை “நம்பிக்கையின் வெற்றி– Victory of Faith” என்று குறிப்பிட்டது.
- அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளும் போரினால் பாதிக்கப்பட்ட அந்த நாட்டின் சில இயற்கை வளங்களை அமெரிக்கா அணுக அனுமதிக்கும் வகையில் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- மும்பையில் நடைபெற்ற உலக ஒலி–ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் (WAVES) 13 அம்ச உலகளாவிய ஊடகப் பேச்சுவார்த்தைப் பிரகடனம் (WAVES பிரகடனம்) ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் தீவிரவாத எதிர்ப்பு அலுவலகம் (UNOCT) ஆனது, கொடும் தீவிரவாதத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சங்க வலையமைப்பை (VoTAN) தொடங்கி உள்ளது.

- ஆஸ்திரேலிய நாட்டின் பிரதமர் அந்தோணி அல்பானீஸ், 21 ஆண்டுகளில் தொடர்ந்து இரண்டாவது முறையாக வென்று மூன்று ஆண்டு பதவிக் காலத்தினை வகிக்கவுள்ள முதல் பிரதமர் என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங்கின் மக்கள் செயல் கட்சி (PAP) ஆனது பொதுத் தேர்தலில் 97 பாராளுமன்ற இடங்களில் 87 இடங்களைப் பிடித்து அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.
- அங்கோலா நாடானது, சர்வதேச சூரிய சக்திக் கூட்டணி (ISA) கட்டமைப்பு மீதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதுடன் ISA கூட்டணியின் 123வது உறுப்பினராக மாறியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு உலக வங்கியின் நில மாநாடானது, வாஷிங்டன் D.C. நகரில் அமைந்து உள்ள உலக வங்கி தலைமையகத்தில் நடைபெற்று வருகிறது.
- பேசல், ரோட்டர்டாம் மற்றும் ஸ்டாக்ஹோம் ஆகிய உடன்படிக்கைகளுக்கான (BRS COPs) பங்குதாரர்கள் மாநாடுகள் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றன.
- மூன்று ஆண்டு கால பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு இந்தியாவும் ஐக்கியப் பேரரசும் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் (FTA) கையெழுத்திட்டுள்ளன.
- அமெரிக்க நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் சான் பிரான்சிஸ்கோ விரிகுடாவில் ஒரு காலத்தில் ஒரு பிரபலமான சிறை அமைந்த அல்காட்ராஸ் தீவினை மீண்டும் திறந்து விரிவுபடுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளார்.
- நிகரகுவா நாடானது ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோவிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது.
- சிலி நாட்டில் உள்ள அட்டகாமா என்ற பிராந்தியத்தில் உள்ள ஃபிலோ டெல் சோல் திட்டத்திற்கான புதிய வள மதிப்பீடு ஆனது, உலகின் மிகப்பெரிய தாமிரம், தங்கம் மற்றும் வெள்ளி வளங்களில் ஒன்றை உறுதிப்படுத்தியுள்ளது.
- ஐக்கியப் பேரரசு நாட்டு அரசாங்கமானது, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அதன் கார்பன் எல்லை இணக்க முறைமையினை (CBAM) 2027 ஆம் ஆண்டு முதல் செயல் படுத்துவதற்கு முடிவு செய்துள்ளது.
- பூடான் நாடானது, Binance Pay மற்றும் DK வங்கியுடன் இணைந்து உலகின் முதல் தேசிய அளவிலான இணையச் சங்கேதப் பணம் சார் சுற்றுலா கட்டண முறையை அறிமுகப் படுத்தியது.
- நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் வனத்துறை மன்றத்தின் (UNFF20) 20வது அமர்வில், வனங்களின் வளங்காப்பு மற்றும் நிலையான வன மேலாண்மைக்கான அதன் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை இந்தியா எடுத்துரைத்து உள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியமானது, ஷூமன் பிரகடனத்தின் 75வது ஆண்டுவிழா நிறைவைக் கொண்டாடியது.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிர்வாகக் குழுவானது, பாகிஸ்தான் நாட்டிற்கு 1 பில்லியன் டாலர்கள் (சுமார் 8,500 கோடி ரூபாய்) மதிப்பிலான நிதியை "உடனடியாக வழங்குவதற்கு" அனுமதிக்க முடிவு செய்துள்ளது.
- சீன ஆராய்ச்சியாளர்கள் LICOMK++ எனப்படுகின்ற சுமார் 1 கிலோமீட்டர் சுற்றளவில் செயல்படுகின்ற மிகவும் உயர் தெளிவுத்திறன் கொண்ட பெருங்கடல் மாதிரியாக்க அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

- தெற்கு சூடான் நாடானது, 251 டாலர் என்ற மதிப்பிலான தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் உலகின் மிக ஏழ்மையான நாடாக உள்ளது.
- தாயிடமிருந்து குழந்தைக்கு HIV பரவுவதை (MTCT) ஒழிப்பதில் தங்கத் தர நிலை என்ற உலக சுகாதார அமைப்பின் நோய் ஒழிப்பு அந்தஸ்தை அடைந்த முதலாவது நாடாக போட்ஸ்வானா மாறியது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் UN80 முன்னெடுப்பினைத் தொடங்கி வைத்தார்.
- சர்வதேச அணுசக்தி முகமையுடனான (IAEA) தனது அனைத்து ஒத்துழைப்பையும் நிறுத்துவதற்கு ஈரானின் பாராளுமன்றம் வாக்களித்தது.
- சர்வதேச ஒலிம்பிக் குழுவின் (IOC) 131வது ஆண்டு விழாவில் கிர்ஸ்டி கோவென்ட்ரி அதன் முதல் பெண் மற்றும் ஆப்பிரிக்க தலைவராகப் பொறுப்பேற்றார்.
- மரணமடையும் நிலையில் உள்ளவர்கள் தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொள்ள அனுமதிக்கும் மசோதாவை ஐக்கியப் பேரரசின் மக்கள் மன்றம் நிறைவேற்றியது.
- சீனா, பாகிஸ்தான் மற்றும் வங்காள தேசம் ஆகிய நாடுகள் சீனாவின் யுன்னான் மாகாணத்தின் தலைநகரான குன்மிங்கில் முதல் முத்தரப்புக் கூட்டத்தை நடத்தின.
- எஸ்டோனியா, லிதுவேனியா, லாட்வியா மற்றும் போலந்து ஆகியவற்றிற்குப் பிறகு ஒட்டாவா கண்ணிவெடி தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறும் 5வது ஐரோப்பிய நாடாக பின்லாந்து மாறுகிறது.
- ஈரானின் ஃபட்டா-1 எறிகணை தாக்குதலுக்குப் பிறகு இஸ்ரேல் தனது புதிய வான்வழி பாதுகாப்பு அமைப்பான 'பராக் மேகன்' அல்லது 'Lightning Shield–மின்னல் கவசத்தை' முதன்முறையாக செயல்படுத்தியது.
- பிரேசில் நாடானது, பிரிக்ஸ் அமைப்பின் 10வது பங்குதார நாடாக வியட்நாம் நாடு அதிகாரப் பூர்வமாக இணைந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- உலக வங்கியானது, அதன் வறுமைக் கோட்டின் உச்ச வரம்பினை ஒரு நாளைக்கு 3 டாலராக உயர்த்தியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டினைச் சர்வதேச மகளிர் விவசாயி ஆண்டாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அறிவித்துள்ளது.
- மத்திய ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதாரச் சமூகத்திலிருந்து (ECCAS) ருவாண்டா விலகுவதாக அறிவித்துள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு பஹ்ரைன், கொலம்பியா, ஜனநாயகக் காங்கோ குடியரசு, லாத்வியா மற்றும் லைபீரியா ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிரந்தரமற்ற உறுப்பினர்களாகப் செயலாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- அமெரிக்க நாடானது இந்தியாவிற்கு HawkEye 360 என்ற தொழில்நுட்பத்தை விற்பனை செய்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- 80வது ஐக்கிய நாடுகள் சபையின் (UNGA) தலைவராக ஜெர்மனி நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் அன்னலெனா பேர்பாக் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மீன்வள மானியங்கள் தொடர்பான ஒரு ஒப்பந்தத்தினை அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொண்ட உலக வர்த்தக அமைப்பின் (WTO) 101வது உறுப்பினராக நிகரகுவா மாறி உள்ளது.

- வட மத்திய நைஜர் மாநிலத்தின் மோக்வாவில் கனமழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளம் அப்பகுதியில் பேரழிவினை ஏற்படுத்தியுள்ளது.
- சீன நாடானது சமீபத்தில் உலகின் முதல் அணுக்கரு இணைவு–பிளவு சார்ந்தக் கலப்பு அணுமின் நிலையத்தினைக் கட்டமைக்கும் திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது என்ற நிலையில் மாண்டரின் மொழியில் "தீப்பொறி" என்று பொருள்படும் வகையில் ஜிங்குவோ என்று அதற்குப் பெயரிடப் பட்டுள்ளது.
- வியட்நாம் நாடானது அதன் நீண்டகாலத்திய இரு குழந்தைகள் கொள்கையை கை விட்டுள்ளது.
- சீன அரசாங்கமும் பிற 32 நாடுகளும் ஹாங்காங்கில் ஒரு சர்வதேச நடுவண் தீர்ப்பாய அமைப்பை (IOMed) நிறுவுவதற்கான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- பருவநிலைத் தாக்கக் கட்டணத்தினை அமல்படுத்திய முதல் அமெரிக்க மாநிலமாக ஹவாய் மாறியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில், இந்தியா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் தங்கள் உத்திசார் கூட்டாண்மையின் வெள்ளி விழாவை (25 ஆண்டுகள்) கொண்டாடியுள்ளன.
- மிகவும் தாங்க முடியாத மற்றும் குணப்படுத்த முடியாத நோய்களால் பாதிக்கப்பட்ட முதியவர்கள் மருத்துவரின் உதவி மூலம் இறப்பதைத் தேர்வு செய்ய அனுமதிக்கும் ஒரு மசோதாவை பிரான்சின் தேசிய சட்டமன்றம் அங்கீகரித்தது.
- மஹ்மூத் அப்பாஸுக்கு எழுதிய கடிதத்தில் பாலஸ்தீன அரசைப் பிரான்சு அரசு அங்கீகரிப்பதை ப்பிரான்சின் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் உறுதிப்படுத்தினார்.
- பசிபிக் நாடான வனுவாட்டு, சர்வதேச நீதிமன்றத்திற்கு (ICJ) பருவநிலை மாற்ற வழக்கைக் கொண்டு வருவதில் முக்கியப் பங்கு வகித்துள்ளது.
- இலங்கையில் உள்ள ஒரு புத்தக் கோவிலின் வளாகத்தில் பண்டைய அசோகத்தூணின் பிரதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.
- ரஷ்யாவின் கம்சட்கா பிராந்தியத்தின் கிழக்குக் கடற்கரையில் 6.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது.
- ஏப்ரல் 22 ஆம் தேதியன்று ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடைபெற்ற பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்க வெளியுறவுத் துறை Resistance Front அமைப்பினை "வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பு" என்றும் சிறப்பாக நியமிக்கப்பட்ட உலகளாவிய தீவிரவாத அமைப்பு (SDGT) என்றும் நியமித்தது.
- சீனா திபெத்தில் உள்ள யார்லுங் சாங்போ நதியில் ஒரு மிகப்பெரும் அணையைக் கட்டத் தொடங்கியுள்ளது.
- உலகின் முதல் திட்டமிடப்பட்ட இடம்பெயர்வு – துவாலு பசிபிக் தீவில் வசிப்பவர்களுக்கு வழங்கும் முதல் வகையான இடம்பெயர்வு நுழைவு இசைவிற்கு 5,000க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்.
- HSBC (ஹாங்காங் மற்றும் ஷாங்காய் வங்கி நிறுவனம்) உலகின் மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றாகும் மற்றும் நிகர பூஜ்ஜிய வங்கிக் கூட்டணியின் (NZBA) நிறுவன உறுப்பினராகும்.
- உலக சுகாதார அமைப்பால் கருவிழி பாதிப்புத் தொற்று இல்லாத நாடாக செனகல் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் உலகளவில் கருவிழி பாதிப்புத் தொற்றை ஒழித்த 25வது நாடாகவும், ஆப்பிரிக்காவில் 9வது நாடாகவும் மாறியுள்ளது.
- உக்ரைன் ஆனது 125வது உறுப்பினர் நாடாகவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் குழுவில் இருந்து 20வது நாடாகவும் 2002 ஆம் ஆண்டின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஸ்தாபன ஒப்பந்தமான ரோம் சட்டத்தில் இணைகிறது.

- உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் ஐ.நா குழந்தைகள் நிதியத்தின் (UNICEF) தரவுகளின் படி, தெற்காசியா 2024 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கான அதிகபட்சத் தடுப்பூசி வழங்கீட்டினை எட்டியது.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கப்படவுள்ள இந்தியா–ஐரோப்பிய தடையற்ற வர்த்தக சங்கத்தின் (EFTA) வர்த்தக மற்றும் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தினை (TEPA) சுவிட்சர்லாந்து அங்கீகரித்துள்ளது.
- கம்போடியாவில் உள்ள மூன்று இனப் படுகொலை காலச் சித்திரவதை மற்றும் மரண தண்டனை தளங்களை யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய பட்டியலில் சேர்த்துள்ளது.
- உலகப் பாரம்பரியக் குழுவானது, மடகாஸ்கர், எகிப்து மற்றும் லிபியாவில் உள்ள மூன்று ஆப்பிரிக்கப் பாரம்பரியத் தளங்களை யுனெஸ்கோ அமைப்பின் அழிந்து வரும் தளங்களின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- பல்கேரியா நாடானது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் யூரோ மதிப்பினை ஏற்றுக் கொள்ள ஒப்புதல் அளித்துள்ளதுடன் யூரோ மதிப்பு மண்டலத்தின் 21வது உறுப்பு நாடாக இது மாற உள்ளது.
- இந்தியாவின் BHIM செயலியின் மூலம் மிக ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தினை (UPI) பயன்படுத்தி நிதிப் பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தும் முதலாவது கரீபியன் நாடுகளாக டிரினிடாட் மற்றும் டொபாகோ ஆகியவை மாறி உள்ளன.
- கொலம்பியா மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய இரு நாடுகளானது புதிய மேம்பாட்டு வங்கியில் (NDB) அதிகாரப்பூர்வமாக இணைந்துள்ளன.
- ஹவாயில் உள்ள மௌனா லோவா பருவநிலை ஆய்வகத்திற்கு நிதியளிப்பதை நிறுத்த அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.
- ஆப்கானிஸ்தானின் தாலிபான் அரசாங்கத்தினைச் சட்டப்பூர்வ அதிகார அமைப்பாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்த முதல் நாடாக ரஷ்யா மாறியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, "3 by 35" முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளது.
- அமேசான் பிராந்தியத்தில் உலக சுகாதார அமைப்பினால் (WHO) மலேரியா இல்லாத நாடாக அறிவிக்கப்பட்ட முதல் நாடாக சுரினாம் மாறியுள்ளது.
- காஷ்மீர்ரில் உள்ள பசந்த்கரில், இந்திய இராணுவம் மற்றும் ஜம்மு–காஷ்மீர் காவல் துறை ஆகியவை நன்கு இணைந்து மேற்கொண்ட பிஹாலி நடவடிக்கை என்ற ஒரு கூட்டு நடவடிக்கையில் ஒரு தீவிரவாதியைத் தாக்கியுள்ளன.
- திபெத் தன்னாட்சிப் பகுதியில் உள்ள மெடோக் கவுண்டி பகுதியில் உள்ள கிரேட் பெண்ட் எனுமிடத்தில் 60 ஜிகாவாட் திறன் கொண்ட நீர்மின் நிலையத்தினை அமைக்க சீனா அங்கீகரித்துள்ளது.
- 2010 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐ.நா. பெண்கள் அமைப்பானது 2025 ஆம் ஆண்டில் அதன் 15வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது, இது உலகளவில் பாலின சமத்துவத்தில் முன்னேற்றம் மற்றும் தொடர்ச்சியான சில சவால்களை எடுத்துக் காட்டுகிறது.
- தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் தூய்மையான எரிசக்தி மாற்றத்தில் வேரூன்றிய ஓர் உத்திசார் உயிரி எரிபொருள் கூட்டணியை இந்தியா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் முன்னெடுத்துள்ளன.

- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று, பிலிப்பைன்ஸ் அதிபர் ஃபெர்டினாண்ட் R. மார்கோஸ் ஜூனியரின் இந்தியாவிற்கான அரசு முறை பயணத்தின் போது இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் ஓர் உத்திசார் கூட்டாண்மையை மேற் கொண்டன.
- உணவுப் பாதுகாப்பிற்கான உலகளாவியப் பங்களிப்புகளை கௌரவிக்கும் வகையில் இந்தியப் பிரதமர் அறிமுகப் படுத்தியுள்ளார்.
- 1987 ஆம் ஆண்டு நடுத்தர தூர தாக்குதல் வரம்புடைய அணுசக்திப் படைகள் (INF) ஒப்பந்தத்திற்கான தனது உறுதிப்பாட்டை ரஷ்யா அதிகாரப்பூர்வமாக முடிவுக்குக் கொண்டு வந்தது.
- துருக்கி அரசானது, கனக்கலே நகருக்கு அருகே ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக டார்டனெல்லஸ் நீர்ச்சந்தியை தற்காலிகமாக மூடியது.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் இடையேயான 2025 ஆம் ஆண்டு அலாஸ்கா உச்சி மாநாட்டை இந்தியா ஆதரித்தது.
- செப்டம்பர் மாதத்தில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் ஆஸ்திரேலியா பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க உள்ளது.
- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகள் 2025 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் தேதியன்று விரிவான பொருளாதார மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தில் (CETA) கையெழுத்திட்டன.
- நேபாள நாடானது ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக விளங்கிய ரூபெல்லா பாதிப்பினை ஒழித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பினால் உறுதிப்படுத்தப் பட்டு உள்ளது.
- உத்தரகாண்டின் லிபுலேக் கணவாய் வழியாக எல்லை வர்த்தகத்தை மீண்டும் தொடங்குவதற்கு இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சமீபத்திய ஒப்பந்தம் நேபாளத்தில் ஒரு சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.
- சர்வதேச சூரிய சக்திக் கூட்டணி (ISA) ஆனது இந்த ஆண்டு இறுதிக்குள் பல்வேறு நாடுகளில் சோதனை, ஆய்வகப் பயிற்சி மற்றும் புத்தொழில் சூழல் அமைப்புகளை வழங்குகின்ற 17 சிறப்பு மையங்களை நிறுவ உள்ளது.
- இஸ்ரேலுடனான 12 நாட்கள் அளவிலானப் போருக்குப் பிறகு ஈரான் தனது முதல் இராணுவப் பயிற்சியை (Sustainable Power 1404 பயிற்சி) நடத்தியது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று காசாவில் ஏற்பட்ட முதல் பஞ்சத்தை அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட பஞ்சமாக ஐக்கிய நாடுகள் சபை (ஐ.நா) உறுதிப்படுத்தியுள்ளது.
- ஆப்பிரிக்க ஒன்றியம் (AU) சமமான புவி வரைபடம் போன்ற மாற்றுகளைக் கொண்டு மெர்கேட்டர் வரைபடத்தை மாற்றுவதற்கான 'Correct the Map' பிரச்சாரத்தை ஆதரித்து உள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இறக்குமதியில் 15.5 சதவீதப் பங்குடன் இந்தியா மற்ற விநியோக நாடுகளை முந்தி உக்ரைனின் மிகப்பெரிய டீசல் மூல நாடாக மாறியுள்ளது.
- அமலாக்க இயக்குநரகம் (ED) ஆனது சர்வதேச குற்றவியல் காவல் அமைப்பிலிருந்து (இன்டர்போல்) அதன் முதல் ஊதா அறிக்கையினைப் பெற்றுள்ளது.
- சீனாவின் அதிபர் ஜி ஜின்பிங் 2025 ஆம் ஆண்டில் தியான்ஜினில் நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு பிளஸ் (SCO பிளஸ்) உச்சிமாநாட்டில் உலகளாவிய ஆளுகை முன்னெடுப்பினை அறிமுகப்படுத்தினார்.

- தாய்லாந்தின் நாடாளுமன்றம் ஆனது வணிக அதிபர் அனுடின் சார்ன்விரகுலை நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான/ஆழப்படுத்துவதற்கான ஓர் உத்தி சார் செயல் திட்டத்தினை வெளியிட்டு இந்தியாவும் சிங்கப்பூரும் அவற்றின் அரசுமுறை உறவுகளின் 60 ஆண்டுகால நிறைவினைக் கொண்டாடுகின்றன.
- டியெல்லா (அல்பேனிய மொழியில் 'சூரியன்' என்று பொருள்) என்ற 'செயற்கை நுண்ணறிவு அமைச்சரை' நியமித்த உலகின் முதல் நாடாக அல்பேனியா மாறி உள்ளது என்பதோடு மேலும் அது ஊழலை எதிர்த்துப் போராடும் பணியில் ஈடுபட்டு உள்ளது.
- HIRE சட்டம் (சர்வதேச வேலைவாய்ப்பு இடமாற்றத்தை நிறுத்துதல் சட்டம்) 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அமெரிக்கக் குடியரசுக் கட்சி செனட்டர் பெர்னி மோரேனோவால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பிங்க்/இளஞ்சிவப்பு வரி என்பது பெண்கள் தங்களுக்காக வடிவமைக்கப்பட்டத் தயாரிப்புகள் அல்லது சேவைகளுக்கு அதிக கட்டணம் செலுத்துகின்ற பாலின அடிப்படையிலான விலை பாகுபாட்டைக் குறிக்கிறது.
- இந்தியப் பெருங்கடலில் உள்ள ஒரு முக்கிய அமெரிக்க-ஐக்கியப் பேரரசு இராணுவத் தளமான டியாகோ கார்சியா அருகே ஒரு செயற்கைக்கோள் கண்காணிப்பு நிலையத்தை நிறுவ இந்தியாவும் மொரீஷியஸும் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன.
- என்றென்றும் நிலைக்கும் வெப்பமண்டலக் காடுகளுக்கான நிதிச் செயல்முறையில் (TFFF) முதலீட்டை மேற்கொள்ள உள்ளதாக அறிவிக்கும் முதல் நாடு பிரேசில் ஆகும்.
- மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மூன்று நாடுகளான மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் ஆகியவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) இருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளன.
- 25வது ஆசியப் பிராந்திய மாநாட்டின் போது சர்வதேசக் காவல் துறையின் (இன்டர்போல்) ஆசியக் குழுவிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்திய அரசானது, BIMSTEC (பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு) அமைப்பின் உறுப்பினர் நாடுகளின் இளம் தலைவர்கள் உச்சி மாநாட்டை அசாமின் கௌஹாத்தியில் நடத்தியது.
- மைத்ரி 2.0 பன்னாட்டு தொழிற்காப்புத் திட்டத்தின் மூலம் இந்தியாவும் பிரேசிலும் வேளாண் சார் புத்தாக்கங்களில் கூட்டாண்மையை வலுப்படுத்துகின்றன.
- வெளிநாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திறமைகளை ஈர்ப்பதற்காக சீன அரசானது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் புதிய K நுழைவு இசைவுச் சீட்டினை அறிமுகப்படுத்த உள்ளது.
- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுக (UPI) வலையமைப்பில் இணைந்த எட்டாவது நாடாக கத்தார் மாறியுள்ளது.
- இறக்குமதி செய்யப்பட்ட "நிறுவனப் பெயரின் முத்திரையிடப்பட்ட மற்றும் காப்புரிமை பெற்ற மருந்துத் தயாரிப்புகளுக்கு" 100% வரி விதிக்க உள்ளதாக அமெரிக்க அதிபர் அறிவித்தார்.
- கனடாவின் மாண்ட்ரியல் நகரில் நடைபெற்ற 42வது கூட்டத்தின் போது, சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) சபையின் இரண்டாம் பிரிவிற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

- தெற்கு நாடுகள் மற்றும் மும்மைய ஒத்துழைப்பு (SSTC) ஆனது ஆண்டுதோறும் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப் படுகிறது.
- போலந்து நாடானது, 4.7 பில்லியன் யூரோ மதிப்பிலான NATO/நேட்டோ (வட அட்லாண்டிக் நாடுகளின் ஒப்பந்த அமைப்பு) நாடுகளின் குழாய் அமைப்பில் (NPS) இணைவதற்கான திட்டத்தை அறிவித்துள்ளது.
- வங்கித் துறையின் கார்பன் நீக்கத்தினை முன்னெடுப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட நிகரச் சுழிய உமிழ்விற்கான வங்கிக் கூட்டணி (NZBA) செயல்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருகிறது.
- நீண்டகால அதிகபட்ச பணவீக்கத்திற்குப் பிறகு, அதன் நிதிப் பரிவர்த்தனைகளை எளிதாக்குவதற்காக ஈரான் அரசானது அதன் ரியால் நாணயத்தில் இருந்து நான்கு பூஜ்ஜியங்களை நீக்க உள்ளது.
- நியூயார்க் நகரில் நடைபெற்ற 80வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் அமர்வில் பங்கேற்ற இந்தியா ஐ.நா. சீர்திருத்தங்களுக்கான அவசரத் தேவையை வலியுறுத்தி இந்தியா உரையாற்றியது.
- 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியானது முதல் முறையாக நிலக்கரியை விஞ்சி, உலகின் முன்னணி மின்சார உற்பத்திக்கான மூலமாக மாறியது.
- 2000 ஆம் ஆண்டில் அமெரிக்காவுடன் கையெழுத்திடப்பட்ட புளூட்டோனியம் மேலாண்மை மற்றும் இடமாற்ற ஒப்பந்தத்திலிருந்து (PMDA) விலகுவதற்கு ரஷ்யாவின் நாடாளுமன்றத்தின் கீழவை ஒப்புதல் அளித்தது.
- இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவை இணைந்து நான்கு ஆண்டுகளில் 282 கோடி ரூபாய் முதலீட்டில் இந்தியா- ஐக்கியப் பேரரசு இணைப்பு மற்றும் புத்தாக்க மையத்தினை (CIC) தொடங்கியுள்ளன.
- ஃபோமோஃப்ளேஷன் என்பது நுகர்வோர் உளவியல் மற்றும் திடீர் விலை உயர்வுக்கு வழி வகுக்கின்ற விநியோக நெருக்கடிகள் ஆகியவற்றினால் உருவாகும் தவற விடப் படும் என்ற பயத்தினால் இயக்கப்படும் பணவீக்கத்தைக் குறிக்கிறது.
- 2026–2028 ஆம் காலகட்டத்திற்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக்கான (UNHRC) அங்கத்துவத்திற்கு இந்தியா போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தியா மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகள் 2025 ஆம் ஆண்டில் அவற்றின் 70 ஆண்டு கால அரசுமுறை உறவுகளையும், 10 ஆண்டுகால உத்திசார் கூட்டாண்மையையும் கொண்டாடுகின்றன.
- 2025 ஆம் ஆண்டானது 2000 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் 1325 தீர்மானத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- கருணைக்கொலையைச் சட்டப்பூர்வமாக்குவதற்கான சட்டத்தை உருகுவே நாடானது நிறைவேற்றியதன் மூலம் அவ்வாறு செய்த முதல் கத்தோலிக்க இலத்தீன் அமெரிக்க நாடாக அது மாறியுள்ளது.
- 2025-2028 ஆம் காலக் கட்டத்திற்கான ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் உலகளாவிய புவியிடத் தகவல் மேலாண்மை (UN-GGIM-AP) பிராந்தியக் குழுவின் இணைத் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- சவுதி அரேபியா 2025 ஆம் ஆண்டில் ஒரு பெரிய தொழிலாளர் சீர்திருத்தத்தில் அதன் 50 ஆண்டுகால கஃபாலா நிதியளிப்பு/ஸ்பான்சர்ஷிப் முறையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

- ஆப்கானிஸ்தானின் காபூலில் உள்ள அதன் தொழில்நுட்ப அமைப்பினை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் முழு தூதரகமாக இந்தியா மேம்படுத்தியுள்ளது.
- ஐரோப்பிய சபையானது, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 22 ஆம் தேதியன்று ஐரோப்பிய ஒன்றியம்-இந்திய உத்தி சார் செயல்பாட்டு நிரலை அங்கீகரித்தது.
- ஆப்கானிஸ்தானின் தாலிபான் தலைமையிலான நிர்வாகம் ஆனது குனார் நதியில் அணைகள் கட்டும் திட்டங்களை அறிவித்துள்ளது.
- பாரிஸில் உள்ள யுனெஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் ஊக்கமருந்துப் பயன்பாட்டிற்கு எதிரான உடன்படிக்கையின் பங்குதாரர்கள் மாநாட்டின் (COP10) 10வது அமர்வில் இந்தியா பங்கேற்றது.
- தாய்லாந்து மற்றும் கம்போடியா தங்கள் எல்லை மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக KL அமைதி ஒப்பந்தம் என்ற கூட்டு அறிவிப்பில் கையெழுத்திட்டுள்ளன.
- கடல்சார் பாதுகாப்பு, பெருங்கடல் ஆராய்ச்சி, பேரிடர் மீட்பு மற்றும் கடல் வளங்களின் நிலையான பயன்பாடு ஆகியவற்றில் இந்தியாவிற்கும் ஆசியான் நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக 2026 ஆம் ஆண்டானது "ஆசியான்-இந்தியா கடல்சார் ஒத்துழைப்பு ஆண்டாக" அறிவிக்கப்பட்டுள்ளது.
- தைமோர்-லெஸ்டே என்றும் அழைக்கப்படும் கிழக்கு தைமோர், தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் (ASEAN-ஆசியான்) 11வது உறுப்பினராக இணைந்துள்ளது.
- இணையவெளிக் குற்றங்களுக்கு எதிரான ஐ.நா. உடன்படிக்கை, இணையவெளிக் குற்றங்களைத் தடுப்பதற்கும் அதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான உலகின் முதல் சட்டப்பூர்வ உலகளாவிய ஒப்பந்தமாகும்.
- ஜப்பானின் புத்தொழில் நிறுவனமான JPYC, யென் உடன் முழுமையாக இணைக்கப் பட்ட உலகின் முதல் ஸ்டேபிள்காயினை வெளியிட உள்ளது.
- மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்ற 12வது ASEAN/ஆசியான் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் சந்திப்பு–பிளஸ் (ADMM–பிளஸ்) நிகழ்வின் போது, பாதுகாப்புத் துறையில் உத்தி சார் ஒத்துழைப்பு மற்றும் கூட்டுறவினை வழிநடத்த இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் 10 ஆண்டு காலக் கட்டமைப்பில் கையெழுத்திட்டுள்ளன.
- எகிப்தின் கைரோவில், சுமார் 7,000 ஆண்டு காலத்திய வரலாற்றைக் கொண்ட சுமார் 100,000 கலைப் பொருட்களைக் காட்சிப்படுத்துகின்ற உலகின் மாபெரும் எகிப்திய அருங்காட்சியகம் திறக்கப் பட்டுள்ளது.
- சீன நாடானது, திரவ உப்பினை குளிர்விப்பானாகக் கொண்ட தோரியம் எரிபொருள் உலையில் (TMSR) முதன்முதலில் எரிபொருளைத் தோரியத்திலிருந்து யுரேனியமாக மாற்றுவதை வெற்றிகரமாக அடைந்தது.
- இந்தியப் பயணிகள் இனி மலேசியாவில் பணம் செலுத்துவதற்கு ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகத்தை (UPI) பயன்படுத்தலாம்.
- 2007 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதிக்குப் பிறகு பிறந்த எவருக்கும் சிகரெட் உட்பட அனைத்து விதமானப் புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வதையும் பயன்படுத்துவதையும் தடை செய்த முதல் நாடாக மாலத்தீவுகள் மாறியுள்ளது.
- தாலிபான் அரசாங்கம் ஆனது, இந்த மாதம் இந்தியாவில் தனது முதல் தூதரை நியமிக்க உள்ளது என்பதோடு இது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் காபூலைக் கட்டுப்பாட்டில் எடுத்ததிலிருந்து அதன் முதல் அதிகாரப்பூர்வ ஆப்கானியத் தூதர் நியமனத்தைக் குறிக்கிறது.

- 2025 ஆம் ஆண்டு நவம்பர் 03 ஆம் தேதியன்று மசார்-இ-ஷெரீஃப் அருகே வடக்கு ஆப்கானிஸ்தானில் 6.3 ரிக்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டது என்பதோடு இதில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 530க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.
- ஈரானின் சாபஹார் துறைமுகத்தை இயக்குவதற்காக, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதியன்று அமெரிக்கா இந்தியாவிற்கு ஆறு மாத தடை விலக்கு அளித்தது.
- 2025 ஆம் ஆண்டு தேர்தலில் முன்னாள் நியூயார்க் மாநில ஆளுநர் ஆண்ட்ரூ கியூமோ மற்றும் குடியரசுக் கட்சி வேட்பாளர் கர்டிஸ் ஸ்லிவாவை தோற்கடித்து, நியூயார்க் நகர மேயர் பதவியை வென்ற முதல் இந்திய வம்சாவளி வேட்பாளர் என்ற பெருமையினை ஜோஹ்ரான் மம்தானி பெற்றுள்ளார்.
- கஜகஸ்தான் ஆபிரகாம் ஒப்பந்தங்களில் இணைய உள்ளது, 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகள் இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டதிலிருந்து, அதில் இணையும் முதல் நாடாக இது இருக்கும்.
- மினாமிடோரிஷிமா தீவுக்கு அருகில் ஆழ்கடல் சுரங்கத்தை உருவாக்க ஜப்பானும் அமெரிக்காவும் ஒரு கூட்டாண்மையை அறிவித்துள்ளன.
- கிராமப்புற வறுமையைக் குறைப்பதற்கும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கும் இந்தியாவின் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா – தேசிய கிராமப்புற வாழ்வாதார திட்ட (DAY–NRLM) மாதிரியை ஏற்க எத்தியோப்பியா நாட்டு அரசு திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- கூகுள் நிறுவனமானது பிரேசிலியாவின் புத்தொழில் நிறுவனமான மொம்பாக் உடனான அதன் மிகப்பெரிய கார்பன் அகற்றும் ஒப்பந்தத்தை அறிவித்தது.
- சீனாவின் 3வது மற்றும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்ட முதல் விமானந் தாங்கி கப்பலான ஃபுஜியன், விரிவான கடல் சோதனைகளுக்குப் பிறகு அதிகாரப்பூர்வமாக படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்கா, கலிபோர்னியாவிலிருந்து பசிபிக் சோதனை தளம் வரையிலான 6,700 கிலோ மீட்டர் தூரத்திற்கு மினிட்மேன் III என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்து விசை எறிகணையை (ICBM) பரிசோதனை செய்துள்ளது.
- இந்தியா–அங்கோலா உறவுகளின் 40 ஆம் ஆண்டு நிறைவினைக் குறிக்கும் வகையில், எரிசக்தி, வர்த்தகம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறை ஆகியவற்றில் உறவுகளை வலுப்படுத்துவதற்காக, அங்கோலா மற்றும் போட்ஸ்வானாவிற்கான இந்தியாவின் முதல் அரசு முறை பயணத்தை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு தொடங்கி உள்ளார்.
- எகிப்தியப் பெட்ரோலியம் மற்றும் கனிம வளத் துறை அமைச்சகமானது, மேற்கு பாலைவனத்தின் பத்ர்–15 பகுதியில் ஒரு புதிய இயற்கை எரிவாயுவைக் கண்டறிந்து உள்ளதாக அறிவித்துள்ளது.
- இணைப்பு மற்றும் பிராந்திய வளர்ச்சியை அதிகரிக்க இந்தியாவின் ஆதரவுடன் கட்டமைக்கப் பட்ட ஹனிமாதூ சர்வதேச விமான நிலையத்தை மாலத்தீவு அரசு திறந்து வைத்துள்ளது.
- பாதுகாப்பு மற்றும் நீதித்துறை அமைப்புகளை மறுசீரமைத்தல் மற்றும் நிர்வாக அதிகாரத்தை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் 27வது அரசியலமைப்புத் திருத்தம், எதிர்க்கட்சிகளின் நாடு தழுவிய எதிர்ப்புகளைத் தூண்டியுள்ளது.

- நாடு முழுவதும் 5,000க்கும் மேற்பட்ட பாதிப்புகள் பதிவானதையடுத்து, கனடா 2025 ஆம் ஆண்டில் தட்டம்மை ஒழிப்பு நிலையை இழந்தது.
- அதிகாரப்பூர்வமாக பன்னாட்டு நீர்நிலைகள் மற்றும் சர்வதேச ஏரிகளின் பாதுகாப்பு மற்றும் பயன்பாடு குறித்த உடன்படிக்கை என்று அழைக்கப் படுகின்ற, ஐக்கிய நாடுகள் சபையின் (ஐ.நா.) நீர் உடன்படிக்கையில் இணைந்த தெற்காசியாவின் முதல் நாடாக வங்காளதேசம் ஆனது.
- ஒரு புதிய ஆய்வின் படி, 2050 ஆம் ஆண்டில், 204 (76%) நாடுகளில் 155 நாடுகள் கருவுறுதல் மாற்றீடு அளவை விடக் குறைவாகவே இருக்கும், மேலும் 2100 ஆம் ஆண்டில் 97 சதவீதத்திற்கும் மேற்பட்ட நாடுகள் கருவுறுதல் விகிதங்களை தேவையான சதவீதத்தை விடக் குறைவாகக் கொண்டிருக்கும்(குழந்தை பிறப்பு வீத சரிவு).
- ரிஃப்ட் வேலி காய்ச்சல் (RVF) என்பது மௌரிட்டானியா மற்றும் செனகலில் செம்மறி ஆடுகள், ஆடுகள், கால்நடைகள் மற்றும் ஒட்டகங்களை முதன்மையாக பாதிக்கும் ஒரு வைரஸ் வழி பரவும் விலங்கு வழித் தொற்று நோயாகும்.
- வடக்கு காசா பகுதிக்குள் நுழைவதற்கான முக்கிய நுழைவுப் பகுதியான ஜிகிம் கடப்புப் பகுதியானது, அப்பகுதிக்குள் மனிதாபிமான உதவிகள் வருவதை அனுமதிக்க இஸ்ரேலால் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், எட்டாவது முறையாக அதிபர் பால் பியா மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்ட பிறகு கேமரூன் அமைதியின்மையை எதிர்கொண்டது.
- அடுத்த ஆண்டு முதல் விமானப் பயணிகள் மீது உலகின் முதல் பசுமை எரிபொருள் வரியை சிங்கப்பூர் விதிக்க உள்ளது.
- முக்கிய அணைகளில் நீர் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதுடன், ஈரான் சுமார் 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மோசமான வறட்சியை எதிர்கொண்டு வருகிறது.
- வளைகுடா ஒத்துழைப்புச் சபையானது (GCC), உறுப்பினர் நாடுகளுக்கு இடையேயான இயக்கத்தை சீராக்க ஒற்றை நிலைப் பயணத் தீர்வு அமைப்பை அங்கீகரித்தது.
- ஹவாய் நிறுவனத்துடன் இணைந்து அதன் அனைத்து விமான நிலையங்களிலும் வைஃபை-7 (அருகலை) தொழில்நுட்பத்தைச் செயல்படுத்துவதில் ஓமன் விமான நிலையங்கள் உலகில் முதல் இடத்தைப் பிடித்துள்ளன.
- சீனாவின் முதல் டைப் 076 நில நீர்ப் பயன்பாட்டுத் தாக்குதல் கப்பலான சிச்சுவான், அதன் முதல் கடல் சோதனையை முடித்து ஷாங்காய் கப்பல் கட்டும் தளத்திற்குத் திரும்பியது.
- பூடானின் திம்புவில் உள்ள தாஷிச்சோட்சோங்கின் கிராண்ட் குயென்ரியில் புத்தரின் புனித நினைவுச்சின்னங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.
- இந்தியா 2026 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து அதன் வருடாந்திர LPG இறக்குமதியில் சுமார் 10 சதவீதத்தினை உள்ளடக்கிய 2.2 மில்லியன் டன் LPG வாயுவை இறக்குமதி செய்வதற்கான கட்டமைக்கப்பட்ட முதல் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டது.
- சுவீடன் ஆனது தொலைபேசிகள் மற்றும் அட்டைகள் மூலம் நேரடி பணத்திற்கு மாற்றாக டிஜிட்டல் பணம் செலுத்துவதன் மூலம் உலகின் முதல் பணமில்லா நாடாக மாறியுள்ளது.
- அமெரிக்கா கார்டெல் டி லாஸ் சோல்ஸை (கார்டெல் ஆஃப் தி சன்ஸ்) ஒரு தீவிரவாத அமைப்பாக அறிவித்தது.
- உலகில் முதன்முதலில், மனிதருக்கு H5N5 வகை பறவை காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

- 2025 ஆம் ஆண்டில் நடைபெற்ற COP30 மாநாட்டில் பேச்சு வார்த்தைகளை விரைவு படுத்த பிரேசில் கூட்டு அணிதிரட்டலின் mutirão மாதிரியைப் பயன்படுத்தியது.
- பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை மாநாட்டின் COP30 மாநாட்டில் புதைபடிவ எரிபொருள் பரவல் தடை ஒப்பந்த முன்னெடுப்பிற்கு கம்போடியா தனது ஆதரவை அறிவித்தது.
- சீனா ஒரு ஆளில்லா விமானத்தில் முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட காற்றுச் சுழல் (டர்போஜெட் எஞ்சின்) இயந்திரத்தை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- ஆஸ்திரேலியா 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான சமூக ஊடகப் பயன்பாட்டுத் தடையைத் தொடங்க உள்ளது.
- இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகியவை ஆஸ்திரேலியா–கனடா–இந்தியா தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் (ACITI) கூட்டாண்மை என்ற புதியதொரு கூட்டாண்மையை அறிவித்துள்ளன.
- சீனா ஆழ்கடல் ஆராய்ச்சிக்காக 2028 ஆம் ஆண்டிற்குள் தயாராக இருக்கத் திட்டமிடப் பட்டுள்ள ஓர் இடம் பெயருகின்ற மிதக்கும் செயற்கை தீவை உருவாக்கத் தொடங்கி உள்ளது.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சவுதி அரேபியாவை நேட்டோ அமைப்பு சாராத ஒரு முக்கிய நட்பு நாடாக நியமித்து, எதிர்காலத்தில் சவுதி அரேபியாவிற்கு F–35 போர் விமானங்களை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது (UNSC), அமெரிக்கா தயாரித்த ஒரு தீர்மானத்தின் மூலம் அதிபர் டிரம்பின் காசா அமைதித் திட்டத்தை அங்கீகரித்தது.
- ஐரோப்பாவின் E3 (பிரிட்டன், பிரான்சு, ஜெர்மனி) அமெரிக்காவின் 28 அம்ச உக்ரைன் அமைதித் திட்டத்திற்கு எதிர் முன்மொழிவை வெளியிட்டுள்ளது.
- நிதியியல் மற்றும் டிஜிட்டல் தளங்களில் அதன் பயன்பாட்டை தரப்படுத்துவதற்காக ஓமன் மத்திய வங்கி (CBO) ஓமன் ரியால் மதிப்பிற்கு (OMR) ஓர் அதிகாரப்பூர்வச் சின்னத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஸ்டார்லிங் நிறுவனத்தின் நேரடி அலைபேசி செயற்கைக் கோள் தொடர்பு சேவையை செயல்படுத்திய முதல் ஐரோப்பிய நாடு உக்ரைன் ஆகும்.
- டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கரின் மார்பளவுச் சிலையானது சமீபத்தில் பாரிஸில் உள்ள யுனெஸ்கோ தலைமையகத்தில் திறக்கப்பட்டது.
- ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) அனைத்து உறுப்பினர் நாடுகளிலும் தன் பாலினத் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று EU நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது இந்தோனேசியாவை போலியோவின் இரண்டாம் வகை வைரஸ் பாதிப்பிலிருந்து விடுபட்ட நாடாக அறிவித்துள்ளது.
- குவாங்டாங் மாகாணத்தின் கைப்பிங்கில் ஜியாங்மென் நிலத்தடி நியூட்ரினோ ஆய்வகத்தை (JUNO) சீனா கட்டி முடித்துள்ளது.
- காலின்ஸ் அகராதியானது 2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டின் சிறந்த சொல்லாக 'Vibe coding' என்ற சொல்லினைத் தேர்ந்தெடுத்துள்ளது.
- கோரமண்டல் இன்டர்நேஷனலின் ஓய்வு பெற்ற தலைவரும் முருகப்பா குழுமத்தின் முன்னாள் தலைவருமான அருணாச்சலம் வெள்ளையன் சென்னையில் காலமானார்.
- கேம்பிரிட்ஜ் அகராதியானது 2025 ஆம் ஆண்டிற்கான அதன் சிறந்த சொல்லாக "Parasocial" என்பதைத் தேர்ந்தெடுத்தது.

- 2024 ஆம் ஆண்டில் உலகளாவியப் பாதுகாப்பு செலவினங்கள் சுமார் 2.46 டிரில்லியன் டாலரை எட்டின.
- அடுத்த ஆண்டு கோடையில் இருந்து பிரான்சு 10 மாத அளவிலான தன்னார்வ இராணுவ சேவையை தொடங்க உள்ளது.
- சவுதி அரேபியாவில் உள்ள ரியாத் மெட்ரோவானது, ஆறு வழித்தடங்கள் மற்றும் 85 நிலையங்களில் 176 கிலோமீட்டர் நீளமுள்ள உலகின் மிகவும் நீளமான முழுவதுமாக ஓட்டுநர் இல்லாத மெட்ரோ வலையமைப்பாக மாறியுள்ளது.
- இந்தியாவானது 92.8 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஜாவெலின் எறிகணைகள் மற்றும் எக்ஸ்காலிபர் எறிபொருள்களை வாங்குவதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்தது.
- பாலினத்தின் காரணமாக பெண்களைக் கொல்வதை கருத்தில் கொண்டு அதிகாரப் பூர்வமாக பெண் கொலை என்ற ஒரு புதிய சட்டத்தை இத்தாலி நிறைவேற்றியுள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டு விரிவாக்கத்திற்குப் பிறகு பதினொரு உறுப்பினர் நாடுகளைக் கொண்ட BRICS அமைப்பில் சேர தாய்லாந்து தனது விருப்பத்தை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியாவுடனான பரஸ்பரத் தளவாடப் பரிமாற்ற ஆதரவு (RELOS) ஒப்பந்தத்தை ரஷ்யா அங்கீகரித்தது.
- 2030 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் சந்திரனில் ஒரு சிறிய அணு உலையை நிறுவ அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.
- சமர்கண்டில் நடைபெற்ற 43வது யுனெஸ்கோ பொது மாநாட்டின் போது 2025–2029 ஆகிய காலத்திற்கான யுனெஸ்கோ மனித மற்றும் உயிர்க்கோளக் காப்பகம் (MAB) சபையின் உறுப்பினராக ஓமன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- விக்டோரியா பல்கலைக்கழகம் (ஆஸ்திரேலியா) ஆனது 2026 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் குருகிராமில் (அரியானா) அதன் முதல் இந்திய வளாகத்தைத் திறக்க உள்ளது.
- சர்வதேசப் பெரும் பூனை இனங்கள் கூட்டணியின் (IBCA) 19வது உறுப்பினராக ரஷ்யா இணைந்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட ஓன்கோசெர்சியாசிஸ் பாதிப்பினை ஒழித்த முதல் ஆப்பிரிக்க நாடாக நைஜர் மாறியது.
- பெலாரஸிலிருந்து வரும் தொடர் பலூன் ஊடுருவல்களுக்குப் பிறகு லிதுவேனியா தேசிய அவசரநிலையை அறிவித்தது.
- யுனெஸ்கோ அமைப்பானது ரியாத், அல்உலா மற்றும் ரியாத் அல்–கப்ரா ஆகிய நகரங்களை உலகளாவியக் கற்றல் நகரங்களின் வலையமைப்பில் (GNLC) சேர்த்து உள்ளது.
- யுனெஸ்கோ அமைப்பானது 2025 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் போரீண்டோ இசைக் கருவியை அவசரப் பாதுகாப்பு தேவைப்படும் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்த்தது.
- வங்காளதேசத்தின் தங்காயில் என்ற நெசவு செய்யப் பட்ட சேலை 20வது குழு அமர்வின் போது யுனெஸ்கோவின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியப் பட்டியலில் சேர்க்கப் பட்டது.
- இஸ்ரேலின் இராணுவத் தலைவர் மஞ்சள் கோட்டை காசாவிற்குள் ஒரு "புதிய எல்லை" என்று விவரித்தார்.

- கோவா இரவு விடுதி தீ விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய சௌரப் மற்றும் கௌரவ் லுத்ராவைக் கண்டுபிடிக்க சர்வதேச காவல் துறை (இன்டர்போல்) ஒரு நீல அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- யுனெஸ்கோ 46 நாடுகளிலிருந்து 72 புதிய நகரங்களை உலகளாவிய கற்றல் நகரங்களின் வலையமைப்பில் (GNLC) சேர்த்துள்ளதுடன், இந்த வலையமைப்பில் தற்போது 91 நாடுகளில் 425 நகரங்கள் உள்ளன.
- யுனெஸ்கோ அமைப்பானது, இத்தாலியின் சமையல் மரபின் பாரம்பரியத்தை மனித குலத்தின் மகத்தான கலாச்சாரப் பாரம்பரியமாக அதிகாரப்பூர்வமாக சேர்த்துள்ளது என்பதோடு இது இந்த கௌரவத்தைப் பெறும் உலகின் முதல் தேசிய உணவு வகை ஆகும்.
- 1950 ஆம் ஆண்டில் இந்தியாவும் ஜோர்டானின் ஹாஷிமைட் பேரரசும் அரசுமுறை உறவுகளை ஏற்படுத்தின என்ற ஒரு நிலையில் 2025 ஆம் ஆண்டானது அதன் 75 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- இந்தியா மற்றும் ஓமன் ஆகியவை 2025 ஆம் ஆண்டில் அவற்றின் அரசுமுறை உறவுகள் நிறுவப்பட்டதன் 70 ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றன.
- 16 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினர் சமூக ஊடகத்தினைப் பயன்படுத்த தடை செய்த உலகின் முதல் நாடாக ஆஸ்திரேலியா மாறியுள்ளது.
- சீனாவின் தியான்ஜினில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உச்சி மாநாட்டில் தியாஞ்சின் பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- தொற்றா நோய்கள் (NCDs) மற்றும் மன ஆரோக்கியத்தை கூட்டாக உள்ளடக்கிய முதல் உலகளாவிய பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஏற்றுக் கொண்டது.
- இந்தியாவும் ஜோர்டானும் யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களான பெட்ரா மற்றும் எல்லோரா குகைகளுக்கு இடையேயான இரட்டை நகர ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- பிரேசில் நாடானது 2026 ஆம் ஆண்டிற்கான BRICS அமைப்பின் (18வது) தலைமைப் பொறுப்பை இந்தியாவிடம் முறையாக ஒப்படைத்துள்ளது.
- உயிரியல் பன்முகத் தன்மை தொடர்பான உடன்படிக்கையின் (CBD) 17வது பங்கு தாரர்கள் மாநாட்டின் அதிகாரப்பூர்வ முத்திரைச் சின்னத்தினை ஆர்மேனியா வெளியிட்டுள்ளது.
- காஷிவாசகி–கரிவா அணுமின் நிலையத்தை சுமார் 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்க ஜப்பான் ஒப்புதல் அளித்துள்ளது.
- ஓமன் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட, பலபடிச் சேர்மம் கொண்டு தயாரிக்கப் பட்ட அதன் முதல் ஒரு ரியால் பணத் தாளினை ஓமன் அறிமுகப்படுத்தியுள்ளது.
- அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அமெரிக்க கடற்படைக்கு புதிய "டிரம்ப் ரக" போர்க்கப்பல்களை உருவாக்கும் திட்டத்தை அறிவித்தார்.
- குவைத் நாடானது, அதன் பொருளாதார பன்முகப்படுத்தல் உத்தியின் ஒரு பகுதியாக பிராந்திய மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் அதன் பங்கை அதிகரிக்கும் நோக்கில் பௌபியன் தீவில் முபாரக் அல்–கபீர் துறைமுகத்தை கட்டமைப்பதற்காக சீனாவுடன் 4.1 பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ரஷ்யாவின் பெசிமியானி எரிமலை 69 ஆண்டுகளுக்கு முன்பு, 1956 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதியன்று ஏற்பட்ட ஒரு பெரிய வெடிப்பில் முழுவதும் வெடித்துச் சிதறியது.
- சோமாலிலாந்து குடியரசை ஒரு சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட நாடாக அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்த முதல் நாடு இஸ்ரேல் ஆகும்.

# பொருளாதாரச் செய்திகள்

- இந்தியாவின் காபி ஏற்றுமதியானது 2024 ஆம் நிதியாண்டின் ஏப்ரல் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் 1,146.9 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- எதிர்வரும் ஆண்டுகளில் 1 பில்லியன் டாலர் மதிப்பிலான வாழைப்பழ ஏற்றுமதியை மேற்கொள்வதை இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்திய அரசாங்கம் ஆனது, புதுப்பிக்கப்பட்ட 'பேங்க்நெட்' எனப்படும் இணைய வழி ஏல வலை தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள் கூட்டாக இணைந்து, 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தங்கள் இருப்புகளில் 53 டன் தங்கத்தைச் சேர்த்துள்ளன.
- இந்தியாவில் சிறு நிதி நிறுவனங்கள் (MFI) என்ற தொழில்துறையானது கடந்த 12 ஆண்டுகளில் சுமார் 2,176 சதவீதத்திற்கும் அதிகமான அதிகபட்ச ஒரு வளர்ச்சியைக் கண்டுள்ளது.
- அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக நிதி தொழில் நுட்பப் பிரிவில் பெறப்பட்ட நிதிகளின் அடிப்படையில் இந்தியாவானது உலகளவில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.
- 2023-24 ஆம் நிதியாண்டில் ஏற்றுமதி 1.29 பில்லியன் டாலர் மதிப்பினை எட்டியுள்ள நிலையில், உலகின் ஏழாவது பெரிய காபி உற்பத்தியாளராக இந்தியா உருவெடுத்து உள்ளது.
- தற்போது அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களின் (MSME) வகைப்பாட்டிற்கான முதலீடு மற்றும் வருவாய் வரம்புகள் முறையே 2.5 மற்றும் இரண்டு மடங்கு அதிகரிக்கப்படும்.
- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் தங்க முதலீடுகள் ஆனது 2024 ஆம் ஆண்டில் 60% அதிகரித்து, 18 பில்லியன் டாலர்களை (தோராயமாக 1.5 லட்சம் கோடி ரூபாய்) எட்டின.
- GDP - கடன் விகிதத்தை 2031 ஆம் ஆண்டிற்குள் சுமார் 50 சதவீதமாகக் குறைக்கும் மத்திய அரசின் ஒரு திட்டத்தினை மத்திய நிதிநிலை அறிக்கைக் குறிப்பிட்டுக் காட்டி உள்ளது.
- இந்தியாவின் மருந்துத் துறை ஏற்றுமதியானது 2047 ஆம் ஆண்டிற்குள் 350 பில்லியன் டாலரை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்தியப் பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தினால் பதிவு செய்யப்பட்ட வங்கி சாராத தரகுப் பேச்சுவார்த்தை சார்ந்த - கொள்முதல் பொருத்த (NDS-OM) தளத்தினை அணுகுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதிக்கும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியா தனது ஜவுளி ஏற்றுமதியை மூன்று மடங்கு அதிகரித்து 9 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது.
- ஏப்ரல்-ஜனவரி மாதக் காலக் கட்டத்தின் போது இந்தியாவின் திறன் பேசி ஏற்றுமதி ஆனது, 1.55 டிரில்லியன் ரூபாயை எட்டியது.
- இந்தியா மற்றும் கத்தார் ஆகிய இரு நாடுகள், வர்த்தகம், முதலீடு மற்றும் எரிசக்தி ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி, தங்கள் இருதரப்பு உறவுகளை ஓர் உத்தி சார் கூட்டாண்மையாக மேம்படுத்த முடிவு செய்துள்ளன.
- மத்திய அரசு ஆனது 'MSME நிறுவனங்களுக்கான பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டம்' என்ற திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.

- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் – டிசம்பர் வரையிலான காலாண்டில், நகர்ப்புறங்களில் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களிடையே சுமார் 49.9% ஆக இருந்த தொழிலாளர் வளப் பங்கேற்பு விகிதம் (LFPR) ஆனது 2024 ஆம் ஆண்டு அக்டோபர் – டிசம்பர் மாதம் வரையிலான காலாண்டில் 50.4% ஆக அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து இந்தியாவின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (LNG) இறக்குமதி ஆனது 252.28 டிரில்லியன் கன அடி அளவில் உயர்ந்தது.
- பாரத் ஸ்டேட் வங்கி (SBI) ஆனது, பெண் தொழில்முனைவோருக்காக பிரத்தியேகமாக பிணை எதுவும் சமர்ப்பிப்பு இல்லாத 'SBI அஸ்மிதா' எனப்படும் எண்ணிம SME கடனை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கடந்த ஆறு ஆண்டுகளில் (2017-18 முதல் 2023-24 வரை) நகர்ப்புறப் பகுதி இந்தியாவில் பெண்களின் வேலைவாய்ப்பு ஆனது 10% அதிகரித்துள்ளது.
- தொடர்ந்து நான்காவது ஆண்டாக புதிய வெளிநாட்டு நிறுவனங்களின் அந்நிய நேரடி முதலீட்டு (FDI) திட்டங்களுக்கான உலகின் மிக முன்னணி இடமாக துபாய் தரவரிசைப் படுத்தப் பட்டுள்ளது.
- 2010-11 ஆம் ஆண்டில் 55.6 பில்லியன் டாலராக இருந்த இந்தியாவின் பண வரவுத் தொகையானது 2023-24 ஆம் ஆண்டில் 118.7 பில்லியன் டாலர் ஆக இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்கான இந்தியாவின் மொத்த ஏற்றுமதிகளின் மதிப்பானது (சரக்கு மற்றும் சேவைகள் ஒரு சேர) 71.95 பில்லியன் அமெரிக்க டாலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் நிகர அந்நிய நேரடி முதலீடு (FDI) ஆனது, 2024-25 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல் 2024-ஜனவரி 2025) 1.4 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது என்ற நிலையில் இது ஓராண்டிற்கு முன்னதாக 11.5 பில்லியன் டாலராக இருந்தது.
- யெஸ் வங்கி ஆனது, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நிலைத்தன்மையில் மிக அதிக மதிப்பீடு பெற்ற இந்தியாவின் முன்னணி வங்கியாக உருவெடுத்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் இந்தியா 254 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்து உள்ளதுடன், உலகின் இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதியாளராக இந்தியா மாறியுள்ளது.
- 2024-25 ஆம் நிதியாண்டில், இந்திய நாட்டின் பாதுகாப்புத் துறை ஏற்றுமதி ஆனது, 23,622 கோடி ரூபாயாக (தோராயமாக 2.76 பில்லியன்) உயர்ந்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 648.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்த இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ஆனது 2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் 10.7 சதவீதம் அதிகரித்து 717.9 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில் 31,906 மெட்ரிக் டன்னாக இருந்த இந்தியாவின் கச்சாப் பட்டு உற்பத்தியானது, 2023-24 ஆம் ஆண்டில் 38,913 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.
- 2024–25 ஆம் ஆண்டில் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு (FDI) வரவு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு 96% சரிந்தது.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான உலக பொருளாதாரக் கண்ணோட்ட அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டின் இறுதியில் (2025–26 ஆம் நிதியாண்டு) இந்தியா உலகின் நான்காவது பெரிய பொருளாதாரமாக மாறும்.
- 2050 ஆம் ஆண்டிற்குள் சீனாவை முந்தி இந்தியா உலகின் முன்னணி உருளைக்கிழங்கு உற்பத்தியாளராக மாறும் பாதையில் உள்ளது.

- அமெரிக்கா ஐக்கிய அரபு அமீரகத்தினை முந்தி, இந்தியாவிற்கு அதிகளவில் கச்சா எண்ணெய் வழங்கும் உலகின் நான்காவது பெரிய நாடாக மாறியுள்ளது.
- 2024–25 ஆம் நிதியாண்டில், பெரிய துறைமுகங்களின் சரக்குக் கையாளுதலில் சுமார் 4.3% என்ற அதிகபட்ச வருடாந்திர வளர்ச்சி விகிதம் பதிவாகியுள்ளன.
- 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியானது வரலாற்றுச் சிறப்பு மிக்க வகையில் 824.9 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2025 ஆம் நிதியாண்டில் சுமார் 57.5 டன் தங்கத்தினை வாங்கியுள்ளது.
- தங்கம் ஆனது யூரோவை முந்தி உலகின் இரண்டாவது பெரிய அந்நியச் செலாவணி இருப்பு சொத்தாக மாறியுள்ளது.
- கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் காபி ஏற்றுமதி 125% அதிகரித்துள்ளது.
- சுவிஸ் வங்கிகளில் 2024 ஆம் ஆண்டில், இந்திய நிதிகள் மூன்று மடங்கு அதிகரித்து 3.5 பில்லியன் சுவிஸ் பிராங்க் (CHF) ஆக (37,600 கோடி ரூபாய்) உயர்ந்தது.
- 2024–25 ஆம் நிதியாண்டில் ஒட்டு மொத்த எண்ணிமக் கட்டணச் செயல்திறனுக்கான வெற்றியாளர்களில் ஒன்றாக சிட்டி யூனியன் வங்கி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்படும் தேயிலையின் ஏற்றுமதியானது 2024 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரையில் 9.92 சதவீதம் அதிகரித்து 254.67 மில்லியன் கிலோவாக இருந்தது.
- இந்தியாவின் சில்லறைப் பணவீக்க விகிதம் ஆனது, 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில் 75 மாதங்களில் இல்லாத அளவிற்கு 2.8% ஆகக் குறைந்தது.
- 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத் தொடக்கத்தில் இருந்து இந்தியாவின் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள், சந்தை மூலதனத்தில் சுமார் 1 டிரில்லியன் டாலர்கள் சேர்த்து 5.33 டிரில்லியன் டாலரை எட்டியுள்ளன.
- 2024–25 ஆம் ஆண்டில், இந்தியா கடந்த மூன்று ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிக அதிகமாக 81 பில்லியன் டாலர் என்ற மொத்த அந்நிய நேரடி முதலீட்டினைப் பெற்றது.
- ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) ஆனது, இந்தியா முழுவதும் உள்ள நகர்ப்புற உள் கட்டமைப்பை மாற்றுவதற்காக என்று 10 பில்லியன் டாலர் மதிப்பீட்டிலான ஐந்தாண்டு முன்னெடுப்பை வெளியிட்டுள்ளது.
- வால்மார்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான இணையவழி வணிக நிறுவனமான பிளிப்கார்ட், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வங்கி சாரா நிதி நிறுவன (NBFC) உரிமத்தைப் பெற்றுள்ளது என்பதோடு, இந்தியாவில் இதுவே இம்மாதிரியில் முதல் முறை ஆகும்.
- 2024–25 ஆம் ஆண்டில், இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்புநிலை மதிப்பு ஆனது சுமார் 8.2 சதவீதம் அதிகரித்து 76.25 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.
- மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையானது, 15.77 லட்சம் கோடி ரூபாயாக அல்லது திருத்தப்பட்ட வருடாந்திர இலக்கில் 100.5% ஆக உள்ளது.
- 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவானது சுமார் 81.04 பில்லியன் அமெரிக்க டாலர் (தற்காலிக மதிப்பீடு) மதிப்புள்ள அந்நிய நேரடி முதலீட்டைப் பெற்றுள்ளது.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், மத்திய அரசானது பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெற்ற பங்குத் தொகையை சற்றேறக்குறைய இரட்டிப்பாக்கி 74,000 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளது.

- 2003–04 மற்றும் 2013–14 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவின் சரக்குப் பொருட்களின் ஏற்றுமதியானது சுமார் ஐந்து மடங்கு உயர்ந்து, சுமார் 66.3 பில்லியன் டாலரிலிருந்து 318.6 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி–மார்ச் மாத காலாண்டில் (2025 ஆம் நிதியாண்டின் நான்காம் காலாண்டில்) இந்தியா 13.5 பில்லியன் டாலர் மதிப்பிலான நடப்புக் கணக்கு உபரியை அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.3% உபரியைப் பதிவு செய்தது.
- இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் ஆனது 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 10% உயர்ந்து 736.3 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது என்பதோடு இது ஓராண்டிற்கு முன்பு 668.8 பில்லியன் டாலராக இருந்தது.
- 2024–25 ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் உள்ள இந்தியர்கள் 135.46 பில்லியன் டாலர் பணத்தை தங்கள் குடும்பங்களுக்கு அனுப்பியுள்ளதை அடுத்து இந்தியாவின் பண வரவில் இதுவரை இல்லாத அளவிலான வரவு பதிவாகியுள்ளது என்பதோடு இது கடந்த ஆண்டை விட 14% அதிகமாகும்.
- G7 அமைப்பின் உறுப்பினர் நாடுகள் ஒரு புதிய "side–by–side" (அந்த நாட்டின் சொந்த வரி அமைப்பு மற்றும் உலகளாவிய வரி அமைப்பினையும் ஒரே நேரத்தில் பின்பற்றல்) என்ற உலகளாவிய வரி முறையை ஒப்புக் கொண்டுள்ளன.
- AU சிறு நிதி வங்கி (AU SFB) ஆனது இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து (RBI) சிறு நிதி வங்கி என்ற நிலையிலிருந்து (SFB) பொது வங்கியாக மாறுவதற்கான கொள்கை ரீதியான முதன்மை ஒப்புதலைப் பெற்றது.
- Q12024–25 ஆம் ஆண்டில் இந்தியா 437.4 பில்லியன் டாலர் மதிப்புள்ள பொருட்களை ஏற்றுமதி செய்தது.
- 2026 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மின்னணு ஏற்றுமதி ஆண்டிற்கு 47 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்தது.
- 2023–24 ஆம் ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி 778.21 பில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டியது.
- 2024 ஆம் நிதியாண்டில் 21,251 கோடி ரூபாயாக இருந்த இந்தியாவின் நிதிநிலை அறிக்கைக் கணக்கின் வரவு சாராக் கடன்கள் (OBB) 2025 ஆம் நிதியாண்டில் 29,335 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.
- 2025–26 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி 47 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.
- இந்தியாவின் வட்டி செலுத்துதல்கள் 2026 ஆம் நிதியாண்டில் 12.76 டிரில்லியன் ரூபாயாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதோடு இது ஒரு தசாப்தத்திற்கு முன்பு இருந்ததை விட கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகமாகும்.
- 2025–26 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் மருந்து ஏற்றுமதி 5.21 சதவீதம் உயர்ந்து 7.57 பில்லியன் டாலர்களாக இருந்தது.
- இந்தியாவின் கடல்சார் உணவு ஏற்றுமதி 2024–25 ஆம் நிதியாண்டில் 7.45 பில்லியன் டாலரை எட்டியது.
- இந்தியாவின் வெளிநாட்டு முதலீடுகள் 2024–25 ஆம் நிதியாண்டில் 67.74 சதவீதம் அதிகரித்து 41.6 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளதோடு, இது முந்தைய ஆண்டு 24.8 பில்லியன் டாலராக இருந்தது.

- ❖ இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியானது ஜூலை மாதத்தில் 8.7 சதவீதம் குறைந்து 18.56 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்தது, இது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பதிவானதை விட மிகக் குறைவு ஆகும்.
- ❖ 2014 ஆம் நிதியாண்டில் 38.1 சதவீதமாக இருந்த மொத்த நேரடி வரிகளில் தனிநபர் வருமான வரியின் பங்கு 2024 ஆம் நிதியாண்டில் 53.4 சதவீதமாகக் கடுமையாக உயர்ந்தது.
- ❖ அனைத்து வகையான பருத்திகளுக்கும் 11 சதவீத இறக்குமதி வரிக்கான விலக்கை இந்திய அரசு 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.
- ❖ சரக்கு மற்றும் சேவை வரி (GST) சபையானது, அதன் 56வது கூட்டத்தில், 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் 5% மற்றும் 18% விகிதங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையிலான இரண்டு அடுக்குக் கட்டமைப்பை அங்கீகரித்தது.
- ❖ ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 20.01 பில்லியன் பரிவர்த்தனைகளைச் செயல்படுத்தியது.
- ❖ 6.0 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான சிறு வணிக கடன் தொகுப்புடன் மகாராஷ்டிரா முதலிடத்தில் உள்ளது.
- ❖ இந்தியாவின் பொருளாதார உற்பத்தியில் வேளாண்மை 15 முதல் 20 சதவீதம் வரை பங்களிக்கிறது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் ஓர் ஒழுங்குமுறை மறுஆய்வுப் பிரிவை (RRC) நிறுவுகிறது, இது ஐந்து முதல் ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை அனைத்து வங்கி விதிமுறைகளையும் முறையாக மதிப்பாய்வு செய்யும்.
- ❖ இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பீமா சுகம் வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2025 ஆம் ஆண்டு மே 09 ஆம் தேதியன்று கட்டண ஒழுங்குமுறை வாரியத்தினை உருவாக்கியது.
- ❖ பன்னாட்டு வர்த்தகத்திற்காக பூடான், நேபாளம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டினருக்கு ரூபாய் மதிப்பில் கடன் வழங்க இந்திய வங்கிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி (RBI) அனுமதித்தது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 03 ஆம் தேதியன்று, நிதித் தொழில் துறை மேம்பாட்டு சபைக்கு (FIDC) சுய- ஒழுங்குமுறை அமைப்பு (SRO) அந்தஸ்தை வழங்கியது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது வைப்புத் தொகை குறியாக்கம் குறித்த ஒரு சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 08 ஆம் தேதியன்று மத்திய மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளை இந்திய ரிசர்வ் வங்கியின் 2021 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குறைதீர்ப்பாளரின் திட்டத்தின் (RB-IOS, 2021) கீழ் கொண்டு வந்தது.
- ❖ இந்தியத் தேசிய கொடுப்பனவுக் கழகம் (NPCI) ஆனது, UPI கட்டணங்களுக்கான உயிரியளவியல் மற்றும் அணியக்கூடிய வகையிலான கண்ணாடி வழியிலான அங்கீகார வசதியினை அறிமுகப் படுத்தியுள்ளது.

- இந்திய ரிசர்வ் வங்கியானது அதன் மத்திய வங்கி டிஜிட்டல் நாணயத்திற்கான சில்லறை கட்டமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மின்னணு வங்கி உத்தரவாதங்களின் (e-BGs) நிகழ்நேர டிஜிட்டல் செயல்படுத்தலைச் செயல்படுத்துவதற்கு இந்தியா ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- நிதியமைச்சர் குஜராத்தின் GIFT நகரில் ஒரு வெளிநாட்டுப் பண மதிப்பிலான தீர்வு முறையை (FCSS) தொடங்கி வைத்தார்.
- இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆனது, நிதி சார் சொத்துக்களைக் குறியாக்கம் செய்வதற்காக ஒருங்கிணைந்த சந்தைகள் இடைமுகத்தை (UMI) அறிமுகப் படுத்தி உள்ளது.
- கால்டெக் நிறுவனமானது, 6,100 கியூபிட்களுடன் உலகின் மிகப்பெரிய நடுநிலையான அணு சார் கியூபிட் தொகுப்பினை உருவாக்கி, பிழைத் திருத்தம் மற்றும் பெரிய அளவிலான குவாண்டம் கணினி இயக்கத்தினை நோக்கி முன்னேறி வருகிறது.
- அண்டார்டிகாவில் மைத்ரி II எனும் இந்தியாவின் நான்காவது ஆராய்ச்சி நிலையத்தினைக் கட்டமைக்க நிதி அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 1.54% ஆகக் குறைந்தது என்ற நிலையில் இது கடந்த 8 ஆண்டுகளில் பதிவான மிகக் குறைவான பண வீக்கமாகும்.
- இந்தியாவில், 2017–18 ஆம் ஆண்டில் 23 சதவீதமாக இருந்த பெண் தொழிலாளர் வளப் பங்கேற்பு ஆனது 2023–24 ஆம் ஆண்டில் தோராயமாக 42 சதவீதமாக உயர்ந்தது.
- புதிய NPCI- NTT கூட்டாண்மையானது இந்தியப் பயணிகளுக்கான டிஜிட்டல் கொடுப்பனவுகளை எளிதாக்குவதையும், அதிக எண்ணிக்கையிலான பண வழங்கீட்டு விருப்பத் தேர்வுகளுடன் ஜப்பானிய வணிகர்களை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவின் தங்க இருப்பு ஆனது முதன்முறையாக 100 பில்லியன் டாலர்களைத் தாண்டி, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி நிலவரப்படி 102.37 பில்லியன் டாலர்களை எட்டியுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 17 ஆம் தேதி நிலவரப்படி இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு 4.496 பில்லியன் டாலர் அதிகரித்து 702.28 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.
- நுகர்வோர் விவகாரத் துறையானது, இயங்கலை வழி விற்பனையாளர்களை இணைய வணிக தளங்களில் 'டார்க் பேட்டர்ன் ட்ரிப் ப்ரைசிங்' எனும் நெறிமுறை சாரா விளம்பரத்திற்குப் பிறகு அசல் விலையை வெளிப்படுத்துதல் குறித்து எச்சரித்துள்ளது.
- இந்தியாவின் ஒருங்கிணைந்தப் பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது தற்போது பயனர்கள் குறுகிய கால பரஸ்பர நிதி இருப்புகளைப் பயன்படுத்தி நேரடியாக பணம் செலுத்த அனுமதிக்கிறது.
- 2014 ஆம் ஆண்டில், இரங்கராஜன் குழுவானது வறுமைக் கோட்டினை (வரம்பினை) கிராமப்புறங்களுக்கு மாதத்திற்கு 972 ரூபாயாகவும், நகர்ப்புறங்களுக்கு மாதத்திற்கு 1,407 ரூபாயாகவும் நிர்ணயித்தது.
- பாரத் ஸ்டேட் வங்கி இந்திய சர்வதேச விலையுயர்ந்த உலோகங்களின் பரிமாற்ற (புல்லியன் எக்ஸ்சேஞ்ச்) (IIBX) தளத்தில் ஒரு சிறப்புப் பிரிவு வாடிக்கையாளராக (SCC) அதன் தொடக்க தங்க வர்த்தகத்தைச் செயல்படுத்தியது.
- 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய நேரடி முதலீட்டில் (FDI) அமெரிக்காவும் சிங்கப்பூரும் இணைந்து மூன்றில் ஒரு பங்கு முதலீட்டினை பங்களித்தன.

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியின் தரவுகளின்படி, 2019 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் வருடாந்திர நிதிச் சொத்துக்கள் 48% மற்றும் அதே காலகட்டத்தில், வருடாந்திர நிதிப் பொறுப்புகள் 102% அதிகரித்ததுடன், இந்தியக் குடும்பங்கள் நிதிச் சொத்துக்களை உருவாக்குவதை விட வேகமாக நிதிக் கடனை குவித்து வருகின்றன.
- ❖ மாற்று முதலீட்டு நிதிகள் (AIF) இந்தியாவின் வீட்டு மனை விற்பனைத் துறைக்கான முதன்மை மூலதன ஆதாரமாக மாறியுள்ளன.
- ❖ தேசியப் பத்திரங்கள் வைப்புத்தொகை லிமிடெட் (NSDL) நிறுவனமானது, வெளிநாட்டுத் தொகுப்பு முதலீட்டாளர்கள் (FPI) மற்றும் வெளிநாட்டுத் துணிகர மூலதன முதலீட்டாளர்கள் (FVCI) ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் வலை தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- ❖ மத்திய அரசானது, புது டெல்லியில் நடைபெற்ற ஒரு சர்வதேச மாநாட்டில் நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளுக்கு (UCB) சஹாகர் டிஜி பே மற்றும் சஹாகர் டிஜி கடன் ஆகிய செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 0.25% ஆகக் குறைந்துள்ளது என்பதோடு இது வரலாற்றில் மிகவும் குறைந்த அளவைக் குறிக்கிறது.
- ❖ இந்தியாவின் மொத்த விலைக் குறியீடு (WPI) ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் –1.21% ஆகக் குறைந்தது.
- ❖ இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (SEBI) மூத்த அதிகாரிகளுக்கான ஆதாய முரண் மற்றும் வெளிப்படுத்தல் விதிகளை கடுமையாக்குவதற்காக SEBI அமைப்பு பிரத்யுஷ் சின்ஹா குழுவை அமைத்துள்ளது.
- ❖ இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்பு 2025 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் இதுவரையில் இல்லாத அளவுக்கு 692.57 பில்லியன் டாலரை எட்டியது.
- ❖ ஐரோப்பிய ஒன்றியத்தின் TARGET உடனடி பண வழங்கீட்டுத் தீர்வு (TIPS) அமைப்புடன் UPI இணைக்கப்படும் என்று RBI அறிவித்துள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உள்நாட்டு வங்கிகள் (D–SIBs) பட்டியலில் SBI, HDFC வங்கி மற்றும் ICICI வங்கி ஆகியவற்றை இந்திய ரிசர்வ் வங்கி பட்டியலிட்டுள்ளது.
- ❖ 2026–27 ஆம் ஆண்டு இரண்டு கட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகு, இந்தியா தனது 8வது பொருளாதாரக் கணக்கெடுப்பை (EC) 2027 ஆம் ஆண்டில் நடத்த உள்ளது.
- ❖ இந்தியாவின் ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) ஆனது, பரிவர்த்தனை அளவின் அடிப்படையில் உலகின் மிகப்பெரிய சில்லறை விற்பனைக்கான விரைவான பண வழங்கீட்டு அமைப்பாக சர்வதேச நாணய நிதியத்தால் (IMF) அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) ஆனது, கடந்தகால இடர் மற்றும் வருவாய் சரிபார்ப்பு நிறுவனம் (ParRVA) என்ற புதிய நிறுவனத்தைத் தொடங்கி உள்ளது.
- ❖ இந்தியக் காப்பீட்டு நிறுவனங்களில் முழு வெளிநாட்டு உரிமையை (100% அந்நிய நேரடி முதலீடு) மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

- PSLV-C60 ஏவுகலத்தினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியதன் மூலம் இஸ்ரோ மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது.
- ஜப்பான் மற்றும் இந்தியாவில் உள்ள விண்வெளி சார் புத்தொழில் நிறுவனங்கள் விண்வெளி சுற்றுப்பாதையில் உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு சீரொளிக் கற்றைப் பொருத்தப்பட்ட செயற்கைக்கோள்களைப் பயன்படுத்துவது குறித்த கூட்டு ஆவிற்கு ஆய்விற்கு ஒப்புக் கொண்டுள்ளன.
- இஸ்ரோவின் PSLV-C60 திட்டத்தில் விண்வெளிச் சுற்றுப்பாதையில் தாவர வளர்ச்சி குறித்த ஆய்வுகளுக்கான குறு ஆராய்ச்சி மாதிரியினை (CROPS) உருவாக்கி மிகவும் ஒரு குறிப்பிடத் தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- இஸ்ரோ தனது முதல் விண்வெளி தானியங்கிக் கையின் மீதான ஒரு செயல் முறை விளக்கத்தினை விண்வெளியில் உள்ள POEM4 என்ற தளத்தில் மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, இந்திய ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை தேவைகளை மிக நன்கு பூர்த்தி செய்யக் கூடிய வகையிலான ஆசியாவின் மிகப்பெரியதொரு ஆழமற்ற அலைப் படுகை ஆராய்ச்சி மையத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ரூபாரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது அதன் அதிநவீன குறைந்த ஆற்றல் நுகர்விலான AWaDH ஊடலை நுழைவாயில் மற்றும் பிணைய அமைப்பை அறிமுகப் படுத்தியுள்ளது.
- NGC 3785 அண்டத்துடன் தொடர்புடைய, இதுவரையில் கண்டறியப்படாத மிக நீளமான நட்சத்திர மற்றும் வாயு நீட்சியின் முடிவில் ஒரு புதிய அதிக பரவல் எல்லை கொண்ட அண்டம் உருவாகுவதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மும்பையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, மிகவும் துல்லியமான காதிரைச்சல் (Tinnitus) ஒலி உணர்வினை ஈடு செய்யும் சாதனம் மற்றும் தனிப் பயனாக்கக் கூடிய தீர்வு (கைபேசி அடிப்படையிலான மென்பொருள்) ஆகியவற்றை மலிவு விலையில் உருவாக்கியுள்ளது.
- இந்திய தேசிய கடல் சார் தகவல் சேவைகள் மையம் (INCOIS) ஆனது அதன் சொந்தத் தேடல் மற்றும் மீட்பு உதவிக் கருவியின் (SARAT) புதிய வடிவத்தினை உருவாக்கி உள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது விண்வெளியில் இரண்டு செயற்கைக்கோள்களை மிகவும் வெற்றிகரமாக இணைத்துள்ளதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக இத்தகையச் சாதனையினைப் படைத்த நான்காவது நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது, விண்வெளிச் சுற்றுப்பாதையில் தாவர வளர்ச்சி குறித்த ஒரு ஆய்வுகளுக்கான அதன் குறு ஆராய்ச்சி மாதிரியினைப் பயன்படுத்தி விண்வெளியில் காராமணி (லோபியா) விதைகளை வெற்றிகரமாக முளைக்கச் செய்துள்ளது.
- திரவ உந்துவிசை அமைப்பின் ஒருங்கிணைப்பை மிக வெற்றிகரமாக நிறைவு செய்த பிறகு, ககன்யான் (G1) திட்டத்தின் முதன்முதலாவது விண்வெளி வீரர்கள் இல்லாத பயணத்திற்கான பெட்டகத்தினை இஸ்ரோ பெற்றுள்ளது.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, சமீபத்தில் இந்தியாவில் மிக முதல் முறையாக 120 வினாடிகளுக்கு மீயொலி வேகத்திலான எரிப்பு ராம்ஜெட் என்ஜினின் நிலம் சார் செயல்பாட்டுச் சோதனையை செயல் விளக்கிக் காட்டியது.
- பெங்களூருவில் உள்ள உயிரித் தொழில்நுட்பம் புத்தொழில் நிறுவனமானது, நிணநீர்க் குழியப் புற்றுநோய் (B-செல் ஹாட்ஜ்கின் எதுவும் அல்லாத லிம்போமா (B-NHL)) வகை நோயாளிகளுக்கு கார்டெமி எனப்படும் CAR-T செல் சிகிச்சையினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- பசிபிக் பெருங்கடலின் ஆழமான பகுதியில் ஒளியின்றி உருவாக்கப்பட்ட ஆக்ஸிஜன் மூலக்கூறு காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இது புவியில் ஆக்ஸிஜன் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறித்த நீண்ட காலக் கருத்துக்கள் மீது சவால் விடுக்கிறது.
- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதியன்று ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து அதன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க 100வது ஏவுதலை மேற்கொண்டது.
- சீன அறிவியல் ஆய்வாளர்கள் மிக அதிக உயரங்களில் பறக்கும் விமானங்களைக் கூட கண்டறியும் திறன் கொண்ட உலகின் முதலாவது கடல் படுகை 'ரேடாரை' உருவாக்கி உள்ளதாகக் கூறுகின்றனர்.
- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி (JWST) மற்றும் சந்திரா ஊடுகதிர் ஆய்வகம் ஒரு LID-568 வினோதமான கருந்துளையைக் கண்டுபிடித்துள்ளன.
- சமீபத்தில், டீப்சீக் நிறுவனமானது பகுத்தறிவு மாதிரிகள் எனப்படும் அதன் DeepSeek-V3 மற்றும் DeepSeek-R1 செயற்கை நுண்ணறிவு மாதிரிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பூமிக்கு மிக அருகில் காணப்படும், கயா BH3 என்ற பிரம்மாண்டமான இவ்வகையான மூன்றாவது கருந்துளையை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அறிவியல் ஆய்வாளர்கள் முதல் முறையாக செயற்கைக் கருத்தரித்தல் (IVF) மூலம் ஒரு கங்காருவின் கருக்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஆனது, இஞ்சிப் பயிர்களை கடுமையாகப் பாதிக்கின்ற பைரிகுலேரியா Spp என்ற புதியப் பூஞ்சைத் தொற்று நோயை அடையாளம் கண்டுள்ளது.
- Su-30MKI விமானத்தின் இறக்கைகளின் கீழ் பொருத்தப்பட்ட R-77 வான்வழி தாக்குதல் எறிகணைக்கு மாற்றாக R-37M எறிகணையைப் பொறுத்துவதற்கு ரஷ்யாவானது இந்தியாவிற்கு வாய்ப்பளித்துள்ளது.
- ரெய்மெய் எனப்படும் 20 குயூபிட் அளவிலான துளிமக்/குவாண்டம் கணினியானது, ஜப்பானின் ஃபுகாகு மீத்திறன் கணினியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
- கிரேவ்ஹாக் கலப்பின நிலம் விட்டு வானில் உள்ள இலக்கைத் தாக்கும் எறிகணை என்ற ஒரு புதிய ஆயுத அமைப்பை உக்ரைன் வாங்கியதாக கூறப்படுகிறது.
- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, உலகளவில் திட உந்துவிசைக்கான மிகப்பெரிய கட்டமைப்பான சுமார் 10 டன் எடையுள்ள 'செங்குத்து உந்து விசை எரிபொருள் கலப்பு இயந்திரத்தினை' வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- ஜனவரி மாதத்தில், கர்நாடகாவில் சொத்துப் பதிவுகளை நெறிப்படுத்தும் வலை தளம் அடிப்படையிலான ஒரு இணைய தளமான காவேரி 2.0, அவ்வப்போது, செயல்பாட்டு முடக்கம் சார்ந்த சேவையகக் கட்டமைப்புகளின் செயலிழப்புகளைச் சந்தித்தது.

- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, இதற்கு முன்னதாக அறிமுகப்படுத்தப்பட்டதை விட நம்பகமான மற்றும் அளவிடக் கூடிய குவிட்ஸ்களை கொண்ட மஜோரானா 1 எனப் படும் குவாண்டம் சில்லினை அறிமுகப்படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- மிகச் சமீபத்தில், ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) யூக்ளிட் விண்வெளி ஆய்வுக் கலமானது, NGC 6505 என்ற அண்டத்தில் ஒரு ஐன்ஸ்டீன் வளையம் காணப் படுவதைக் கண்டறிந்தது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனனது, சந்திர மண் மாதிரியில் இருந்து சிலிக்கான் கார்பைடைப் பிரித்தெடுப்பதில் வெற்றி அடைந்துள்ளது.
- தென்னாப்பிரிக்க நாட்டின் MeerKAT என்ற ஒரு தொலைநோக்கியானது, 'சிக்கல்' என்று பொருள்படுகின்ற 'இன்கததாசோ' என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய இராட்சத ரேடியோ அண்டத்தினைக் கண்டறிந்துள்ளது.
- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் கொல்கத்தாவின் போஸ் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் இடம் சார்/உறுப்பு சார் புற்றுநோய் சிகிச்சைக்காக ஒரு மேம்பட்ட ஊசி வழி உட்செலுத்தக் கூடிய நீர் ஏற்புப் பலபடிச் சேர்மத்தினை உருவாக்கியுள்ளனர்.
- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியன ஜாவெலின் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணைகளுக்கான புதிய கொள்முதல் மற்றும் இணைத் தயாரிப்பு ஏற்பாடுகளைத் தொடர்வதற்கான திட்டங்களை அறிவித்துள்ளன.
- இந்திய அறிவியல் ஆய்வாளர்கள், பெரோவ்ஸ்கைட் நுண்படிகங்களில் அயனி இடம் பெயர்வைக் குறைப்பதற்காக ஒரு புதுமையான முறையை உருவாக்கியுள்ளனர்.
- குளுக்ககான் போன்ற பெப்டைட்-1 உணரி இயக்கிகள் (GLP-1RAs) நீரிழிவு நோய் மற்றும் உடல் பருமனுக்கான அங்கீகரிக்கப்பட்ட புதிய மருந்துகள் ஆகும்.
- அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தைச் சேர்ந்த அறிவியல் ஆய்வாளர்கள் குழுவானது, பூமியை விட மிகப் பெரியதாகவும், சனியை விட மிகவும் சிறியதாகவும் இருக்கும் TOI-6038A b ஒரு பெரிய கிரகத்தைக் கண்டறிந்துள்ளது.
- இந்தியாவில் புற்றுநோய் ஆராய்ச்சியை முற்றிலும் மாற்றியமைப்பதற்காக வேண்டி அதன் முதல் வகையிலான புற்றுநோய் மரபணு தரவுத்தளமான பாரத் புற்றுநோய் மரபணு தரவுத்தொகுப்பினை (BCGA) சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது அறிமுகப்படுத்தியுள்ளது.
- பாரத் பயோடெக் குழுமத்தின் நிறுவனமான பயோவெட் என்ற நிறுவனம், பயோலம்பி வாக்சின் தோல் தடிப்பு நோயானது (LSD) தடுப்பூசிக்கான மத்திய மருந்து தரநிலைகள் கட்டுப்பாட்டு அமைப்பின் (CDSCO) உரிமத்தைப் பெற்றுள்ளது.
- சீனாவின் ஜுரோங் உலாவிக் கலமானது, செவ்வாய்க் கிரகத்தின் கரடுமுரடான நிலப் பரப்பில் ஒரு புதிய கடற்கரையைக் கண்டுபிடித்துள்ளது.
- இந்தியா அதன் முதல் வகையான கடற்படை கப்பல் எதிர்ப்பு எறிகணையை ஒடிசா கடற்கரையில் உள்ள சந்திப்பூரில் இருந்து ஏவி மிக வெற்றிகரமாக சோதனை செய்து உள்ளது.
- ஃபயர்ஃபிளை ஏரோஸ்பேஸ் எனும் ஓர் அமெரிக்க நிறுவனம் ஆனது, தனது விண்கலத்தினை நிலவில் வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளது.
- இந்தியாவின் ஆதித்யா-L1 ஆய்வுக் கலமானது 'கர்னெல்' எனப்படும் சூரியச் சுடரின் முதல் படத்தைப் பிடித்துள்ளது.

- ❖ மேப்பிள் சிரப் சிறுநீர் நோய் (MSUD) எனப்படும் பலவீனமாக்கும் மரபணு கோளாறுக்கு அறிவியலாளர்கள் ஒரு புதிய மரபணு சிகிச்சையை உருவாக்கியுள்ளனர்.
- ❖ ஒரு பில்லியனரான ஜெஃப் பெசோஸின் விண்வெளி சார் நிறுவனமான ப்ளூ ஆரிஜின் என்ற நிறுவனம் அதன் 10வது விண்வெளிச் சுற்றுலாத் திட்ட நோக்கிலான கலத்தினை விண்ணில் ஏவியது.
- ❖ இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, சமீபத்தில் பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரத்தின் (SE2000) செயல் திறன் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- ❖ Plastic Ice VII எனப்படுகின்ற நான்காவது வடிவப் பனிக்கட்டியை அறிவியலாளர்கள் தற்போது உறுதிப்படுத்தியுள்ளனர்.
- ❖ சீனாவின் யுனான் மாகாணத்தில் ஓர் ஆற்றல் வாய்ந்த பெரிய அளவிலான நிலை சார் தொகுப்பு ரேடார் (LPAR) கருவியினை நிலைநிறுத்தியுள்ளது.
- ❖ சூரிய வளிமண்டலத்திலிருந்து ஒரு சுடரொளியற்ற சூரிய வெப்ப உமிழ்வு (CME) பற்றிக் கண்டறிந்துள்ளதாக அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- ❖ லக்னோவில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் தேசிய தாவரவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSIR-NBRI) அறிவியலாளர்கள் உலகின் முதல் மரபணு மாற்றப்பட்ட (GM) பருத்தி வகையினை உருவாக்கியுள்ளதாகக் கூறியு உளனர்.
- ❖ ஐரோப்பிய விண்வெளி முகமையின் ஐரோப்பிய விண்வெளிச் செயல்பாட்டு மையம் ஆனது, கயா விண்கலத்தின் சார்பு நிலை அமைப்புகளின் செயல்பாடுகளை நிறுத்தி, சூரியனைச் சுற்றிய ஒரு 'செயலிழப்பு சுற்றுப்பாதையினுள்' அதனை அனுப்பியுள்ளது.
- ❖ சுமார் 2,000 kN (கிலோ நியூட்டன்) அதிக உந்துதல் கொண்ட பகுதியளவு மீக்குளிர் நிலையிலான இயந்திரம் அல்லது திரவ ஆக்ஸிஜன் / மண்ணெண்ணெய் இயந்திரம் என்பதின் வடிவமைப்பு மற்றும் உருவாக்கத்தில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.
- ❖ சிறிய செயற்கைக்கோள் உற்பத்தி நிறுவனமான HEX20 ஆனது, 'நிலா' எனப்படும் அதன் முதல் செயற்கைக்கோளினை விண்ணில் ஏவுவதற்காக வேண்டி ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்த மாநிலத்தின் முதல் புத்தொழில் நிறுவனமாக மாறி உள்ளது.
- ❖ எலான் மஸ்க்கின் மூளை சில்லு உருவாக்கப் புத்தொழில் நிறுவனமான நியூராலிங்க், 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பிளைண்ட்சைட் எனப்படும் அதன் செயற்கை காட்சி உருவாக்கக் கருவியினை முதல் முறையாக ஒரு மனிதனில் பொருத்துவதைப் பெரும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ தனியார் நிறுவனத்தின் பெரும் நிதியுதவி மூலம் மேற்கொள்ளப்பட்ட Fram2 மனித விண்வெளிப் பயணம் ஆனது, அதன் பயணத்தினை மிக வெற்றிகரமாக முடித்து அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையில் தரையிறங்கியது.
- ❖ இஸ்ரோ நிறுவனத்தினால் விண்ணில் ஏவப்பட்ட PSLV-C60 (PSLV சுற்றுப்பாதை ஆய்வுப் பெட்டகம் - POEM-4) கலத்தின் மேல் நிலை (PS4) விண்வெளிப் பெட்டகமானது மிகவும் சமீபத்தில் வளிமண்டலத்தில் மீண்டும் நுழைந்தது.
- ❖ இந்திய வேளான ஆராய்ச்சி சபையின் இந்திய நறுமணப் பொருட்கள் ஆராய்ச்சி நிறுவனம் (IISR) ஆனது மசாலா/நறுமணப் பொருட்கள் தொழில் துறைக்காக ஒரு புதிய வெளிர் நிற மஞ்சள் வகையை உருவாக்கியுள்ளது.

- ஒலெக் ஓவ்சினின், இவான் வாக்னர் மற்றும் டொனால்ட் பெட்டிட் ஆகிய நபர்களை உள்ளடக்கிய கொண்ட சோயுஸ் MS-26 விண்கலத்தின் குழுவினர் மேற்கொண்ட ஒரு விண்வெளிப் பயணம் முடிந்து அவர்கள் கஜகஸ்தானின் ஜெஸ்காஸ்கன் பகுதியில் தரையிறங்கினர்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது, BM-04 எனப்படும் நாட்டின் சமீபத்திய குறுகிய தூர தாக்குதல் வரம்புடைய உந்துவிசை எறிகணையின் மாதிரிப் படம் மற்றும் விவரங்களை வெளியிட்டுள்ளது.
- சீனாவானது சமீபத்தில் Three Gorges Antarctic Eye எனப்படுகின்ற தொலைநோக்கியை அண்டார்டிகாவில் திறந்து வைத்துள்ளது.
- அயல்நாட்டு இனங்களான கருப்பு எலிகள் ஆனது மடகாஸ்கர் நாட்டின் கிராமப்புறப் பகுதிகளில் பரவும் ஒரு கொடிய வைரஸின் ஓம்புயிரியாக உள்ளது.
- சந்திராவின் மேற்பரப்பு வெப்பஇயற்பியல் பரிசோதனை (ChaSTE) என்பது சந்திரனின் தென் துருவத்திற்கு அருகில் உள்ள சில பகுதிகளில் இடம் சார்ந்த வெப்பநிலையை அளவிடுவதற்கான முதல் கருவியாக மாறியுள்ளது.
- முதன்முறையாக தேசிய விண்வெளி ஆய்வகங்கள் (NAL) நிறுவனமானது இந்தியாவில் பயிற்சி விமானங்களைத் தயாரிப்பதற்கான தொழில்நுட்பப் பரிமாற்ற ஒப்பந்தத்தில் ஒரு தனியார் நிறுவனத்துடன் கையெழுத்திட்டுள்ளது.
- புவியில் இதற்கு முன்பு தென்படாத நியாலியா டியாங்கோங்கென்சிஸ் பாக்டீரியமானது, சீனாவின் டியாங்கோங் விண்வெளி நிலையத்தில் கண்டறியப்பட்டுள்ளது.
- "பறவை இறக்கை" நிகழ்வு என்றும் அழைக்கப்படும் ஒரு பெரிய சூரிய வெடிப்பானது சமீபத்தில் கண்டறியப்பட்டது.
- LUPEX (நிலவின் துருவ ஆய்வு) என்றும் அழைக்கப்படுகின்ற சந்திரயான்–5 ஆனது ISRO மற்றும் JAXA இடையேயான ஒரு கூட்டுத் திட்டமாகும்.
- ஸ்பெயின் நாட்டின் ஒரு தொழில்நுட்ப நிறுவனமான GMV ஆனது, நிலவிற்கான GPS போன்ற வழிகாட்டுதல் அமைப்பினை வெளியிட்டுள்ளது, LUPIN என்று பெயரிடப் பட்டுள்ள இந்த முக்கியத் திட்டமானது ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும், முழுமையாகத் தானியங்கி முறையில் செயல்படும் வகையில் தயாரிக்கப்பட்ட இந்தியாவின் 'ஆகாஷ்தீர்' எனும் வான்வழிப் பாதுகாப்பு அமைப்பானது, பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்டது.
- பாப் பாடகி கேட்டி பெர்ரி மற்றும் ஐந்து பெண்கள் ப்ளூ ஆரிஜின் ஏவுகலம் மூலமாக விண்வெளிக்குப் பயணித்து மிகவும் வெற்றிகரமாக புவிக்குத் திரும்பியுள்ளனர் என்ற நிலையில் இது கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலான காலக் கட்டத்தில் மேற்கொள்ளப் பட்ட முதல் அனைத்து மகளிர் பயணத்தைக் குறிக்கிறது.
- பெங்களூருவில் உள்ள QpiAI நிறுவனமானது, QpiAI–இண்டஸ் எனப்படும் இந்தியாவின் முதல் முழு மென்பொருள் உருவாக்கக் கட்டமைப்பு துளிமக் கணினியினை அறிமுகப்படுத்தி உள்ளது.
- அமேசான் நிறுவனத்தின் குய்பர் அகலப்பட்டை இணைய சேவைத் தொகுப்பிற்கான முதல் 27 செயற்கைக்கோள்கள் விண்வெளியில் ஏவப்பட்டுள்ளன.

- வானியலாளர்கள் K2–18b என்ற புறக்கோளில் உயிரியல் செயல்பாடுகளுடன் தொடர்பு உடைய ஒரு மிகச் சாத்தியமான உயிரியல் அடையாளங்கள் அல்லது கடந்த காலத்தில் உயிர்கள் வாழ்ந்ததற்கான அல்லது தற்போது உயிர்கள் வாழ்வதற்கான பல்வேறு அறிகுறிகளைக் கண்டறிந்துள்ளனர்.
- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) சமீபத்திய கணிப்புகள் ஆனது, உலகளாவிய அரசுகளின் கடன் ஆனது, 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 98.9 சதவீதத்தினை எட்டிய COVID–19 பெருந்தொற்றுக் காலத்தின் அளவை விட அதிகமாக இருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.
- இந்தியா ஒரு படையடுக்கு வான்கலத்தின் முதல் பறத்தல் சோதனைகளை மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டது.
- உலகின் அரிதான மிகப்பெரிய நில வாழ் பாலூட்டி இனமான கடமான்/சாவோலாவின் (சூடோரிக்ஸ் நாகெடின்ஹென்சிஸ்) மரபணுவை அறிவியலாளர்கள் வரைபடமாக்கி உள்ளனர்.
- இந்தியக் கடற்படையானது, 'அர்னாலா' என்று பெயரிடப்பட்டுள்ள, குறைவான ஆழம் கொண்ட பகுதிகளில் இயங்கும் அதன் முதல் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல்களைப் (ASW SWC) பெற்றுள்ளது.
- காஸ்மோஸ்/Kosmos 482 என்பது கோள்களின் ஆய்வுக்கு, குறிப்பாக வெள்ளிக் கோளின் ஆய்விற்காக அர்ப்பணிக்கப்பட்ட சோவியத் ஒன்றியத்தின் வெனெரா திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- சுமார் 144 காடுகளில் வளரக் கூடிய மற்றும் பயிரிடப்பட்ட அரிசி வகைகளின் மரபணு தரவுகளை உள்ளடக்கிய முதல் ஆசிய அரிசி வகைகளின் முதல் விரிவான மரபணு தரவினை (ஒட்டு மொத்த மரபணுப் பெருக்கத்தின் ஒரு விரிவான தரவுகள்) சீன நாட்டு அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- ஒரு புதிய ஆராய்ச்சியானது புவியின் முதன்மையான கண்ட மேலோடு ஹேடியன் புரோட்டோக்ரஸ்ட் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு உருவானதாகக் கூறுகிறது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆனது, ஒரு சீரொளிக் கற்றையினால் (லேசர்) இயங்கும் Mk–II(A) ஆற்றல் ஆயுத (DEW) அமைப்பை மிகவும் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.
- ஆஸ்திரியாவின் அறிவியலாளர்கள், ஒளி நுண்ணோக்கி அடிப்படையிலான நியூரான் இணைப்பு குறித்த ஆய்வுக் கருவி (LICONN) என்ற புதிய நுண்ணோக்கி முறையினை உருவாக்கியுள்ளனர்.
- புதியக் கண்டுபிடிப்புகளானது, சந்திரயான்–3 ஆய்வுப் பயணத்தின் தரையிறங்கும் தளமான சிவ சக்தி மையம்/புள்ளி ஆனது நிலவின் பழமையான மூடக மாதிரிகளை எடுப்பதற்கான ஒரு நம்பிக்கைக்குரிய தளம் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.
- டீப்மைண்ட் நிறுவனமானது, ஒரு டிஎன்ஏ எழுத்தை மாற்றுவது ஒரு மரபணு வெளிப்பாட்டை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆல்பாஜீனோம் என்ற ஒரு புதிய செயற்கை நுண்ணறிவு கருவியை உருவாக்கியுள்ளது.
- குழுத் தலைவர் சுபான்ஷு சுக்லா விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது இந்தியர் என்ற பெருமையினைப் பெற்றார்.
- கூகுள் நிறுவனமானது அதன் செயற்கை நுண்ணறிவு மாதிரியினை இந்தியாவில் அறிமுகப் படுத்தியுள்ளது என்ற நிலையில் அமெரிக்காவிற்கு வெளியே இந்த ஒரு வசதியினைப் பெறும் வேறொரு முதல் நாடு இந்தியாவாகும்.

- புனேவின் தேசிய நச்சுயிரியல் நிறுவனம் ஆனது, ஃபாவிபிராவிர் என்ற ஒரு வைரஸ் எதிர்ப்பு மருந்து ஆனது சண்டிபுரா வைரஸிலிருந்து மிக நன்குப் பாதுகாக்க உதவும் என்று கண்டறிந்து ள்ளது.
- இஸ்ரோவிலிருந்து SSLV தொழில்நுட்பப் பரிமாற்றத்திற்கான ஏலத்தினை இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனம் கைப்பற்றியது.
- 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வறட்சி குறித்த கண்ணோட்ட அறிக்கையானது சமீபத்தில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (OECD) வெளியிடப் பட்டது.
- வாயேஜர் 1 விண்கலமானது, நமது சூரிய மண்டலத்தின் விளிம்பில் "நெருப்புக் கவசம்" என்று அழைக்கப்படும் ஒரு பகுதியில் நுழைந்துள்ளது.
- பிரான்சு நாடானது முற்றிலும் புதிய இரத்தக் குழு குவாடா நெகட்டிவ் இரத்தக் குழு அமைப்பை அடையாளம் கண்டு உள்ளது.
- பெங்களூருவில் உள்ள நுண் மற்றும் மென் ரக பொருள் அறிவியல் மையத்தின் (CeNS) அறிவியலாளர்கள் அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான பசுமை ஹைட்ரஜன் சார்ந்த சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.
- BSNL நிறுவனமானது, ஐதராபாத்தில் குவாண்டம் 5G என்ற நிலையான கம்பி வடம் சாராத இணைப்பு அணுகலை (FWA) பெருமளவு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்குப் பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது.
- பெங்களூருவில் உள்ள இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் (IIA) அறிவியலாளர்கள், நட்சத்திரத்தில் மீநிலை ஹீலியம் – A980 இருப்பதை அடையாளம் கண்டுள்ளனர்.
- நாசாவின் வாயேஜர் 1 என்ற ஒரு விண்கலம் ஆனது சூரிய மண்டலத்தின் வெளிப்புற விளிம்பு பகுதியில் (ஹீலியோபாஸ்) அதிகளவில் வெப்பமடைந்த பிளாஸ்மா மீதான ஒரு பரப்பினைக் கண்டறிந்தது.
- ஒரு நோயாளியின் அடினாய்டு சிஸ்டிக் கார்சினோமா (ACC) சிகிச்சைக்கு அமெரிக்கா மிகவும் முதன்முறையாக படிநிலையிலான பாதிப்பிட ஆய்வு மற்றும் ஒரு நெகிழ்வான புரோட்டான் கற்றை உட்செலுத்து சிகிச்சை (step–and–shoot spot–scanning proton arc therapy–SPArc) என்ற நுட்பத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளது.
- முதன்முறையாக, விரைவு ரேடியோ அலை உமிழ்வு (Fast Radio Bursts–FRB) எனப்படும் ஆற்றல் வாய்ந்த சில அண்ட சமிக்ஞைகளைப் பயன்படுத்தி பேரண்டத்தின் இதுவரை தவற விட்ட சாதாரணப் பருப்பொருளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- போபாலில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனமானது (IISER) தாவரங்கள் இருளில் இருந்து ஒளியை நோக்கிய முதல் நடவடிக்கையை எடுக்க BBX32 புரதம் என்ற ஓர் ஒற்றைப் புரதம் உதவுகிறது என்பதைக் கண்டறிந்துள்ளது.
- சூரியனின் தென் துருவத்தின் முதல் ஒளிப்படக் காட்சி மற்றும் படங்கள் ஐரோப்பிய விண்வெளி நிறுவனத்தின் சூரியச் சுற்றுக்கல விண்கலத்தினால் (Solar Orbiter) புவிக்கு அனுப்பப் பட்டுள்ளன.
- எதிரிகளின் உட்புறப் பகுதி தாக்குதல்களுக்காக என வடிவமைக்கப்பட்ட செங்குத்துக் கோணங்களில் பெருமளவு மேலெழும்பும் மற்றும் தரையிறங்கும் வகையிலான (VTOL) ருத்ராஸ்திரா எனும் ஆளில்லா வான்வழி வாகனத்தின் (UAV) சோதனைகளை இந்திய இராணுவம் வெற்றிகரமாக மேற்கொண்டது.

- மங்கோலிய நாட்டின் ஒரு அருங்காட்சியகத்தின் சேகரிப்பில் இருந்து கான்குலுலு மங்கோலியென்சிஸ் – டிராகன் பிரின்ஸ் என்ற ஒரு புதிய வகை டைனோசரை அறிவியலாளர்கள் கண்டறிந்துளனர்.
- சனிக்கோளின் அளவை ஒத்த TOI–6894b என்ற வாயு நிரம்பிய இராட்சத கோளானது, வழக்கத்திற்கு மாறான ஒரு சிறிய செந்நிறக் குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருவது கண்டறியப்பட்டு உள்ளது.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) நான்கு நிறுவனங்களின் வல்லுநர்கள் இந்தியக் காட்டு எருதுகளின் (கவரிமா) முதல் குரோமோசோம் நிலையிலான அதன் மரபணுவைச் சேகரித்துள்ளனர்.
- சீனாவில் உள்ள அறிவியலாளர்கள் ஒரு புதிய உயர் அழுத்த நுட்பத்தைப் பயன்படுத்தி பிஸ்மத், காலியம், தகரம் மற்றும் ஈயம் ஆகியவற்றின் அணு அளவில் மெல்லிய இரு பரிமாண உலோகப் படலங்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர்.
- அணுக்கரு இயற்பியலாளர்கள் முதன்முறையாக அஸ்டாடினின் அரிய ஐசோடோப் என்பதின் கதிரியக்கச் சிதைவைக் கண்டறிந்துள்ளனர்.
- ஜெர்மனியில் உள்ள அறிவியல் ஆய்வாளர்கள் அணுக்கரு இணைவு வெண்டெல்ஸ்டீன் 7–X ஸ்டெல்லரேட்டர் மூலம் வரம்பற்ற அளவிலான ஆற்றலில் ஒரு முக்கிய மைல்கல்லை அடைந்துள்ளனர்.
- ஜப்பானில் உள்ள ஐஸ்பேஸ் எனப்படும் தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ரெசிலியன்ஸ் எனும் தரையிறங்குக் கலமானது நிலவின் மேற்பரப்பில் மோதி தரை இறங்கியது.
- இந்திய விமானப்படையின் குழுத் தலைவர் சுபான்ஷு சுக்லா, 40 ஆண்டுகளுக்கும் மேலாக விண்வெளிக்குச் சென்று சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) செல்லும் முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற உள்ளார்.
- நேரடி நியூட்ரினோ நிறை அளவீடுகள் என்ற துறையில் KATRIN ஒரு புதிய உலகளாவிய அளவுருவினை அமைத்துள்ளது.
- குஜராத்தில் உள்ள கட்ச் பகுதியிலிருந்து ஆறு ஜரோசைட் இழைகளை இந்தியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மாதிரியாக சேகரித்துள்ளனர்.
- ஈர்ப்பு விசை மீட்சி மற்றும் உள்ளக ஆய்வகம் (GRAIL) திட்டம் ஆனது நிலவின் ஈர்ப்புப் புலத்தை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டது.
- ஜப்பானிய அறிவியலாளர்கள் கடல்நீரில் மிகவும் விரைவாகக் கரைந்து, எந்தத் தீங்கு விளைவிக்கும் எச்சத்தையும் விட்டு வைக்காத மிகவும் ஒரு புதிய வகை நெகிழியை உருவாக்கியுள்ளனர்.
- வேலூர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் (VIT) அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் பீகார் மாநிலத்தின் நாளந்தாவில் உள்ள இராஜ்கிர் வெப்ப நீரூற்றை ஆய்வு செய்து வெப்ப நாட்ட ஆக்டினோபாக்டீரியாவைக் கண்டறிந்துள்ளனர்.
- நமது சூரிய மண்டலத்தின் விளிம்பு பகுதியில் 2017 OF201 – புதிய தொலைதூர குறுங்கோள் ஒன்று கண்டறியப் பட்டுள்ளது.
- சீனா விண்வெளியில் உலகின் முதல் மீத்திறன் கணினி வலையமைப்பை உருவாக்கி வருகிறது என்பதோடு சமீபத்தில் 12 செயற்கை நுண்ணறிவால் இயங்கும் செயற்கைக் கோள்களை இதற்காக இது விண்ணில் ஏவியது.

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் (IISc) ஆராய்ச்சியாளர்கள் ஒரு செயற்கை உலோகம் அடிப்படையிலான நானோசைமை உருவாக்கியுள்ளனர்.
- மாடர்னா என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட mNexspike என்ற புதிய கோவிட்–19 தடுப்பூசியை அமெரிக்கா அங்கீகரித்துள்ளது.
- நோவாவாக்ஸ் (நுவாக்சோவிட்) என்ற மருந்து அதன் புரத அடிப்படையிலான கோவிட்–19 தடுப்பூசிக்கான அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பின் (FDA) முழுமையான ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- காசாவில் நடைபெற்று வரும் போரின் போது எதிரி நாட்டின் ஆளில்லா வகையான விமானங்களை வீழ்த்த சீரொளிக் கற்றை (லேசர்) ஆயுதங்களைப் பயன்படுத்திய உலகின் முதல் நாடாக இஸ்ரேல் மாறியுள்ளது.
- ஜம்முவில் உள்ள ஷெர்–இ–காஷ்மீர் வேளாண் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் (SKUAST) இந்தியாவின் முதல் மரபணுத் திருத்தப்பட்ட செம்மறி ஆடுகளை உருவாக்கியுள்ளது.
- அமெரிக்காவின் பென்சில்வேனியாவைச் சேர்ந்த KJ முல்டூன் என்ற குழந்தை, உலக அளவில் மிக அரிய நோயாக கருதப்படும் CPS1 குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட 350 மில்லியன் மக்களில் ஒருவர் ஆவார், இந்தக் குழந்தையானது பெரும் தனிப்பயனாக்கப் பட்ட ஒரு CRISPR மரபணுச் சிகிச்சையை மிக வெற்றிகரமாகப் பெற்ற முதல் குழந்தை ஆவார்.
- சீன நாடானது, ஒரு குறுங்கோளிலிருந்து மாதிரிகளை எடுத்து ஆராய்ச்சிக்காக என்று புவிக்குக் கொண்டு வருவதற்கான நாட்டின் முதல் ஆய்வுப் பயணமாக தியான்வென் 2 என்ற விண்வெளி ஆய்வுக் கலத்தினை விண்ணில் ஏவியுள்ளது.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை (ICMR) ஆனது, சமீபத்தில் இந்தியாவிற்கான இந்தியாவின் முதலாவது ICMR–SCD தவறான கருத்துகளுக்கான முதல் மதிப்பீட்டு அளவினை (ISSSI) உருவாக்கியுள்ளது.
- உயர் அழுத்த கடல் நீர் உப்புநீக்கத்திற்கான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சிறிய நுண்துளை பல்லடுக்கு மீச்சேர்ம சவ்வைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- அறிவியலாளர்கள் சீரோளிக் கற்றைகள் (லேசர்கள்) மற்றும் ஊடு கதிர்களைப் பயன்படுத்தி தீவிர வெப்பம் மற்றும் அழுத்தத்தின் கீழ் உருவாகின்ற திரவ கார்பனை ஆய்வு செய்தனர்.
- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், நெகிழிக்கான மாற்றாக பம்புசா துல்டா மற்றும் மக்கும் தன்மை கொண்ட உயரி பலபடி சேர்மங்களைப் பயன்படுத்தி மூங்கில் பலபடி சேர்மக் கலவையை உருவாக்கியது.
- 28,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள GRS 1915+105 கருந்துளையானது மாறு நிலையிலான மற்றும் அசாதாரண நடத்தையை வெளிப்படுத்துகிறது.
- துருக்கியின் டேஃபன் பிளாக்–4 என்பது பாதுகாப்பு உற்பத்தி நிறுவனமான ரோகெட்சன் உருவாக்கிய அதன் முதல் அதி மீயொலி உந்துவிசை எறிகணை ஆகும்.
- நாசாவின் டேன்டெம் மறு இணைப்பு மற்றும் கஸ்ப் மறு ஆய்வு செயற்கைக்கோள்கள் (TRACERS) கலம் ஆனது, ஸ்பேஸ்எக்ஸ் பால்கன் 9 ஏவு கலத்தின் மூலம் விண்ணில் ஏவப் பட்டது.

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) ஆனது ஆந்திரப் பிரதேசத்தின் கர்னூலில் ஆளில்லா வான்வழி வாகனம் மூலம் துல்லியமாக ஏவப்படும் வழிகாட்டப்பட்ட எறிகணையின் (ULPGM)–V3 ஏவுதல் சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியது.
- இந்தியா AdFalciVax என்ற பல்நிலை மலேரியா தடுப்பூசியை உருவாக்கி வருகிறது.
- பேரியான்களில் மின்னூட்டம்–சமநிலை (CP) சமச்சீர்மை உடைவதற்கான முதல் சோதனை வழி ஆதாரமானது CERN மையத்தின் LHCb ஒத்துழைப்பால் பெறப் பட்டு உள்ளது.
- பிருத்வி–II மற்றும் அக்னி–I ஆகிய குறுகிய தூரத் தாக்குதல் வரம்புடைய உந்துவிசை எறிகணைகள் ஆனது ஒடிசாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை தளத்தில் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டன.
- நாசா மற்றும் பிற சர்வதேச சூரிய இயற்பியலாளர்கள், நியூ மெக்ஸிகோவிலிருந்து ஓர் அதி திறன் வாய்ந்த ஒருங்கிணைந்த சூரிய உமிழ்வு புல நிறமாலை வரைவி (Solar EruptioN Integral Field Spectrograph– SNIFS) சோதனை ஏவு கலத்தினை விண்ணில் ஏவ உள்ளனர்.
- பூமியிலிருந்து 154 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்துள்ள TOI–1846 b என்ற புதிய கிரகத்தை நாசா கண்டறிந்துள்ளது.
- இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) அறிவியல் ஆய்வாளர்கள் குவாண்டம் மாறுபாடுகளைக் கண்டறிந்துள்ளனர்.
- சீன அறிவியலாளர்கள் உண்மையான தேனீக்களை மிகவும் சாத்தியமான இராணுவப் பயன்பாட்டிற்காக சைபோர்க் தேனீக்களாக மாற்றுவதற்காக வேண்டி உலகின் மிக இலகுவான மூளைக் கட்டுப்படுத்தியை (74 மி.கி) உருவாக்கியுள்ளனர்.
- ஈர்ப்பு அலை கண்டுணர் கருவிகளைப் பயன்படுத்தி இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகப் பெரிய கருந்துளை இணைவினை அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.
- இஸ்ரேல் நாடானது அரசாங்க நிதியுதவியுடன் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட டிரார்–1 எனப்படுகின்ற தனது முதல் முழுமையானத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளினை விண்ணில் ஏவியது.
- HAYSTAC (Haloscope at Yale Sensitive to Axion Cold Dark Matter) சோதனை என்பது ஆக்சியான்களை கண்டறிவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முன்னணி ஆராய்ச்சி முன்னெடுப்பாகும்.
- வானியல் வல்லுநர்கள் தங்கள் முழு வான ஊடுகதிர் ஆய்வுகளின் போது 11 புதிய செயலில் உள்ள அண்ட உட்கருவங்களைக் (AGNs) கண்டறிந்துள்ளனர்.
- நாகாலாந்து பல்கலைக்கழக அறிவியலாளர்கள் மிக வேகமாக மின்னேற்றம் செய்யும் மற்றும் நீண்ட காலம் நீடிக்கும் மீநிலை மின் தேக்கியை உருவாக்கி வருகின்றனர்.
- முக்கியமான ஆக்ஸிஜன் தொடர்பான வினையூக்க எதிர்வினைகளை வேகமாகவும், மலிவு விலையிலும், திறன் மிக்க முறையிலும் மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு புதிய வினையூக்கியை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சிக் குழுவானது, கர்ப்பிணிப் பெண்களில் கர்ப்பக் கால வலிப்பு தாக்கத்திற்கு முந்தைய ஒரு முக்கியச் சோதனைக்கான உயிரி உணர்வு கருவியினை உருவாக்கி வருகிறது.
- நாசா அறிவியலாளர்கள் குழுவானது, பூமியின் கீழ் சுற்றுப்பாதையில் உள்ள ஒரு செயற்கைக்கோளில் குவாண்டம் ஈர்ப்பு முடுக்க மாற்றமானியை (QGG) மிகவும் நன்கு பயன்படுத்துவதற்கு முன்மொழிந்துள்ளது.

- இந்திய வானியற்பியல் நிறுவனத்தின் (IIA) அறிவியல் ஆய்வாளர்கள் உள்ளிட்ட, சூரிய இயற்பியலாளர்களின் சர்வதேச குழுவானது, சூரியனின் மேற்பரப்பிற்கு அருகிலான அதிக சுழற்சி வீதம் காணப்படும் பகுதியில் (NSSL) மாறுநிலை பிளாஸ்மா பாய்வுகள் காணப் படுவதை கண்டறிந்துள்ளது.
- டாரஸ் மூலக்கூறு திரள் 1 (TMC1) ஆனது பல சிறிய, மூடிய படலம் கொண்ட பலசுழல் சேர்ம நறுமணமிக்க ஹைட்ரோ கார்பன்களைக் (PAH) கொண்டுள்ளது என்பதோடு அவை வியக்கத்தக்க வகையில் தீவிர நட்சத்திர ஒளியிலும் மிக நன்கு நீடித்து காணப் படுகின்றன.
- கேரள மாநில மின்சார வாரியம் (KSEB) மற்றும் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (IIT மும்பை) ஆகியவை மாநிலம் முழுவதும் வாகனத்திலிருந்து மின் கட்டமைப்பு (V2G) வரையிலான தொழில்நுட்பத்தினை செயல்படுத்துவதை ஆராய்வதற்காக வேண்டி ஒரு சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- நாசாவின் கியூரியாசிட்டி உலாவிக் கலமானது, செவ்வாய்க் கிரகத்தில் சிடரைட் கனிம படிவுகளைக் கண்டறிந்துள்ளது.
- தென்கிழக்கு கோல்ஃபீல்ட்ஸ் லிமிடெட் (SECL) நிறுவனமானது, நிலத்தடி நிலக்கரிச் சுரங்கத்திற்காக என்று சிறப்பு பசைக் கலவை நிரப்புத் தொழில்நுட்பத்தைச் செயல் படுத்தும் முதல் நிலக்கரிப் பொதுத்துறை நிறுவனமாக மாறுகிறது.
- PSLV ஏவு கலத்தின் நான்காவது கட்டத்திற்கான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ஸ்டெலைட் (KC20WN) உலோகக் கலவையிலான உந்துவிசை பீச்சுக் குழாய் முனையினை இஸ்ரோ வெற்றிகரமாக சோதித்துள்ளது.
- பெங்களூருவில் உள்ள JNCASR நிறுவனத்தினைச் சேர்ந்த இந்திய அறிவியலாளர்கள் அதிவேகத்தில் மின்னேற்றம் செய்யப்படும் சோடியம்–அயனி மின் கலத்தினை (SIB) உருவாக்கியுள்ளனர்.
- மின்சார உற்பத்தி, பரிமாற்றம், சேமிப்பு மற்றும் தேவை மேலாண்மை ஆகியவற்றைத் திட்டமிட மாநிலங்கள் மற்றும் மின் நிறுவனங்களுக்கு உதவும் வகையில், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட கருவியான STELLAR ஐ மத்திய மின்சார ஆணையம் (CEA) அறிமுகப்படுத்தியது.
- BatEchoMon இந்தியாவின் முதல் தானியங்கி வௌவால் கண்காணிப்பு, கண்டறிதல் அமைப்பு ஆகும்.
- சென்னையில் உள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI) ஆனது, சமீபத்தில் Cu–Phen எனப்படும் சிறப்பு அம்சங்கள் கொண்ட நுண்ணிய அளவிலான துகள்களை உருவாக்கியுள்ளது.
- நச்சுத்தன்மை வாய்ந்த பெரோவ்ஸ்கைட் சூரிய மின்கலங்களை மறுசுழற்சி செய்வதற்காக அறிவியலாளர்கள் ஒரு பசுமையான நீர் சார்ந்த முறையை உருவாக்கி உள்ளனர்.
- செவ்வாய்க் கிரகத்தில் கால் பதிக்கும் முதல் மனிதர்களில் ஒருவராக வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் உள்ள 24 வயதான அமெரிக்காவின் அலிசா கார்சன் அனைத்து நாசா விண்வெளி பயிற்சி முகாம்களையும், மேம்பட்ட விண்வெளி பயிற்சித் திட்டங்களையும் நிறைவு செய்துள்ளார்.
- பருவநிலை கொள்கை முன்னெடுப்பு (CPI) என்ற ஆராய்ச்சி குழுவானது, அதன் 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பருவநிலை நிதி அறிக்கையை வெளியிட்டது.

- UNCTAD அமைப்பின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு முன்னறிவிப்புகள் 2025 அறிக்கை ஆனது, 2024 ஆம் ஆண்டில் 2.8% ஆக இருந்த உலகளாவிய வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டில் 2.3% ஆகக் குறையும் என்று கூறுகிறது.
- சூரியனின் கீழ் மட்ட மண்டலத்தில் ஒரு சிறிய மற்றும் குறுகிய கால சுழல்கல் காணப் படுவதை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- நாசாவானது அதன் அதிபரவளைய புவிக்குத் திரும்ப இயலாத ஒரு சுற்றுப்பாதையால் நன்கு உறுதிப்படுத்தப் பட்ட 3I/ATLAS எனப்படும் ஒரு புதிய விண்மீன் மண்டல வால் நட்சத்திரத்தினைக் கண்டறிந்துள்ளது.
- ஐதராபாத்தில் உள்ள அனந்த் டெக்னாலஜிஸ் நிறுவனமானது, இந்தியாவின் முதல் தனியார் செயற்கைக்கோள் அகலப்பட்டை சேவையை அறிமுகப்படுத்த உள்ளது.
- ஐரோப்பிய தெற்கு ஆய்வகம் (ESO) ஆனது ஒரு வெண்ணிறக் குறு நட்சத்திரத்தில் (SNR 0509–67.5 ) இரட்டை வெடிப்பு நிகழ்ந்ததற்கான முதல் காட்சிப் பூர்வ ஆதாரத்தைக் கண்டறிந்து உள்ளது.
- மீமின்தேக்கிகளை மேம்படுத்துவதற்காக என இந்திய அறிவியலாளர்கள் லாந்தனம் சேர்க்கப் பட்ட வெள்ளி நியோபேட் எனும் கூறினை உருவாக்கியுள்ளனர்.
- பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் (IISc) ஆனது, BHARAT என்ற பெரிய அளவிலான ஆய்வைத் தொடங்கியுள்ளது.
- ஜப்பான் நாடானது, சமீபத்தில் 50வது மற்றும் கடைசி H–2A ஏவு கலத்தினை மிகவும் வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- பெங்களூருவிலுள்ள இராமன் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRI) அறிவியலாளர்கள் தேக்கு இலை சாறு ஆனது, மிகவும் வலுவான சீரொளிக் கற்றையின் கதிர்வீச்சிலிருந்து கண்கள் மற்றும் உணர்வு அமைப்புகளைப் பாதுகாக்க முடியும் என்பதைக் கண்டு அறிந்தனர்.
- அமெரிக்கா 2025 ஆம் ஆண்டில் சுமார் 8,530 செயற்கைக் கோள்களை ஏவியதன் மூலம் உலகிலேயே முன்னணியில் உள்ளது.
- 17A திட்டத்தின் கீழ், ஐஎன்எஸ் உதயகிரி என்ற ரேடாருக்குப் புலப்படாத போர்க் கப்பலானது ஜூலை 01 ஆம் தேதியன்று இந்தியக் கடற்படையிடம் ஒப்படைக்கப் பட்டது.
- வடக்கு கியூபெக்கில் உள்ள நுவ்வாகிட்டக் கிரீன்ஸ்டோன் மண்டலம் என்று அழைக்கப் படுகின்ற ஒரு பாறைப் பகுதியானது பூமியின் பழமையான பாறைகளைக் கொண்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.
- K–6 எனப்படும் நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து ஏவப்படும் வகையிலான அணுசக்தி திறன் கொண்ட அதி மீயொலி எறிகணையினை இந்தியா உருவாக்கி வருகிறது.
- பெங்களூருவைச் சேர்ந்த புவிக் கண்காணிப்பு (EO) புத்தொழில் நிறுவனமான SatSure மற்றும் ஐதராபாத்தில் உள்ள துருவா ஸ்பேஸ் நிறுவனம் ஆகியவை இணைந்து புவிக் கண்காணிப்புச் சேவை (EOaaS) தீர்வுகளை வழங்குவதற்காக கூட்டு சேர்ந்துள்ளன.
- TWA 7 எனப்படும் புதிதாக உருவான ஒரு இளம் நட்சத்திரத்தினைச் சுற்றி வரும் TWA 7b என்ற புதிய புறக்கோளினை நாசா கண்டறிந்துள்ளது.
- அமெரிக்காவின் பென் ஸ்டேட் ரிசர்ச் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் சிலிக்கான் இல்லாமல், இரு பரிமாண (2D) பொருட்களால் முழுமையாக தயாரிக்கப்பட்ட முதல் கணினியை உருவாக்கியுள்ளனர்.

- குழுத் தலைவர் சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) அறிவியல் பரிசோதனையை மேற்கொண்ட முதல் இந்தியர் என்ற பெருமையினைப் பெற்று உள்ளார்.
- இஸ்ரோ நிறுவனமானது இது வரை கட்டமைக்கப்பட்ட மிகவும் விலையுயர்ந்த குடிமை சேவைகள் பயன்பாடு சார்ந்த புவி கண்காணிப்பு செயற்கைக்கோளான நாசா–இஸ்ரோ சிந்தெடிக் அப்பெர்சர் ரேடார் செயற்கைக்கோளை (NASA–ISRO Synthetic Aperture Radar Satellite–NISAR) விண்ணில் ஏவியது.
- துருக்கியின் காசாப் என்பது மிக நிலையான MK–ரக குண்டுகளை விட மூன்று மடங்கு வலிமையானது மற்றும் ஒரு சதுர மீட்டருக்கு 10.16 துண்டுகளைச் சிதறடிக்கும் 970 கிலோ (2,000 பவுண்டு) எடையுள்ள குண்டு ஆகும்.
- நாசா–இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) சிந்தடிக் அப்பெர்சர் ரேடார் (NISAR) செயற்கைக்கோள் பணிக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் செலவாகும்.
- லடாக்கின் சோ கர் பள்ளத்தாக்கில் கிரக ஆய்விற்கான இமயமலை நிலையம் (HOPE) திட்டத்தினை இஸ்ரோ தொடங்கியது.
- விண்வெளி வீரர் குழுவுடனான உரையாடல்களை மேற்கொள்ளும் நடமாடும் எந்திரம் (சிமோன்) என்பது சர்வதேச விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்களுக்கு ஆதரவளிப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நுண்ணறிவு எந்திரம் (ரோபோ) ஆகும்.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியானது, நிலையான 24 மணிநேரத்தை விட 1.34 மில்லி விநாடிகள் குறைவாக இருந்தது.
- உலக சுகாதார அமைப்பானது, அதிகாரப்பூர்வமாக ஹெபடைடிஸ் டி வைரஸ் (HDV) புற்றுநோயை உண்டாக்கக் கூடியதாக வகைப்படுத்தியுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது, கென்யாவைப் பொது சுகாதாரப் பிரச்சினையாக விளங்கிய மனித ஆப்பிரிக்க டிரிபனோசோமியாசிஸ் பாதிப்பு இல்லாத நாடாக சான்றளித்துள்ளது.
- Metop இரண்டாம் தலைமுறை நுட்பத்திலான A1 (Metop–SGA1) Metop–SGA1 செயற்கைக்கோள் ஆனது ஐரோப்பாவின் கௌரௌ எனுமிடத்தில் உள்ள விண்வெளி நிலையத்திலிருந்து Ariane–62 ஏவு கலம் மூலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது.
- கோல்டன் டோம் (GD) என்பது எதிரி நாட்டின் கண்டம் விட்டு கண்டம் பாயும் எறிகணைகளுக்கு (ICBMs) எதிராக நாட்டினைப் பாதுகாக்க வடிவமைக்கப்படும் ஒரு அமெரிக்க எறிகணை பாதுகாப்பு அமைப்பாகும்.
- வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே (NFR) நிர்வாகமானது அதன் இரயில்களில் மக்கும் வகையிலான உயிரி நெகிழிப் பைகளைப் பயன்படுத்தும் இந்தியாவின் முதல் இரயில்வே மண்டலமாக மாறியது.
- ஹவாய் அருகே இதுவரை அறியப்பட்டவற்றிலேயே மிக நீளமான வால் கொண்ட PelV–1 ஒரு பெரிய வைரஸை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தியாவின் முதல் வணிக ரீதியான புவிக் கண்காணிப்பு (EO) செயற்கைக்கோள் திரளை உருவாக்குவதற்காக PixxelSpace india நிறுவனம் தலைமையிலான ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் மெச்சுகாவில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் இஸ்ரோ மற்றும் முஸ்கான் அறக்கட்டளை ஆகியவை இணைந்து ஒரு விண்வெளி ஆய்வகத்தைத் தொடங்கியுள்ளன.

- ரூர்கேயின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மருந்து எதிர்ப்புத் திறன் கொண்ட பாக்டீரியாவை எதிர்த்துப் போராடுவதற்காக 3b எனும் மூலக் கூறினைக் கண்டுபிடித்துள்ளனர்.
- அறிவியலாளர்கள் எஸ்கெரிச்சியா கோலே பாக்டீரியாவை மின் சமிக்ஞைகளை உருவாக்கும் சுய ஆற்றலில் இயங்கும் வேதியியல் உணரிகளாக செயல்படச் செய்யும் வகையில் மரபணு ரீதியாக மாற்றியமைத்துள்ளனர்.
- ரஷ்ய நாடானது, நோவயா ஜெம்லியாவில் அணுசக்தியால் இயங்கும் 9M730 பியூரெவெஸ்ட்னிக் எனும் சீர்வேக எறிகணையை பரிசோதிக்க தயாராகி வருகிறது.
- அமெரிக்காவின் ஸ்டான்போர்டு அறிவியலாளர்கள், பயனர்கள் முன்னமைக்கப்பட்ட கடவுக் குறியீட்டினைப் பற்றி நினைக்கும் போது மட்டுமே செயல்படுத்தப்படுகின்ற ஒரு மூளை–கணினி இடைமுகத்தினை (BCI) உருவாக்கியுள்ளனர்.
- ட்விட்டரின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி பராக் அகர்வால் பேரலல் வெப் சிஸ்டம்ஸ் என்ற புதிய செயற்கை நுண்ணறிவு புத்தொழிலை தொடங்கியுள்ளார்.
- இந்தியா தனது ஐந்தாம் தலைமுறை நுட்பத்திலான மேம்பட்ட நடுத்தர தூரத் தாக்குதல் வரம்புடைய போர் விமானத்திற்கான (AMCA) இயந்திரங்களை இணைந்து உருவாக்கி உற்பத்தி செய்ய சாஃப்ரான் எனும் பிரெஞ்சு நிறுவனத்துடன் இணைந்து செயல்பட உள்ளது.
- F–47 என்பது அமெரிக்க விமானப்படைக்கான அடுத்தத் தலைமுறை நுட்பத்திலான மேம்பட்ட போர் விமானமாகும்.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) ஆனது இதுவரை இல்லாத அளவிற்கு கனமான ஏவு வாகனமான நிலவிற்கான ஆய்வுப் பெட்டக ஏவு வாகனத்தை (LMLV) உருவாக்கி வருகிறது.
- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது, S/2025 U1 என்ற பெயரிடப் பட்ட யுரேனஸ் கிரகத்தின் 29வது துணைக் கோளைக் கண்டறிந்துள்ளது.
- எதிரி நாட்டு ரேடார் மற்றும் எறிகணைகளை குழப்புவதற்காக, இந்திய விமானப் படையானது, சிந்தூர் நடவடிக்கையின் போது ரஃபேல் போர் விமானங்களில் செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்பட்ட X–Guard ஒளியிழை மூலம் இணைக்கப் பட்ட ரேடார் ஏய்ப்பு அமைப்பினைப் பயன்படுத்தியது.
- ஸ்ரீஹரிகோட்டில் முதல் ஒருங்கிணைந்த வான்வழி தரையிறக்கச் சோதனையை (IADT–01) இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டது.
- அறிவியலாளர்கள் UPM J1040−3551 AabBab எனப்படும் அரிய நான்கு நட்சத்திர அமைப்பைக் கண்டறிந்துள்ளனர்.
- அமெரிக்காவில் மனிதர்களில் முதன்முதலில் நியூ வேர்ல்ட் திருகுப்புழு பாதிப்பு இருப்பது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 04 ஆம் தேதியன்று உறுதி செய்யப்பட்டது.
- தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் உள்ள புதிய ஏவு வாகன ஏவுதளம் ஆனது, ஒவ்வோர் ஆண்டும் 20 முதல் 25 செயற்கைக்கோள் ஏவுதலைக் கையாளும்.
- அறிவியலளார்கள் படிநிலை பகுத்தறிவு மாதிரி (HRM) எனப்படும் புதிய செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்கியுள்ளனர்.
- இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையானது (ICMR), அதிர்ச்சியினால் ஏற்பட்ட மூளைக் காயத்திற்காக (TBI) CEREBO எனப்படும் ஒரு சிறிய, ஊடுருவல் சாராத கண்டறியும் கருவியை அறிமுகப்படுத்தியது.

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பினால் (ISRO) முழுமையாக உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட விக்ரம் 3201 என்ற அதன் முதல் 32-பிட் நுண்செயலாக்கச் சில்லினை / கருவியை இந்தியா அறிமுகம் செய்தது.
- ஜோத்பூரில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் தொலைநோக்கு, மொழி மற்றும் கற்றல் குழு (VL2G) 13 இந்திய மொழிகளுக்கான செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரிகளை உருவாக்கி வருகிறது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது, அத்தியாவசிய மருந்துகளின் 24வது மாதிரிப் பட்டியலையும் (EML) குழந்தைகளுக்கான 10வது பட்டியலையும் (EMLc) வெளியிட்டது.
- சுகாதாரப் பராமரிப்பில் செயற்கை நுண்ணறிவின் (AI) பாதுகாப்பான மற்றும் பயனுள்ள பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக இந்தியா HealthAI உலகளாவிய ஒழுங்கு முறை வலையமைப்பில் (GRN) இணைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 07 ஆம் தேதியன்று இந்தியா முழுவதும் இரத்த/செந்நிற நிலவு என்றும் அழைக்கப்படும் முழு சந்திர கிரகணம் தென்பட்டது.
- நிதி ஆயோக் அமைப்பின் மேம்பட்டத் தொழில்நுட்ப மையம், இரு பரிமாண (2D) பொருட்கள் குறித்த அதன் Future Front Quarterly Insights என்ற அறிக்கைத் தொடரின் நான்காவது பதிப்பை வெளியிட்டது.
- NIPER கௌஹாத்தி மற்றும் NDTL இடையேயான ஒத்துழைப்பு மூலம், மெத்தாண்டினோன் நீண்ட கால மெட்டாபோலைட் (LTM) என்ற அரிய குறிப்புப் பொருளை இந்தியா உருவாக்கியுள்ளது.
- ஏழு ஆண்டுகால ஆராய்ச்சிக்குப் பிறகு இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் நீரில் கரையக் கூடிய உர தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- இந்திய இராணுவம், சிந்தூர் நடவடிக்கையின் போது, உள்நாட்டிலேயே உருவாக்கப் பட்ட SAMBHAV (Secure Army Mobile Bharat Version) எனும் பாதுகாப்பான கைபேசி சூழல் அமைப்பைப் பயன்படுத்தியது.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (ISRO) ஆனது 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி விண்வெளி ஆய்வில் ஒன்பது முக்கிய உலக சாதனைகளைப் படைத்துள்ளது.
- கேரளாவின் ஜவஹர்லால் நேரு வெப்பமண்டல தாவரவியல் பூங்கா மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (JNTBGRI) அறிவியலாளர்கள், சிவப்பு முறிவொட்டி செடியைப் பயன்படுத்தி ஒரு காயச் சுற்றுத் துணியை உருவாக்கினர்.
- டா வின்சி தானியக்க/ரோபோடிக் அறுவை சிகிச்சை அமைப்பில் பயிற்சி அளிக்கும் இந்தியாவின் முதல் அரசு மருத்துவக் கல்லூரியாக புது டெல்லியின் அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (எய்ம்ஸ்) மாறியது.
- நாசாவின் சூரிய இயக்கவியல் ஆய்வக அமைப்பானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதியன்று சூரியனில் 5,00,000 கிலோமீட்டர் அகலமுள்ள வண்ணத்துப்பூச்சி வடிவ கரோனா துளையைப் புகைப்படம் எடுத்தது.
- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டில் 13 மாநிலங்களில் 3.8 கோடி விவசாயிகளுக்கு பருவமழை முன்னறிவிப்புகளை அனுப்ப செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தியது.
- உலக சுகாதார அமைப்பு, GLP-1 உணரி இயக்கிகளை இரண்டாம் வகை நீரிழிவு நோய்க்கான அத்தியாவசிய மருந்துகளின் 24வது மாதிரிப் பட்டியலில் (EML) சேர்த்து உள்ளது.

- செண்டியன்ட் AI நிறுவனமானது, ஒரு பொதுப் பயன்பாட்டுச் செயற்கைப் பொது நுண்ணறிவு (AGI) தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பணியாளர்கள் இல்லாத அதன் முதல் ககன்யான் ஆய்வுத் திட்டத்தில் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் பகுதியளவு மனித உருவிலான வியாமித்ரா எனும் இயந்திர மனிதனை விண்ணில் ஏவ உள்ளது.
- அக்னிகுல் காஸ்மோஸ் நிறுவனம், சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சிப் பூங்காவில் விண்வெளிக்கான இந்தியாவின் முதல் தனியார் பெரிய வடிவிலான முப்பரிமாண அச்சிடும் மையத்தினைத் தொடங்கி உள்ளது.
- ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஆர்க் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் முழுமையாக செயற்கை நுண்ணறிவினால் வடிவமைக்கப்பட்ட செயல்பாட்டு வடிவிலான உலகின் முதல் வைரஸ் மரபணுக் கூறினை உருவாக்கினர்.
- பூமிக்கு அருகில் சுற்றி வரும் 2025 PN7 என்ற புதிய நிலவினை ஒத்த வானியல் அமைப்பின் கண்டுபிடிப்பை வானியலாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் உத்தி சார் படைகள் கட்டுப்பாட்டுப் பிரிவு (SFC) அக்னி-பிரைம் ஏறிகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்தன.
- பாலைவன 'மண்ணாக்குதல்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அஜ்மீரின் பன்சேலி கிராமத்தில் உள்ள பாலைவன நிலத்தில் முதல் முறையாக கோதுமை வெற்றிகரமாக வளர்க்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 1,200க்கும் மேற்பட்ட நிலநடுக்கங்களின் திரள், சாண்டோரினி தீவுக்கும் அதன் அருகமைந்த கிரேக்கத்தில் அமைந்துள்ள கொலம்போ நிலத்தடி எரிமலைக்கும் இடையில் பகிரப்பட்ட பாறைக் குழம்பு மூலத்தினை நன்கு வெளிப்படுத்தி உள்ளது.
- தொற்றுமிக்க மாட்டின ரைனோட்ராச்சீடிஸ் (IBR) தொற்றுக்கு எதிரான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் கிளைகோபுரோட்டீன் E (gE) நீக்கப்பட்ட DIVA மார்க்கர் தடுப்பூசி சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அனைத்து வானிலை மற்றும் பகல் நேர நிலைகளிலும் பூமியின் மேற்பரப்பு மாற்றங்களைக் கண்காணிக்க, நாசா மற்றும் இஸ்ரோவின் கூட்டு NISAR (NASA-ISRO செயற்கை துளை ரேடார்) செயற்கைக்கோள் இந்தியாவின் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து ஏவப்பட்டது.
- எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) ஆனது, எல்லைக் கண்காணிப்புக்காக இஸ்ரோவுடன் இணைந்து ரேடார் பொருத்தப்பட்ட ஆளில்லா விமானங்களை உருவாக்கி வருகிறது.
- லெக்கனேமாப் என்பது ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு மருந்து ஆகும், இது மூளையில் உள்ள அமிலாய்டு புரதங்களை குறிவைத்து ஆரம்ப கட்ட நரம்பியல் சிதைவு/அல்சைமர் நோய் பாதிப்பினை மிதப்படுத்துகிறது.
- நாசாவின் விண்மீன் மண்டல ஆய்வு மற்றும் முடுக்கக் கலமானது (IMAP) ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் 9 ஏவு வாகனம் மூலம் விண்ணில் ஏவப்பட்டது.
- நெற்பழப் பாதிப்பு (ஹால்டி ரோக்) என்பது நெற்பயிர்களின் பூக்கும் காலத்தின் போது பயிர்களைப் பாதிக்கின்ற உஸ்டிலாஜினாய்டியா வைரன்களால் நெற்பயிர்களில் ஏற்படும் ஒரு பூஞ்சை நோயாகும்.

- இந்தியாவின் புதிய அறிவியல் சார் நிதி நிறுவனமான அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளை (ANRF) ஆனது SARAL என்ற கருவியை உருவாக்கியுள்ளது.
- காசினி விண்கலம் ஆனது சனிக் கோளின் துணைக்கோளான என்செலடஸிலிருந்து வெளியேற்றப்பட்ட புதிய பனித் துகள்களில் புதிய சிக்கலான கரிம மூலக்கூறுகளைக் கண்டறிந்தது.
- இந்தியா த்வானி என்ற அதி மீயொலி இழைவியக்க வாகனத்தினை (HGV) உருவாக்கி வருகிறது என்பதோடு இது மேக் 5 வேகத்திற்கு மேல் (மணிக்கு 7,400 கிலோமீட்டருக்கு மேல்) இயங்கும் திறன் கொண்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது (DRDO), ஒருங்கிணைந்த பாதுகாப்புப் பணியாளர்கள் (IDS) மற்றும் முப்படையினருடன் இணைந்து இந்திய வானொலி மென்பொருள் கட்டமைப்பு (IRSA) 1.0 பதிப்பினை வெளியிட்டுள்ளது.
- நிகழ்நேர ஆளில்லா வான்வழி வாகன அச்சுறுத்தல்களை நடுநிலைப் படுத்தச் செய்வதற்காக இந்திய இராணுவமானது, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட சாக்சம் ஆளில்லா வான்வழி வாகன அமைப்பின் (CUAS) கட்டமைப்பினை உட்சேர்த்துள்ளது.
- சீன நாடானது, கோபி பாலைவனத்தில் உலகின் முதல் இரட்டை-கோபுர சூரிய-வெப்ப மின் உற்பத்தி நிலையத்தை தொடங்கியுள்ளது.
- தாயிடமிருந்து குழந்தைக்கு ஹெபடைடிஸ் B தொற்று பரவுவதை (EMTCT) நீக்கியதற்காக மாலத்தீவினை உலக சுகாதார அமைப்பு அங்கீகரித்துள்ளது.
- இந்தியாவின் மிகப்பெரிய செயற்கை நுண்ணறிவு (AI) தரவு மையம் ஆனது ஆந்திரப் பிரதேசத்தில் கட்டப்பட உள்ளது.
- அஸ்த்ரா மார்க் 2 என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உருவாக்கப்பட்டு வரும் காட்சிப்புல வரம்பிற்கு அப்பாற்பட்ட வானிலிருந்த படியே வானில் உள்ள இலக்கினைத் தாக்கி அழிக்கும் (BVR) எறிகணை ஆகும்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் இராணுவப் போர் பயன்பாட்டுப் பாராசூட் /வான்குடை மிதவை அமைப்பு (MCPS) ஆனது இந்திய விமானப் படையால் 32,000 அடி உயரத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.
- வளிமண்டல நுழைவுக் கட்டத்தில் விண்கல ஏவுதலின் போதான அவசர காலத்தின் போது விண்வெளி வீரர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக ககன்யான் கலம் விண்வெளி வீரர்கள் தப்பிக்கும் அமைப்பை (CES) பயன்படுத்த உள்ளது.
- சனி மற்றும் யுரேனஸுக்கு இடையில் அமைந்துள்ள சிரோன் எனப்படும் ஒரு பனிக் கட்டி நிறைந்த சென்டாரைச் சுற்றி விரிந்து வரும் ஒரு வளைய அமைப்பை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சீசியம்-137 மாசுபாட்டை குணப்படுத்துவதற்காக இந்தியா இந்தோனேசியாவிற்கு பிரஷ்யன் ப்ளூ மருந்துகளைப் பரிசளித்தது.
- சந்திரயான்-2 கலத்தில் உள்ள கருவி, நிலவின் மீது சூரிய வெப்ப உமிழ்வின் தாக்கத்தை முதன்முதலில் நேரடியாகக் கண்காணிக்கிறது.
- LCA (இலகுரக போர் விமானம்) தேஜாஸ் Mk1A ஆனது, அதன் முதல் பறத்தல் பயிற்சியினை HAL நிறுவனத்தின் (இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட்) நாசிக் மையத்தில் மேற்கொண்டது.
- ஆராய்ச்சியாளர்கள், நீரிழிவு நோய் சார்ந்த காயங்களுக்கு ஒரு சாத்தியமான சிகிச்சையாக சினாபிக் அமிலத்தை அடையாளம் கண்டுள்ளனர்.

- சீன அறிவியலாளர்கள் சங்-இ-6 கலத்தினால் புவிக்குக் கொண்டு வரப்பட்ட சந்திர மண்ணில் அரிய விண்கல் அடையாளங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.
- ஃபிஜி நாடு ஒரு பொது சுகாதாரப் பிரச்சினையாக இருந்த கருவிழித் தொற்றுப் பாதிப்பினை ஒழித்ததற்காக உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரத்தினைப் பெற்று உள்ளது.
- கூகுள் குவாண்டம் AI நிறுவனத்தின் வில்லோ சில்லு, முதன்முதலில் சரிபார்க்கக் கூடிய குவாண்டம் பலனை அடைந்துள்ளது.
- அறிவியலாளர்கள் GJ 251c என பெயரிடப்பட்ட புவியை விட பெரிய அளவிலான புறக் கோள் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.
- மேம்பட்ட குறைக்கடத்தி வடிவமைப்புத் துறையில் நுழைவதைக் குறிக்கும் வகையில், இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 7-நானோமீட்டர் மையச் செயலகத்தினை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- ரஷ்யா தனது அணுசக்தியால் இயங்கும் புரேவெஸ்ட்னிக் (9M730) சீர்வேக எறிகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது.
- கடலடி ரேடாருக்குப் புலப்படாத வகையிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ஒரு வெளிப்படையான, ஜெல்லிமீன் வடிவ உயிரியளமைப்பினை ஒத்தத் தானியங்கிகள் / பயோனிக் ரோபோவை சீனா உருவாக்கியுள்ளது.
- இந்தியக் கடற்படையின் நீர்நிலையியல் ஆய்வுக் கப்பலான ஐஎன்எஸ் சட்லெஜ், மொரீஷியஸ் நீர்நிலையியல் ஆய்வுப் படையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் 35,000 சதுர கடல் மைல் ஆய்வை நிறைவு செய்தது.
- பெங்களூருவில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் அறிவியலாளர்கள், எருமையின் விந்தணுக்களை அதி உறைபத நிலையில் பதனம் (கிரையோபிசர்வ்) செய்வதற்காக CRYODIL எனப்படும் பயன்படுத்த தயாராக உள்ள முட்டையின் கரு இல்லாத கரைசலை உருவாக்கியுள்ளனர்.
- இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) மற்றும் ரஷ்யாவின் யுனைடெட் ஏர் கிராஃப்ட் கார்ப்பரேஷன் (UAC) ஆகியவை SJ–100 பொதுப் பயன்பாட்டுப் பயணிகள் விமானத்தைத் தயாரிப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- எலோன் மஸ்க்கின் செயற்கை நுண்ணறிவு நிறுவனமான xAI, க்ரோகிபீடியா எனப்படும் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் இயங்கலை வழி தகவல் தரவுத் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஹாங்காங்கில் உள்ள ஸ்டெல்லரஸ் டெக்னாலஜி எனும் புத்தொழில் நிறுவனமானது முப்பரிமாண காற்று வேகத் தரவுகளுக்கான உலகின் முதல் செயற்கைக்கோள் வலை அமைப்பான ஃபீலியன் செயற்கைக்கோள் தொகுப்பை நிலைநிறுத்த உள்ளது.
- ஒரு புதிய குரங்கம்மை மாற்றுருவான Clade Ib, ஐரோப்பாவில் பரவி வருகிறது.
- பிரேசிலில் உள்ள அறிவியலாளர்கள் மனாஸ் அருகே அமேசான் காடுகளின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் கார்பன் டை ஆக்சைடு செறிவூட்டல் (AmazonFACE– Free–Air Carbon Dioxide Enrichment) பரிசோதனையைத் தொடங்கினர்.
- மதராஸின் இந்திய தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் செங்குத்தாகப் புறப்படும் விமானங்கள் மற்றும் ஆளில்லா வான்வழி வாகனங்கள் (UAVs) ஆகியவற்றிற்கான மித வேகத்திலான தரையிறங்கும் தொழில்நுட்பத்தில் ஒரு திருப்புமுனையை எட்டியுள்ளனர்.

- டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு பகுதியான தேசிய உயிரியல் அறிவியல் மையம் மற்றும் சர்வதேச தத்துவார்த்த அறிவியல் மையம் ஆகியவற்றால் காலிபர்/ CALIBRE மையம் நிறுவப்பட உள்ளது.
- சீனா தனது டியாங்காங் விண்வெளி நிலையத்திற்கான ஷென்சோ–21 பயணத்திற்காக நாட்டின் இளம் விண்வெளி வீரர் (32) மற்றும் கொறித்துண்ணிகள் தொடர்பான சீனாவின் முதல் விண்வெளி சுற்றுப்பாதை சார் உயிரியல் பரிசோதனையைக் குறிக்கின்ற நான்கு ஆய்வகப் பயன்பாட்டு எலிகள் உட்பட மூன்று பேர் கொண்ட குழுவுடன் கூடிய விண்கலத்தினை வெற்றிகரமாக விண்ணில் ஏவி உள்ளது.
- பெங்களூருவின் பிரவைக் டைனமிக்ஸ் நிறுவனமானது, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட VEER EV எனப்படும் இந்தியாவின் முதல் மின்சார வாகனத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இது பாதுகாப்புத் துறையின் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கான பாதுகாப்புத் துறையின் புதுமை உருவாக்கத்தில் சிறந்து விளங்குதல் (iDEX) விருதை வென்றது.
- அயோவா பல்கலைக்கழகத்தின் (அமெரிக்கா) ஆய்வு ஆனது, RAD52 எனப்படும் DNA பழுதுபார்க்கும் புரதத்தின் எதிர்பாராத அமைப்பை வெளிப்படுத்தியது.
- இஸ்ரோ நிறுவனமானது, CMS–03 எனப்படும் இந்தியாவின் கனமான தகவல் தொடர்பு செயற்கைக்கோளை (4,410 கிலோகிராம்) 2025 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆம் தேதியன்று வெற்றிகரமாக விண்ணில் ஏவியது.
- ரஷ்யா, 'டூம்ஸ்டே எறிகணை' என்றும் அழைக்கப்படும் 'போஸிடான்' என்ற நீருக்கடியில் இயங்கும் அணுசக்தி கொண்ட ஆளில்லா வாகனங்களை சுமந்து செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள 'கபரோவ்ஸ்க்' எனப்படும் தனது புதிய அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பலினைப் படையில் இணைத்தது.
- அறிவியலாளர்கள் முதன்முறையாக சூரியனின் கரோனா அடுக்கில் ஆல்ஃப்வென் அலைகளை நேரடியாகக் கண்டறிந்துள்ளனர்.
- நகரத்தை அழிக்கும் அளவிலான 2024 YR4 சிறுகோள் ஆனது 2032 ஆம் ஆண்டில் சந்திரனுடன் மோதக்கூடும்.
- வாத்வானி செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் பள்ளி, இந்தியத் தொழில் நுட்ப கல்விக் கழகம் – மதராஸ் (IIT–M) மற்றும் தி ஓஹியோ மாநில பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் மருந்து கண்டுபிடிப்பிற்கான PURE (கட்டமைப்பு சார்ந்து கட்டுப்படுத்தப்பட்ட மூலக்கூறு உருவாக்கத்திற்கான கொள்கை சார் வழிகாட்டுதல் கொண்ட பாரபட்சமற்றப் பிரதிநிதித்துவம்) என்ற செயற்கை நுண்ணறிவுக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- வானியலாளர்கள் GJ 251 c என்ற பூமியை விட கிட்டத்தட்ட 4 மடங்கு நிறை கொண்ட ஒரு பாறைப்பாங்கான வெளிப்புறக் கோளினை கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இது 20 ஒளி ஆண்டுகளுக்கும் குறைவான தொலைவில் அமைந்த அருகிலுள்ள குள்ள நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது.
- 3I/ATLAS எனும் விண்மீன் மண்டல வால் நட்சத்திரமானது, சூரியனை விட்டு விலகி பூமியை நோக்கி நகரும் போது எதிர்பாராத விதமாக அதன் வேகம் முடுக்குவிக்கப் படுகிறது.
- மதராசின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குறைந்த விலை, குறைந்தபட்ச ஊடுருவல் கொண்ட தொடர்ச்சியான குளுக்கோஸ் கண்காணிப்பு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.

- அலெம்பிக் பார்மாசூட்டிகல்ஸ் என்ற நிறுவனமானது அதன் பொதுப் பெயர் மருந்தான டசாடினிப் (லுகேமியா மருந்து) மாத்திரைகளுக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்திடமிருந்து (USFDA) இறுதி ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- மலச்சிக்கலுடன் கூடிய குடல் எரிச்சல் நோய்க்குறி (IBS–C) உள்ள ஏழு வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு லின்செஸ் (லினாக்ளோடைடு) வழங்க USFDA அங்கீகரித்துள்ளது.
- புவியானது, G5 நிகழ்வாக வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த ஆண்டின் வலிமையான புவி காந்தப் புயலை எதிர் கொண்டு வருவதாக நாசா உறுதிப்படுத்தியது.
- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் NexCAR19 எனப்படும் வெவ்வேறு மரபுத்திரி எண்ணிக்கைக் கொண்ட நோய் எதிரணு உற்பத்தி ஊக்கி ஏற்பி (Chimeric Antigen Receptor–CAR) T–செல் சிகிச்சையானது சமீபத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் விசாகப்பட்டினத்தில் உள்ள கடற்படை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆய்வகம் (NSTL) ஆனது கண்ணி வெடி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக புதிய மனிதனைச் சுமந்துச் செல்லக் கூடிய தானியங்கி கடலடி வாகனங்களை (MP–AUVs) உருவாக்கியுள்ளது.
- இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் குவாண்டம் வைர நுண்ணோக்கியை வெளியிட்டது என்பதோடு, இது பம்பாயின் இந்தியத் தொழில்நுட்ப கல்விக் கழகத்தில் உள்ள பி–குவெஸ்ட் குழுவால் தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டது.
- ஒரு கடல் கண்காணிப்பு செயற்கைக்கோள் ஆன சென்டினல்–6B அமெரிக்காவின் கலிபோர்னியாவின் வாண்டன்பெர்க் விண்வெளிப் படைத் தளத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- இந்திய மொழிகள், கலாச்சாரம் மற்றும் தகவல் தொடர்பு முறைகள் குறித்த செயற்கை நுண்ணறிவு அமைப்புகளை மதிப்பிடுவதற்காக வேண்டி IndQA என்ற ஓர் அளவுருவினை OpenAI அறிமுகப்படுத்தியது.
- SS Innovations International, Inc நிறுவனம் ஆனது, முற்றிலும் இந்தியாவில் உருவாக்கப் பட்ட இடம் மாற்றக் கூடிய MantrAsana எனும் உலகின் முதல் ரோபோடிக் தொலைக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை அமைப்பை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஓமன் வானியல் மற்றும் விண்வெளி அமைப்பானது, SWAN வால் நட்சத்திரத்தினை (வால்மீன் C/2025 R2 SWAN) வெற்றிகரமாக கண்காணித்து புகைப்படம் எடுத்தது.
- 100 ஆண்டுகளுக்கும் மேலாக, கொடைக்கானல் சூரிய ஆய்வகத்திலிருந்து (KoSO) பெறப் பட்ட படங்களைப் பயன்படுத்தி அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சூரியனின் துருவ காந்தப் புலங்களை மறுகட்டமைத்தனர்.
- இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் CRISPR அடிப்படையிலான மரபணு சிகிச்சைக்கு BIRSA 101 என பெயரிட்டுள்ளது.
- HAMMER என்பது பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் மற்றும் பிரான்சில் உள்ள சஃப்ரான் நிறுவனம் ஆகியவை இணைந்து இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு துல்லியமான வழி காட்டப்பட்ட வானிலிருந்து நிலம் மீது ஏவப்படும் ஆயுதமாகும்.
- கவி மற்றும் யுனிசெஃப் (ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம்) ஆகியவை R21/Matrix–M மலேரியா தடுப்பூசிகளை மேலும் அணுகக் கூடியதாக மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

- பிரதமர் ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட விக்ரம்–I என்ற இந்தியாவின் முதல் தனியார் வணிக பயன்பாட்டு சுற்றுப்பாதை ஏவு கலத்தினை வெளியிட்டு, ஐதராபாத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதத்திற்கு ஒரு சுற்றுப்பாதை ராக்கெட்டை உற்பத்தி செய்யக் கூடிய ஸ்கைரூட்டின் இன்ஃபினிட்டி வளாகத்தைத் திறந்து வைத்தார்.
- செவ்வாய்க் கிரகத்தில் உள்ள 3.5 பில்லியன் ஆண்டுகள் பழமையான பள்ளத்திற்கு இந்தியப் புவியியலாளர் M.S. கிருஷ்ணனின் பெயரிடப்பட்டுள்ளது, மேலும் கேரளாவினை அடிப்படையாகக் கொண்டு வலியமலை, தும்பா, பெக்கல், வர்க்கலா மற்றும் பெரியார் ஆகிய ஐந்து பெயர்கள் தற்போது அருகிலுள்ள பள்ளங்களுக்கும் செவ்வாய்ப் பள்ளத்தாக்கிற்கும் வழங்கப்பட்டுள்ளன.
- S.N. போஸ் தேசிய அடிப்படை அறிவியல் மையம் மற்றும் அசோகா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஆன்கோமார்க் என்ற புற்றுநோய்ச் சிகிச்சைக்கான செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பை உருவாக்கியுள்ளனர்.
- இந்தியா, தேசிய குவாண்டம் திட்டத்தின் கீழ் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT) டெல்லி, IIT பம்பாய், IIT கான்பூர் மற்றும் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம், (IISc) பெங்களூரு ஆகியவற்றில் நான்கு மேம்பட்ட குவாண்டம் உருவாக்க மையங்களை அமைக்க உள்ளது.
- இஸ்ரோ நிறுவனமானது, தனது விண்கலமிணைப்புப் பரிசோதனை (SpaDeX) ஆய்வு செயற்கைக் கோள்கள் இரண்டாவது விண்கலமிணைப்புப் பரிசோதனையினை மிக வெற்றிகரமாக நிறைவு செய்ததன் மூலம் மற்றொரு மைல்கல்லை எட்டியுள்ளது.
- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட DengiAll எனப்படும் இந்தியாவின் முதல் நாற்கரப் பிணைப்புத் திறன் கொண்ட (டெட்ராவலண்ட்) டெங்கு தடுப்பூசியானது அதன் மூன்றாம் கட்ட மருத்துவப் பரிசோதனைகளில் 50% வழங்கீட்டினை எட்டியுள்ளது.
- கொல்கத்தாவில் உள்ள போஸ் நிறுவனத்தின் இந்திய ஆராய்ச்சியாளர்கள் AcSERK3 மரபணுவை மேம்படுத்துவதன் மூலம் பூஞ்சைகளுக்கான எதிர்ப்புத் திறனைக் கொண்ட அன்னாசிப்பழத்தை உருவாக்கியுள்ளனர்.
- இரண்டு கருந்துளைகளின் இணைப்பிலிருந்து வரும் GW250114 என்ற ஈர்ப்பு அலை நிகழ்வானது கண்டறியப்பட்டுள்ளது.
- கூகுள் நிறுவனமானது அயர்ன்வுட் என்ற புதிய கணினி சில்லினை அறிமுகப் படுத்தி உள்ளது.
- துருக்கியின் கிசிலெல்மா ஆளில்லா விமானம் (UAV) ஆனது, காட்சிக்கு அப்பாற்பட்ட (BVR) தாக்குதல் வரம்பு கொண்ட எறிகணையைப் பயன்படுத்தி ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்திய உலகின் முதல் ஆளில்லா விமானமாக மாறியது.
- NCRA–TIFR (தேசிய ரேடியோ வானியற்பியல் மையம் – டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம்) நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் அலக்நந்தா என்ற புதிய சுழல் அண்டத்தினைக் கண்டுபிடித்தனர்.
- 2023 ஆம் ஆண்டில் பென்னு குறுங்கோளில் இருந்து நாசாவின் OSIRIS–REx விண்கலத்தால் புவிக்கு திருப்பி அனுப்பப்பட்ட மாதிரிகளில், ஆற்றலாகப் பயன்படுத்தப்படும் ஆறு கார்பன் மூலக்கூறு கொண்ட சர்க்கரையான குளுக்கோஸை அறிவியலாளர்கள் கண்டறிந்தனர்.

- ஏர்–சோல் மோயென் போர்டீ–ரெனோவ் (ASMPA–R) என்பது பிரான்சின் நடுத்தரத் தூர தாக்குதல் வரம்புடைய, மீயொலி, அணுசக்தி ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட ASMP சீர்வேக எறிகணை குழுவின் புதிய வடிவமாகும்.
- இஸ்ரேலில் உள்ள புத்தொழில் நிறுவனமானது, 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆய்வகத்தில் உருவாக்கப்படும் "பசுவிலிருந்து பெறப்படாத" பாலை வணிக ரீதியாக அறிமுகப்படுத்த உள்ளது.
- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஆனது எரிபொருள் கலப்படத்தினைக் கண்டறிதலுக்கு உதவுகின்ற, பல்வேறு கூறுகளை தேர்ந்தெடுத்துப் பிரிக்கும் கரிமக் கூழ்ம உருவாக்கக் காரணி/ஆர்கனோஜெலேட்டர் (PSOG) என்ற பொருளை உருவாக்கியது.
- கோத்ரேஜ் ஏரோஸ்பேஸ் நிறுவனமானது, ககன்யான் திட்டத்திற்காக முதல் மனித பயணப் பயன்பாட்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட விகாஸ் எஞ்சினை இஸ்ரோவிற்கு வழங்கியது.
- சீனாவின் சாங்–6 கலம் சந்திர மண்ணில் சிறிய இரும்பு ஆக்சைடு படிகங்களைக் கண்டுபிடித்தது.
- 3I/ATLAS எனப்படும் புவிக்கு அருகிலுள்ள அமைப்பைக் கண்காணிப்பதை மையமாகக் கொண்டு, ஐரோப்பா உலகின் மிகப்பெரிய கிரகப் பாதுகாப்புப் பயிற்சியை நடத்தியது.
- இஸ்ரோவின் ஆதித்யா–L1 கலம், சூரியப் புயல் ஆய்வு என்ற முக்கிய உலகளாவிய முயற்சியில் இணைகிறது.
- பக்கவாத சிகிச்சைக்காக புது டெல்லியின் எய்ம்ஸ் மருத்துவமனை இந்தியாவில் முதல் முறையாக சூப்பர்நோவா ஸ்டெண்டின் மருத்துவ பரிசோதனையை நடத்தியது.
- மைத்ரி II என்பது கிழக்கு அண்டார்டிகாவில் நிறுவுவதற்கு இந்தியாவினால் முன் மொழியப் பட்ட அடுத்த தலைமுறை நுட்பத்திலான ஆராய்ச்சி நிலையமாகும் என்ற நிலையில் இது 2032 ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- AASM (Armement Air–Sol Modulaire) என்றும் அழைக்கப்படுகின்ற HAMMER (Highly Agile Modular Munition Extended Range) ஆனது ஒரு துல்லிய வழிகாட்டுதலுடன் கூடிய வானில் இருந்து தரையில் உள்ள இலக்கினைத் தாக்கி அழிக்கும் ஆயுதமாகும்.
- ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் ருத்தேனியம் டை ஆக்சைடை ஒரு மாற்றுக் காந்தமாக சோதனை ரீதியாக உறுதிப்படுத்தியுள்ளனர்.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி ஆனது PSR J2322–2650b என பெயரிடப்பட்ட எலுமிச்சை வடிவ புறக்கோளைக் கண்டுபிடித்துள்ளது.
- டார்க் ஈகிள் என்பது அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட ஓர் மீயொலி எறிகணை அமைப்பு ஆகும்.
- சிறிய விண்கற்கள் மற்றும் சுற்றுப்பாதை குப்பைகள் (MMOD) என்பது பூமியைச் சுற்றி மிக அதிக வேகத்தில் நகரும் சிறிய இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்கள் ஆகும்.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆகாஷ்–NG எறிகணை அமைப்பின் பயனர் மதிப்பீட்டுச் சோதனைகளை (UET) நிறைவு செய்துள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

- 2024 ஆம் ஆண்டு ஆனது, மனித நடவடிக்கைகளால் தூண்டப்பட்ட ஒரு தசாப்தத்தில் எதிர்பாராத அளவில் வெப்ப அதிகரிப்பினைத் தூண்டி, இதுவரையில் பதிவான மிக வெப்பமானதாக ஆண்டாக அமைகிறது.
- 2005 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், கார்பன் உமிழ்வானது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 7.93% குறைந்துள்ளது, அதே நேரத்தில் உமிழ்வின் செறிவும் 36% குறைந்துள்ளது.
- கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் ஒரு புதிய எறும்பு வகை ஒன்றினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- உலகின் முதல் அதிகுளிர்வூட்டப்பட்ட காப்பு முறையில் உருவாக்கப்பட்ட பவளப் பாறைகள் பெருந்தடுப்புப் பவளப்பாறை திட்டுகளில் உள்ள புதிய மற்றும் மிகவும் இயற்கையான பகுதிகளில் வெற்றிகரமாக நிலை பெற்றுள்ளன.
- IUCN அமைப்பின் அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களை உள்ளடக்கிய செந்நிறப் பட்டியலுக்கான முதல் உலகளாவிய பல் வகைப்பாட்டு நன்னீர் வாழ் விலங்கின மதிப்பீடு ஆனது சமீபத்தில் நடத்தப்பட்டது.
- அறிவியல் ஆய்வாளர்கள் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் புதிய இந்தோ-பர்மிய எறும்புத் திண்ணி (மானிஸ் இந்தோபர்மனிகா) இனங்களை அடையாளம் கண்டு ள்ளனர்
- DDT அல்லது டை-குளோரோ-டை-ஃபீனைல்-ட்ரை-குளோரோ-ஈத்தேன் ஆனது 1939 ஆம் ஆண்டில் ஒரு பூச்சிக்கொல்லியாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலகின் மிகவும் பரவலான ஊடுருவல் அயல் இனமான வெங்காயத் தாமரையானது, கென்யாவின் நைரோபி நகரில் உள்ள நைவாஷா ஏரி முழுவதும் பரவிக் காணப் படுகிறது.
- கங்கை நதிப் படுகையில் சுமார் 3,936 கங்கை நதி ஓங்கில்கள் (763 என்ற கணிப்புத் திட்டப் பிழையுடன்) இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- அருகி வரும் இந்திய ஓநாய்கள், கர்நாடக மாநிலத்தின் பங்கபூர் ஓநாய் வனவிலங்குச் சரணாலயத்தில் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றன.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் 23 வகையான இரத்தம் உறிஞ்சும் ஈக்கள் இருப்பதை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ள நிலையில் இதில் இந்தியாவில் முன்னர் பதிவு செய்யப்படாத 13 இனங்கள் அடங்கும்.
- இத்தாலி அல்லது இந்தியாவில் உள்ள மகாராஷ்டிரா மாநிலத்தின் அளவை ஒத்த 30.87 மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமான வனப்பகுதியானது இங்கு காட்டுத் தீ மூலம் தீக்கிரையானது.
- ஆலிவ் ரெட்லி ஆமைகள் / சிற்றாமைகள், 2024 ஆம் ஆண்டில் அவற்றின் ஒரு கூட்டாக முட்டையிடும் பணிக்காக ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ருஷிகுல்யா நதி முகத்துவாரத்தைத் தவிர்த்தன.
- தமிழ்நாடு மாநிலத்தின் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சக்கரக்கோட்டை மற்றும் தேர்த்தங்கல் ஆகிய இரண்டு பறவைகள் சரணாலயங்கள் தற்போது ராம்சர் தளங்கள் என்று அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- நியூசிலாந்து நாட்டு அரசானது, தற்போது அதிகாரப்பூர்வமாக தாரனாகி மவுண்ட் என்று அழைக்கப் படும் தாரனாகி மௌன்க்கா மலைக்கு மனிதனுக்கு வழங்கப்படும் வகையிலான சட்ட உரிமைகளை வழங்கியுள்ளது.

- உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான A23a அண்டார்டிகாவில் உள்ள ஃபில்ச்னர் பனிப்படலத்தில் இருந்து பிரிந்தது.
- சர்வதேச பெரும் பூனை இனங்கள் கூட்டணி (IBCA) ஆனது அதிகாரப்பூர்வமாக ஓர் ஒப்பந்த அடிப்படையிலான மற்றும் அரசுகளுக்கிடையேயானப் பெரும் அமைப்பாக நடைமுறைக்கு வந்துள்ளது.
- பாங் அணை ஏரி வனவிலங்கு சரணாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட 2025 ஆம் ஆண்டு வருடாந்திரப் பறவைகள் கணக்கெடுப்பில், 97 இனங்களைச் சேர்ந்த மொத்தம் 1,53,719 பறவைகளுடன், நீர்ப்பறவைகளின் எண்ணிக்கை எதிர்பாராத அளவிற்கு அதிகரித்து உள்ளது.
- இந்தியா தனது பருவநிலை இடர் குறியீட்டு (CRI) தரவரிசையை 2019 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தீவிர வானிலை நிகழ்வுகளால் உலகளவில் ஏழாவது மோசமாக பாதிக்கப் பட்ட நாடு என்ற நிலையிலிருந்து, 2022 ஆம் ஆண்டில் 49வது இடத்திற்கு மேம்படுத்தி உள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் எபிகோக்கம் இண்டிகம் என்ற ஒரு புதிய வகை தாவர நோய்க் கிருமி பூஞ்சையைக் கண்டறிந்துள்ளனர்.
- எத்தியோப்பியாவில் உள்ள ஃபென்டேல் எரிமலை வளிமண்டலத்தில் மிக அதிக அளவு மீத்தேன் வாயுவினை வெளியேற்றியுள்ளது.
- சமீபத்தியக் கணக்கெடுப்பின் படி மத்தியப் பிரதேசத்தில் காணப்படும் கழுகுகளின் எண்ணிக்கை 12,981 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது என்பதோடு இது கடந்த காலக் கணக்கெடுப்பை விட 2,136 அதிகரித்துள்ளது.
- ரோம் நகரில் நடைபெற்ற உயிரியல் பன்முகத் தன்மை உடன்படிக்கை (CBD) மீதான COP16 மாநாடானது, உலகளாவிய அளவில் வளங்காப்பு இலக்குகளுக்கு நிதியளிப்பது தொடர்பான வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்தினை எட்டியுள்ளது.
- கோபிடிஸ் பெய்ஜிங்கென்சிஸ் என்று அதிகாரப்பூர்வமாகப் பெயரிடப்பட்ட ஒரு புதிய வகை அயிரை மீன் இனமானது, சுமார் 40 ஆண்டுகளில் முதல் முறையாக சீனாவின் பெய்ஜிங் பகுதியில் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தியாவின் முதல் நதி வாழ் ஓங்கில் கணக்கீட்டு அறிக்கையில் எட்டு மாநிலங்களில் உள்ள 28 ஆறுகளில் 6,327 ஓங்கில்கள் இருப்பதாக பதிவு செய்யப் பட்டுள்ளன.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் (ICAR) ஆராய்ச்சியாளர்கள், புதிய காங்கிரிட் இன குடும்ப விலாங்கு மீன் இனத்தைக் கண்டறிந்து அதற்கு தமிழின் பெயரைச் சூட்டி உள்ளனர்.
- உலகப் பொருளாதார மன்றத்தின் Uplink அமைப்பு ஆதரவு பெற்ற துணிகர முதலீட்டு முன்னெடுப்புகள் ஆனது கடந்த இரண்டு ஆண்டுகளில் சுமார் 142,400 டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வினைத் தடுத்துள்ளன.
- ஜார்ஜ் VI பனிப் படலத்தில் இருந்து பிரிந்த A-84 பனிப்பாறையால் புதிதாக வெளிப் படும் கடற்பரப்பில் பன்னிரண்டு வகையான மிகப் புதிய உயிரினங்களை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ஆந்திரப் பிரதேசம் நல்லமலை வனப்பகுதியில் உள்ள நாகார்ஜுனா சாகர்-ஸ்ரீசைலம் புலிகள் வளங்காப்பகத்தில் (NSTR) 2023 ஆம் ஆண்டில் 74 ஆக இருந்த பெரும்பூனை இனங்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டில் 76 ஆக அதிகரித்துள்ளது.
- தெற்கு காரோ மலைகளில் உள்ள தொலைதூர ஓடையில் ஒரு புதிய வகை பாம்புத் தலை மீன் கண்டறியப்பட்டுள்ளது.

- IUCN அமைப்பானது, சிங்கத்திற்கான (பாந்தெரா லியோ) முதல் பசுமை நிலை குறித்த மதிப்பீட்டை வெளியிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட கழுகுக் கணக்கெடுப்பு ஆனது தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடக வனத்துறைகளால் மேற்கொள்ளப்பட்டது.
- இந்தியாவில் உள்ள தார் பாலைவனத்தின் பசுமையாக்கத்தில் கடந்த 20 ஆண்டுகளாக ஆண்டுதோறும் 38 சதவீத உயர்வுப் பதிவாகியுள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள், மிக நீண்ட காலமாக காணாமல் போன வெல்வெட் புழுக்களின் (ஃபைலம் ஓனிகோஃபோரா) இனத்தினைச் சுமார் 111 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கண்டுபிடித்துள்ளனர்.
- மேற்குத் தொடர்ச்சி மலையின் வயநாடு நிலப்பரப்பில் ஒரு புதிய வகையான ஊசித் தட்டான் யூபியா வயநாடென்சிஸ் கண்டறியப்பட்டுள்ளது.
- பாக்கமலை மற்றும் கங்காவரம் மலைகளில் கணிசமான எண்ணிக்கையில் காணப் படும் சாம்பல் நிற அணிலின் கணக்கெடுப்பினை நடத்த விழுப்புரம் வனப் பிரிவு திட்டமிட்டுள்ளது.
- இந்தப் புதிய இனமானது, அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள டாலே பள்ளத்தாக்கு வனவிலங்கு சரணாலயத்தில் கிளிடினியம் லலிடே – வண்டு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் உலகம் சுமார் 25,870 சதுர மைல்கள் (67,000 சதுர கிலோமீட்டர்) அளவிலான பிரதான மழைக்காடுகளை இழந்தது.
- அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த கலிபேயா சினுஃபர்காட்டா (ரோமம் கொண்ட வெண்கல முதுகுத் தும்பி) என்ற புதிய வகை தும்பி/ஊசித் தட்டான்களை அறிவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- தமிழ்நாட்டின் மணல் நிறைந்த கடற்கரையில் சுதந்திரமாக சுற்றித் திரியும் ஒரு புதிய வகை கடல் நூற்புழு ஃபெரோனஸ் ஜெயராஜ்புரி தத்தா & ரிஸ்வி எனப்படும் ஒரு சிறிய புழு போன்ற உயிரினத்தை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- மொசுரா ஃபென்டோனி எனப்படுகின்ற மிகவும் ஒரு சிறிய மூன்று கண்கள் கொண்ட வேட்டையாடும் உயிரினத்தினை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் லெபராடா என்ற ஒரு மாவட்டத்தில் 'யூதாலியா மலாக்கானா' என்ற புதியதொரு வண்ணத்துப்பூச்சி இனமானது முதன்முறையாகப் பதிவு செய்யப் பட்டு உள்ளது.
- நேபாளத்தின் யாலா பனிப்பாறை "அழிந்து விட்டதாக" அறிவிக்கப்பட்ட முதல் நேபாள பனிப்பாறை என்று நம்பப்படுகிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இருந்து லேபியோ உரு மற்றும் லேபியோ செகிடா எனப்படுகின்ற இரண்டு புதிதான நன்னீர் வாழ் மீன் இனங்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- லடாக்கில் 477 பனிச்சிறுத்தைகள், அதாவது நாட்டின் மொத்தப் பெரும்பூனைகளின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு பனிச்சிறுத்தைகள் காணப் படுகின்றன.
- இந்தியாவிலேயே முதன்முறையாக, சிலிக்கா ஏரியில் கழி/சேற்று நண்டு பிடித்தலுக்கு உலகளாவிய ஒரு நிலைத் தன்மை அங்கீகாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

- ❖ பெரியார் புலிகள் வளங்காப்பகத்தில் (PTR) சமீபத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ஐந்து புதிய நீர் நில வாழினங்கள் மற்றும் மூன்று புதிய ஊர்வன இனங்கள் இந்தப் பகுதியின் பதிவுகளில் சேர்க்கப் பட்டுள்ளன.
- ❖ குன்னூரைச் சுற்றி மட்டுமே இருப்பதாக நம்பப்படும் ஒரு புதிய வகை மரப் பல்லி ஆனது, தமிழ்நாட்டின் நீலகிரியில் கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ கடந்த 60 ஆண்டுகளில் ஊடுருவும் அயல் இனங்களால் இந்தியா 127.3 பில்லியன் டாலர் (830 கோடி ரூபாய்) இழந்துள்ளதாக 2022 ஆம் ஆண்டு ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ இந்திய நாடானது, செயல்பாடுகள் நிறுத்தப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து சூரிய சக்தியை உற்பத்தி செய்யும் திறனை மிகவும் அதிகளவில் கொண்ட உலகின் நான்காவது நாடாக உள்ளது.
- ❖ காஞ்சூரியா திரிபுராயென்சிஸ் மற்றும் காஞ்சூரியா பிரியசங்கரி ஆகிய இரண்டு புதிய மண்புழு இனங்கள் ஆனது திரிபுராவில் கண்டறியப் பட்டுள்ளன.
- ❖ இராஜஸ்தானின் ஜெய்ப்பூருக்கு அருகிலுள்ள ஆரவல்லி மலைத்தொடரின் ஒரு பாறை பாங்கான மற்றும் பகுதியளவு வறண்ட நிலப்பரப்பில் போர்துலாகா பாரத் என்ற புதிய பூக்கும் வகை தாவர இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ தென்னிந்தியாவில் ஸ்பார்டேய்னே துணைக் குடும்பத்தைச் சேர்ந்த (ஸ்பார்டேயஸ் மற்றும் சோனோய்டா) ஒரு புதிய வகை குதிக்கும் சிலந்திகளை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- ❖ கடந்த இருபது ஆண்டுகளில் உலகின் பெருங்கடல்களில் ஐந்தில் ஒரு பங்கிற்கும் அதிகமானவற்றுள் அவற்றின் ஆழப் பகுதிகளுக்கான ஒளி ஊடுருவல் அளவு என்பது கணிசமாக குறைந்துள்ளது.
- ❖ ஜிம்பாப்வே சேவ் வேலி என்ற காப்பகத்தில் குறைந்தது 50 யானைகளை கொல்லத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.
- ❖ உத்தரகாண்ட்டின் உயரமான சில பகுதிகளில் உள்ள காடுகளில் நீண்ட வால் கொண்ட இமயமலை வௌவால் (மையோடிஸ் ஹிமாலைகஸ்) எனப்படும் ஒரு புதிய வௌவால் இனம் ஆனது கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ புனேவின் பாஷன் ஏரியில் டுகேசியா புனென்சிஸ் என்ற புதிய பிளானேரியன் புழு இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ ஸ்பதாஸ்பினா நூஹி என்று பெயரிடப்பட்ட ஒரு பூச்சி இனமானது, மேகாலயாவின் காடுகளில் கண்டறியப்பட்ட அந்துப்பூச்சி குடும்பத்தைச் சேர்ந்தது.
- ❖ பலோடியில் உள்ள கிச்சான் மற்றும் உதய்பூரில் உள்ள மேனார் ஆகியவை சமீபத்தில் ராம்சர் தளங்களாக நியமிக்கப்பட்டுள்ளன.
- ❖ மத்திய அரசானது, டிரால் வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றி ஒரு சுற்றுச்சூழல் தாங்கு மண்டலத்தை (ESZ) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- ❖ கலோடஸ் சோலைக்கிங் (Calotes zolaiking) எனும் தோட்டப் பல்லி இனமானது 2019 ஆம் ஆண்டில் முதன்முதலில் மிசோரமின் ஐஸ்வால் மாவட்டத்தில் கண்டறியப்பட்டது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் இந்தியா சுமார் 18,200 ஹெக்டேர் பரப்பிலான பிரதானக் காடுகளை இழந்துள்ளதோடு இது 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சுமார் 17,700 ஹெக்டேர் என்ற அளவில்ருந்து சற்று அதிகமாகும்.
- ❖ வடகிழக்கு அசாமின் பிஸ்வநாத் மாவட்டத்தில் உள்ள நாகசங்கர் கோவிலானது ஆமை வளங்காப்பிற்கான மாதிரிக் கோவிலாக நியமிக்கப்பட்டுள்ளது.

- மேகாலயாவில் ஸ்கிஸ்டுரா டென்சிக்லாவா என்ற புதிய குகை வாழ் மீன் இனம் ஆனது கண்டறியப்பட்டுள்ளது.
- உலகின் சுமார் 59% பெருங்கடல்களில் அரிய இராட்சத இறால் இனமான அலிசெல்லா ஜிகாண்டியா காணப் படுகிறது.
- ஜப்பானின் குமேஜிமா தீவுக்கு அருகில் கிளாவெலினா ஆசிபாண்டே என்ற புதிய கடல் வாழ் கடற்குடுவை/ஸ்கர்ட் இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- சுந்தரவன கழிமுகப் பகுதிகளில் உள்ள சாகர் தீவில் ஒரு புதிய வகை ஓநாய் சிலந்தியை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- லந்தானா கமாரா தற்போது ஓர் ஊடுருவல் அயல் இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது (சுற்றுச்சூழல்/பொருளாதாரத் தீங்கு விளைவிக்கும் பூர்வீகமற்ற இனங்கள்).
- மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு நிறுவனம் (Central Institute of Brackish water Aquaculture– CIBA) ஆனது தங்க நிறக் கோடு கொண்ட கடல்நீர் மீனின் (ராப்டோசர்கஸ் சர்பா) மரபணுவை வெற்றிகரமாக வரிசைப்படுத்தியுள்ளது.
- கேரளாவில் உள்ள இரப்பர் தோட்டங்கள் வண்டு – பூஞ்சை கூட்டுத் தாக்குதலால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.
- புதிதாகப் பிறந்த மஞ்சள் அனகோண்டாக்கள் பயன்படுத்திய இதற்கு முன்னர் பதிவு செய்யப் படாத தப்பிக்கும் இயக்க முறையை அறிவியலாளர்கள் ஆவணப்படுத்தி மாதிரியாகக் கொண்டுள்ளனர்.
- இந்திய அறிவியலாளர்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இருந்து முன்னர் அறியப் படாத அல்லோகிராஃபா எஃபுசோசோரெடிகா எனப்படும் ஒரு வகையான கடற்பாசி / லைக்கன் கண்டறிந்துள்ளனர்.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் லிரியோதெமிஸ் ஆபிரகாமி என்ற புதிய தட்டாம் பூச்சி இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் காடுகளில் ஜோகிராஃபெட்டஸ் மாத்தேவி என்ற புதிய வண்ணத்துப்பூச்சி இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- தேசிய வனவிலங்கு வாரியத்தின் (SC–NBWL) நிலைக் குழுவானது, உயிரின மீட்புத் திட்டத்தில் கங்கை நீர் முதலை (சொம்பு மூக்கு முதலை) மற்றும் தேன் உண்ணும் கரடியைச் சேர்ப்பதற்குப் பரிந்துரைத்தது.
- காண்டாமிருக டிஎன்ஏ குறியீட்டு அமைப்பு (RhoDIS)– இந்தியத் திட்டத்தின் கீழ், ஒரு சிறப்புக் குழு 2,573 காண்டாமிருக கொம்புகளிலிருந்துப் பெறப்பட்ட மாதிரிகளின் மரபணுப் பகுப்பாய்வைத் தொடங்கியுள்ளது.
- பாரீஸ் நகர நிர்வாகமானது, 1923 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நூற்றாண்டு காலக் கழிவுநீர் மாசுபாடு பிரச்சினைக்குப் பிறகு முதல் முறையாக செய்ன் நதியில் பொது மக்கள் நீச்சல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மீண்டும் அனுமதித்துள்ளது.
- அசாமின் திப்ருகர் அருகே பிரம்மபுத்ரா நதியில் பெதியா டிப்ருகர்ஹென்சிஸ் எனும் ஒரு புதிய வகை நன்னீர் வாழ் மீன் இனமானது அடையாளம் காணப்பட்டுள்ளது.
- உலகின் மிக ஈரப்பதமான இடமாக அறியப்படும் மேகாலயாவில் உள்ள சோஹ்ராவில் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் சுமார் 1,095.4 மில்லி மீட்டர் மழைப் பொழிவு மட்டுமே பதிவானது.
- ஜூன் 30 ஆம் தேதியன்று, சிலி மற்றும் அர்ஜென்டினா ஆகிய இரு நாடுகள் துருவப் பகுதிகளுக்கு வெளியே அமைந்த பூமியின் மிகவும் குளிரான இடங்களாக மாறின.

- கார்சீனியா குசுமே என்பது வடகிழக்கு இந்தியாவின் அசாம் மாநிலத்தில் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஒரு மர இனமாகும் என்பதோடு இது அசாமிய மொழியில் தோய் கோரா என்று அழைக்கப்படுகிறது.
- வெப்ப அலையின் போது போர்ச்சுகலில் உள்ள ஒரு கடற்கரையில் ஓர் அரிய சுருள் மேகம் தோன்றியது.
- குரோமியம் ஆன்டிமோனைடு (CrSb) எனப்படுகின்ற ஒரு காந்தப் பொருளில் ஓர் அரிய நடத்தையை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தியாவில் கடந்த ஆண்டு சுமார் 683 புதிய விலங்கு இனங்கள் கண்டறியப் பட்டது (459 புதிதாகக் கண்டறியப்பட்டன மற்றும் 224 புதிதாகப் பதிவு செய்யப்பட்டன).
- இந்தியாவின் PM2.5 மாசுபாட்டில் அம்மோனியம் சல்பேட் ஒரு முக்கிய இரண்டாம் நிலை மாசுபடுத்தியாக உள்ளது.
- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் பிகோனியாவின் புதிய இனமான பிகோனியா நைஷியோரம் கண்டறியப்பட்டுள்ளது.
- தூத்துக்குடி அருகே மன்னார் வளைகுடாவில் உள்ள கரியாச்சல்லி தீவை மீட்டெடுக்க தமிழக அரசு 50 கோடி ரூபாய் செலவிட்டு வருகிறது.
- மிசோரம் காடுகளில் 'சாமேகாஸ்ட்ரோடியா ரீகென்சிஸ்' என்ற புதிய ஆர்க்கிட் / மந்தாரை இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- மேகாலயாவின் காசி மலைகளில் இரண்டு புதிய வகை புதர்த் தவளைகள் 'ராவோர்செஸ்டஸ் ஜாகாய்டு' மற்றும் 'ராவோர்செஸ்டஸ் ஜாடோ' கண்டரியப்பட்டுள்ளன.
- அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் சரணாலயம் (KNPTR) 100 சதுர கி.மீ.க்கு 18.65 புலிகளுடன் தற்போது 148 புலிகளைக் கொண்டுள்ளதுடன் இது உலகளவில் மூன்றாவது மிக உயர்ந்த புலிகளின் எண்ணிக்கையை கொண்டுள்ளதாக அமைகிறது.
- 2025 ஆம் ஆண்டு தென்மேற்குப் பருவக்காற்று (SWM) பருவத்தில், மேகாலயாவில் 56% மழைப்பொழிவு பற்றாக்குறை பதிவானது.
- கேரளாவின் பொன்னிறக் குள்ளநரிகளின் (கேனிஸ் ஆரியஸ் நரியா) எண்ணிக்கை 20,000 முதல் 30,000 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், கடல் வெப்ப அலைகள் (MHWs) உலகளாவிய கடல் மேற்பரப்பில் 96 சதவீதப் பகுதிகளைத் தாக்கியது.
- இரண்டாவது வருடாந்திர ஒருங்கிணைந்த வரையாடுகள் கணக்கெடுப்பில் தமிழ்நாடு மாநிலத்தில் 1,303 நீலகிரி வரையாடுகள் பதிவாகியுள்ளது.
- உடலில் குறுகிய பட்டைகளுடன் கூடிய மழைப் பாம்பு (ஸ்மிதோபிஸ் லெப்டோபாசியாட்டஸ்) என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய வகை மழைப் பாம்பு இனமானது, மிசோரமின் வெப்பமண்டல காடுகளில் கண்டறியப் பட்டுள்ளது.
- விப்ரியோ பெக்டெனிசிடா என்ற பாக்டீரியாவானது கடல் நட்சத்திர மீன் அழிவு நோய்க்குக் காரணம் என்று அறிவியலாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.
- போட்ரியோகோகஸ் பிரவுனி எனப்படும் பச்சை ஆல்கா (பாசி) இனம் காரணமாக இஸ்ரேலில் உள்ள கலிலி கடல் சிவப்பு நிறமாக மாறியுள்ளது.
- ஆராய்ச்சியாளர்கள் சிலிகா ஏரியில் ஒரு புதிய கடல் உருளைப் புழு அட்மிராண்டஸ் ஒடிஷாயென்சிஸ் இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- கெகார்சினுசிடே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு புதிய வகை நன்னீர் வாழ் நண்டுகள் (காசர்கோடியா ஷீபே, பிலார்டா வாமன்) கேரளாவில் கண்டறியப்பட்டுள்ளன.

- 2020 ஆம் ஆண்டில் 674 ஆக இருந்த இந்தியாவின் ஆசியச் சிங்கங்களின் எண்ணிக்கை ஆனது 2025 ஆம் ஆண்டில் 891 ஆக அதிகரித்துள்ளது என்பதோடு இது 32.2% வளர்ச்சியைக் குறிக்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் முதன்முறையாக ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் பேரினத்தைச் சேர்ந்த ஓர் அரிய இரவு நேரங்களில் வாழும் அந்துப்பூச்சி ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா பதிவு செய்யப் பட்டது.
- ஜெல்லிமீன்களின் கூட்டங்கள் குளிரூட்டலுக்கான நீர் விநியோகக் குழாய்களை அடைத்துள்ளன என்பதோடு பிரான்சின் முக்கிய அணு மின் நிலையங்களில் ஒன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இரண்டு புதிய ஊசித்தட்டான் இனங்கள் (கொங்கண் ஷேடோடாம்செல் , கிரிம்சன் ஷேடோடாம்செல்) கண்டறியப்பட்டுள்ளன.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் முதன்முறையாக ஓர் அரிய இரவு நேரங்களில் வாழ்கின்ற ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா எனும் அந்துப்பூச்சி கண்டறியப் பட்டுள்ளது.
- நேரடியாகப் பதிவு செய்யப்பட 213 எண்ணிக்கையுடன், 2025 ஆம் ஆண்டில் சுந்தரவன உயிர்க்கோள காப்பகத்தில் (SBR) உள்ள உப்பு நீர் முதலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டின் மின்மினிப் பூச்சிகள் பற்றிய முதல் மரபணு ஆய்வின் மூலம் ஆனைமலை புலிகள் வளங்காப்பகத்தில் எட்டு மின்மினிப் பூச்சி இனங்கள் (அப்ஸ்கொண்டிடா பெர்ப்ளெக்ஸா, அப்ஸ்கொண்டிடா டெர்மினலிஸ், அசிமெமெட்ரிக்டா ஹூமராலிஸ், மூன்று கர்டோஸ் இனங்கள், லாம்ப்ரிகேரா sp. மற்றும் பைரோகோலியா sp )அடையாளம் காணப்பட்டுள்ளன.
- கொல்கத்தாவில் சலினா ஔரான்டியாமகுலாட்டா மற்றும் சலினா சூடோமொன்டானா எனும் மண்ணில் வசிக்கும் இரண்டு புதிய ஸ்பிரிங்டெயில் பூச்சி இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- ஈரோடு மாவட்டத்தில் உள்ள எலத்தூர் ஏரி, தமிழ்நாட்டின் மூன்றாவது பல் வகைமை கொண்ட பாரம்பரியத் தளமாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஓர் அரிய தும்பி இனமான குரோகோதெமிஸ் எரித்ரேயா, தென் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் உயரமான பகுதிகளில் காணப் படுவதாக மீண்டும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.
- கேரளாவின் வயநாடு மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் டயோஸ்கோரியா பாலகிருஷ்ணானி என்ற புதிய கிழங்கு இனம் அடையாளம் காணப் பட்டுள்ளது.
- ஒடிசாவின் டெப்ரிகார் வனவிலங்கு சரணாலயமானது இந்தியாவின் புதிய புலிகள் வளங்காப்பகமாக மாற உள்ளது.
- ரீஃப்வாட்ச் கடல் வளங்காப்பு நிறுவனத்தினால் தமிழ்நாட்டில் மத்ஸ்யா என்ற புதிய கடல் சார் தொலை மருத்துவ உதவி மையம் தொடங்கப்பட்டுள்ளது.
- சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ளப் பகுதிகளில் இராட்சத ஆப்பிரிக்க நத்தை (லிசாசடினா ஃபுலிகா) கண்டறியப்பட்டுள்ளது.

- புனேவில் உள்ள MACS-அகர்கர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உள்ள மண் மாதிரிகளிலிருந்து ஆஸ்பெர்கிலஸ் (பூஞ்சைக் காளான்) பிரிவின் நிக்ரியைச் சேர்ந்த (பொதுவாக கருப்பு ஆஸ்பெர்கிலஸ் என்று அழைக்கப்படுகிறது), ஆஸ்பெர்கிலஸ் தாகேபல்காரி மற்றும் ஆஸ்பெர்கிலஸ் பாட்ரிசியாவில்ட்ஷிரே ஆகிய இரண்டு புதிய இனங்களை அடையாளம் கண்டுள்ளனர்.
- அசாமின் டிமா ஹசாவோ மாவட்டத்தில் சைர்டோடாக்டைலஸ் வனரக்சகா என்ற புதிய வகை வளைந்த கால்விரல் கொண்ட மரப் பல்லி கண்டறியப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வனத்துறையானது, அடையாறு முகத்துவாரத்தில் உள்ள அடையாறுத் தீவில் ஒரு புதிய சதுப்புநில மண்டலத்தினை உருவாக்கியுள்ளது.
- மணிப்பூரின் கம்ஜோங் மாவட்டத்தில் உள்ள டாரெட்லோக் ஆற்றில் கர்ரா நம்பஷியென்சிஸ் என்ற புதிய நன்னீர் மீன் இனம் கண்டுபிடிக்கப் பட்டது.
- வெப்பமண்டல மேற்குப் பசிபிக் பெருங்கடலில் ஆழ்கடல் பவளப்பாறையின் இரிடோகோர்ஜியா செவ்பாக்கா புதிய இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் புதிய வகையிலான துடுப்பு இல்லாத விலாங்கு மீன் ஆப்டெரிக்டஸ் கன்னியகுமாரி இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- அபுதாபியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு IUCN உலகப் பாதுகாப்பு மாநாடு ஆனது இந்தியாவின் கடற்பசு வளங்காப்பகத்தினை அங்கீகரிக்கும் ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- ஜும்ரி புலியானது பந்தவ்கரில் இருந்து கொண்டு வரப்பட்ட பிறகு, அச்சனக்மர் புலிகள் வளங்காப்பகத்தில் (சத்தீஸ்கர்) 2022 ஆம் ஆண்டில் 5 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டில் 18 ஆக உயர்ந்தது.
- கர்நாடகாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் குத்ரேமுக் மலைத் தொடரில் இம்பேஷியன்ஸ் செல்வசிங்கி ஒரு புதிய தாவர இனத்தை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- பீகாரில் உள்ள கோகுல் ஜலஷே (பக்சர்) மற்றும் உதய்பூர் ஜீல் (மேற்கு சம்பாரன்) ஆகியவை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களின் ராம்சர் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.
- இந்தியாவில் பிறந்த முதல் பெண் சிவிங்கிப் புலியான முகி, குனோ தேசியப் பூங்காவில் அதன் இளம் வயது நிலையை எட்டிய முதல் சிவிங்கிப் புலியாக மாற உள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள குளிர் பாலைவன உயிர்க்கோளக் காப்பகம் ஆனது, யுனெஸ்கோவின் உலக உயிர்க்கோளக் காப்பக வலையமைப்பில் சேர்க்கப்பட்டது.
- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் மேம்பட்ட பொருட்கள் மற்றும் செயல்முறைகள் ஆராய்ச்சி நிறுவனம் (CSIR-AMPRI) ஆனது ஒரு SODAR (ஒலி கண்டறிதல் மற்றும் வரம்பு) அமைப்பு வசதியை வடிவமைத்து உருவாக்கியது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஒரு புதிய காபி தாவர இனம் ஒபியோரிசா எக்கினாட்டா கண்டறியப்பட்டுள்ளது.
- தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் (NBA) ஆனது செம்மரங்கள் (டெரோகார்பஸ் சந்தலினஸ்) வளங்காப்பிற்காக ஆந்திரப் பிரதேச பல்லுயிர்ப் பெருக்க வாரியத்திற்கு 82 லட்சம் ரூபாய் நிதியை அனுமதித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் இந்தியா 2.2 மில்லியன் டன் மின் கழிவுகளை உருவாக்கியது என்ற நிலையில் இது 2017–18 ஆம் ஆண்டில் பதிவான அளவில் இருந்து 150% அதிகரிப்பு ஆகும்.

- ஜூன் மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் குறைந்த பனிப்பொழிவு மற்றும் வெப்ப அலைகள் காரணமாக சுவிட்சர்லாந்து பனிப்பாறைகள் 2025 ஆம் ஆண்டில் அவற்றின் அளவில் 3 சதவீதப் பனிப்பாறைகளை இழந்தன.
- இமாச்சலப் பிரதேசத்தில் பனிச்சிறுத்தைகளின் எண்ணிக்கையானது கடந்த நான்கு ஆண்டுகளில் 62 சதவீதம் அதிகரித்து, 2025 ஆம் ஆண்டில் 83 என்ற எண்ணிக்கையினை எட்டியுள்ளது.
- பிலிப்பைன்ஸ் நாடானது, தென்கிழக்கு ஆசியாவின் முதல் பவளப்பாறை லார்வா கருவங்கி (கிரையோ பேங்க்) ஒன்றை அமைத்துள்ளது.
- IUCN அமைப்பின் (சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம்) 2025 ஆம் ஆண்டு உலக பாதுகாப்பு மாநாட்டில் இந்தியா தனது முதல் அருகி வரும் உயிரினங்களின் செந்நிறப் பட்டியலை வெளியிட்டது.
- சென்ட்ரல் பூங்கா, சால்ட் ஏரி மற்றும் கொல்கத்தா ஆகிய பகுதிகளில் நெசோலின்க்ஸ் பனாபிடனே என்ற புதிய வகை குளவி கண்டறியப்பட்டுள்ளது.
- அருணாச்சல பிரதேசத்தில் பிரிட்ஜிபோரஸ் கனடி என்ற புதியதான பூஞ்சை இனம் கண்டறியப் பட்டுள்ளது.
- ஆர்மேனியா நாடானது, அபுதாபியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு IUCN உலக வளங் காப்பு மாநாட்டின் போது IUCN அமைப்பின் புதிய உறுப்பினராக ஆனது.
- இந்திய வனவிலங்கு அறக்கட்டளை (WTI) ஆனது அபுதாபியில், Guardians of the Wild: Supporting India's Frontline Forest Staff என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- ஆசியாவில் உள்ள அதன் பூர்வீக வாழ்விடத்தின் பெரும்பகுதியில் புலிகளை 'அதிகளவில் குறைந்துவிட்ட இனமாக' IUCN வகைப்படுத்தியுள்ளது.
- IUCN அமைப்பானது தற்போது 172,620 இனங்களைக் கண்காணித்தது, அவற்றில் 48,646 அழியும் அபாயத்தில் உள்ளது என்பதைக் குறிப்பிட்டு அதன் செந்நிறப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது.
- ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தின் புதிய ஆய்வில், பனிச்சிறுத்தைகள் எந்தப் பெரும் பூனை இனங்களிலும் இல்லாத, சிவிங்கிப் புலிகளை விடவும் மிகக் குறைந்த மரபணு பன்முகத்தன்மையைக் கொண்டுள்ளன.
- 2025 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட முதல் டிஎன்ஏ அடிப்படையிலான தேசிய கணக்கெடுப்பின் படி, இந்தியாவின் காட்டு யானைகளின் எண்ணிக்கை தற்போது 22,446 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு கமெங் மாவட்டத்தில் உள்ள ஷெர்கானில் இம்பேடியன்ஸ் இராஜிபியானா என்ற ஒரு புதிய பால்சம் மலர்/காசித் தும்பை மலர் இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- IUCN அமைப்பானது மேற்குத் தொடர்ச்சி மலைகள், அசாமில் உள்ள மனாஸ் தேசியப் பூங்கா மற்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவன தேசியப் பூங்கா ஆகியவற்றை "குறிப்பிடத்தக்க வகையில் கவலைக்குரிய" தளங்களாக வகைப்படுத்தியுள்ளது.
- உலக வானிலை அமைப்பு ஆனது, 21வது வருடாந்திர பசுமை இல்ல வாயு உமிழ்வு அறிக்கையை வெளியிட்டது.
- மகாராஷ்டிராவின் கோலாப்பூர் மாவட்டத்தின் பகுதியளவு பசுமையான திலாரி காட்டில் லகோசெயிலஸ் ஹயாவோமியாசாகி என்ற புதிய இழைகள் கொண்ட நத்தை இனம் கண்டறியப்பட்டது.

- சர்வதேச கடல்பசு/டுகோங் வளங்காப்பு மையம் ஆனது தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்காவில் உள்ள சரபேந்திரராஜன்பட்டினம் கிராமத்தில் அமைக்கப் பட வனத்துறையால் திட்டமிடப்பட்டுள்ளது.
- வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக 2017 ஆம் ஆண்டில் சத்தீஸ்கரில் புல்வாய்கள் உள்ளூரில் அழிந்துவிட்ட இனமாக அறிவிக்கப்பட்டது.
- துவாலு நாடானது IUCN அமைப்பின் 90வது உறுப்பினராக மாறியுள்ளது.
- 2021–25 வரையிலான ஆண்டுகளில் முறையே 1,150 Mt $CO_2$, 840 Mt $CO_2$ மற்றும் 410 Mt $CO_2$ வருடாந்திர நீக்கங்களைப் பதிவு செய்து ரஷ்யா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகியவை வன நிலத்தில் உலகளாவிய கார்பன் பிரித்தெடுப்பில் முன்னிலை வகித்துள்ளன.
- மத்திய ஆசியப் பாலூட்டிகள் முன்னெடுப்பு (CAMI) என்பது புலம்பெயர்ந்த காட்டு விலங்குகளின் பாதுகாப்பு உடன்படிக்கையின் (CMS) கீழான ஒரு பன்னாட்டு வளங் காப்புத் திட்டமாகும்.
- IUCN அமைப்பானது மண் பாதுகாப்புச் சட்டம் குறித்த தீர்மானம் 007 என்பதை ஏற்று, மண் பாதுகாப்புக்கான உலகின் முதல் மாதிரிச் சட்டக் கட்டமைப்பை உருவாக்கி வருகிறது.
- சேலம் மாவட்டத்தின் ஏற்காட்டில் உள்ள சேர்வராயன் மலைகளில் பாடிதெல்புசா எனும் ஒரு புதிய நன்னீர் வாழ் நண்டுகளின் பேரினமும், பாடிதெல்புசா ஏற்காடென்சிஸ் என்ற அதன் புதிய இனங்களும் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- மத்தியப் பிரதேசத்தின் நௌராதேஹி வனவிலங்கு சரணாலயம் ஆனது, குனோ தேசியப் பூங்கா மற்றும் காந்தி சாகர் சரணாலயத்திற்கு அடுத்தபடியாக, அந்த மாநிலத்தில் சிவிங்கிப் புலிகளுக்கான மூன்றாவது காப்பகமாக மாற உள்ளது.
- அருகி வரும் சிற்றாமைகள்/ஆலிவ் ரெட்லி கடல் ஆமைகளை அவற்றின் இனச் சேர்க்கை மற்றும் கூடு கட்டும் காலத்தில் பாதுகாப்பதற்காக ஒடிசாவின் கேந்திரபாடாவில் உள்ள கஹிர்மாதா கடல் சார் சரணாலயத்தில் நவம்பர் 01 முதல் மே 31 ஆம் தேதி வரை 7 மாத கால மீன்பிடி தடை அமலில் உள்ளது.
- உலகின் மிகப்பெரிய 25 முதல் 27 செ.மீ இறக்கைகள் கொண்ட அரிய வகை அட்லஸ் அந்துப்பூச்சியானது, சமீபத்தில் கர்நாடகாவின் கார்வாரில் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் தென்பட்டது.
- ஷில்லாங்–டாவ்கி வழித்தட கட்டுமானத் திட்டம் ஆனது, உம்ங்கோட் நதி நீரின் தரத்தை மோசமாக்கியுள்ளது.
- கஞ்சன்ஜங்கா தேசியப் பூங்காவானது IUCN அமைப்பினால் "தரமானது/நல்ல" என்று மதிப்பிடப் பட்ட ஒரே இந்தியத் தளமாகும்.
- COP30 மாநாட்டிற்கு முன்னதாக, வெப்பமண்டல வனங்கள் பாதுகாப்பு மையத்தின் (Tropical Forest Forever Facility–TFFF) பார்வையாளராக இந்தியா இணைய உள்ளது.
- செம்முகக் குரங்குகளை சட்டவிரோதமாக பிடிப்பது, கொடுமைப் படுத்துதல் மற்றும் மோசமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றினைத் தடுப்பதற்காக தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழுவானது, 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் கீழ் அவற்றை (ரீசஸ் மக்காக்) மீண்டும் சேர்ப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆனது அருகி வரும் கழுகு இனங்களின் முதல் நாடு தழுவிய மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டது. 17 மாநிலங்களில் சுமார் 216 தளங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு, சுமார் 70% தளங்களில் கூடு கட்டும் நிகழ்வு பதிவாகவில்லை என்பதைக் கண்டறிந்தது.

- கிரேக்க அறிவியலாளர்கள் மத்தியத் தரைக் கடலில் அதிகரித்து வரும் நுண் நெகிழிகளின் மாசுபாட்டைக் கண்டறிய கருநீலச் சிப்பிகளைப் பயன்படுத்துகின்றனர்.
- முதுமலை புலிகள் வளங்காப்பகத்தில் (MTR), மோயார் ஆற்றங்கரையில் 10,000க்கும் மேற்பட்ட டெர்மினாலியா அர்ஜுனா ('நீர் மருது') மரங்களை ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர், அவை மிகவும் அருகி வரும் வெண்முதுகுக் கழுகுகளுக்கான (ஜிப்ஸ் பெங்கலென்சிஸ்) முக்கிய வாழ்விடமாக செயல்படுகின்றன.
- உலகெங்கிலும் உள்ள நாடுகள் 2034 ஆம் ஆண்டிற்குள் பாதரசம் சார்ந்த பல் பூச்சுக் கலவையைப் பயன்படுத்துவதை முற்றிலுமாக நிறுத்துவதற்கு பாதரசம் குறித்த மினாமாட்டா உடன்படிக்கையின் கீழ் ஒப்புக் கொண்டுள்ளன.
- பாகுவில் நடைபெறும் COP29 மாநாடு ஆனது, 2035 ஆம் ஆண்டிற்குள் வளர்ந்து வரும் நாடுகளுக்கு ஆண்டுதோறும் சுமார் 1.3 டிரில்லியன் டாலர் பருவநிலை நிதியைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்ட பாகு–பெலெம் என்ற செயல் திட்டத்தினை நிர்ணயித்தது.
- சாரண்டா காடுகளின் 31,468.25 ஹெக்டேர் பகுதியை வனவிலங்குச் சரணாலயமாக அறிவிக்க உச்ச நீதிமன்றம் ஜார்க்கண்ட் அரசிற்கு உத்தரவிட்டது.
- பருவகால கில்லி மீன் இனமான மோமா கிளாடியா பொலிவியாவில் மீண்டும் கண்டுபிடிக்கப் பட்டது.
- அறிவியல் ரீதியாக ரைனெல்லா மெரினா என்று அழைக்கப்படும் கரும்புத் தேரையானது உலகில் அதிகம் ஊடுருவியுள்ள இனங்களில் ஒன்றாகும் என்பதோடு இது சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சீர்குலைக்கிறது.
- அறிவியலாளர்கள் ரெகுர்கிடலைட் என்று அழைக்கப் படுகின்ற புதைபடிவமாக்கப்பட்ட டைனோசர் எடுத்த வாந்தியில் இருந்து பக்கிரிபு வாரிட்சா என்ற புதிய வெப்ப மண்டல குறிப்பிட்ட இனங்களை ஒதுக்கி உண்ணும் டெரோசர் இனத்தை அடையாளம் கண்டுள்ளனர்.
- ஒருங்கிணைந்தப் பருவநிலை மாற்றம் மற்றும் வர்த்தக மன்றம் (IFCCT) ஆனது COP30 மாநாட்டின் தலைமைத்துவத்தால் அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது.
- தாய்லாந்தில் உள்ள அறிவியலாளர்கள் டமார்கஸ் இனசுமா என்ற புதிய சிலந்தி இனத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- அறிவியலாளர்கள், சைபீரியாவின் நிரந்தர உறைபனியில் பாதுகாக்கப்பட்ட 39,000 ஆண்டுகள் பழமையான கம்பளி யானையின் (மாமத்) உடலிலிருந்து பழமையான ரிபோநியூக்ளிக் அமிலத்தை (ஆர்.என்.ஏ) மீட்டுள்ளனர்.
- கூகுள் நிறுவனமானது, உரை, படங்கள், ஒளி, ஒலி மற்றும் குறியீட்டை ஒன்றாக செயலாக்கக் கூடிய ஜெமினி 3.0 என்ற பல்மாதிரி செயற்கை நுண்ணறிவு மாதிரியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- பருவநிலை மாற்றம் மற்றும் வர்த்தகம் குறித்த ஒருங்கிணைந்த மன்றம் (IFCCT) ஆனது பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- குஜராத்தின் இரத்தன்மஹால் வனவிலங்கு சரணாலயத்தில் ஒரு காட்டுப் புலி தொடர்ந்து ஒன்பது மாதங்களாக நிரந்தரமாக குடியேறியுள்ளதுடன் இப்போது இந்தியாவில் மூன்று பெரிய பூனைகள் ஒரே இயற்கை நிலப் பரப்பில் ஒன்றாக வாழும் ஒரே இடமாகவும் மாறியுள்ளது.
- பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் 29 பருவநிலை முடிவுகளின் குழுவான பெலெம் தொகுப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- 2025 ஆம் ஆண்டில் அண்டார்டிக் ஓசோன் துளையானது, 1992 ஆம் ஆண்டு முதல் 5வது மிகவும் சிறிய துளையாக இருந்தது என்று நாசா மற்றும் தேசியப் பெருங்கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் (NOAA) தெரிவித்துள்ளது.
- யுனெஸ்கோவால் பட்டியலிடப்பட்ட மேற்கு ஆஸ்திரேலியாவின் நிங்கலூ பவளப் பாறையில் சுமார் 70% பவளப்பாறைகள் அழிந்து விட்டன.
- 141 வயதான கிராமா எனும் கலபகோஸ் இராட்சத ஆமை சமீபத்தில் இறந்தது.
- கொச்சியில் உள்ள மத்திய கடல் சார் மீன்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (CMFRI) ஆராய்ச்சியாளர்கள், அரேபியக் கடலில் ஒரு புதிய ஆழ்கடல் கணவாய் மீன் இனத்தைக் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இதற்கு கடல் சார் உயிரியலாளர் E. G. சிலாஸின் நினைவாக டானிங்கியா சிலாசி என்று பெயரிடப்பட்டது.
- சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் உள்ள ஆரம்பகால ட்ரயாசிக் படிவுகளிலிருந்து ஒரு புதிய வகை சீலாகாந்த் மீன் இனத்தை (249-மில்லியன் ஆண்டுகள் பழமையான மீன்) அறிவியலாளர்கள் அடையாளம் கண்டு உள்ளனர்.
- குறிப்பாக ஆரோக்கியத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட முதல் சர்வதேச பருவநிலை தகவமைப்பு கட்டமைப்பான பெலெம் சுகாதார செயல் திட்டம் (BHAP) ஆனது COP30 மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- Food Waste Breakthrough – உணவுக் கழிவுகளுக்கான திருப்புமுனை மிக்க முன்னெடுப்பானது பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் அதிகாரப் பூர்வமாக தொடங்கப்பட்டது.
- ஆந்திரப் பிரதேசத்தில் காக்கிநாடாவிற்கு மிக அருகிலுள்ள கோரிங்கா வனவிலங்குச் சரணாலயத்தில் ஹெமிகோபியஸ் ஹோவெனி & முகிலோகோபியஸ் டைக்ரினஸ் ஆகிய இரண்டு வகையான கோபி வகை மீன்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.
- மூங்கில் இறால் (அட்டியோப்சிஸ் ஸ்பைனிப்ஸ்) ஆனது 72 ஆண்டுகளுக்குப் பிறகு கர்நாடகா மற்றும் ஒடிசாவில் மீண்டும் தென்பட்டுள்ளது.
- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் குடகு ஷேடோடம்செல் (புரோட்டோஸ்டிக்டா சூரியப் பிரகாஷி) என்ற புதிய ஊசித் தட்டான் இனம் கண்டுபிடிக்கப்பட்டது.
- இந்தியாவின் நிக்கோபார் தீவுகளில் ஓநாய் பாம்பு இனம் என்ற புதிய பாம்பு இனங்கள் கண்டுபிடிக்கப் பட்டு உள்ளன.
- தொலைதூர வடக்கு குயின்ஸ்லாந்தில் உள்ள வெப்பமண்டல மழைக் காடுகளில் ஒரு புதிய வகை இராட்சத குச்சிப் பூச்சியான அக்ரோபில்லா ஆல்டா கண்டறியப்பட்டு உள்ளது.
- சிறுவாணி மலைகளில் உள்ள குடிமக்கள் அறிவியலாளர்கள் உதவியுடன் ரைனோஃபிஸ் சிறுவானியென்சிஸ் என்ற புதிய கேடய வால் பாம்புகள் இனம் கண்டறியப் பட்டுள்ளது.
- மேகாலயாவில் சன்னா போய் என்ற புதிய வகை பாம்புத் தலை மீனை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- சிக்கிமின் உயரமான பகுதியில் கொலம்போலா (துள்ளிப் பூச்சிகள்) என்ற புதிய இனத்தை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- 2022–2023 ஆம் ஆண்டில் 260 ஆக இருந்த தமிழ்நாட்டின் வல்லநாடு சரணாலயத்தில் உள்ள புல்வாய்களின் (ஆன்டிலோப் செர்விகாப்ரா) எண்ணிக்கை, 2023–2024 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் 300 ஆக அதிகரித்துள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

| அறிக்கைகள் | நிறுவனம் | உயர்மட்ட நிலை | தாழ்மட்ட நிலை | இந்தியாவின் நிலை |
|---|---|---|---|---|
| **ஊழல் கண்ணோட்டக் குறியீடு (CPI) 2024** | டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் | டென்மார்க் | – | 96 |
| **பணியாளர் வளத்தில் பெண்களின் பங்கு மற்றும் தாக்கக் குறியீடு 2025** | – | சுவீடன் | – | |
| **உலகத் தீவிரவாதக் குறியீடு 2025** | – | புர்கினா பாசோ | – | 14 |
| **உலக மகிழ்ச்சித் தரவரிசை 2025** | – | பின்லாந்து | – | 118 |
| **உலகின் 10 பெரும் பொருளாதாரங்கள்** | – | அமெரிக்கா | – | 4 |
| **அதிக கடன் – மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் கொண்ட 10 நாடுகள் 2025** | சர்வதேச நாணய நிதியம் (IMF) | சூடான் | – | 31 |
| **உலகப் பத்திரிகைச் சுதந்திரக் குறியீடு – 2025** | எல்லைகளைக் கடந்த பத்திரிக்கையாளர்கள்–RSF) அமைப்பு | நார்வே | எரித்திரியா | 151 |
| **மனித மேம்பாட்டுக் குறியீடு 2025** | ஐநா மேம்பாடுத் திட்ட அமைப்பு | – | – | 130 |
| **2025 ஆம் ஆண்டில் அதிகம் பேசப்படும் முதல் 10 மொழிகள்** | – | ஆங்கிலம் | – | இந்தி (3வது), வங்காளம் (7வது), உருது (11வது), மராத்தி (16வது), தெலுங்கு (18வது) இடத்தினை பெற்றுள்ளன. |
| **உலகின் வலுவான பண மதிப்புகள்– 2025** | – | குவைத் தினார் (KWD) | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| **Child Wellbeing in an Unpredictable World** | யுனிசெஃப் | முதல் மூன்று இடங்களில்: நெதர்லாந்து, டென்மார்க் மற்றும் பிரான்சு | – | – |
| **அதிக ஆயுட்காலம் பதிவாகியுள்ள நாடுகள்** | – | மொனாக்கோ | – | – |
| **பாலின இடைவெளிக் குறியீடு 2025** | WEF | ஐஸ்லாந்து | பாகிஸ்தான் (148), சூடான், சாட் மற்றும் ஈரான் | 131 |
| **WEF எரிசக்தி மாற்றக் குறியீடு 2025** | – | சுவீடன், பின்லாந்து மற்றும் டென்மார்க் | – | 71 |
| **உலகளாவிய அமைதிக் குறியீடு 2025** | பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் (IEP) | ஐஸ்லாந்து | ரஷ்யா | 115 |
| **நிலையான மேம்பாட்டு அறிக்கை (SDR)** | ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான மேம்பாட்டுத் தீர்வுகள் வலையமைப்பு | – | – | 99 |
| **உலகளாவிய யூனிகார்ன் நிறுவனங்கள் குறியீடு 2025** | ஹுரூன் ஆராய்ச்சி நிறுவனம் | அமெரிக்கா | – | 3 |
| **ஐநா SDG குறியீடு 2025** | – | பின்லாந்து | தெற்கு சூடான், ஏமன், சோமாலியா மற்றும் சாட் | 99 |
| **உலகின் மிகப்பெரிய சுற்றுலாப் பொருளாதாரங்கள் 2025** | – | அமெரிக்கா | – | 8 |
| **மில்லியனர் இடம்பெயர்வு அறிக்கை 2025** | – | ஐக்கிய அரபு அமீரகம் (UAE) | – | 57 |

| | | | | |
|---|---|---|---|---|
| **QS அமைப்பின் மாணவர்களுக்கான மிகவும் செலவு குறைந்த நகரம் 2026** | – | சியோல் | – | சென்னை – 128வது இடம் |
| **ஹென்லே கடவுச் சீட்டுக் குறியீடு 2025** | – | ஜப்பான் | ஆப்கானிஸ்தான் | 77 |
| **உலகளாவிய செயற்கை நுண்ணறிவு – நகரக் குறியீடு 2025** | கவுண்டர்பாயிண்ட் ரிசர்ச் | சிங்கப்பூர் | – | பெங்களூரு 26வது இடம் |
| **அதிக இணையப் பயனர்கள் கொண்ட 10 முன்னணி நாடுகள்– 2025** | – | சீனா | நைஜீரியா | 2 |
| **2025 ஆம் ஆண்டிற்கான உலகின் சீர்மிகு நகரங்கள்** | சர்வதேச மேலாண்மை மேம்பாட்டு நிறுவனம் (IMD) | சூரிச் | லௌசேன் | டெல்லி – 104 மும்பை – 106 ஐதராபாத் – 109 மற்றும் பெங்களூரு– 110 |
| **மாநில எரிசக்தி திறன் குறியீடு 2024** | எரிசக்தி திறன் வாரியம் (BEE) | மகாராஷ்டிரா (>15 MToE), ஆந்திரப் பிரதேசம் (5–15 MToE), அசாம் (1–5 MToE) மற்றும் திரிபுரா (<1 MToE) | – | – |
| **இந்தியாவில் பெண்களுக்குப் பாதுகாப்பான நகரங்கள் 2025** | – | கோஹிமா (82.9%), ஐஸ்வால் (70.6%), காங்டாக் (70.4%) மற்றும் இட்டாநகர் (70.4%) | – | – |
| **உலகளாவிய அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீடு 2025** | பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் (IEP) | ஐஸ்லாந்து | – | 115 |
| **NIRF தரவரிசை 2025** | கல்வி அமைச்சகம் | சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| **உலகளாவியப் புத்தாக்கக் குறியீடு 2025** | உலக அறிவுசார் சொத்து அமைப்பு (WIPO) | சுவிட்சர்லாந்து | – | 38 |
| **நிலையான பொருளாதார வளர்ச்சி கொண்ட 10 முன்னணி நாடுகள் 2025** | – | ஐக்கியப் பேரரசு | – | 23 |
| **WDMMA 2025 தரவரிசை** | – | அமெரிக்க விமானப்படை (USAF) | – | 3 |
| **உலகளாவிய நிதி மையங்களின் குறியீடு 2025** | – | நியூயார்க் நகரம் | – | குஜராத் 43 |
| **உலகளாவிய ஓய்வூதியக் குறியீடு 2025** | – | நெதர்லாந்து | – | 52 |
| **உலகளாவிய வனத் தரவரிசை 2025** | – | ரஷ்யா | – | 9 |
| **உலகளாவிய ஆயுத ஆற்றல் குறியீடு 2025** | – | அமெரிக்கா | – | 4 |
| **2025 ஆம் ஆண்டில் அதிக கடன்பட்ட நாடுகள்** | – | ஜப்பான் | – | – |
| **உணவு மற்றும் வேளாண்மை நிலை (SOFA) குறித்த அறிக்கை 2025** | ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு | – | – | – |
| **மாநிலங்களின் நிதி குறித்த அறிக்கை 2025** | PRS சட்டமன்ற ஆராய்ச்சி அமைப்பு | அதிக கடன் அளவுகளைக் கொண்டுள்ளவை: பஞ்சாப், கேரளா மற்றும் மேற்கு வங்கம்<br>மானியச் செலவினத்தில் அதிகப் பங்கைக் கொண்டவை: பஞ்சாப், தமிழ்நாடு, | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இராஜஸ்தான், கர்நாடகா மற்றும் குஜராத் | | |
| **பருவநிலை ஆபத்துக் குறியீடு (CRI) 2026** | ஜெர்மன்வாட்ச் | – | – | தீவிர வானிலை நிகழ்வுகளால் அதிகம் பாதிக்கப் பட்ட ஒன்பதாவது நாடு– இந்தியா |
| **உலக எரிசக்தி கண்ணோட்ட அறிக்கை 2025** | சர்வதேச எரிசக்தி முகமை | – | – | – |
| **பருவநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு (CCPI) 2026** | – | டென்மார்க்–4வது | சவுதி அரேபியா – 67வது | இந்தியா – 23வது |
| **QS அமைப்பின் நிலைத்தன்மை தரவரிசை 2026** | – | சுவீடனில் உள்ள லுண்ட் பல்கலைக் கழகம் | – | முதல் 200 இடங்களில் எந்த இந்திய நிறுவனமும் இடம் பெற வில்லை |
| **உலகக் கடவுச் சீட்டுத் தரவரிசை 2025** | – | சிங்கப்பூர் | – | இந்தியா – 80வது |
| **ICA உலகளாவியத் தரவரிசை 2025** | சர்வதேசக் கூட்டுறவு கூட்டணி (ICA) | இந்தியாவின் IFFCO மற்றும் அமுல் | – | உலகளவில் சிறந்தக் கூட்டுறவு அமைப்புகள் |
| **உலக நகரமயமாக்கலுக்கான வாய்ப்புகள் குறித்த அறிக்கை 2025** | ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறை (UN DESA) | உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட முதல் 10 நகரங்களில் பெங்களூருவும் ஒன்றாகப் பட்டியலிடப் பட்டுள்ளது | – | – |
| **மேம்பாட்டிற்கான உலக நாடுகளின் உறுதிப்பாடுகள் குறியீடு 2025** | உலகளாவிய மேம்பாட்டு மையம் (CGD) | – | – | இந்தியா – 36வது |

| | | | | |
|---|---|---|---|---|
| **ஏற்பு/தகவமைப்பு இடைவெளி அறிக்கை (AGR) 2025** | ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) | – | – | – |
| **ஆரோக்கியமான, நிலையான மற்றும் சரியான உணவு முறைகள் குறித்த அறிக்கை 2025** | EAT–Lancet ஆணையம் | – | – | – |
| **"Shaping the Deep–Tech Revolution in Agriculture" அறிக்கை** | உலகப் பொருளாதார மன்றம் (WEF) | – | – | – |
| **சர்வதேசப் புலம்பெயர்வு கண்ணோட்ட அறிக்கை 2025** | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) | – | – | – |
| **உலகளாவிய குளிர்விப்பு முறையின் போக்குகள் கண்காணிப்பு அறிக்கை 2025** | ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் (UNEP) அமைப்பின் குளிர்விப்பு முறைகள் கூட்டணி | – | – | – |
| **தாழ்வெப்ப மண்டலம்/கிரையோஸ்பியர் 2025 அறிக்கை** | சர்வதேச தாழ்வெப்ப மண்டலப் பருவ நிலை முன்னெடுப்பு (ICCI) | – | – | – |
| **உலகளாவிய மீத்தேன் நிலை அறிக்கை 2025** | UN சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு | – | – | – |
| **உயர் இலட்சியமிக்கத் தொகுதிகளில் நீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கை** | நிதி ஆயோக் அமைப்பு | – | – | – |
| **ஆசிய–பசிபிக் பேரிடர் அறிக்கை 2025** | ஆசியா மற்றும் பசிபிக் பகுதிக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையம் (UN ESCAP) | – | – | – |

| | | | | |
|---|---|---|---|---|
| **உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நகரம் 2025** | – | ஜகார்த்தா | – | – |
| **ஆசிய நாடுகளின் ஆற்றல் குறியீடு 2025** | லோவி நிறுவனம் (ஆஸ்திரேலியா) | அமெரிக்கா | – | 3 |
| **மாநில எரிசக்தி திறன் குறியீடு 2024** | – | தமிழ்நாடு (55.3%) | – | – |
| **பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்புக் குறியீடு 2025/26** | ஜார்ஜ்டவுன் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு நிறுவனம் (GIWPS) மற்றும் அமைதி ஆராய்ச்சி நிறுவனம் ஒஸ்லோ (PRIO) | டென்மார்க் | – | 131வது இடம் |
| **100 முன்னணி ஆயுத உற்பத்தி மற்றும் இராணுவ சேவைகள் நிறுவனங்களின் தர வரிசை** | ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் | லாக்ஹீட் மார்ட்டின் (அமெரிக்கா), RTX (அமெரிக்கா), நார்த்ரோப் க்ரம்மன் (அமெரிக்கா) ஆகியவை 3 முன்னணி உலகளாவிய நிறுவனங்கள் ஆகும். | – | இந்தியப் பொதுத்து றை நிறுவனங்க ள் (PSU) ஆனது இதன் முதல் 100 இடங்களில் இடம் பெற்றன |
| **எரிசக்தி மற்றும் தூய்மையான காற்று ஆராய்ச்சி மையம் (CREA) அறிக்கை** | CREA | இந்தியாவின் மிகவும் மாசுபட்ட நகரம்– காசியாபாத், ஷில்லாங்– தூய்மையான நகரம் | – | – |
| **உலகின் மிகவும் மாசுபட்ட நகரங்கள் 2025** | சுவிட்சர்லாந்தின் காற்றுத் தரத்திற்கான கண்காணிப்பு நிறுவனம் | இந்தியாவின் புது டெல்லி முதல் இடம் | – | – |
| **உலகளாவிய கடவுச் சீட்டுத் தரவரிசை 2025** | ஆர்டன் கேபிடல் | ஐக்கிய அரபு அமீரகம் உலகின் வலிமையான கடவுச் சீட்டு | – | 67வது |

- ❖ உலக வங்கியானது வணிகம் செய்வதை எளிதாக்குதல் அறிக்கைக்கு மாற்றாக 2024 ஆம் ஆண்டு வணிகம் செய்வதற்கான தயார் நிலை (B-READY) குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ IPBES நெக்ஸஸ் அறிக்கையானது பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் (IPBES) மீதான அரசுகளுக்கிடையேயான தளத்தினால் வெளியிடப்பட்டது.
- ❖ ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக்கழகத்தினால் (ANU) 2024 ஆம் ஆண்டு உலகளாவிய நீர்க் கண்காணிப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, 'எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகள் குறித்த அறிக்கை 2025' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ உலகப் பொருளாதார மன்றத்தின் 2025 ஆம் ஆண்டு உலகளாவிய ஒத்துழைப்பு மாற்ற மதிப்பீட்டு நடவடிக்கையானது ஜெனீவா நகரில் தொடங்கப்பட்டுள்ளது.
- ❖ சர்வதேச தொழிலாளர் அமைப்பானது (ILO) ஜெனீவாவில் உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூகக் கண்ணோட்டம்: போக்குகள் 2025 என்ற அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- ❖ உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, அதன் சமீபத்திய 2025 ஆம் ஆண்டு உலகளாவிய அபாய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது நான்காவது 'சர்வதேசப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பற்றிய உலகளாவிய மதிப்பீடுகள்' அறிக்கையினை வெளியிட்டு உள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டு உலக முதலீட்டு அறிக்கையானது வர்த்தகம் மற்றும் மேம்பாடு குறித்த ஐக்கிய நாடுகளின் மாநாட்டினால் வெளியிடப்பட்டது.
- ❖ நிதி ஆயோக் அமைப்பானது, "நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்களுக்காக என்று கொள்கையை வடிவமைத்தல்" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு மாநாடு (UNCTAD) 2024 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய முதலீட்டுப் போக்குகள் கண்காணிப்பு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ உலக வங்கியானது 2025 ஆம் ஆண்டிற்கான உலகப் பொருளாதார வாய்ப்புகள் (GEP) அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ பெண்களின் சுகாதார நலனில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான செயல்திட்டம் குறித்த அறிக்கையானது உலகப் பொருளாதார மன்றம் மற்றும் மெக்கின்சி சுகாதார நிறுவனம் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டது.
- ❖ சர்வதேச எரிசக்தி முகமையானது (IEA), மிகச்சமீபத்தில் 2025 ஆம் ஆண்டு மின்சாரப் பயன்பாட்டு அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ யுனெஸ்கோ அமைப்பினால் 'Language Matter: Global Guidance on Multilingual Education' என்ற தலைப்பிலான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ அமெரிக்காவின் ஒரு சுயாதீனச் சிந்தனைக் களஞ்சியமான Future of Free Speech என்ற அமைப்பானது, 'Who in the World Supports Free Speech?' என்ற ஒரு தலைப்பிலான இந்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டு சர்வதேச கடன் அறிக்கையானது உலக வங்கியால் வெளியிடப் பட்டு உள்ளது.
- ❖ 'Mountains and Glaciers; Water Towers' எனப்படும் 2025 ஆம் ஆண்டு உலக நீர் மேம்பாட்டு அறிக்கையானது யுனெஸ்கோ அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய எரிசக்தி மதிப்பாய்வு 2025 என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது சர்வதேச எரிசக்தி முகமையினால் வெளியிடப்பட்டுள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்தின் "Power Hungry: How AI Will Drive Energy Demand" என்ற ஒரு அறிக்கையின் படி, உலகளாவிய அமைப்புகளில் செயற்கை நுண்ணறிவினை ஒருங்கிணைப்பது 2025 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் ஆண்டுதோறும் உலகளாவிய உற்பத்தியைச் சுமார் 0.5 சதவீதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 'பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பு பதிவில் உள்ளப் போக்குகள் 2000-2023' என்ற தலைப்பிலான அறிக்கையானது, WHO, UNICEF, UN மக்கள்தொகை நிதியம், உலக வங்கி மற்றும் UN பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை (மக்கள்தொகைப் பிரிவு) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
- “வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுத் தொலைநோக்குகள் 2025 – நெருக்கடிச் சூழலின் கீழ்: நிச்சயமற்ற ஒரு தன்மையானது உலகளாவியப் பொருளாதார வாய்ப்புகளை மறு வடிவமைக்கிறது” என்ற தலைப்பிலான அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் (UNCTAD) வெளியிடப்பட்டது.
- யுனெஸ்கோ அமைப்பானது, Education and Nutrition: Learn to Eat Well என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 'Frontline Democracy: Media and Political Churn' என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையானது ஆசியப் பத்திரிகைச் சுதந்திரக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.
- "2025 ஆம் ஆண்டு உணவு நெருக்கடிகள் குறித்த உலகளாவிய அறிக்கையானது" (GRFC) உணவுப் பாதுகாப்பு தகவல் வலையமைப்பு (FSIN) என்ற அமைப்பினால் வெளியிடப் பட்டது.
- உலகின் விலங்குகள் சுகாதார அறிக்கையின் முதல் நிலை அறிக்கையினை உலக விலங்கு சுகாதார அமைப்பு (WOAH) வெளியிட்டுள்ளது.
- உலகளாவிய வறட்சிக் கண்ணோட்டம் – 2025, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பினால் (OECD) வெளியிட்டுள்ளது.
- உத்தரகாண்டின் டேஹ்ராடூனில் உள்ள இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) ஆனது, "இந்தியாவின் புலிகள் வாழ்விடங்களில் உள்ள குளம்பு கால் கொண்ட இனங்களின் நிலை" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- உலகளாவியப் போக்குகள் குறித்த அறிக்கை: 2024 ஆம் ஆண்டில் கட்டாயப் புலம் பெயர்வு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையரகத்தினால் (UNHCR) வெளியிடப்பட்டது.
- கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் 2025 உலக வங்கியினால் கார்பன் விலை நிர்ணயத்தின் நிலை மற்றும் போக்குகள் 2025 என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையாகும்.
- உலக கடல்சார் மீன் வளங்களின் நிலை குறித்த மதிப்பாய்வு – 2025 என்ற அறிக்கையை உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) வெளியிட்டு உள்ளது.
- '2025 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை குறித்த நிலை' (SOWP) என்ற அறிக்கையை ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறையானது (UNCTAD) மற்றும் பிற துறைகளுடன் இணைந்து உலகப் பொருளாதார நிலைமை மற்றும் வாய்ப்புகள் 2025 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.

- உலக ஆற்றல் முதலீட்டு அறிக்கை 2025 என்பது சர்வதேச எரிசக்தி முகமையால் (IEA) வெளியிடப்பட்ட புதிய அறிக்கையாகும்.
- ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் (UNFPA)வெளியிட்டுள்ளது.
- மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது, 'இந்தியாவின் செயற்கை நுண்ணறிவுப் புரட்சி: விக்சித் பாரதத்திற்கான ஒரு செயல் திட்டம்' என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) ஆனது வருடாந்திர இந்திய சுற்றுச்சூழல் நிலை குறித்த அறிக்கையை (2025) வெளியிட்டுள்ளது.
- உலக வானிலை அமைப்பு (WMO) 2025–2029 ஆம் ஆண்டுகளுக்கான உலகளாவிய வருடாந்திர முதல் தசாப்தப் பருவநிலைத் தகவல் புதுப்பிப்பு என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான பேரிடர் அபாயக் குறைப்பு குறித்த உலகளாவிய மதிப்பீட்டு அறிக்கையை (GAR) ஐக்கிய நாடுகளின் பேரிடர் அபாயக் குறைப்பு அலுவலகமானது (UNDRR) வெளியிட்டுள்ளது.
- 'Generative AI and Jobs: A Refined Global Index of Occupational Exposure' என்று பெயரிடப்பட்ட அறிக்கையானது சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் போலந்தின் தேசிய ஆராய்ச்சி நிறுவனம் (NASK) இணைந்து வெளியிடப்பட்டது.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்திய விண்வெளிச் சூழ்நிலை மதிப்பீட்டு அறிக்கையை (ISSAR) இஸ்ரோ வெளியிட்டது.
- சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) ஆனது 2025 ஆம் ஆண்டு புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி செலவுகள் (RPGC) அறிக்கையினை வெளியிட்டது.
- 2025 ஆம் நிதியாண்டிற்கான (FY) நிதி உள்ளடக்க (FI) குறியீடு 67 சதவீதமாக மேம்பட்டு உள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- தேசிய அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை திட்டத்தின் கீழ் மொத்தம் ஆறு கோடி நபர்களுக்கு அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் பரிசோதனை செய்யப் பட்டுள்ளது.
- ஓரியன் விண்மீன் திரளில் உள்ள HOPS–315 எனும் புதிய நட்சத்திரத்தினைச் சுற்றி ஆரம்ப கால கிரக உருவாக்கத்தை வானியலாளர்கள் கவனித்துள்ளனர்.
- இந்தியாவில் தகவமைப்பு மிக்க மற்றும் வளமான நகரங்களை நோக்கி என்ற அறிக்கையானது உலக வங்கியால் வெளியிடப்பட்டது.
- சர்வதேச நாணய நிதியமானது சமீபத்தில், "Growing Retail Digital Payments: The Value of Interoperability" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலக வங்கியின் இந்த அறிக்கையானது Global Findex 2025 என்று தலைப்பில் வெளியிடப்பட்டது.
- இது ஈரநிலங்கள் தொடர்பான உடன்படிக்கை அதாவது ராம்சர் உடன்படிக்கைக்கான (1971) செயலகத்தினால் வெளியிடப்பட்டது.
- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு (OECD) மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு (FAO) ஆகியவை இணைந்து இந்த 21வது அறிக்கையினை வெளியிட்டன.

- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் (UNEP) The Weight of Time என்ற எல்லைகள் அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- 2023–24 ஆம் ஆண்டிற்கான வட கிழக்குப் பிராந்திய மாவட்டங்களின் நிலையான மேம்பாட்டு இலக்குகள் (SDG) குறியீட்டின் இரண்டாவது பதிப்பு ஆனது நிதி ஆயோக் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, "வேளாண் உணவு முறைகளில் இளையோர்களின் நிலை" குறித்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- சமூக இணைப்புக்கான உலக சுகாதார அமைப்பின் ஆணையமானது, 'From loneliness to social connection: charting a path to healthier societies' என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பானது, "Chemical Industry: Powering India’s Participation in Global Value Chains" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- SDG இலக்குகளில் இந்தியாவின் முன்னேற்றம் குறித்த 2025 ஆம் ஆண்டு அறிக்கை ஆனது புள்ளிவிவரங்கள் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டு அமைப்பு (UNCTAD) ஆனது, அதிகரித்து வரும் உலகளாவியப் பொதுக் கடனை எடுத்துக்காட்டும் வகையில் 2025 ஆம் ஆண்டு உலக நாடுகளின் கடன் அறிக்கையினை வெளியிட்டது.
- போட்டித் தன்மைக்கான நிறுவனமானது (IFC) எதிர்காலத்திற்கான திறன்கள் 2025 குறித்த அறிக்கையினைத் தயரித்துள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பானது, "Unlocking a 200 billion Dollar Opportunity: Electric Vehicles in India" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை புது டெல்லியில் வெளியிட்டது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் உலக வானிலை அமைப்பு (WMO) ஆகியவை Climate Change and Workplace Heat Stress (பருவநிலை மாற்றம் மற்றும் பணியிட வெப்ப அழுத்தம்) என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டன.
- உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெஃப் ஆகியவை 6வது நிலையான மேம்பாட்டு இலக்கின் (SDG) கீழ் உலகளாவிய WASH (நீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்) முன்னேற்றம் குறித்த 2024 ஆம் ஆண்டுக் குறிப்பினை வெளியிட்டன.
- உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது World Mental Health Today மற்றும் Mental Health Atlas 2024 எனும் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டது.
- யுனிசெஃப் வெளியிட்ட குழந்தை ஊட்டச்சத்து குறித்த அறிக்கை 2025 அறிக்கையானது, குழந்தைப் பருவ உடல் பருமன் மற்றும் ஆரோக்கியமற்ற உணவுகளில் உலகளாவிய அதிகரிப்பை எடுத்துக் காட்டுகிறது.
- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 09 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபை The Security We Need: Rebalancing Military Spending for a Sustainable and Peaceful Future என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- ஐ.நா. பெண்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறை (UN DESA) ஆகியவை 2025 ஆம் ஆண்டு பாலினம் குறித்த அறிக்கையை வெளியிட்டன.
- உலக வர்த்தக அமைப்பானது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று WTO பொது மன்றத்தில் 2025 ஆம் ஆண்டு உலக வர்த்தக அறிக்கையை வெளியிட்டது.

- உலகளாவியப் பருவநிலை மற்றும் சுகாதாரக் கூட்டணி (GCHA) ஆனது "Cradle to Grave: The Health Toll of Fossil Fuels and the Imperative for a Just Transition" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- உலக வானிலை அமைப்பு (WMO) ஆனது அதன் "உலக நீர்வளங்களின் நிலை 2024" அறிக்கையை வெளியிட்டது.
- "Shifting Paradigms: United to Deliver" அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் (UN) 80வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- ஸ்டாக்ஹோம் சுற்றுச்சூழல் நிறுவனம் ஆனது, பருவநிலைப் பகுப்பாய்வு மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான சர்வதேச நிறுவனம் ஆகியவை உற்பத்தி இடைவெளி 2025 அறிக்கையினை வெளியிட்டுள்ளன.
- “வனம் தொடர்பான சுற்றுச்சூழல் கணக்கெடுப்பு - 2025” அறிக்கையானது புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தினால் (MoSPI) தொகுக்கப் பட்டு வெளியிடப்பட்டது.
- ஆந்திரப்பிரதேசத்தில் குழந்தை திருமணத்தின் பரவல் 33 சதவீதத்திலிருந்து (NFHS-4) 29.3% (NFHS-5) ஆகவும், இராஜஸ்தானில் 35.4 சதவீதத்திலிருந்து 25.4% ஆகவும் குறைந்து உள்ளது.
- பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கான IUCN உலக ஆணையம் (WCPA) ஆனது “பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் பருவநிலை மாற்றத் தணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்” என்ற அறிக்கையை வெளியிட்டது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) ஆனது, The State of Social Justice: A Work in Progress என்ற ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- ICMR-INDIAB உணவுமுறை ஆய்வு 2025 அறிக்கையானது, இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையினால் (ICMR) வெளியிடப்பட்டது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) புகையிலை பயன்பாட்டில் உலகளாவியப் போக்குகள் 2000–2024 மற்றும் கணிப்புகள் 2025–2030 என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் (WHO) அறிக்கையின்படி, உலகளவில் 13 முதல் 15 பேர் வரையிலான சுமார் 15 மில்லியன் சிறார்கள் வயது வந்தவர்களை விட அதிக எண்ணிக்கையில் மின்னணு-சிகரெட்டுகளைப் பயன்படுத்துகின்றனர்.
- சுற்றுச்சூழல் இணைப்பு மற்றும் நில மறுசீரமைப்பு குறித்த உலகளாவிய நிலக் கண்ணோட்ட கருப்பொருள் சார் அறிக்கையானது அபுதாபியில் நடைபெற்ற IUCN உலக வளங்காப்பு மாநாட்டில் வெளியிடப்பட்டது.
- “India’s Blue Economy: Strategy for Harnessing Deep-Sea and Offshore Fisheries” என்ற தலைப்பில் நிதி ஆயோக் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- 2023 ஆம் ஆண்டில் உலகளாவிய ஆயுட்காலம் பெண்களுக்கு 76.3 ஆண்டுகள் மற்றும் ஆண்களுக்கு 71.5 ஆண்டுகள் ஆகும்.
- சர்வதேச நாணய நிதியம் (IMF) ஆனது 2025–26 ஆம் நிதியாண்டிற்கான இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக் (GDP) கணிப்பை 6.6 சதவீதமாக உயர்த்தியுள்ளது.
- இந்தியாவின் முதல் மாநிலச் சுரங்கத் தயார்நிலைக் குறியீட்டை (SMRI 2025) சுரங்க அமைச்சகம் வெளியிட்டது.
- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட (UNEP) அமைப்பானது வனங்களுக்கான நிதி குறித்த (SFF) அறிக்கையை வெளியிட்டது.

- ❖ உலகளாவிய நுண்ணுயிர்க்கொல்லி எதிர்ப்புத் திறன் கண்காணிப்பு அறிக்கை 2025 அறிக்கை உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- ❖ UNDP மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன்னெடுப்பு (OPHI) "Overlapping Hardships: Poverty and Climate Hazards" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டன.
- ❖ "Towards Common Criteria for Sustainable Fuels" என்ற தலைப்பிலான இந்த அறிக்கை சர்வதேச எரிசக்தி முகமையினால் (IEA) வெளியிடப்பட்டது.
- ❖ "High-risk Forests, High-value Returns: A Co-benefits Assessment for Decision-makers" என்ற தலைப்பிலான காடுகள் குறித்த UNEP அறிக்கை 2025 ஒரு அறிக்கையானது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பு (UNEP) மூலம் வெளியிடப்பட்டது.
- ❖ 2025 ஆம் ஆண்டு உலகளாவிய கல்வி அறிக்கையானது யுனெஸ்கோ அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- ❖ உலக வானிலை அமைப்பு ஆனது "the Early Warnings for All initiative" என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ "An Eye on Methane 2025: From Measurement to Momentum" என்ற ஐந்தாவது IMEO அறிக்கையானது உலகளவில் மீத்தேன் குறைப்பு முயற்சிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கிறது.
- ❖ நிதி ஆயோக் அமைப்பானது, "India's Services Sector: Insights from GVA Trends and State–Level Dynamics" மற்றும் "India's Services Sector: Insights from Employment Trends and State–Level Dynamics" என்ற தலைப்பிலான இரட்டை அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டிற்கான உலக முதலீட்டு அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு தொடர்பான மாநாட்டு அமைப்பானது (UNCTAD) தற்போது வெளியிட்டுள்ளது.
- ❖ 2024–25 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் தேயிலை ஏற்றுமதி 2.85% அதிகரித்துள்ளது.
- ❖ ஆசியா மற்றும் பசிபிக் SDG முன்னேற்ற அறிக்கை 2025 ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தினால் (ESCAP) வெளியிடப்பட்டது.
- ❖ உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆனது, "உணவு மற்றும் வேளாண்மைக்கான உலகிலுள்ள நிலம் மற்றும் நீர் வளங்களின் நிலை குறித்த அறிக்கை (SOLAW) 2025 – The State of the World's Land and Water Resources for Food and Agriculture (SOLAW) 2025" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- ❖ 2025 ஆம் ஆண்டு வேளாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பில் பேரழிவுகளின் தாக்கம் குறித்த அறிக்கையை ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வெளியிட்டது.
- ❖ சுற்றுச்சூழல், நிலைத்தன்மை மற்றும் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச மன்றம் (iFOREST) ஆனது வடமேற்கு இந்தியாவிற்கான 2025 ஆம் ஆண்டிற்கான பயிர்த் தாளடி எரிப்பு நிலை குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- ❖ "உலகளாவிய சுகாதார சேவை வழங்கலின் பரவலைக் கண்காணித்தல் (UHC): 2025 உலகளாவிய கண்காணிப்பு அறிக்கை" என்ற அறிக்கையானது உலக வங்கி குழுவால் வெளியிடப்பட்டது.

- உலக வங்கியானது, "உலக மேம்பாட்டு அறிக்கை 2025: மேம்பாட்டுக்கானத் தர நிலைகள்" அறிக்கையை வெளியிட்டது.
- யுனெஸ்கோ அமைப்பானது, "கல்வி உரிமை: கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம்" என்ற அறிக்கையை வெளியிட்டது.
- "Rewiring GVCs in a Changing Global Economy" என்ற அறிக்கையானது ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB), உலக வர்த்தக அமைப்பு (WTO) மற்றும் உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆகியவற்றால் கூட்டாக வெளியிடப்பட்டது.
- யுனெஸ்கோ அமைப்பானது, ஏழாவது "Bhasha Matters: State of the Education Report for India 2025" என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது.

## மாநிலச் செய்திகள்

- முகமூடி அணிந்த நடன முறைகள் மூலம் புத்தாண்டிற்கான அமைதி மற்றும் பெரும் செழுமையைக் கொண்டாடும் சிக்கிமின் காகியேட் நடன விழா ஆனது காங்டாக் நகரில் உள்ள சுக்லகாங் அரண்மனையில் நடைபெற்றது.
- மகாராஷ்டிராவானது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட SSI மந்திர மந்த்ரா அறுவை சிகிச்சை எந்திர மனிதன் எனப்படுகின்ற தனது முதல் அறுவை சிகிச்சை எந்திர மனிதனைப் புனேவின் நோபல் மருத்துவமனைகள் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அறிமுகப் படுத்தியுள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் 38வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் முதன் முறை ஆக நடைபெற உள்ளன.
- இந்தியாவில் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான நிதியியல் மற்றும் புதுமை மிக்க பொருளாதார மாதிரிகள் குறித்து விவாதிப்பதற்காக குஜராத் மாநில அரசானது முதலாவது சர்வதேச ஒலிம்பிக் ஆராய்ச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்ய உள்ளது.
- 2024 ஆம் ஆண்டின் யானைகளின் எண்ணிக்கை கணக்கெடுப்பின் போது அசாமில் 5,828 யானைகள் இருப்பதாகப் பதிவாகியுள்ளது.
- சத்தீஸ்கர் மாநில அரசானது இந்தியாவிலேயே முதன்முறையாக தனது காடுகளின் சுற்றுச்சூழல் அமைப்பு சேவைகளைப் பசுமை சார் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் (பசுமை GDP) இணைக்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- குஜராத் மாநில அரசின் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையானது, அந்த மாநிலத்தில் இந்திய ஓநாய்களின் எண்ணிக்கை 222 ஆக உள்ளதாக மதிப்பிட்டுள்ளது.
- குஜராத் மாநில அரசு ஆனது, ஜாம்நகரில் உள்ள கடல் சார் தேசியப் பூங்கா மற்றும் சரணாலயத்தில் நாட்டின் முதல் கடலோர மற்றும் கடல் பறவைகள் கணக்கெடுப்பை மேற்கொண்டது.
- 'இந்தியாவில் பெண்களுக்கான சிறந்த நகரங்கள் 2024' (TCWI) என்பதின் மூன்றாவது பதிப்பு அறிக்கையில் பெங்களூரு நகரானது சென்னையை விஞ்சியுள்ளது.
- பிரதமர் ஜம்மு காஷ்மீரில் அமைக்கப்பட்டுள்ள சோனமார்க் சுரங்கப் பாதை என்றும் அழைக்கப் படும் 6.5 கி.மீ. நீளமுள்ள Z-மோர்ஹ் என்ற சுரங்கப்பாதையைத் திறந்து வைத்தார்.

- கிரி பிராந்தியத்தினை ஒட்டியப் பகுதிகளில் வாழும் ஹட்டி பழங்குடியினரின் போடா தியோஹர் திருவிழாக்களின் கொண்டாட்டமானது இமாச்சலப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்று வருகிறது.
- S.N.போஸ் அடிப்படை அறிவியல் மையத்தினால் (SNBCBS) மேற்கு வங்காளத்தில் உள்ள பஞ்செட் மலையின் உச்சியில் புருலியா ஆய்வகம் நிறுவப்பட்டது.
- டெல்லி தேசியத் தலைநகரப் பிராந்தியத்தின் ரோங்மெய் என்ற பெண்கள் கலாச்சார நடனக் குழுவானது (RWCDT) 2025 ஆம் ஆண்டு கான்-ஞாய் திருவிழாவினைக் கொண்டாடியது.
- இந்த அருங்காட்சியகம் ஆனது, அந்த நகரத்தின் சுமார் 2,500 ஆண்டுகால வரலாற்றை ஒரு உள்ளார்ந்த மற்றும் ஊடாடும் அனுபவத்தின் மூலம் ஒரு விரிவான காட்சியினை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ஜம்மு-காஷ்மீர் அரசாங்கம் ஆனது, காஷ்மீரில் உள்ள பாரம்பரிய சினார் மரங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் புவிசார் குறியிடல் செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- ஓட்டுநர்கள் ஆண்டுதோறும் சராசரியாக 132 மணிநேரம் போக்குவரத்தில் சிக்கிக் கொள்வதால், ஆசியாவிலேயே மிகவும் மோசமான போக்குவரத்து நெரிசல் கொண்ட நகரங்களில் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் கொல்கத்தா நகரானது உலகின் இரண்டாவது மிகவும் நெரிசலான நகரமாகவும், ஆசியாவின் மிகவும் நெரிசலான நகரமாகவும் இருந்தது.
- நாட்டிலேயே முதல் முறையாக, ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, சுமார் 161 வகையான குடிமைச் சேவைகளை வழங்கக் கூடிய 'மன மித்ரா' என்ற பெயரில் அமைந்த வாட்ஸ்அப் ஆளுகை விவகாரங்கள் சார்ந்த ஒரு வசதியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் அல்லுரி சீதாராம ராஜு என்ற மாவட்டத்தின் அரக்குப் பள்ளத்தாக்குப் பகுதியில் மூன்று நாட்கள் அளவிலான 'சாலி' எனப்படும் அரக்கு உத்சவ் நடைபெற்றது.
- சோலன் மாவட்டத்தில் உள்ள தபோட்டாவில் அமைக்கப்பட உள்ள வட இந்தியாவின் முதல் 1 மெகாவாட் திறன் கொண்ட பசுமை ஹைட்ரஜன் ஆலைக்கு இமாச்சலப் பிரதேச முதல்வர் அடிக்கல் நாட்டினார்.
- ஜார்க்கண்ட் மாநிலக் காவல்துறையானது, மாநிலத்தின் கிராமப்புற மக்களிடையே ஓபியம் சாகுபடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை மிகவும் நன்கு சோதிப்பதற்காக வேண்டி ஒரு தனித்துவமான முன்னெடுப்பினை மேற்கொண்டு அதற்கு "சாக்லேட் போர்" என்று பெயரிட்டுள்ளது.
- இராஜஸ்தான் சட்டமன்றம் வலுக்கட்டாயமாக, மோசடி அல்லது தூண்டுதலால் மேற் கொள்ளப் படும் மத மாற்றங்களைத் தடுப்பதற்காக் என ஒரு மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் அனகப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மலை உச்சியில் அமைந்த ஒரு மிகவும் குக்கிராமமான நீலபந்தாவைச் சேர்ந்தப் பழங்குடியினக் குடும்பங்கள் சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக மின்சார வசதியினைப் பெற்றன.
- பீகார் மாநிலத்தில் "தாமரை / மக்கானா விதை வாரியம்" நிறுவப்பட உள்ளதாக ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- மேற்கு வங்காளத்தின் பிர்பும் மாவட்டத்தில் தியோச்சா பச்சாமி நிலக்கரி சுரங்கத் திட்டத்தின் பணிகள் சமீபத்தில் தொடங்கின.

- மத்தியப் பிரதேசத்தில் மொரண்ட்-கஞ்சல் என்ற நீர்ப்பாசனத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் ஆனது புலிகள் நடமாடும் வனப் பகுதிகளை மூழ்கடிக்கக் கூடும் என்று தேசியப் புலிகள் வளங்காப்பு ஆணையம் (NTCA) எச்சரித்துள்ளது.
- தெலுங்கானாவின் இந்தர்வெல்லி மண்டலத்தில் உள்ள கெஸ்லாப்பூர் கிராமத்தில் 'நகோபா ஜடாரா' கொண்டாடப்படுகிறது.
- பாங்சாவ் கணவாய் சர்வதேசத் திருவிழாவானது, அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள நம்போங் எனுமிடத்தில் நடைபெற்றது.
- கேரளா இந்தியாவின் முதல் முதியோர் ஆணையத்தினை நிறுவ உள்ளது.
- ஒடிசா மாநிலத்தின் சிமிலிபால் புலிகள் வளங்காப்பகத்தில், அதன் காடுகளுக்குள் வேட்டையாடுபவர்கள் மற்றும் வன விலங்குகளின் நடமாட்டம் பற்றிய சில நிகழ்நேர எச்சரிக்கைகளை அனுப்புகின்ற, ஒரு செயற்கை நுண்ணறிவால் (AI) இயக்கப்பட்ட 100 முதல் 150 புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.
- கேரள மாநிலம் nPROUD என்ற முன்னெடுப்பினை (பயன்படுத்தப்படாத மருந்துகளை அகற்றுவதற்கான புதிய திட்டம்) தொடங்க உள்ளது.
- அசாம் மாநிலத்தின் மிசிங் பழங்குடியினர், சமீபத்தில் அலி அய் லிகாங் என்ற ஒரு திருவிழாவைக் கொண்டாடினர்.
- இந்தியத் தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) ஆனது, ஒடிசாவின் ஜாஜ்பூர் மாவட்டத்தில் உள்ள ரத்னகிரி தளத்தில் மேற்கொள்ளப்படும் புதிய அகழ்வாராய்ச்சியின் போது முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த/புத்த மத எச்சங்களைக் கண்டெடுத்துள்ளது.
- காஷ்மீர் சமீபத்தில் பல்குன மாதத்தின் தேய்பிறைக் காலத்தின் 13வது நாளில் ஹேரத் விழாவைக் கொண்டாடியது.
- தானேயின் பிவாண்டி எனுமிடத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜாவிற்காக நிறுவப்பட்டு உள்ள அந்த மாநிலத்தின் முதல் கோவிலை மகாராஷ்டிரா மாநில முதல்வர் திறந்து வைத்துள்ளார்.
- இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும், மிசோரமில் உள்ள வயது வந்தோர் மக்கள் தொகையில் எச்.ஐ.வி பாதிப்பு அதிகமாக உள்ளது.
- வரலாற்றில் "மிகப்பெரிய" ஜூமூர் நடன நிகழ்வு ஆனது அசாமில் நடைபெற்றது.
- மத்தியப் பிரதேச மாநில முதல்வர், மொரேனாவில் உள்ள தேசிய சம்பல் கங்கைநீர் முதலைகள் (கரியல்) சரணாலயத்தினூடே உள்ளே சம்பல் நதியில் 10 கங்கைநீர் முதலைகளை விடுவித்தார்.
- மத்திய அரசானது, 2023 ஆம் ஆண்டில் MISHTI (கடற்கரை வாழ்விடங்கள் மற்றும் மிக உறுதியான வருமானங்களுக்கான சதுப்புநில முன்னெடுப்பு) திட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஏழு தன்னாட்சி நிர்வாகச் சபைகள் தொடர்பான திருத்த மசோதாக்களை அசாம் மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- தீக்காயங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனி விரிவான கொள்கையைக் கொண்ட இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது.
- டெல்லி காவல்துறையானது, 'பெண்களைக் கேலி செய்வதைத் தடுத்தல்' படைகள் என்றும் அழைக்கப்படுகின்ற 'சிஷ்டாச்சர்' படைப் பிரிவினைத் தொடங்க உள்ளது.

- மணிப்பூரில் அமைதியைக் கொண்டு வருவதற்காக என ஹமர் இன்புய் மற்றும் சோமி சபை ஆகியவை இணைந்து பணியாற்ற ஒப்புக்கொண்டுள்ளன.
- மலைப் பாங்கான கிழக்கு ஜெயின்சியா என்ற மாவட்டத்தின் பைண்டிஹாட்டி என்ற பகுதியில் உள்ள சரிங்க்காம்-A எநனுமிடத்தில் முதல் 'அறிவியல் பூர்வ' நிலக்கரிச் சுரங்கத் தொகுதியை மேகாலயா அரசு திறந்து வைத்துள்ளது.
- டெல்லி அரசானது தேசிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தும் 35வது மாநிலம்/ஒன்றியப் பிரதேசமாக ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவில் அதிகாரப்பூர்வமாக இணைந்துள்ளது.
- 'டிஜி கேரளா' எண்ணிமக் கல்வியறிவு திட்டத்தின் உதவியுடன் முழுமையான டிஜிட்டல் கல்வியறிவை அடைந்த முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள குனோ தேசியப் பூங்காவிலிருந்து காந்தி சாகர் வன விலங்குச் சரணாலயத்திற்கு சில சிவிங்கிப் புலிகளை இடமாற்றம் செய்வதற்கு சிவிங்கிப் புலிகள் திட்ட வழிகாட்டுதல் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (AB PM-JAY) திட்டத்தினை செயல்படுத்தும் 34வது மாநிலமாக ஒடிசா மாறியுள்ளது.
- கர்நாடகா மாநில அரசானது இந்திய நாட்டிலேயே முதல் முறையாக பழங்காலப் பொருட்களை ஆவணப்படுத்துவதற்காக என்று கிராம அளவிலான கணக்கெடுப்பை மேற்கொண்டுள்ளது.
- நிரந்தர லோக் அதாலத்களுக்கான இயங்கலை வழி மனு தாக்கல் மற்றும் விசாரணை வசதிகளை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- ஜார்க்கண்ட் மற்றும் சோட்டாநாக்பூர் ஆகிய பகுதிகளானது புத்தாண்டு மற்றும் வசந்த காலத்தின் தொடக்கத்தினை சர்ஹுல் திருவிழாவுடன் கொண்டாடியது.
- மேற்கு வங்காள மாநிலம் வில்லியம் J. கிளிண்டன் அறக்கட்டளை (WJCF) மற்றும் உலக சுகாதார அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து 'மும்முனை நீக்க' முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
- ரோங்காலி பிஹு அல்லது சாத் பிஹு என்றும் அழைக்கப்படும் போஹாக் பிஹு, மிக முதன்மையாக அசாம் மற்றும் பிற வடகிழக்கு மாநிலங்களில் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய இந்தியத் திருவிழாவாகும்.
- குக்கி-சோ குடிமை சமூக அமைப்புகள் ஆனது, மணிப்பூரின் சூரசந்த்பூர் மாவட்டத்தில் உள்ள தாங்ஜிங் மலையில் ஒரு புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு எதிராக மெய்தி சமூகத்தினை "எச்சரிக்கை" செய்துள்ளன.
- திரிபுராவின் கோக்போரோக் சாகித்ய பரிஷத் ஆனது, அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் கோக்போரோக் மொழியைச் சேர்க்க முயன்று வருகிறது.
- சிமிலிபால் தெற்கு மற்றும் சிமிலிபால் வடக்கு பிரிவுகளின் 11 சரகங்களில் பரவியுள்ள சுமார் 845.70 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு ஆனது தேசியப் பூங்காவாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- ஹரியானா அரசாங்கம் ஆனது பிவானி மாவட்டத்தில் 4,400 ஆண்டுகளுக்கும் மேலான ஹரப்பா நாகரிகத்தின் இரண்டு முக்கியத் தளங்களைப் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்களாக அறிவித்துள்ளது.
- தெலுங்கானா அரசாங்கத்தின் நிபுணர் பணிக் குழுவானது அதன் முதல் வகையான 'சார்பு நிலை/வரலாற்று ரீதியான பிற்படுத்தப்பட்ட தன்மை குறியீட்டை' உருவாக்க முடிவு செய்துள்ளது.

- இரயில் பாதைகளை 100% மின்மயமாக்கும் ஒரு நிலையை அடைந்த 24வது மாநிலம் / ஒன்றியப் பிரதேசமாக குஜராத் மாறியுள்ளது.
- ULLAS (சமூகத்தில் அனைவருக்குமான வாழ்நாள் முழுவதுமான கற்றல் குறித்து புரிந்து கொள்தல்) முன்னெடுப்பின் கீழ் முழுமையாக 'கல்வியறிவு பெற்றதாக' அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட முதல் மாநிலமாக மிசோரம் மாறியுள்ளது.
- அசாம் மாநில அரசானது, அசாமி மொழியில் தகவல்களை வழங்கக் கூடிய 'அங்கிதா' என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான செய்தி வாசிப்பாளரை அறிமுகப் படுத்தியுள்ளது, மற்றும் இது பிராந்திய மொழியில் செயல்படும் இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு செய்தி வாசிப்பாளர் இதுவாகும்.
- உத்தரகாண்ட் மாநிலத்தில் மனா என்னுமிடத்திற்கு அருகே உள்ள கேசவ் பிரயாக் எனுமிடத்தில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு புஷ்கர் கும்பம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ஷிருய் லில்லி திருவிழாவானது மணிப்பூரில் கொண்டாடப்படும் ஒரு வருடாந்திரக் கலாச்சார நிகழ்வாகும்.
- நீர்வள மேம்பாடு மற்றும் மேலாண்மை மையத்தினால் (CWRDM) இயக்கப்படுகின்ற கோழிக்கோட்டில் உள்ள நீர் வளப் பாரம்பரிய அருங்காட்சியகம் ஆனது உலகளாவிய நீர் வள அருங்காட்சியக வலையமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.
- தோரியம் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட சிறிய அணு உலைகளை (SMR) நிறுவுவதற்காக வேண்டி ROSATOM எனப்படுகின்ற ரஷ்யாவின் அரசிற்குச் சொந்தமான நிறுவனத்துடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மகாராஷ்டிரா மாநில அரசானது கையெழுத்திட்டுள்ளது.
- ரோங்காலி பிஹு அல்லது சாத் பிஹு என்றும் அழைக்கப்படும் போஹாக் பிஹு ஆனது மிக முக்கியமான அசாமிய பண்டிகையாகும்.
- குஜராத் மாநில அரசானது, இந்தியாவிலேயே முதன்முறையாக விண்வெளித் தொழில் நுட்பத்தில் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்காக '2025–2030 ஆம் ஆண்டு விண்வெளித் தொழில்நுட்பக் கொள்கையினை' அறிவித்துள்ளது.
- இந்த ஆண்டு மார்ச் 20 ஆம் தேதியிலிருந்து ஆப்பிரிக்கப் பன்றிக் காய்ச்சல் (ASF) பாதிப்பானது மீண்டும் பதிவாகத் தொடங்கியதால் மிசோரமில் ஏராளமான பன்றிகள் உயிரிழந்தன.
- ஸ்டெகோடன் கணேசா என்ற யானை இனம் மகாராஷ்டிராவில் கண்டறியப்பட்ட இந்த வகையிலான முதல் இனமாகும்.
- பீகார் மாநிலமானது, 2025 ஆம் ஆண்டு கேலோ இந்தியா இளையோர் விளையாட்டுப் போட்டிக்கு முன்னதாக, புத்த கயாவில் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய மதுபானி ஓவியம் (201.17 சதுர அடி) மற்றும் 375 புத்தத் துறவிகளால் மேற்கொள்ளப் பட்ட பாடல் கிண்ண ஒலிப்பு நிகழ்வு ஆகிய இரண்டு கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்துள்ளது.
- ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள பலமு புலிகள் சரணாலயத்திற்குள் (PTR) அமைந்து உள்ள ஜெய்கிர் கிராமம், அந்தச் சரணாலயத்தின் மைய (பாதுகாக்கப்பட்ட) பகுதிக்கு வெளியே முழுமையாக இடமாற்றம் செய்யப்பட்ட முதல் கிராமமாக மாறுகிறது.
- கேரள மாநிலத்தின் விழிஞ்சத்தில் இந்தியாவின் முதலாவது ஆழ்கடல் போக்குவரத்து துறைமுகத்தினை பிரதமர் தொடங்கி வைத்தார்.
- கேரளாவைச் சேர்ந்த கோழிக்கோடு நகரானது சமீபத்தில் உலக சுகாதார அமைப்பின் முதியோரின் தேவைகளை உள்ளடக்கிய வகையில் வடிவமைக்கப்பட்ட நகரங்கள் மற்றும் சமூகங்களின் உலகளாவிய வலையமைப்பில் (GNAFCC) சேர்க்கப்பட்டுள்ளது.

- 2025 ஆம் ஆண்டு கேர்எட்ஜ் மாநில மதிப்பீடுகள் என்ற தரவரிசையில் மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் கர்நாடகா ஆகியவை சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களாக உருவெடுத்துள்ளன.
- சமீபத்தில், மேகாலயா மாநில அரசானது வேளாண் சார் சுற்றுலா மற்றும் கிராமப்புற வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக ஸ்ட்ராபெரி திருவிழாவினை நடத்தியது.
- சத்தீஸ்கர் மாநில முதலமைச்சர், நவ ராய்ப்பூரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் இயங்கும் தரவு மையப் பூங்காவைத் திறந்து வைத்துள்ளார்.
- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, கிரியேட்டர் லேண்ட் எனப்படும் இந்தியாவின் முதல் பல்லூடகப் பொழுதுபோக்கு நகரத்தினை அமராவதியில் நிறுவுவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- புவி அறிவியல் மற்றும் இமயமலை ஆய்வுகளுக்கான மையம் (CESHS) ஆனது, அருணாச்சலப் பிரதேசத்தின் திராங் பகுதியில் வடகிழக்குப் பிராந்தியத்தின் முதல் புவிவெப்ப ஆற்றல் மீதான உற்பத்திக் கிணற்றை வெற்றிகரமாக அகழ்ந்துள்ளது.
- மகாராஷ்டிரா நவி மும்பையில் ஒரு EduCity–கல்வி நகரத்தினை அமைக்க உள்ளது.
- கர்நாடகாவின் நகர்ஹோலே புலிகள் வளங்காப்பகத்தில் வனவிலங்குப் பாதுகாப்பு மற்றும் புலிகள் வளங்காப்பை அதிகரிக்கும் முயற்சியில் 40 ஆண்டுகளுக்கு முன்பு ஜெனு குருபா சமூகத்தினர் வெளியேற்றப் பட்டனர்.
- 'Vruthi 2025: The Clean Kerala Conclave' என்ற தலைப்பிலான ஐந்து நாட்கள் அளவிலான ஒரு மாநாடானது சமீபத்தில் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.
- மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய இரு மாநில அரசுகள் ஆனது தபதி நதிப் படுகையின் மாபெரும் நீர்மட்ட மீட்சித் திட்டத்தினை இணைந்து செயல்படுத்தச் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- மேற்கு மத்தியப் பிரதேசத்தின் ஜபுவா மற்றும் அலிராஜ்பூர் ஆகிய மாவட்டங்களில் பீல் மற்றும் பிலாலா பழங்குடியினர் அதிகம் வாழும் இடங்களில் D3 திட்டம் எனும் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.
- இராஜஸ்தானின் சமையல் வகையில் சாங்க்ரி எனும் ஒரு தனித்துவமான சுவையைச் சேர்க்கும் மெல்லிய பீன்/அவரை வகைக்கு புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளது.
- போனலு என்பது தெலுங்கானாவில், குறிப்பாக ஐதராபாத் மற்றும் செகந்திராபாத்தில் கொண்டாடப்படும் ஓர் இந்து பண்டிகையாகும்.
- கேரள மாநில வனவிலங்கு வாரியமானது கண்ணூரில் உள்ள ஆரளம் வனவிலங்கு சரணாலயத்தை ஆரளம் வண்ணத்துப்பூச்சி சரணாலயம் என்று மறுபெயரிட்டுள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் சோன்பத்ராவில் உள்ள சல்கான் புதைபடிவப் பூங்காவானது, யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரிய தளங்களின் தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளது.
- இந்தியாவின் அணுசக்தித் திட்டத்தின் கீழ் அணுமின் நிலையத்தை அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாநிலங்களில் பீகாரும் ஒன்றாகும்.
- ULLAS – நவ பாரத் சாக்சார்த்த காரியக்ரம் திட்டத்தின் கீழ் திரிபுரா முழு கல்வியறிவு நிலையைப் பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ அசாம் மாநிலத்தில் திருநர் சமூகத்திற்கு இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) அந்தஸ்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ கர்நாடக மாநில அரசானது, மதச் சிறுபான்மையினருக்கான வீட்டுவசதி ஒதுக்கீட்டை 10 சதவீதத்திலிருந்து 15% ஆக உயர்த்தியுள்ளது.

❖ மத்தியப் பிரதேச மாநிலத்தின் போபால் நகரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையின் தேசிய அளவில் அதிகப் பாதுகாப்பு நடவடிக்கை தேவைப்படும் விலங்கு நோய் ஆய்வு நிறுவனமானது (ICAR–NIHSAD) A வகை ரைண்டர்பெஸ்ட் வைரஸ் காப்பு மையமாக நியமிக்கப்பட்டுள்ளது.

❖ பீகார் மாநிலத் தேர்தல் ஆணையம் ஆனது ஆண்ட்ராய்டு அடிப்படையிலான ஒரு கை பேசியினைப் பயன்படுத்தி இந்தியாவின் முதல் கைபேசி அடிப்படையிலான இணைய வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது.

❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 'தல்லிகி வந்தனம்' என்ற புதிய நலத்திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

❖ இந்தியாவின் வடகிழக்குப் பகுதியிலிருந்து ஏற்றுமதி செய்யப் படுகின்ற முதலாவது ஆல்கஹால் வகையாக மேகாலயாவின் சிரபுஞ்சி ஈஸ்டர்ன் கிராஃப்ட் வகை ஜின் மாறி உள்ளது.

❖ பிராந்திய ரீதியாக சேரா என வெகுவாக அழைக்கப்படும் இந்தியச் சாரைப் பாம்பு (தியாஸ் முயூகோஷா) ஆனது கேரள மாநிலத்தின் அதிகாரப்பூர்வ ஊர்வன இனமாக அறிவிக்கப் பட உள்ளது.

❖ கோவா மாநிலத்தின் ஓஸோ ஃபெனி பானமானது, புவிசார் குறியீட்டினைப் பெற்ற இந்தியாவின் முதல் ஃபெனி பானம் ஆகும்.

❖ மகாராஷ்டிராவின் சிந்துதுர்க் மாவட்டத்தில் உள்ள வெங்குர்லாவில் உள்ள நிவதி ராக்ஸ் எனப் படும் பாறை அமைப்பு அருகே நிறுத்தப்பட்டுள்ள படையிலிருந்து நீக்கப் பட்ட INS குல்தார் எனும் போர்க்கப்பலைச் சுற்றி இந்தியாவின் முதல் கடலடி அருங் காட்சியகம் மற்றும் செயற்கை பவளப்பாறை ஆனது உருவாக்கப்பட உள்ளது.

❖ வங்காளதேச எல்லைக்கு அருகிலுள்ள "எளிதில் பாதிக்கப்படக் கூடிய மற்றும் தொலை தூர" பகுதிகளில் வாழும் "அந்தப் பகுதியில் வாழும் அசல் குடியிருப்பாளர்கள் மற்றும் பழங்குடியினச் சமூகங்களுக்கு" ஆயுத உரிமங்களை வழங்கும் திட்டத்தை அசாம் அமைச்சரவை அங்கீகரித்தது.

❖ தேசிய e–Vidhan செயலி (NeVA) தளத்தினை ஏற்றுக் கொண்ட நாட்டின் 19வது சட்ட மன்றமாகப் புதுச்சேரி மாறியுள்ளது.

❖ ஒரு பெருநகரத்தின் விளிம்போரப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான (80–85) சிவிங்கிப் புலிகள் சுதந்திரமாக வாழ்கின்ற பகுதி என்ற அடிப்படையில் மும்பையை விஞ்சி, பெங்களூரு நகரானது, அதிகாரப்பூர்வமாக இந்தியாவின் 'சிவிங்கிப் புலியின் தலைநகராக' மாறியுள்ளது.

❖ கேரள மாநிலமானது, ஐந்து பொதுவான வகை சுதந்திரமாக/கட்டுப்பாடின்றி வாழும் அமீபாவை (FLA) அடையாளம் காண வேண்டி அதன் சொந்த மூலக்கூறு கண்டறியும் சோதனைக் கருவிகளை உருவாக்கியது.

❖ NLC இந்தியா நிறுவனமானது, உத்தரப் பிரதேசத்தில் உள்ள அதன் 660 மெகாவாட் திறன் கொண்ட மூன்று அலகு கட்டம்பூர் அனல் மின் நிலையத்தின் முதல் அலகின் வணிக ரீதியான செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளது.

- அசாம் மற்றும் மேகாலய மாநில அரசாங்கங்கள் ஆனது கூட்டாக இணைந்து 55 மெகாவாட் திறன் கொண்ட குல்சி நீர்மின்சாரம் மற்றும் நீர்ப்பாசன நிலையக் கட்டமைப்பினை நிறுவ முடிவு செய்துள்ளன.
- லாட்ஹார் மாவட்டத்தில் உள்ள பார்வடிஹ் மேற்கு வனப்பகுதிகளின் விளிம்போரப் பகுதியில் தனது மாநிலத்தின் புலிகளை காண்பதற்கான முதலாவது சுற்றுப்பயண அம்சங்களை நிறுவுவதற்கு ஜார்க்கண்ட் மாநில அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
- 1972 ஆம் ஆண்டில் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகளின்படி, மகாராஷ்டிர மாநிலத்தின் தடோபா–அந்தாரி புலிகள் வளங்காப்பகத்துடன் தெலங்கானா மாநிலத்திலுள்ள கவால் புலிகள் வழித் தடத்தினை இணைக்கச் செய்யும் புலிகள் வழித்தடப் பகுதியை தெலுங்கானா மாநில அரசு அறிவித்து ள்ளது.
- கேரள மாநில அரசானது, லைபீரிய நாட்டின் சரக்குக் கப்பல் விபத்தை அம்மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவித்துள்ளது.
- அதிரண்ணி (மெலஸ்டோமா மலபாத்ரிகம்) கோழிக்கோடு மாவட்டத்தின் மலராகவும், மெனிப்பொன்மன் என்பது (செய்க்ஸ் எரிதாக்கா) அம்மாவட்டத்தின் பறவையாகவும் அறிவிக்கப் பட்டது.
- இந்தியா–சீனா மோதல் நடைபெற்ற எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு சிக்கிமில் உள்ள டோக்லாம் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதியளிக்க உள்ளது.
- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் இந்தியாவின் இரண்டாவது மிக நீளமான கம்பிவட தாங்கு பாலமானகர்நாடகாவின் சிவமோகா மாவட்டத்தின் சாகர் தாலுக்காவில் ஷராவதி உப்பங் கழியின் குறுக்கே கட்டப்பட்ட சிகந்தூர் பாலத்தைத் திறந்து வைத்தார்.
- கேரள உயர் நீதிமன்றம் ஆனது பொறுப்பான மற்றும் வரையறுக்கப்பட்டப் பயன்பாட்டை மையமாகக் கொண்ட இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாடு குறித்த நீதித்துறை கொள்கையை வெளியிட்டது.
- மாநிலத்தில் பால் துறையை மேம்படுத்தும் முயற்சியில், விவசாயிகளுக்கு ஒரு லிட்டர் பாலுக்கு 5 ரூபாய் மானியம் வழங்குவதற்காக அசாம் மாநில அரசு பால் மானியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- L&T நிறுவனம், ஹரியானாவின் பானிபட்டில் உள்ள இந்தியன் எண்ணெய் உற்பத்திக் கழகத்தில் (IOCL) இந்தியாவின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையை அமைக்க உள்ளது
- இராஜஸ்தானின் பிகானேரில் உள்ள நோகாவில் 435 மெகாவாட் திறன் கொண்ட கோர்பியா சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையமானது எட்டு மாதங்களுக்குள் முடிக்கப் பட்டது.
- ஜார்க்கண்ட் மாநில அரசானது சமீபத்தில் இந்தியாவின் முதல் சுரங்கச் சுற்றுலாத் திட்டத்தைத் தொடங்கியது.
- காசநோய் (TB) தொற்றைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்காக என்று கேரளா Cy–TB எனப்படும் புதிய தோல் பரிசோதனையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஆந்திரப் பிரதேச முதல்வர் சந்திரபாபு நாயுடு பசுமை ஹைட்ரஜன் பள்ளத்தாக்குப் பிரகடனத்தை வெளியிட்டார்.

- உத்தரகாண்ட் மாநிலமானது 14 மிகவும் அருகி வரக்கூடிய "செந்நிறப் பிரிவில்" உள்ள தாவர இனங்களின் பட்டியலை புதுப்பிக்க ஒரு தனித்துவமான திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- பொறுப்பான கல்வி தொழில்நுட்பத்தில், கேரள மாநிலத்தின் KITE முன்னெடுப்பினை உலகளாவியச் சிறந்த நடைமுறையாக யுனிசெஃப் அங்கீகரித்துள்ளது.
- எண்ணிம ரீதியான குற்றப் பதிவு மோசடியில் முதல் தண்டனை– மேற்கு வங்காளம் என்ற இணையவெளி மோசடி வழக்கில் இந்தியாவின் முதல் தண்டனை இதுவாகும்.
- சம்பாய் மாவட்டத்தின் லியான்ஃபூய் கிராமத்தில் உள்ள லுங்ஃபூன் ரோபுய் மென்ஹிர்கள்/நெடுங்கல் ஆனது இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையால் (ASI) அதிகாரப் பூர்வமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நினைவுச் சின்னமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- கால்நடை வளர்ப்புக்கு வேளாண் அந்தஸ்து வழங்கிய முதல் இந்திய மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- பழங்குடியினச் சமூகங்களை மட்டுமே மையமாகக் கொண்ட மரபணுத் தொகுதி வரிசையாக்க முன்னெடுப்பைத் தொடங்கிய முதல் இந்திய மாநிலமாக குஜராத் மாறி உள்ளது.
- நிலப் பதிவை நவீனமயமாக்குவதற்காக இமாச்சலப் பிரதேச மாநில அரசானது 'My Deed' NGDRS (தேசியப் பொது ஆவணப் பதிவு முறை) என்ற முன்னெடுப்புத் திட்டத்தைத் தொடங்கியது.
- பஞ்சாப் அரசு ஆனது, 2025 ஆம் ஆண்டு புனித நூல்களை மதிக்காமல் அவற்றிற்கு எதிரான குற்றங்களைத் தடுக்கும் மசோதாவினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேகாலயாவின் ஜோவாயில் ப்னார் சமூகத்தின் கலாச்சாரப் பாரம்பரியத்தை மிகவும் பிரதிபலிக்கின்ற பெஹ்தீன்க்லாம் திருவிழா கொண்டாடப்பட்டது.
- அசாம் மாநில முதல்வர் கௌஹாத்திக்கு அருகிலுள்ள சோனாப்பூரில் நாட்டின் முதல் நீர் சார் தொழில்நுட்பப் பூங்காவைத் திறந்து வைத்தார்.
- கேரளப் பள்ளிகள் பாரம்பரியமான இறுதிவரிசை இருக்கை அமைப்புகளை U–வடிவ அமைப்புகளுக்குப் பதிலாக மாற்றுகின்றன என்ற ஒரு நிலையில் இது உள்ளடக்கம் மற்றும் பங்கேற்பை ஊக்குவிக்கிறது.
- 2024–25 ஆம் ஆண்டில் பிரஞ்சுப் பொரியல் (French fries) மற்றும் வறுவல்/சிப்ஸுக்குப் பயன்படுத்தப்படும் பதப்படுத்தப்பட்ட உருளைக்கிழங்கின் இந்தியாவின் முன்னணி உற்பத்தியாளராக குஜராத் மாறியுள்ளது.
- சிக்கிம் மாநிலத்தின் பாக்யாங் மாவட்டத்தில் உள்ள யாக்டென், அந்தமாநிலத்தின் 'நாடோடி சிக்கிம்' முன்னெடுப்பின் கீழ் இந்தியாவின் முதல் எண்ணிம நாடோடி கிராமமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- உத்தரகாண்ட் மாநில அரசானது அதன் முதல் புவிவெப்ப ஆற்றல் கொள்கைக்கு தனது ஒப்புதல் அளித்துள்ளது.
- மின்கல உற்பத்தி மற்றும் புதிய எரிசக்தி தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பில் தம் மாநிலத்தின் தலைமைத்துவத்திற்காக என தெலுங்கானா மாநில அரசானது இந்தியா எரிசக்தி சேமிப்புக் கூட்டணியின் (IESA) 2025 ஆம் ஆண்டு தொழில் சிறப்பு விருதினைப் பெற்றது.

- உலகளவில் போட்டித்தன்மை வாய்ந்த கப்பல் சார் சுற்றுலா சூழலை உருவாக்கச் செய்வதற்கான பாரத் பயணியர் கப்பல் திட்டத்தில் அதிகாரப்பூர்வமாக இணைந்த முதல் இந்திய மாநிலமாக குஜராத் மாறியுள்ளது.
- நகர்ப்புற ஏழைப் பெண்கள் எண்ணிமச் சேவை வழங்குநர்களாக மாறுவதற்காக என ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 'டிஜி-லட்சுமி' என்ற புதிய முக்கியத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மகாராஷ்டிரா மாநில அரசானது, 'சர்வஜனிக் கணேஷோத்சவ்' நிகழ்வினை மாநில விழாவாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.
- அசாம் மாநில அமைச்சரவையானது, அந்த மாநிலத்தில் மனித-யானை மோதலை எதிர்த்துப் போராடுவதற்கான 'கஜா மித்ரா' திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- கேரளாவின் முதல் தோல் வங்கியானது, விரைவில் திருவனந்தபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தொடங்கப்பட உள்ளது.
- மழைக்காலத்தில் கொசுப் பிரச்சினைகளைக் கட்டுப்படுத்துவதற்காக என்று ஆந்திரப் பிரதேச மாநில அரசானது திறன் மிகுந்த கொசு கண்காணிப்பு அமைப்பு (SMoSS) என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- மத்தியப் பிரதேச மாநில அமைச்சரவையானது சுயசார்பு கிராமப்புற மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்காக வேண்டி முக்கிய மந்திரி பிருந்தாவன் கிராம யோஜனா என்ற திட்டத்தினை அங்கீகரித்துள்ளது.
- கிராமங்களில் இருக்கும் வறுமை நிலையைக் குறைப்பதற்காக இராஜஸ்தான் மாநில அரசானது, 'பண்டிட் தீன்தயாள் உபாத்யாய கரிபி முக்த் காவ்ன் யோஜனா' எனும் ஒரு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட பங்குச் சந்தை முதலீட்டாளர்களைக் கொண்ட மூன்றாவது மாநிலமாக குஜராத் மாறியுள்ளது.
- அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களிலும் 2022 ஆம் ஆண்டில் பிறப்பின் போது மிகக் குறைந்த பாலின விகிதத்தை பீகார் பதிவு செய்துள்ளது.
- நகராட்சித் தேர்தல்களின் போது கைபேசிகளைப் பயன்படுத்தி வாக்களிக்கும் முதல் மாநிலமாக பீகார் மாற உள்ளது.
- நீடித்த நிலைத் தன்மை, சுற்றுலா மற்றும் உள்ளூர் வேலைவாய்ப்புகளை மேம்படுத்தச் செய்வதற்காக பாட்னா அதன் நீர் வழி மெட்ரோ சேவையினைத் தொடங்க உள்ளது.
- கேரள மாநிலத்தின் வனத்துறையானது, குல்லாய் குரங்குகளின் அதிகரித்து வரும் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்காக என, குல்லாய் குரங்கு (போனட் மக்காக்) குரங்குகளைப் பெருமளவில் கருத்தடை செய்யும் பணியைத் தொடங்க உள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள மச்சிலிப்பட்டினம் பசுமைவழியான துறைமுகத்தின் கட்டுமானப் பணிகளில் சுமார் 48% பணிகள் நிறைவடைந்துள்ளதையடுத்து, 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் அதன் செயல்பாடுகள் தொடங்கப்படலாம்.
- பொது விநியோக கட்டமைப்பின் (PDS) கீழ், ரேஷன் பொருள் விநியோகத்திற்காக என ஆதார் அடிப்படையிலான முக அடையாள அங்கீகார தொழில்நுட்பத்தினை (FaceAuth) பயன்படுத்தும் இந்தியாவின் முதல் மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் மாறியுள்ளது.
- இந்தூர் மாநகராட்சிக் கழகமானது, மத்தியப் பிரதேசத்தில் (MP) ஒரு புதிய எண்ணிமத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

- சைபர் மோசடி வழக்கில் டிஜிட்டல்வழி கைது குற்றத்திற்கு தண்டனை பெற்றுத்தந்த இந்தியாவின் முதல் மாநிலமாக மேற்கு வங்கம் உருவெடுத்துள்ளது.
- கவ்ரி விழா என்பது இராஜஸ்தானில் உள்ள மேவாரின் பில் மக்களின் 40 நாட்கள் அளவிலான சடங்காகும்.
- ஜெய்சால்மர் மாவட்டத்தில் உள்ள ரதடியா ரி தேரியில் ஒரு புதிய ஹரப்பா குடியேற்றம் கண்டறியப்பட்டுள்ளது என்பதோடு இது இராஜஸ்தானின் பாலைவனப் பகுதியில் உள்ள முதல் சிந்து சமவெளி தளத்தைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் முறையான ஓய்வேற்பு விடுப்புத் திட்டத்தை அறிமுகப் படுத்திய முதல் இந்திய மாநிலமாக சிக்கிம் மாறியது.
- 2015 ஆம் ஆண்டு சிறார் நீதிச் சட்டத்தின் கீழ் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் சிறப்புக் கல்வியாளர்களை நியமித்த இந்தியாவின் முதல் மாநிலமாக பஞ்சாப் மாறியுள்ளது.
- சத்தீஸ்கரின் மகாசமுந்த் மாவட்டத்தின் பாலுகோனா–ஜம்னிதி தொகுதியில் நிக்கல்–செம்பு–பிளாட்டினம் குழு கனிமக் கூறுகளின் (Ni–Cu–PGE) சல்பைடு என்ற கனிமமய மாக்கலின் குறிப்பிடத் தக்க கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கேரள மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையம் ஆனது, கோழிக்கோட்டின் மூடடி பஞ்சாயத்தில் வெப்பத் தகவமைவு கொண்ட மூடடி திட்டத்தைத் தொடங்கியது.
- மகாராஷ்டிராவின் கிராமப்புற நாக்பூரில் 1,800 குடியிருப்பாளர்களைக் கொண்ட சத்னாவ்ரி, ஒரு சோதனைத் திட்டத்தின் கீழ் இந்தியாவின் முதல் திறன்மிகு நுண்ணறிவு கிராமமாக மாற உள்ளது.
- சிக்கிம் மாநிலம், பணிக்குச் செல்லாத 32,000 தாய்மார்களுக்கு தலா 20,000 ரூபாய் காசோலைகளை வழங்குவதன் மூலம் பெண்களுக்கான தனது மாபெரும் திட்டத்தினைத் தொடங்கியது.
- பஞ்சாப் அரசானது, ஆளில்லா விமானங்கள் மூலமான போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தலைத் தடுக்க இந்தியா–பாகிஸ்தான் எல்லையில் மூன்று பாஸ் அக் (Hawk Eye) ஆளில்லா விமான எதிர்ப்பு அமைப்புகளை நிலைநிறுத்தியுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் திபாங் பள்ளத்தாக்கு மாவட்டத்தில் 3,097 மெகாவாட் திறன் கொண்ட எட்டாலின் நீர்மின் நிலையத்திற்கு (HEP) சுற்றுச்சூழல் அனுமதியை வழங்க நிபுணர் மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்துள்ளது.
- மகாராஷ்டிரா மற்றும் அசாம் மாநிலங்களில் இரண்டு பாதுகாப்புத் தொழில்துறை வழித் தடங்களை நிறுவ இந்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- கேரள மாநில நிதி நிறுவனங்கள் (KSFE) நிறுவனமானது, இந்தியாவில் 1 லட்சம் கோடி ரூபாய் வணிக வருவாயைக் கடந்த முதல் இதர வங்கி சாரா நிதி நிறுவனமாக (NBFC) மாறியது.
- பஞ்சாப் மாநில அரசானது, யுத் நஷேயன் விருத் (போதைப் பொருட்களுக்கு எதிரான போர்) நடவடிக்கையில் காவல்துறை முயற்சிகளை ஆதரிக்கும் வகையில் முதல் முறையாக வெகுமதி வழங்கீட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- அருணாச்சலப் பிரதேச அரசானது, அஞ்சாவ் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட கலை–II நீர்மின் நிலையத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதிக்காக ஒரு பொது விசாரணையை நடத்தியது.

- கேரளா இந்தியாவின் முதல் முழுமையான டிஜிட்டல் கல்வியறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- நவி மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுக அறக்கட்டளை (JNPT) மற்றும் பால்கரில் உள்ள வாதவன் துறைமுகம் இடையே ஹைப்பர் லூப் எனும் அதிவேகப் போக்குவரத்து அமைப்பு மூலமான சரக்கு வழித்தடத்தினை இயக்க உள்ள உலகின் முதல் பிராந்தியமாக மகாராஷ்டிரா மாநிலம் மாற உள்ளது.
- பீகார் மாநில முதல்வர் நிதீஷ் குமார் பெண்கள் அதிகாரமளிப்பிற்கான முக்கிய மந்திரி மகிளா ரோஜ்கர் யோஜனா சிறப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- நுவாகாய் என்பது அந்தப் பயிர் பருவத்தின் புதிய அரிசியை வரவேற்க கொண்டாடச் செய்வதற்காக, ஒடிசாவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அறுவடைத் திருவிழா ஆகும்.
- இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் (NHAI) ஆனது குஜராத்தில் உள்ள NH-48 சாலையில் உள்ள சோரியாசி கட்டணச் சாவடியில் முதல் பல வழிப்பாதை கொண்ட தடுப்பில்லா போக்குவரத்துக் கட்டண (MLFF) முறையைத் தொடங்கியது.
- கேரளாவின் திருவனந்தபுரத்தில் சிறுபான்மை மீனவக் குடும்பங்களை மேம்படுத்துவதற்காக மத்ஸ்ய சக்தி திட்டம் தொடங்கப்பட்டது.
- பிரதமர் பீகார் இராஜ்ய ஜீவிகா நிதி சாக் சஹ்காரி சங்க லிமிடெட் நிறுவனத்தை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம் தேதியன்று தொடங்கி வைத்தார்.
- குஜராத் மாநிலத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள மத்தனோமத் கிராமத்தில் மஞ்சள் நிறத்தில் இரும்புச்சத்து நிறைந்த சல்பேட் கனிமமான ஜரோசைட் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்தினர்.
- கௌஹாத்தி பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையுடன் இணைந்து, அசாம் மாநிலத்தில் உள்ள We Foundation India தலைமையிலான குழு, கழுகு வளங்காப்பில் பணிபுரியும் தனிநபர்களை ஒரு வலையமைப்பிற்குள் இணைப்பதற்கான இந்தியாவின் முதல் தளத்தினைத் தொடங்கியது.
- ஆந்திரப் பிரதேச அரசானது விசாகப்பட்டினத்தில் ஒரு சிறப்பு செயற்கை நுண்ணறிவு (AI) மையத்தை அமைப்பதற்காக டெக் பாரத் அறக்கட்டளையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- தனியார் துறை ஊழியர்களுக்கான அதிகபட்சத் தினசரி வேலை நேரத்தை ஒன்பது மணி நேரத்திலிருந்து பத்து மணி நேரமாக அதிகரிக்க மகாராஷ்டிரா அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- iFOREST மற்றும் புவனேஸ்வர் மாநகராட்சிக் கழகம் ஆகியவை நகரத்திற்கான ஒருங்கிணைந்த வெப்பம் மற்றும் குளிரூட்டும் செயல் திட்டத்தை வெளியிட்டன.
- பீங்கான் கழிவுகளால் ஆன உலகின் முதல் பூங்காவான 'அனோகி துனியா' உத்தரப் பிரதேசத்தின் குர்ஜாவில் திறக்கப்பட உள்ளது.
- 99.30 சதவீத எழுத்தறிவு விகிதத்துடன் இமாச்சலப் பிரதேசம் 4வது முழு எழுத்தறிவு பெற்ற மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இமயமலைச் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் பிராந்தியத்தைப் பாதுகாப்பதற்காக உத்தரகாண்ட் மாநிலத்தில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 09 ஆம் தேதியன்று இமயமலை திவாஸ் கொண்டாடப்படுகிறது.
- மாதிரிப் பதிவுக் கணக்கெடுப்பின் (SRS) படி, 2023 ஆம் ஆண்டில் கேரளாவின் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் (IMR) 1,000 பிறப்புகளுக்கு 5 ஆகக் குறைந்துள்ளது.

- ❖ கேரள அரசானது, மாநிலத்திற்கான நகர்ப்புறக் கொள்கையை உருவாக்கி இறுதி செய்வதற்காக கொச்சியில் இந்தியாவின் முதல் நகர்ப்புற மாநாட்டினை நடத்தியது.
- ❖ கேரளா 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கேரள நகர்ப்புறக் கொள்கை ஆணையம் (KUPC) எனப்படும் இந்தியாவின் முதல் மாநில அளவிலான நகர்ப்புறக் கொள்கை அமைப்பை நிறுவியது.
- ❖ 2025 ஆம் ஆண்டில், ராம்சர் உடன்படிக்கையின் கீழ் உதய்ப்பூருக்கு ஈரநில நகர அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- ❖ அசாம் மாவட்டத்தின் கர்பி அங்லாங் மாவட்டத்தில் உள்ள உம்சோவாய் கிராமத்தில் உள்ள திவா பழங்குடியினர், நல்ல ராபி பயிர் பருவத்திற்கான பண்டிகை பிரார்த்தனையாக 2025 ஆம் ஆண்டு லாங்குன் பண்டிகையை கொண்டாடினர்.
- ❖ வயநாட்டில் உள்ள முண்டக்கை-சூரல்மலை நிலச்சரிவு ‘Grey Rhino’ நிகழ்வாக அடையாளம் காணப்பட்டது.
- ❖ கேரள அமைச்சரவையானது 2025 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்பு (திருத்தம்) மசோதா வரைவை அங்கீகரித்தது.
- ❖ மன்கி-முண்டா அமைப்பு என்பது ஜார்க்கண்டின் கோல்ஹான் பகுதியில் உள்ள ஹோ பழங்குடியினரின் பாரம்பரிய சுயாட்சி மாதிரியாகும்.
- ❖ பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பை சுழியமாக குறைத்த நாட்டின் முதல் ஒன்றியப் பிரதேசமாக புதுச்சேரி உருவெடுத்துள்ளது.
- ❖ மணிப்பூர் மாநிலத்தின் உக்ருல் மாவட்டத்தில் உள்ள சிராராகோங் கிராமத்தில் 14வது சிராராகோங் ஹாதே மிளகாய் திருவிழா தொடங்கப்பட்டது.
- ❖ பெண்களின் பொருளாதார அதிகாரமளிப்புக் (WEE) குறியீடு உத்தரப் பிரதேச அரசாங்கத்தினால் தொடங்கப்பட்டது.
- ❖ சத்தீஸ்கரின் பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ள முன்னாள் மாவோயிஸ்ட் தளமான கர்ரேகுட்டா மலைகளில் அரசாங்கம் ஒரு வனப் போர் பயிற்சிப் பள்ளியை அமைத்து வருகிறது.
- ❖ உத்தரப் பிரதேசத்தில் பெண்களின் பாதுகாப்பு, கண்ணியம் மற்றும் அதிகாரமளிப்பை வலுப்படுத்துவதற்காக சக்தி திட்டம் 5.0 தொடங்கப்பட்டது.
- ❖ ஐக்கிய நாடுகள் சபையின் உலகச் சுற்றுலா அமைப்பால் 'சிறந்த சுற்றுலா கிராமம்' என்று உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட தோர்டோ கிராமம், தற்போது முழுமையாக சூரிய சக்தியில் இயங்குகிறது.
- ❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசானது மன மித்ரா எனப்படும் வாட்ஸ்அப் அடிப்படையிலான நிர்வாக தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ "Healthy Women, Empowered Families" பிரச்சாரத்தின் போது, சத்தீஸ்கரில் உள்ள சூரஜ்பூர் மாவட்ட நிர்வாகமானது 75 கிராமப் பஞ்சாயத்துகளை "குழந்தைத் திருமணம் இல்லாதவையாக" அறிவித்துள்ளது.
- ❖ கொல்கத்தாவில் உள்ள பாலியல் தொழிலாளர்களின் கூட்டமைப்பான தர்பார் மகிளா சமன்வயா குழு (DMSC), 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அதன் 30 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.
- ❖ விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 28வது தேசிய இணைய ஆளுகை மாநாடு (NCeG) விசாகப்பட்டினம் பிரகடனத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் நிறைவடைந்தது.

- முதன்மையாகப் பெண்களால் கொண்டாடப்படும் மலர்த் திருவிழாவான பதுக்கம்மா, தெலுங்கானாவின் அதிகாரப்பூர்வ மாநில விழாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- 'குழந்தை திருமண முறையிலா இந்தியா' பிரச்சாரத்தின் கீழ் சத்தீஸ்கரில் உள்ள பலோட் மாவட்டம் நாட்டின் முதல் குழந்தை திருமண முறையிலா மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பீகார் மாநிலத்தில் நவம்பர் 06 மற்றும் 11 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறும் என்பதோடு அதற்கான முடிவுகள் நவம்பர் 14 ஆம் தேதியன்று அறிவிக்கப் படும்.
- தெலுங்கானா மாநிலமானது, அனைத்து இந்திய மாநிலங்களிலும் அதிக தனிநபர் ஒருங்கிணைந்த பண வழங்கீட்டு இடைமுகம் (UPI) சார்ந்த பரிவர்த்தனை செறிவினைக் கொண்டுள்ளது.
- கொல்கத்தா நான்காவது ஆண்டாக இந்தியாவின் பாதுகாப்பான நகரமாக திகழ்கிறது.
- ஆரவல்லி மலைகளை புவியியல் காலம் மற்றும் 100 மீட்டர் என்ற குறைந்தபட்ச உயரம் கொண்டது என்று வரையறுக்க ஹரியானா அரசு பரிந்துரைக்கிறது.
- குஜராத்தின் ஜூனாகத் மாவட்டத்தில் உள்ள எளிதில் பாதிக்கப்படக் கூடிய பழங்குடியினர் குழுவான சித்தி என்ற சமூகத்தினர் 72 சதவீதத்திற்கும் மிக அதிகமான கல்வியறிவு விகிதத்தை அடைந்துள்ளனர்
- அசாம் அரசானது, ஜப்பானில் மொழிப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்காக முதலமைச்சரின் உலகளாவிய மனிதத் திறமைக்கான வெளிநாட்டு மொழிகள் முன்னெடுப்பினைத் (CM-FLIGHT) தொடங்கியது.
- குருகிராம், போக்குவரத்து பணம் செலுத்துச் சீட்டுகளை டிஜிட்டல் முறையில் செலுத்துவதற்காக இந்தியாவின் முதல் QR குறியீடு அடிப்படையிலான முனையங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.
- உத்தர பிரதேச முதலமைச்சர் கோமதி நதியின் தூய்மையான மற்றும் தொடர்ச்சியான ஓட்டத்தை மீட்டெடுப்பதற்காக கோமதி நதி புத்துயிர்ப்புத் திட்டத்தினைத் தொடங்கியுள்ளார்.
- நயிங் நீர்மின் நிலையம் என்பது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சியோம் (யோம்கோ) நதியில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 1,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையமாகும்.
- கர்நாடகாவின் தார்வாடில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் DhaRti BioNest தொழிற்காப்பு மையம் திறக்கப்பட உள்ளது.
- 50 சுற்றுலாத் தலங்களை உலகளாவிய தரநிலைகளில் மேம்படுத்துவதற்கான தேசிய முன்னெடுப்பின் கீழ், நாகாலாந்து அரசானது மாநிலத்தின் அதிகாரப்பூர்வப் பரிந்துரையாக ட்சுகோ பள்ளத்தாக்கினை முன்மொழிந்துள்ளது.
- மகாராஷ்டிராவில் உள்ள அகோலா காவல்துறை செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வுகளைப் பயன்படுத்தி மீண்டும் மீண்டும் நிகழும் குற்றங்களைத் தடுக்க திரிநேத்ரா திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- மத்தியப் பிரதேச அமைச்சரவையானது முதன்முறையாக கோடோ மற்றும் குட்கி சிறு தானியங்களை அதிகளவில் உற்பத்தி செய்யும் மாவட்டங்களிலிருந்து கொள்முதல் செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

- அசாமில் உள்ள போடோ சமூகத்தின் பண்டைய பத்தௌ மதம் வரவிருக்கும் இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் தனிக் குறியீட்டைப் பெற உள்ளது.
- பசுமை இந்தியா சவால் (GIC) முன்னெடுப்பானது, தெலுங்கானாவின் அடிலாபாத் மாவட்டத்தில் உள்ள முல்லகுட்டா 2 என்ற கிராமத்தில் ஒரு மூங்கில் தோட்டத்திற்கான சோதனைத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- அயோத்தி தீபத் திருவிழா 2025 ஆனது கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்தது.
- குஜராத்தின் கட்ச்சில் உள்ள கோட்டாடா பட்லியில் 4,000 ஆண்டுகள் பழமையான சத்திரம் / கேரவன்செராய் ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- கேரளா 2025 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று தீவிர வறுமையிலிருந்து விடுபட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட உள்ளது.
- நிங்கோல் சகௌபா என்ற விழாவானது மெய்தே நாட்காட்டியில், முதன்மையாக மணிப்பூரில், ஒவ்வோர் ஆண்டும் ஹியாங்கேயின் சந்திர மாதத்தின் இரண்டாவது நாளில் கொண்டாடப்படுகிறது.
- உத்தரகாண்ட் அரசானது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி முதல் பிற மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களுக்குப் பசுமை வரியை அமல்படுத்த உள்ளது.
- 1983 ஆம் ஆண்டு நெல்லி படுகொலை குறித்த திவாரி ஆணையத்தின் அறிக்கையை மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய அசாம் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- கேரள முதல்வர் திட்டம் 2031 ஆவணத்தை வெளியிட்டார்.
- 2027 ஆம் ஆண்டிற்குள் தொழுநோய் பாதிப்பு இல்லாத மகாராஷ்டிரா என்ற நிலையை" அடையும் நோக்கத்துடன், மகாராஷ்டிரா மாநில அரசானது தொழுநோயை அறிவிக்கத்தக்க ஒரு நோயாக அறிவித்துள்ளது.
- பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகப் போராடிய பழங்குடியின வீரர்களின் வீரம் மற்றும் தியாகங்களைக் காட்சிப்படுத்தும் வகையில், பழங்குடியினச் சுதந்திர வீரர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முதல் டிஜிட்டல் அருங்காட்சியகம் ஆனது சத்தீஸ்கரில் உள்ள நவ ராய்ப்பூர் அடல் நகரில் நிறுவப்பட்டுள்ளது.
- பீகாரின் கதிஹார் மாவட்டத்தில் உள்ள கோகபீல் ஏரி, ராம்சர் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தளமாக (94வது ராம்சர் ஈரநிலம்) நியமிக்கப்பட்டுள்ளது.
- டெல்லி அரசானது, பெண்கள் மற்றும் திருநர்களுக்கு இலவச பேருந்துப் பயணத்தை வழங்க பிங்க் சஹேலி திறன் அட்டையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் அனகப்பள்ளி மாவட்டத்தில், எந்தவொரு மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்படாத இடத்திலான இந்தியாவின் மிகப்பெரிய எஃகு ஆலையைக் கட்டமைப்பதற்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- உத்தரகாண்ட் மாநில உருவாக்கத்தின் (2000 ஆம் ஆண்டு நவம்பர் 09 ஆம் தேதியன்று) வெள்ளி விழா குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் உத்தரகாண்ட் சட்டமன்றத்தில் உரையாற்றினார்.
- பெங்களூரு பெருநகர ஆணையம் (GBA) ஆனது, 'குப்பை கொட்டும் விழா' என்ற ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- புவனேஸ்வரில் அமைக்கப்பட உள்ள இந்தியாவின் முதல் சிலிக்கான் கார்பைடு (SiC) குறைக்கடத்தி ஆலைக்கு ஒடிசா முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

- 100க்கும் மேற்பட்ட அரிய பறவை இனங்களைக் கொண்ட இடமாக அறியப்படுகின்ற இராஜஸ்தானின் மேனார் கிராமம் ஆனது, 2023 ஆம் ஆண்டில் இந்தியாவின் சிறந்த சுற்றுலா கிராமமாக கௌரவிக்கப்பட்டது.
- தொலைதூர மற்றும் பின்தங்கியப் பகுதிகளில் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவையினை வழங்க ஸ்டார்லிங் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்த முதல் இந்திய மாநிலமாக மகாராஷ்டிரா மாநிலம் திகழ்கிறது.
- டெல்லி மேம்பாட்டு ஆணையம் (DDA) ஆனது, கிழக்கு டெல்லி மையத்தை குடியிருப்பு, வணிக மற்றும் குடிமை இடங்களை ஒருங்கிணைக்கும் கலப்பு பயன்பாட்டு நகர்ப்புற மையமாக உருவாக்கி வருகிறது.
- மேற்கு வங்காளத்தில் உள்ள வடக்கு 24 பர்கானாக்கள், சுமார் 10.9 மில்லியன் மக்கள்தொகையுடன் தற்போது இந்தியாவின் அதிக மக்கள் தொகை கொண்ட மாவட்டமாக உள்ளது.
- உத்தரப் பிரதேசத்தின் சண்டிகர் பல்கலைக்கழகம் ஆனது, இளையோர்களிடையே புதுமை மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிப்பதற்காக 'கேம்பஸ் டேங்க்' என்ற ஒரு தனித்துவமான தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- போபாலில் உள்ள இராஜா போஜ் விமான நிலையத்தில் 'பிரதமர் ஸ்ரீ வான்வழி சுற்றுலா ஹெலிகாப்டர் சேவை' தொடங்கப்பட்டதன் மூலம், மத்தியப் பிரதேசம் ஆனது அதன் உள் மாநில விமானப் போக்குவரத்து இணைப்பு முன்னெடுப்பின் கீழ் ஏர் ஆம்புலன்ஸ் (வான் வழி அவசர ஊர்தி) மற்றும் ஹெலிகாப்டர் வழி சுற்றுலா சேவைகளை அறிமுகப்படுத்திய முதல் இந்திய மாநிலமாக மாறியது.
- எரிசக்தி திறன் சேவைகள் லிமிடெட் (EESL) நிறுவனமானது, ஆந்திரப் பிரதேசத்தில் இந்தியாவின் மிகப்பெரிய புவி வெப்ப ஆற்றல் தொழில்நுட்ப (GET) முதன்மைத் திட்டத்தை நிறுவ அங்கீகரித்துள்ளது.
- அனைத்து மாநிலச் சட்டக் கல்லூரிகளிலும் திருநர் சமூக மாணாக்கர்களுக்கு இரண்டு கூடுதல் /சூப்பர்நியூமரரி இடங்களை ஒதுக்கும் கேரள அரசின் முன்மொழிவை இந்திய வழக்குரைஞர் கழகம் (BCI) அங்கீகரித்துள்ளது.
- அரசு மற்றும் தனியார் துறை பெண் ஊழியர்களுக்கு மாதத்திற்கு ஒரு நாள் ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுப்பு வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது.
- தனது மாநிலத்தில் பலதார மணத்தைத் தடை செய்வதற்கான மசோதாவை அசாம் அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
- சிறந்த மாநிலப் பிரிவில் 6வது தேசிய நீர் விருதுகளில் (2024) மகாராஷ்டிரா முதலிடத்தினைப் பெற்றது, அதனைத் தொடர்ந்து குஜராத் மற்றும் ஹரியானா இடம் பெற்றுள்ளன.
- தெலுங்கானா அரசானது, ஐதராபாத்தில் தெலுங்கானா செயற்கை நுண்ணறிவு புத்தாக்க மையத்தை (TAIH) நிறுவியுள்ளது.
- குஜராத்தின் முக்கிய புனித யாத்திரைத் தலமும் சக்திபீடமுமான அம்பாஜியில் இருந்து வரும் பளிங்குக் கல்லிற்கு, அதன் உயர்தர வெள்ளைக் கல்லுக்காகப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- மேகாலயா அரசானது நிதிப் பொறுப்பு மற்றும் நிதி ஒதுக்கீட்டு மேலாண்மை (FRBM) சட்டத்தின் கீழ் அதன் நிதிப் பற்றாக்குறை உச்ச வரம்பை மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 3 சதவீதத்திலிருந்து 3.5% ஆக உயர்த்தியது.

- மகாராஷ்டிர மாநில முதல்வர் புதிய வேளாண் துறை முத்திரையையும், "நிலையான வேளாண்மை, வளமான விவசாயி" என்று பொருள்படும் "சஷ்வத் ஷெட்டி, சம்ருத்த ஷேத்காரி" என்ற முழக்கத்தினையும் வெளியிட்டார்.
- கர்நாடகாவின் விஜயநகரில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் மிகப்பெரிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி ஆலையை JSW எனர்ஜி தொடங்கியுள்ளது.
- மேகக் கணினி அடிப்படையிலான 1930 அழைப்பு மையம் மூலம் இணைய வெளி –மோசடி அழைப்புகளுக்கு 100% எதிர் நடவடிக்கை விகிதத்தை அடைந்த இந்தியாவின் முதல் மாநிலமாக கோவா மாறியது.
- மத்திய வடகிழக்குப் பிராந்திய மேம்பாட்டு அமைச்சர் (DoNER) மற்றும் மேகாலயா முதல்வர் மேகாலயாவின் சோஹ்ராவில் சோஹ்ரா சுற்றுலா சுற்றுவட்டத்தைத் தொடங்கி வைத்தனர்.
- சுனாப்பூர் கடற்கரையானது தொடர்ந்து 3வது ஆண்டாக சர்வதேச நீலக் கொடி சான்றிதழைப் பெற்றது.
- இந்தியத் தேர்தல் ஆணையம் ஆனது அசாமில் வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் திருத்தத்தினை மேற்கொள்ள உத்தரவிட்டது.
- கர்நாடகா மாநில அரசானது, KEOICS உடன் இணைந்து கட்டமைக்கப்பட்ட, டிஜிட்டல் கற்றலுக்கான கர்நாடக DSERT பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவுக் கருவியான BUDDH பொருத்தப்பட்ட மலிவு விலையிலான செயற்கை நுண்ணறிவு நுட்பத்திற்குத் தயார் நிலையிலான KEO எனும் கணினியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தெலுங்கானா அமைச்சரவையானது, 2025 ஆம் ஆண்டு இணைய வழி மூலம் திரட்டப் பட்ட தொழிலாளர்கள் மற்றும் இணைய தள தொழிலாளர்கள் வரைவு மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- நாகாலாந்தில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு இருவாட்சித் திருவிழாவிற்கான பங்கு தாரர் நாடாக ஐக்கியப் பேரரசு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- அமெரிக்க மின்சார வாகன நிறுவனமான டெஸ்லா, அரியானாவின் குருகிராமில் அதன் முதல் முழு அளவிலான இந்திய உற்பத்தி மையத்தைத் திறக்க உள்ளது.
- விரைவான விசாரணைகளை உறுதி செய்வதற்கும், பட்டியலிடப்பட்ட சாதியினர் சமூகத்தின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கும் பஞ்சாப் மாநில பட்டியலிடப் பட்ட சாதியினர் (SC) ஆணையம் இந்தியாவின் முதல் தனி நீதிமன்ற அறையைத் திறந்துள்ளது.
- நாகாலாந்து மாநில அரசானது, 2025 ஆம் ஆண்டின் இருவாட்சி திருவிழாவிற்கான உலக நாடுகள் பங்குதாரர்களாக சுவிட்சர்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகியவற்றினை அதிகாரப்பூர்வமாகப் பெயரிட்டுள்ளது.
- கேரளா சமீபத்தில் பாம்புக்கடியினால் ஏற்படும் நஞ்சேற்றத்தினை ஒரு அறிவிக்கத் தக்க நோயாக அறிவித்துள்ளது.
- பீகார் மாவட்டங்களில் நடத்தப்பட்ட ஆறு ஆய்வில், 40 தாய்மார்களிடமிருந்து சேகரிக்கப் பட்ட அனைத்துத் தாய்ப்பால் மாதிரிகளிலும் யுரேனியம் (U–238) இருப்பது கண்டறியப்பட்டது.
- சுண்ணாம்புக்கல் கனிமத் தொகுதிகளின் முதல் ஏலம் ஜம்மு மற்றும் காஷ்மீரில் நடைபெற உள்ளது.

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது 2025 ஆம் ஆண்டு நவம்பர் 24 முதல் 29 ஆம் தேதி வரை 'ரைட்டன்னா – மீ கோசம்' என்ற ஒரு வார கால விவசாயி விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நடத்துகிறது.
- சிர்பூர் என்பது சத்தீஸ்கரின் மகாசமுண்ட் மாவட்டத்தில் உள்ள 5–12 ஆம் நூற்றாண்டுகளின் பல்சமயம் சார் தொல்பொருள் நகரமாகும்.
- இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த நிதி நகரமாக அமராவதி நியமிக்கப்பட்டுள்ளது.
- 2025 ஆம் ஆண்டு விலங்குகள் மீதான வன்கொடுமை தடுப்பு மசோதா (அசாம் திருத்தம்) மசோதாவினை அசாம் சட்டமன்றம் அங்கீகரித்தது.
- தெலுங்கானா மாநிலமானது, ஐதராபாத்தில் உள்ள ஜீனோம் பள்ளத்தாக்கில் 1 Bio எனப்படுகின்ற இந்தியாவின் முதல் ஒற்றை–பயன்பாட்டு உயிரிச் செயல்முறை வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு மையத்தினைத் தொடங்கியது.
- தாய் அஹோம்ஸ், டீ பழங்குடியினர் (ஆதிவாசிகள்), மோரன், மடக் (மோடோக்), சுடியா மற்றும் கோச்-ராஜ்போங்ஷி ஆகிய ஆறு சமூகங்களுக்கு பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) அந்தஸ்தைப் பரிந்துரைக்கும் அறிக்கையை அசாம் அமைச்சரவை அங்கீகரித்தது.
- கிராமப் பஞ்சாயத்துகளில் சொத்து மேலாண்மையை டிஜிட்டல் மயமாக்குவதற்காக கர்நாடகா அரசு மேம்படுத்தப்பட்ட e–Swathu 2.0 தளத்தை அறிமுகப்படுத்தியது.
- தெருநாய்களைப் பொது இடங்களிலிருந்து காப்பிடங்களுக்கு மாற்றுவதற்கான உச்ச நீதிமன்ற உத்தரவுகளுக்குப் பிறகு கௌஹாத்தி மாநகராட்சிக் கழகம் (GMC) "சஹஜீவன்" திட்டத்தைத் தொடங்கியது.
- சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) திட்டத்தின் கீழ் வாக்காளர் பட்டியல்களை 100% டிஜிட்டல் மயமாக்கிய முதல் மாநிலமாக இராஜஸ்தான் மாறியது.
- இராஜஸ்தான் அரசானது மத்தியப் பிரதேசத்தில் உள்ள பென்ச் புலிகள் வளங் காப்பகத்திலிருந்து ஒரு புலியை (Tigress PN–224) கொண்டு வருவதன் மூலம் அதன் மாநிலங்களுக்கு இடையேயான முதலாவது புலி இட மாற்றத்தை மேற்கொள்கிறது.
- மகாராஷ்டிரா அரசானது 30 நாட்களில் கட்டமைப்பிற்குள் உட்படாத 45,911 சூரிய சக்தியில் இயங்கும் வேளாண் நீரேற்றிகளை நிறுவி, கின்னஸ் உலக சாதனையைப் படைத்தது.
- சத்தீஸ்கரின் பிஜாப்பூரில் உள்ள கொண்டப்பள்ளி கிராமம் ஆனது 2025 ஆம் ஆண்டில் முதல் முறையாக கைபேசி சேவை இணைப்பு மற்றும் மின்சாரத்தைப் பெற்றது.
- கொல்கத்தாவின் லேக் டவுனில் கால்பந்து வீரர் லியோனல் மெஸ்ஸியின் 70 அடி இரும்புச் சிலை திறக்கப்பட்டுள்ளது.
- பாட்னாவில் உள்ள செயல்பாடுகள் முற்றிலும் நிறுத்தப்பட்ட கர்பிகாஹியா அனல் மின் நிலையத்தில் இந்தியாவின் முதலாவது மின் அருங்காட்சியகத்தைப் பீகார் மாநிலமானது உருவாக்க உள்ளது.
- இராஜஸ்தானின் அல்வார் மாவட்டத்தில் உள்ள சிலிசெர் ஏரி, ராம்சர் தளமாக அறிவிக்கப் பட்டு, இந்தியாவின் 96வது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக மாறியுள்ளது.
- இணையவெளிக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி மகாராஷ்டிரா மாநில அரசால் MahaCrimeOS AI தளம் தொடங்கப்பட்டுள்ளது.
- 100 ஆண்டுகளுக்கு முன்பு M.K. காந்தி அவர்களால் பாராட்டப் பட்ட ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீகாகுளத்தைச் சேர்ந்த பாண்டுரு காதி எனும் பருத்தித் துணிக்கு புவி சார் குறியீடு வழங்கப்பட்டது.

- ❖ பஞ்சாப் அரசு அமிர்தசரசு, ஸ்ரீஅனந்த்பூர் சாஹிப் (ரூப்நகர் மாவட்டம்), மற்றும் தல்வண்டி சபோ (ஸ்ரீ தம்தாமா சாஹிப், பதிண்டா மாவட்டம்) ஆகியவற்றைப் புனித நகரங்களாக அறிவித்தது.
- ❖ AIIMS விஜய்பூர் வளாகத்தில் தனது முதல் மின்சார வாகன மின்னேற்ற நிலையத்தை திறந்துள்ளதுடன் ஜம்மு–காஷ்மீர் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- ❖ உலகின் மிகப்பெரிய திறந்தவெளி நாடக விழாவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள தனு யாத்திரையானது ஒடிசாவின் பர்காரில் தொடங்கப்பட்டது.
- ❖ புலிகள் இருப்பதற்கான தொடர்ச்சியான சான்றுகளைத் தொடர்ந்து, 33 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, அதிகாரப்பூர்வமாக புலிகளைக் கொண்ட ஒரு மாநிலமாக குஜராத் மீண்டும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.
- ❖ Gujarat has been officially reinstated as a tiger-bearing state after a gap of 33 years, following sustained evidence of tiger presence.
- ❖ ஒடிசாவில் உள்ள இருபத்தி நான்கு கடலோரக் கிராமங்கள் யுனெஸ்கோ அமைப்பினால் சுனாமி நடவடிக்கைகளுக்கான தயார் நிலை அங்கீகாரத் திட்டத்தின் (TRRP) கீழ் சுனாமிக்கு தயார் நிலையில் உள்ளவை ஆக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- ❖ ஜம்மு காஷ்மீரின் பாரமுல்லா மாவட்டத்தில் உள்ள ஜெஹான்போரா கிராமத்தில் 2,000 ஆண்டுகள் பழமையான புத்த மதத் தளத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

## புவிசார் குறியீடுகள்

| புவிசார் குறியீடு | இடம் |
|---|---|
| **ரின்டியா பட்டு & காசி கைத்தறி நெசவு (எரி பட்டு)** | மேகாலயா |
| **நெட்டை தென்னை** | பொள்ளாச்சி |
| **சாங்க்ரி கத்தி** | இராஜஸ்தான் |
| **டாவோ** | அருணாச்சலப் பிரதேசம் |
| **சலவைக்கல்** | குஜராத் |
| **லெப்சா இசைக்கருவிகளான துங்புக் மற்றும் பும்டோங் புளிட்** | சிக்கிம் |
| **மீரட் பகில்** | உத்தரப் பிரதேசம் |
| **கண்ணாடிப்பாய்** | கேரளா |
| **உறையூர் பருத்தி சேலை, கவுந்தப்பாடி நாட்டுச் சக்கரை (வெல்லம் தூள்), நாமக்கல் மட்பாண்டம் /மக்கள் உபயோகிக்கும் பாத்திரங்கள் (சோப்புக்கல் /நுரைக்கல் சமையல் பாத்திரங்கள்), பாரம்பரிய தூயமல்லி அரிசி வகை மற்றும் அம்பாசமுத்திரம் சொப்பு சாமன் (மர பொம்மைகள்)** | **தமிழ்நாடு** |
| **சீஸ் யாக் சுர்பி** | **அருணாச்சலப் பிரதேசம்** |
| **மாண்டரின் ஆரஞ்சு** | **டார்ஜிலிங் (மேற்கு வங்கம்)** |

# முன்னெடுப்புகள், திட்டங்கள் மற்றும் பிரச்சாரங்கள்

| பெயர் | அமைச்சகம்/அமைப்பு | நோக்கம் |
|---|---|---|
| **வாழ்ந்து காட்டுவோம் 3.0** | – | இது கிராமப்புற நிறுவனங்களை ஊக்குவித்தல், நிதி அணுகல் மற்றும் தமிழ்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்டத் தொகுதிகளில் வேலை வாய்ப்புகளை நன்கு உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஒரு நாடு - ஒரு துறைமுக செயல்முறை** | – | இது இந்தியாவின் முக்கியத் துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு செயல்பாடுகளைத் தரமுறைப்படுத்தவும் நெறிமுறைப்படுத்துவதற்குமான முயற்சி ஆகும். |
| **A Million Women Arise முன்னெடுப்பு** | நிதி ஆயோக் | நிதி, சந்தைகள், இணக்க ஆதரவு, திறன் மேம்பாடு, வழிகாட்டுதல் மற்றும் வலை ஆக்கம் ஆகியவற்றை அணுகுவதன் மூலம் ஒரு ஒருங்கிணைந்த ஆதரவு அமைப்பை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். |
| **75/25" முன்னெடுப்பு** | – | 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு ஆகிய நோயால் பாதிக்கப்பட்ட 75 மில்லியன் நபர்களுக்கு தரப்படுத்தப்பட்டச் சிகிச்சையை வழங்குவதே இதன் நோக்கமாகும். |
| **PM-YUVA 3.0** | – | இந்தியாவில் வாசிப்பு, எழுத்து மற்றும் புத்தகக் கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதற்கு 30 வயதிற்குட்பட்ட இளம் எழுத்தாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இந்த மிகப்பெரும் முன்னெடுப்பின் நோக்கமாகும். |
| **தூய்மைத் திட்டம் 2025** | – | மாநிலத்தில் நிலையான கழிவு மேலாண்மைக்காக |
| **கலைஞர் கைவினைத் திட்டம் 2025** | – | இதில் அரசானது மானியத்துடன் சேர்த்து 50,000 முதல் 3 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களை வழங்கும். |
| **'மலரும் புன்னகை' திட்டம்** | – | பள்ளிக் குழந்தைகளிடையே துருத்திக் கொண்டிருக்கும் பல்வரிசையமைப்பு அல்லது மேல்கீழ் பல் அமைப்பு பொருந்தாமையைச் சரி செய்வதற்காக விருதுநகர் மாவட்ட நிர்வாகமானது புதுமையான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. |
| **உறுதுணை கடன் திட்டம்** | – | இது தேசிய நிதியியல் மேம்பாட்டு நிதி மூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினச் |

| | | |
|---|---|---|
| | | சமூகங்களைச் சேர்ந்த சிறு சில்லறை விற்பனையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படும். |
| **'அலைகள்' திட்டம்** | – | இது மீனவ மகளிர் குழுக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக என சிறு/நுண் கடன் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **எளிய ஆளுமைத் திட்டம்** | – | இந்தத் திட்டத்தின் கீழ், சுகாதாரச் சான்றிதழ், பொதுக் கட்டிட உரிமம், பணி புரியும் பெண்களுக்கான விடுதி உரிமம், பெண்கள் காப்பகங்களுக்கான உரிமம், சொத்து மதிப்புச் சான்றிதழ், முதியோர் இல்ல உரிமம், நடத்தைச் சான்றிதழ், அரசு ஊழியர்கள் கடவுச் சீட்டுப் பெறுவதற்குத் தடையில்லாச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெறலாம். |
| **'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டம்** | – | இதன் கீழ், மாநிலம் முழுவதும் 1,256 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.<br>இது மாற்றுத் திறனாளிகளுக்கும் தேவையுள்ளவர்களுக்கும் அவர்களின் வீடுகளுக்கு அருகிலேயே முதன்மை சுகாதாரப் பரிசோதனைகளைப் பெறுவதை எளிதாக்கும். |
| **Water Bell திட்டம்** | – | இது மாணவர்கள் தொடர்ந்து குறிப்பிட்ட இடைவெளியில் தண்ணீர் குடித்து மிக நன்கு ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டு தொடங்கப் பட்டுள்ளது. |
| **'வெற்றி நிச்சயம்' திட்டம்** | – | இந்தத் திட்டமானது, பள்ளி/கல்லூரி படிப்பினை இடை நிறுத்திய 18 முதல் 35 வயது உடைய இளையோர்களுக்கு இலவச வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும். |
| **ஆந்திரப் பிரதேச மாநில அரசானது, 'சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் வித்யார்த்தி மித்ரா தொகுப்புகள்' திட்டம்** | – | இந்தத் திட்டமானது, 2025–26 ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சுமார் 35 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கல்வித் தொகுப்புகளை வழங்குவதற்கானதாகும். |
| **தமிழ்நாட்டின் TN-KET திட்டம்** | – | TN–KET (காசநோய் இறப்பில்லா திட்டம்) ஆனது 2022 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.<br>இது கடுமையான காசநோய் பாதிப்புகளை முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் மிகப் பொருத்தமான சிகிச்சையை வழங்குவதன் மூலம் காசநோய் (TB) உயிரிழப்பைக் |

| | | |
|---|---|---|
| | | குறைப்பதை ஒரு முக்கிய நோக்கமாகக் கொண்ட தமிழ்நாட்டின் மாநில அளவிலான முன்னெடுப்பாகும். |
| **நிமிர்ந்து நில் முன்னெடுப்பு** | – | உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்காக என இளையோர்களிடையே புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவுத் திறனை வளர்ப்பதற்காக என இது தொடங்கப் படுகிறது. |
| **இந்திய அரசின் வாகனவியல் கொள்கைத் திட்டம் 2047** | கனரக தொழில்துறை அமைச்சகம் | இது உலகளாவிய வாகன உற்பத்தி மற்றும் வர்த்தகத்தில் இந்தியாவை ஒரு முன்னணி நாடாக நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **பால்னா திட்டம்** | பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் | 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டமானது,<br>6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, அணுகக் கூடிய மற்றும் முழுமையான பகல்நேர பராமரிப்புச் சேவைகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் இதனால் தாய்மார்கள் குழந்தைப் பராமரிப்புகள் குறித்த கவலைகள் இல்லாமல் பணியிடத்தில் பங்கேற்க முடியும். |
| **பிரதான் மந்திரி விக்ஸித் பாரத் ரோஸ்கர் யோஜனா** | – | 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று தொடங்கப்பட உள்ளது.<br>இது 3.5 கோடிக்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதையும், உற்பத்தித் துறையில் சிறப்புக் கவனம் செலுத்தி, உள்ளடக்கிய, நீடித்த நிலையான வேலைவாய்ப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **Global Specs 2030 முன்னெடுப்பு** | உலக சுகாதார அமைப்பு (WHO) | 2030 ஆம் ஆண்டிற்குள் அனைவருக்கும் மலிவு விலையில் கண் பராமரிப்பு சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **வேர்களைத் தேடி திட்டம்** | – | மரபுகளின் பரிமாற்றம் மற்றும் உள்ளார்ந்த கற்றல் மூலம் தமிழ் பாரம்பரியத்துடன் ஆன தங்கள் உறவினை வலுப்படுத்துவதே இதன் குறிக்கோள் ஆகும். |
| **NCDC திட்டம்** | – | கடன் அணுகலை மிக நன்கு மேம்படுத்துவதன் மூலமும், கூட்டுறவு நடவடிக்கைகளை நவீனமயமாக்குவதன் மூலமும், விளிம்புநிலைச் சமூகங்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **பிரதான் மந்திரி மித்ரா** | – | இந்தப் பூங்காக்கள் ஒவ்வொன்றும் மூன்று லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி ஜவுளித் துறையில் ஏற்றுமதி மற்றும் முதலீடுகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. |
| **மாட்ரி வன் முன்னெடுப்பு** | – | அரியானாவின் குருகிராமில் மாட்ரி வன் முன்னெடுப்பு தொடங்கப்பட்டது.<br>குருகிராம்–ஃபரிதாபாத் சாலையில் உள்ள ஆரவல்லி மலைப் பகுதியில் 750 ஏக்கர் பரப்பில் கருப்பொருள் அடிப்படையிலான நகர்ப்புற வனத்தை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். |
| **'மாபெரும் தமிழ் கனவு'** | – | பண்டைய தமிழ் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் வரலாறு குறித்து இளைஞர்களுக்கு கற்பிப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டது. |
| **நிஜுத் மொய்னா 2.0'** | – | இந்தத் திட்டமானது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களில் உயர்நிலை (HS) முதல் முதுகலை (PG) நிலை வரை பயிலும் பெண் மாணாக்கர்களுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்குகிறது. |
| **அகல் விளக்குத் திட்டம்** | – | புதுக்கோட்டையில் உள்ள கீரமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசு 'அகல் விளக்கு' எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.<br>இந்தத் திட்டமானது, இணையவெளிப் பாதுகாப்பில் வலுவான கவனம் செலுத்துவதுடன், மன, உடல் மற்றும் சமூக ரீதியான சவால்களிலிருந்து சிறுமிகளான மாணவிகளை (9 – 12 ஆம் வகுப்புகள்) பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **MERITE திட்டம்** | – | 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப தரம், சமத்துவம் மற்றும் நிர்வாகத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **தாயுமானவர் திட்டம்** | – | 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவர்களின் வீடுகளிலேயே ரேஷன் பொருட்களை வழங்குதல். |

| | | |
|---|---|---|
| **பிரதான் மந்திரி விக்ஸித் பாரத் ரோஜ்கர் யோஜனா (PM–VBRY)** | – | இரண்டு ஆண்டுகளில் 3.5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **சுதர்சன் சக்ரா திட்டம்** | – | பத்து ஆண்டுகளுக்குள் தேசியப் பாதுகாப்புக் கவசத்தினை விரிவுபடுத்துதல், வலுப் படுத்துதல் மற்றும் நவீனமயமாக்குவதே இதன் நோக்கமாகும். |
| **திஷா அபியான்** | – | இது அறிவுசார்க் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு சீரான மற்றும் தரமான கல்வியை வழங்குகிறது. |
| **VETRI பள்ளிகள்** | – | தன்னார்வ அடிப்படையில் மாணவர்களுக்கு JEE, NEET, CLAT மற்றும் CUET ஆகியவற்றுக்கான பயிற்சி வார இறுதி நாட்களில் நடத்தப்படும். |
| **முதல்வரின் காக்கும் கரங்கள் திட்டம்** | – | இந்தத் திட்டமானது முன்னாள் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் தொழில் தொடங்குவதற்கு உதவுகிறது. |
| **ஆதி கர்மயோகி அபியான்** | பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சகம் | இது பழங்குடியினச் சமூகங்களை மேம்படுத்துதல், நடவடிக்கை எடுக்கக் கூடிய நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நாடு முழுவதும் உள்ளூர் தலைமைத்துவ வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் – தமிழ்நாடு** | – | 2022 இல் தொடங்கிய இந்த திட்டம் முதலில் அரசு நடத்தும் தொடக்கப் பள்ளிகளிலும், பின்னர் படிப்படியாக நகர்ப்புற அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளையும் உள்ளடக்கியதாக விரிவடைந்தது. |
| **SPREE-2025 மற்றும் அவகாசத் திட்டம்** | ஊழியர்களின் மாநிலக் காப்பீட்டுக் கழகம் (ESIC) | ESIC பரவலை விரிவுபடுத்துதல், தன்னார்வப் பதிவை ஊக்குவித்தல், வழக்காடலைக் குறைத்தல் மற்றும் தொழிலாளர்களுக்கு சலுகைகளை வழங்குவதை மேம்படுத்துதல் ஆகியவை இதன் நோக்கமாகும். |
| **அன்பு கரங்கள் திட்டம்** | – | ஏழ்மை நிலையிலான பொருளாதாரப் பின்னணியைச் சேர்ந்த குழந்தைகள் தங்கள் பள்ளிப் படிப்பு மற்றும் உயர்கல்வியைத் தொடர உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **தமிழ்நாடு உரிமைகள் திட்டம்** | – | இந்தத் திட்டமானது மாற்றுத் திறனாளிகளுக்கான (PwDs) உள்ளடக்கம், அணுகல் மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **சுவஸ்த் நாரி சஷக்த் பரிவார் அபியான் முன்னெடுப்பு** | – | ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் மற்றும் சமூக சுகாதார மையங்களில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதார முகாம்களை ஏற்பாடு செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஸ்வஸ்த் நாரி சஷக்த் பரிவார் அபியான்** | சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் (MoHFW) மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் (MoWCD) | பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே சுகாதார நிலைமைகளை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் பேறுகாலத் தாய்மார்கள் உயிரிழப்பைக் குறைப்பதை இந்தப் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **முக்கிய மந்திரி மகிளா ரோஜ்கர் யோஜனா** | – | இந்தத் திட்டமானது பெண்கள் தங்கள் விருப்பப்படி சுயதொழில் முயற்சிகள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு ஆரம்ப மூலதனத்தை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டது. |
| **ஸ்வச் ஷெஹர் ஜோதி வழிகாட்டுதல் முன்னெடுப்பு** | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் | இந்தத் திட்டமானது சுவச் சர்வேக்சன் 2026 கணக்கெடுப்பில் மதிப்பீடு செய்யப்படும், மேலும் இது சக கற்றல் மற்றும் ஒத்துழைப்பு மூலம் நகர அளவிலான மேம்பாடுகளை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **PM-SETU திட்டம்** | – | மேம்படுத்தப்பட்ட பயிற்சி உள்கட்டமைப்பு மூலம் உலகளாவிய திறன் சார் தேவைகளுடன் இந்திய இளைஞர்களை இணைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் ஆகும். |
| **முக்கிய கனிமங்களின் மறுசுழற்சி ஊக்குவிப்புத் திட்டம்** | சுரங்க அமைச்சகம் | மின்னணுக் கழிவுகளைப் பயன்படுத்தி தீர்ந்து போன லித்தியம்-அயனி மின் கலன்கள் மற்றும் தொழில்துறைக் குப்பைகள் போன்ற இரண்டாம் நிலை மூலங்களிலிருந்து முக்கிய கனிமங்களை மறுசுழற்சி செய்யும் இந்தியாவின் திறனை அதிகரிப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **தேசிய வளங்காப்பு முன்னெடுப்புகள்** | சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் | ஓங்கில்கள் வளங்காப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், தேன் உண்ணும் கரடி, கங்கை நீர் முதலை/கரியல் வளங்காப்பு, மனித-வனவிலங்கு மோதலுக்கான சிறப்பு மையம் மற்றும் காப்பகங்களுக்கு வெளியே நிலவும் புலிகளின் தாக்குதல்கள் மேலாண்மை உள்ளிட்ட 5 தேசிய திட்டங்களும் தொடங்கி வைக்கப் பட்டன. |

| | | |
|---|---|---|
| **'ஒரு தேசம், ஒரு நிலப் பதிவு' முன்னெடுப்பு** | – | இந்தியாவில் உள்ள அனைத்து நகர்ப்புற நிலப் பகுதிகளையும் டிஜிட்டல் முறையில் வரைபடமாக்கி அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **AgriEnIcs திட்டம்** | MeitY | இந்த முன்னெடுப்பானது, விரிவுபடுத்தக் கூடிய, உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, உணர்வுக் கருவி அடிப்படையிலான வேளாண் தொழில்நுட்பக் கண்டுடிப்புகளை உருவாக்குவதன் மூலம் ஆத்மநிர்பர் பாரதத்தினை (தன்னிறைவு கொண்ட இந்தியா) ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **பிரதான் மந்திரி தன்-தான்யா கிருஷி யோஜனா** | – | அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், பயிர்களின் பல்வகைப் படுத்தலை ஊக்குவித்தல், நீர்ப்பாசனம் மற்றும் சேமிப்பை மேம்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கான கடன் அணுகலை அதிகரித்தல் ஆகியவை இதன் நோக்கமாகும். |
| **பாரத் வாடகை வாகன சேவை முன்னெடுப்பு** | – | தேசிய இணைய ஆளுகைப் பிரிவானது (NeGD) 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தொடங்கப்படும் சஹாகர் டாக்ஸி கூட்டுறவு லிமிடெட் நிறுவனத்தின் பாரத் வாடகை வாகன சேவை முன்னெடுப்பிற்கான தொழில்நுட்ப ஆதரவினை வழங்க உள்ளது. |
| **விஸ்வாஸ் திட்டம்** | – | நிலுவைத் தொகை தொடர்பான வழக்குகளைக் குறைப்பதை விஸ்வாஸ் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **LEAPS 2025** | மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் | இந்த முன்னெடுப்பானது தளவாடச் செயல்திறனை தரப்படுத்துதல், புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் NLP (தேசிய தளவாடக் கொள்கை) மற்றும் PM GatiShakti திட்டத்துடன் ஒருங்கிணைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **ஆதார் உடன் புதுமை மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பிற்கான திட்டத்தை (SITAA-Scheme for Innovation and Technology Association with Aadhaar)** | இந்திய தனித்துவமான அடையாள ஆணையம் (UIDAI) | டிஜிட்டல் அடையாள கண்டறிதல் சூழல் அமைப்பில் புதுமை, உள்நாட்டு மயமாக்கல் மற்றும் கூட்டு வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக இந்த முன்னெடுப்பு மேற்கொள்ளப் படுகிறது. |
| **We Rise முன்னெடுப்பு** | நிதி ஆயோக் | வழிகாட்டுதல் மற்றும் வர்த்தக வசதிகள் மூலம் உலகளவில் வணிகங்களை மேம்படுத்துவதில் பெண்கள் தலைமையிலான குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை நிறுவனங்களை (MSME) இந்த முன்னெடுப்பு ஆதரிக்கிறது. |

| | | |
|---|---|---|
| **தமிழ் திறமைகள் திட்டம்** | – | இந்த முன்னெடுப்பானது, போட்டித்தன்மை வாய்ந்த சம்பளம், புத்தொழில் நிறுவன ஆராய்ச்சி மானியங்கள், இடமாற்ற ஆதரவு மற்றும் விரைவான நுழைவு இசைவுச் சீட்டு வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **சிறப்புப் பிரச்சாரம் 5.0** | – | இந்தப் பிரச்சாரம் ஆனது, நாடு முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் தூய்மைப் பிரச்சாரங்களை மிகவும் நன்கு நிறுவனமயமாக்குவதையும் நிலுவையில் உள்ளதைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டதாகும். |
| **SVASTIK முன்னெடுப்பு** | – | அறிவியல் ரீதியாக சரி பார்க்கப்பட்ட பாரம்பரிய அறிவை ஆவணப்படுத்துதல், மற்றும் சமூகத்திற்குத் தெரிவிப்பதை SVASTIK நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **MegREAP முன்னெடுப்பு மேகாலயா** | – | இது 2028 ஆம் ஆண்டிற்குள் மாநிலத்தில் பத்து பில்லியன் டாலர் மதிப்பிலான பசுமைப் பொருளாதாரத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. |
| **மாதிரி இளையோர் கிராம சபை – லோக் தந்திர கி பாத்ஷாலா** | – | ஜனநாயகப் பங்கேற்பு மற்றும் நிலையான உள்ளூர் மேம்பாட்டிற்கு உறுதியளிக்கும் அதிகாரம் பெற்ற, தகவலறிந்த மற்றும் பொறுப்புள்ள இளம் குடிமக்களை உருவாக்குவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும். |
| **SMART-CROP திட்டம்** | SBI அறக்கட்டளை, ராய்ச்சூரில் உள்ள வேளாண் அறிவியல் பல்கலைக் கழகம் (UAS), பகுதியளவு வறண்ட வெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் (ICRISAT) மற்றும் அக்ரிபிரிட்ஜ் | கர்நாடகா (பிடார், கலபுராகி, ராய்ச்சூர்) மற்றும் தெலுங்கானா (சங்கரெட்டி, விகாரா பாத்) ஆகிய இடங்களில் உள்ள 8,000க்கும் மேற்பட்ட சிறு விவசாயிகளின் தகவமைப்பு மற்றும் உற்பத்தி திறனை வலுப்படுத்துதல் |
| **ஹமாரா பவிஷ்ய பிரச்சாரம்** | ஜல் சக்தி அமைச்சகம் | கிராமப் பஞ்சாயத்துகள் முழுவதும் கிராமப்புறப் கழிப்பறைகளை மேம்படுத்தச் செய்வதையும் அவற்றின் பராமரிப்பை மேம்படுத்துதல் |
| **ககர் நடவடிக்கை** | உள்துறை அமைச்சகம் | சத்தீஸ்கரில் நக்சல் அமைப்புகளை ஒழித்தல், மாவோயிசத்தின் அரசியல் சித்தாந்தத்தை அகற்றுதல் |

| | | |
|---|---|---|
| **'Bus First' பிரச்சாரம்** | சென்னையில் உள்ள பெருநகரப் போக்குவரத்துக் கழகம் (MTC) | சாலைகளில் MTC பேருந்துகளுக்கு முன்னுரிமை அளிக்க வாகன ஓட்டிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் |
| **GeM வசதியின் உமானியா முன்னெடுப்பு** | இந்திய அரசாங்க இணையச் சந்தை (GeM) மற்றும் UN பெண்கள் அமைப்பு | அரசு கொள்முதலில் முறைசாரா துறையைச் சேர்ந்த பெண் தொழில்முனைவோரின் பங்களிப்பை மேம்படுத்துதல் |
| **கிரிஸ்டல் ஃபோர்ட்ரஸ் நடவடிக்கை** | போதைப் பொருள் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் டெல்லிக் காவல்துறை | பன்னாட்டுப் மெத்தம்பேட்டமைன் கடத்தல் வலையமைப்பைத் தடுத்தல் |
| **ட்ரெக் தமிழ்நாடு முன்னெடுப்பு 2024** | – | தமிழ்நாடு முழுவதும் பாதுகாப்பான, வழி காட்டப்பட்ட மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலான மலையேற்ற அனுபவங்களை வழங்குதல் |
| **“நம்ம பள்ளி, நம்ம ஊரு பள்ளி” (NSNOP) முன்னெடுப்பு** | – | இதற்கான பங்களிப்புகள் 1,000 கோடி ரூபாயைத் தாண்டியுள்ளன |
| **முதலமைச்சரின் உணவு வழங்கும் திட்டம்** | – | சென்னை மாநகராட்சியின் (GCC) துப்புரவுப் பணியாளர்களுக்கான இலவச உணவுத் திட்டம் டிசம்பர் 06 முதல் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் விரிவு |
| **பாரத் NCAP (புதிய கார் மதிப்பீட்டுத் திட்டம்) 2.0** | – | இந்தியாவில் விற்கப்படும் கார்களுக்கான திருத்தப்பட்ட வாகனப் பாதுகாப்பு மதிப்பீட்டுத் திட்டம் |
| **விக்சித் கிருஷி சங்கல்ப் அபியான்** | இந்திய அரசு | நவீனத் தொழில்நுட்பம் மற்றும் புதிய விதை வகைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவது |
| **தார்த்தி ஆபா ஜன்பாகிதாரி அபியான்** | இந்திய அரசு | 100% விழிப்புணர்வு மற்றும் முழுமையான வசதிகளை அடைவதை நோக்கமாகக் கொண்டது. |
| **டெக்ஸ்–RAMPS திட்டம்** | ஜவுளித்துறை | இந்தியாவின் ஜவுளித் துறையை வலுப்படுத்த ஆராய்ச்சி, தரவு மற்றும் புதுமைகளை ஒருங்கிணைத்தல் |
| **2வது NUDGE முன்னெடுப்பு** | மத்திய நேரடி வரிகள் வாரியம் (CBDT) | வெளிநாட்டுச் சொத்துக்களின் தன்னார்வ அறிக்கையிடலை மேம்படுத்துதல் |
| **சன்கேட்சர் திட்டம்** | கூகுள் நிறுவனம் | விண்வெளியில் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் தரவு மையங்களை உருவாக்குதல் |

| | | |
|---|---|---|
| **'பொன்னிற குள்ளநரி வளங்காப்புத் தூதர்கள்' திட்டம்** | தென்காசி வனப் பிரிவு | பொன்னிற நரிகளைப் பாதுகாத்தல் |
| **சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சிக்கான உலகளாவிய குறியீடுகள் (GIRG) முன்னெடுப்பு** | இந்திய அரசாங்கம் | தேசிய வளர்ச்சியை ஆதரிப்பதற்காக வேண்டி இந்தியாவின் தரவரிசையை மிகவும் மேம்படுத்துவது மற்றும் அதற்கான இடைவெளிகளைக் கண்டறிந்து அவற்றை மிகவும் நன்கு மேம்படுத்துதல் |
| **முக்கிய மந்திரி பாரத் தர்ஷன் யோஜனா** | பீகார் மாநில அரசு | கலாச்சார விழிப்புணர்வு, தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் அனுபவக் கற்றலை மேம்படுத்துதல் |
| **பாரத்ஜென் AI அமைப்பு முன்னெடுப்பு** | பாரத்ஜென் தொழில்நுட்ப அறக்கட்டளை | இந்தியாவின் பன்மொழி மற்றும் பன்முக கலாச்சாரச் சூழலுக்கு ஏற்றவாறு ஒரு பெரிய மொழி மாதிரியை உருவாக்குதல் |
| **"உங்கள் பணம், உங்கள் உரிமை" பிரச்சாரம்** | இந்திய அரசு | குடிமக்கள் உரிமை கோரப்படாத நிதிச் சொத்துக்களை கோர உதவுதல் |
| **'பூமி சுதார் சாம்வாத்' திட்டம்** | பீகார் மாநில அரசு | நிலப்பிரச்சனைகளை விரைவாக தீர்த்தல் |
| **மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசி திட்டம்** | தமிழ்நாடு மாநிலம் | கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுக்க 9 முதல் 14 வயது வரையிலான சிறுமிகளுக்கான திட்டம் |
| **தேசிய டிஜிட்டல் கால்நடை திட்டம் (NDLM)** | இந்திய அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை | நாடு முழுவதும் கால்நடைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளின் நாடு தழுவிய டிஜிட்டல் தரவுத் தளத்தை உருவாக்குதல் |
| **நீர்நாய்களின் வளங்காப்பு முன்னெடுப்பு** | தமிழ்நாடு அரசு | காவிரி டெல்டாவில் காணப்படும் ஆற்று நீர்நாய்களைப் பாதுகாத்தல் |
| **தேசியப் பட்டியலிடப்பட்ட சாதியினர் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மைய (NSSH) திட்டம்** | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்துறை நிறுவனங்கள் (MSME) அமைச்சகம் | பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) சமூகங்களிடையே தொழில்முனைவினை ஊக்குவித்தல் |
| **சக்தி அறிஞர்கள் புத்தாய்வு மாணவர் உதவித் தொகை திட்டம்** | தேசிய மகளிர் ஆணையம் | 21 முதல் 30 வயதுடைய இளம் இந்திய ஆராய்ச்சியாளர்களை ஆதரிப்பதற்காக ஆறு மாத மானிய அடிப்படையிலான திட்டம் |
| **அடல் உணவகத் திட்டம்** | டெல்லி அரசு | புது டெல்லி முழுவதும் 100 இடங்களில் ஒரு தட்டுக்கு 5 ரூபாய் என்ற மானிய விலையில் உணவு வழங்குதல் |

# பிரபலமானவர்கள் மற்றும் விருதுகள்

| நபர் | தொடர்புடைய துறைகள் | குறிப்பு |
|---|---|---|
| **கிருஷ்ணமூர்த்தி V. சுப்பிரமணியன்** | சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் | தனது பதவிக் காலமானது முடிவதற்குள் அரசாங்கத்தினால் இந்தியாவிற்குத் திரும்ப அழைக்கப் பட்டுள்ளார். |
| **இராபர்ட் பிரீவோஸ்ட்** | 267வது போப் | லியோ XIV என்ற பெயருடன் அமெரிக்காவினைச் சேர்ந்த முதல் போப்பாண்டவராக பொறுப்பேற்றுள்ளார். |
| **பேலா திரிவேதி** | உச்ச நீதிமன்ற நீதிபதி | சமீபத்தில் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். |
| **M.R. ஸ்ரீனிவாசன்** | அணுசக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவர் | பத்மஸ்ரீ (1984), பத்ம பூஷண் (1990) மற்றும் பத்ம விபூஷண் (2015) |
| **ஜெயந்த் நர்லிகர்** | இந்திய வானியற்பியலாளர் | அவரின் பிரபலமான அறிவியல் படைப்புகளுக்காக என அவருக்கு 1996 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் கலிங்கா விருது வழங்கப்பட்டது. |
| **சரோஜ் கோஸ்** | தேசிய அறிவியல் அருங்காட்சியகச் சபையின் (NCSM) தலைமை ஸ்தாபன இயக்குநர் | இந்தியாவின் அறிவியல் அருங்காட்சியக இயக்கத்தின் தந்தை |
| **சோனாலி மிஸ்ரா** | மூத்த இந்தியக் காவல் பணி (IPS) அதிகாரி | இரயில்வே பாதுகாப்புப் படையின் (RPF) முதல் பெண் தலைமை இயக்குநர் |
| **ஆஸ்தா பூனியா** | துணைப் படைத் தலைவர் | இந்தியக் கடற்படையின், கடற்படை விமானப் பிரிவின் போர்ப் பிரிவில் சேர்க்கப்பட்ட முதல் பெண்மணி |
| **அஜய் குமார்** | முன்னாள் பாதுகாப்புத் துறைச் செயலாளர் | ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) புதியத் தலைவர் |
| **நீரஜ் சோப்ரா** | ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்றவர் | பிராந்திய இராணுவத்தில் லெப்டினன்ட் கர்னல் என்ற கௌரவப் பதவி |
| **பிரீட்ரிக் மெர்ஸ்** | – | ஜெர்மனியின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டார் |
| **நீதிபதி பூஷண் இராமகிருஷ்ணன் கவாய்** | – | இந்தியாவின் 52வது தலைமை நீதிபதியாக (CJI) பதவியேற்றார். |
| **யஷஸ்வி சோலங்கி** | இந்தியக் கடற்படையினைச் சேர்ந்த முதல் பெண் அதிகாரி | இந்தியக் குடியரசுத் தலைவரின் மெய்க்காப்பாளராக (ADC) நியமிக்கப்பட்டார். |

| | | |
|---|---|---|
| **பொருளாதார நிபுணர் S. மகேந்திர தேவ்** | – | பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் (EAC–PM) புதியத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். |
| **தேக்பீர் சிங்** | – | எல்ப்ரஸ் மலையில் ஏறிய இளம் மலையேற்ற வீரர் என்ற புதிய உலக சாதனையைப் படைத்தார் |
| **பராக் ஜெயின்** | – | இந்தியாவின் வெளிவிவகாரப் புலனாய்வு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் |
| **பாஸ்கல் டோனோஹோ** | அயர்லாந்தின் நிதியமைச்சர் | உலக வங்கி குழுவின் நிர்வாக இயக்குநராகவும் தலைமை தகவல் அதிகாரியாகவும் நியமனம் |
| **சையத் அசிம் முனீர்** | பாகிஸ்தானின் பீல்ட் மார்ஷல் | நாட்டின் முதல் பாதுகாப்புப் படைகளின் தலைவராக (CDF) நியமனம் |
| **ரோமன் கோஃப்மேன்** | – | மொசாட்டின் புதிய தலைவராக நியமனம் |
| **சர்வாக்யா சிங் குஷ்வாஹா (மூன்று வயது)** | 2025 ஆம் ஆண்டில் உலகின் இளம் FIDE–மதிப்பீடு பெற்ற சதுரங்க வீரர் | – |
| **இந்திய கிரிக்கெட் வீரர் ஷிகர் தவான்** | – | 'The One: Cricket, My Life and More' தனது சுயசரிதையை வெளியிட்டார் |
| **சாய் ஜாதவ்** | – | டேஹ்ராடூனில் உள்ள இந்திய இராணுவ அகாடமியில் (IMA) பட்டம் பெற்ற முதல் பெண் அதிகாரி |
| **இராஜ் குமார் கோயல்** | ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி (IAS) | மத்தியத் தகவல் ஆணையத்தின் (CIC) தலைமை தகவல் ஆணையராக நியமனம் |
| **மைக்கேலா பெந்தாஸ்** | ஜெர்மனியைச் சேர்ந்த் பொறியியலாளர் | விண்வெளிக்குச் சென்ற முதல் சக்கர நாற்காலி பயனர் |
| **விவேக் மேனன்** | இந்த ஆணையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற முதல் ஆசியக் கண்டத்தினர் | 2025–2029 ஆம் ஆண்டிற்கான IUCN இனங்கள் உயிர்வாழும் ஆணையத்தின் (SSC) தலைவராக தேர்வு |
| **ரஞ்சனா சர்மா போர்டோலோய்** | மூத்த அசாமிய நடிகை | மஞ்சருபா நாடகக் குழுவின் ஸ்தாபன உறுப்பினர் |
| **உர்ஜித் படேல்** | இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் | "The Great Sanctions Hack" புத்தகம் |
| **P.V. சிந்து** | இரண்டு முறை ஒலிம்பிக் பதக்கம் வென்ற இந்தியாவைச் சேர்ந்த நபர் | பேட்மிண்டன் உலகக் கூட்டமைப்பு (BWF) தடகள ஆணையத்தின் தலைவராக தேர்வு (2026–2029) |

| | | |
|---|---|---|
| **அனு கார்க்** | ஒடிசா பிரிவினைச் சேர்ந்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரி | ஒடிசாவின் முதல் பெண் தலைமைச் செயலாளராக பதவியேற்பு |
| **காம்யா கார்த்திகேயன்** | – | ஏழு கண்டங்களிலும் உள்ள மிக உயரமான சிகரங்களை ஏறிய இளம் பெண் |
| **புவனேஷ் குமார்** | மூத்த ஆட்சிப்பணி அதிகாரி | இந்தியத் தனித்துவ அடையாள ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக பொறுப்பேற்றுள்ளார். |
| **யூன் சுக்-யியோல் கைது** | அதிபர் | பதவி நீக்கம் செய்யப்பட்ட தென் கொரிய அதிபர் யூன் சுக் யியோல் சமீபத்தில் கைது செய்யப்பட்டார். |
| **டாக்டர் K.M. செரியன்** | அறுவை சிகிச்சை நிபுணர் | இருதய அறுவை சிகிச்சையின் முன்னோடி |
| **ஹரிமன் ஷர்மா** | இந்திய விவசாயம் | இந்தியாவின் ஆப்பிள் மனிதன் |
| **லிபியா லோபோ சர்தேசாய்** | கோவா விடுதலை போராட்ட வீரர் | பத்மா பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது |
| **அணித் தலைவர் சுபன்ஷு சுக்லா** | – | சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) பயணிக்க உள்ள முதல் இந்திய விண்வெளி வீரர் |
| **நிர்மலா சீதாராமன்** | நிதி அமைச்சர் | தொடர்ந்து எட்டாவது நிதிநிலை அறிக்கையினை தாக்கல் |
| **சுனிதா வில்லியம்ஸ்** | விண்வெளி வீரர் | விண்வெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்தில் சுமார் 62 மணி நேரம் 6 நிமிடங்கள் நடந்து சென்ற பெண்மணி |
| **ட்ஷெகோ கயிலே** | திருமதி உலக அழகிப் பட்டம் 2025 | போட்டியின் 40 ஆண்டுகால வரலாற்றில் இந்தப் பட்டத்தினை வென்ற முதல் கறுப்பினப் பெண்மணி |
| **முகமது ரஃபி** | பின்னணிப் பாடகர் | 100 ரூபாய் மதிப்பிலான நினைவு நாணயத்தினை வெளியிட அரசு முடிவு |
| **R. பாலகிருஷ்ணன்** | – | சர்வதேச தமிழ் ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குநர் |
| **BMW 1991** | – | தமிழ் திரைப்படமான சர்வதேச திரைப்பட விழாவில் 22 விருதுகளை வென்றுள்ளது. |
| **சத்ய பால் மாலிக்** | – | ஜம்மு காஷ்மீரின் கடைசி ஆளுநர் |
| **M.S. ஜனார்த்தனம்** | சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி | மாநிலப் பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் |
| **ஜஹ்னவி டாங்கெட்டி** | – | நாசாவின் சர்வதேச வான்வெளி மற்றும் விண்வெளித் திட்டத்தை நிறைவு செய்த முதல் இந்தியர் |

| | | |
|---|---|---|
| **V.S. அச்சுதானந்தன்** | முன்னாள் கேரள முதல்வர் | 1964 ஆம் ஆண்டில் பிரிக்கப்படாத கட்சியில் ஏற்பட்ட பிளவுக்குப் பிறகு அவர் CPM கட்சியின் நிறுவனத் தலைவராக இருந்தார். |
| **L. கணேசன்** | நாகாலாந்து ஆளுநரும் பாஜகவின் முன்னாள் துணைத்தலைவர் | இவர் முன்னதாக மணிப்பூர் ஆளுநராகவும், மேற்கு வங்காள (WB) ஆளுநராகவும் கூடுதல் பொறுப்பை வகித்தார். |
| **அனிஷ் தயாள் சிங்** | – | புதிய துணை தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் |
| **டாக்டர் இராஜீவ் ரஞ்சன்** | – | புதிய மேம்பாட்டு வங்கி (NDB) ஆனது அதன் துணைத் தலைவராகவும் தலைமை இடர் மேலாண்மை அதிகாரியாகவும் நியமித்துள்ளது |
| **உர்ஜித் படேல்** | இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் | மூன்று ஆண்டுகளுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் |
| **சங்கர் ஜிவால்** | தமிழ்நாடு காவல் துறை தலைவர் | மாநிலத் தீயணைப்பு ஆணையத்தின் முதல் தலைவர் |
| **T.C.A. கல்யாணி** | – | இந்தியாவின் 29வது பொதுக் கணக்குத் தணிக்கையாளர் |
| **பூபன் ஹசாரிகா** | – | 100வது பிறந்தநாளின் அன்று ஆண்டுதோறுமான தேசிய அளவிலான கொண்டாட்டங்கள் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 08 ஆம் தேதியன்று அசாமின் கௌஹாத்தியில் தொடங்கப்பட்டன. |
| **சுஷிலா கார்க்கி** | நேபாள நாட்டின் முதல் பெண் பிரதமர் | – |
| **அமிதா சௌத்ரி** | – | ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பின் நிதி சார் முன்னெடுப்பின் (UNEP FI) நிலையான காப்பீட்டுக்கான கொள்கைகளின் (PSI) தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார். |
| **SL பைரப்பா** | கன்னட எழுத்தாளர் | சரஸ்வதி சம்மன் விருது பெற்றவர் |
| **ஜப்பானைச் சேர்ந்த கோகிச்சி அகுசாவா** | – | தனது 102வது வயதில் ஃபுஜி சிகரத்தினை அடைந்த மிக வயதான நபர் என்ற பெருமையுடன் கின்னஸ் உலக சாதனையைப் படைத்துள்ளார் |
| **கனத் தாஸ்** | – | இந்தியத் தாவரவியல் ஆய்வு மையத்தின் (BSI) 13வது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார் |

| | | |
|---|---|---|
| **நடன காசிநாதன்** | புகழ்பெற்ற தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் கல்வெட்டு நிபுணர் | கல்லெழுத்துக் கலை, சோழர் செப்பேடுகள் மற்றும் தமிழர் காசு இயல் உள்ளிட்ட பல தமிழ் புத்தகங்களை அவர் எழுதியுள்ளார். |
| **பிரதிபா M. சிங்** | – | 2025–2027 ஆம் காலக் கட்டத்திற்கான உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் (WIPO) நீதிபதிகள் ஆலோசனைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். |
| **பால் பியா** | உலகின் வயதான அதிபர் | கேமரூனில் மீண்டும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். |
| **நடிகை கீர்த்தி சுரேஷ்** | யுனிசெஃப் இந்தியா பிரிவின் பிரபல ஆதரவாளர் | குழந்தை உரிமைகள் மற்றும் மனநல விழிப்புணர்வு குறித்த முன்னெடுப்புகளை ஆதரித்தல் |
| **நீதிபதி சூர்ய காந்த்** | இந்தியாவின் 53வது தலைமை நீதிபதி (CJI) | – |
| **நீதிபதி விக்ரம் நாத்** | தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் (NALSA) நிர்வாகத் தலைவர் | – |
| **G. மனுநீதி – கட்டிடப் பொறியாளர், தேனி** | U–Turn/U வளைவு மனிதர் | – |
| **ஞானேஷ் குமார் – தலைமைத் தேர்தல் ஆணையர்** | 2026 ஆம் ஆண்டில் சர்வதேச ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவி நிறுவனத்தின் (சர்வதேச IDEA) தலைவராகப் பணியாற்ற உள்ளார். | – |
| **ஷேக் ஹசீனா** | முன்னாள் வங்காளதேச பிரதமர் | வங்காளதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயத்தினால் மரண தண்டனை |
| **கைவல்யா ரெட்டி குஞ்சலா (17) – நிடடவோல்** | விண்வெளி வீரர் தேர்வாளர் | TSI நிறுவனத்தின் 2025–2029 ஆம் ஆண்டு விண்வெளி வீரர் திட்டத்திற்கான விண்வெளி வகுப்பு |
| **நிதிஷ் குமார் – ஜனதா தளம் (ஐக்கிய) தலைவர்** | பீகார் முதல்வராக 10வது முறையாக பதவியேற்பு | – |
| **சார்லஸ் கோஸ்டே** | பிரான்சின் மிக வயதான ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற நபர் | – |
| **சாலுமரத திம்மக்கா (114 வயது)** | – | கர்நாடகாவின் மரங்களின் தாய் |
| **ஈரோடு தமிழன்பன்** | வானம்பாடி கவிதை இயக்கக் கவிஞரும் சாகித்ய அகாடமி விருது பெற்றவரும் | – |

| | | |
|---|---|---|
| **வயோலா பிளெட்சர்** | 1921 ஆம் ஆண்டு துல்சா இனப் படுகொலையில் இருந்து தப்பிய வயது முதிர்ந்த நபர் | – |
| **இளம்பர்தி A.R. (சென்னை)** | – | இந்தியாவின் 90வது சதுரங்க கிராண்ட் மாஸ்டர் |
| **நமித்பீர் சிங் வாலியா (பஞ்சாப்)** | – | சதுரங்கப் போட்டிகளின் சர்வதேச மாஸ்டர் (IM) |
| **ஜானிஸ் டிஜென் (இந்தோனேசியா)** | – | கடந்த 23 ஆண்டுகளில் WTA போட்டிகளில் பட்டத்தை வென்ற முதல் இந்தோனேசிய பெண்மணி |
| **ரோஹன் போபண்ணா** | இரண்டு முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் பட்டம் பெற்றவர் | ஓய்வு பெறுவதாக அறிவிப்பு |
| **V. S. ராகுல்** | இந்தியாவின் 91வது கிராண்ட்மாஸ்டர் | – |
| **ரோஜர் பெடரர்** | 2026 ஆம் ஆண்டின் சர்வதேச டென்னிஸ் புகழ் மன்றத்தில் இடம் பெற தேர்வு | – |
| **ரோஹித் சர்மா** | 2026 ஆம் ஆண்டு ICC ஆடவர் T20 உலகக் கோப்பை போட்டிக்கான தூதர் | – |
| **உஸ்பெகிஸ்தானின் செஸ் கிராண்ட் மாஸ்டர் ஜவோகிர் சிந்தரோவ்** | – | இளம் FIDE உலகக் கோப்பை சாம்பியன் |
| **மாற்றுத் திறனாளி வில்வித்தை வீராங்கனை ஷீத்தல் தேவி (ஜம்மு–காஷ்மீர்)** | முதல் இந்திய மாற்றுத் திறனாளித் தடகள வீராங்கனை | 2025 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பை போட்டி – நிலை 3 என்ற சர்வதேசப் போட்டிக்குத் தேர்ந்தெடுப்பு |
| **ஃபரிதாபாத்தில் உள்ள டெல்லி பப்ளிக் பள்ளியைச் சேர்ந்த அர்ஷி குப்தா** | – | இந்தியாவில் தேசிய பந்தய மோட்டார் வண்டி (கார்டிங்) சாம்பியன்ஷிப் போட்டியில் வென்ற முதல் பெண் பந்தய வீரர் |
| **லூக் லிட்லர்** | ஆங்கில டார்ட்ஸ் விளையாட்டு வீரர் | உலகின் முதல் இடத்தினைப் பெற்ற இளம் வீரர் (18 வயது) |
| **ஜம்மி புக்கர்** | – | 2025 ஆம் ஆண்டின் உலகின் வலிமையான பெண்மணி |

| பரிசு / விருது | விருது பெற்றவர் | தொடர்புடைய துறை |
|---|---|---|
